
நிவேதா ஜெயாநந்தனின்
எந்தன் கண்ணோடு கலந்துவிடு

## முன்னுரை

'**கா**தல் காதல் காதல்' என்கிற பெயரில் இணையத்தில் உலா வந்த எனது நான்காவது கதையை 'எந்தன் கண்ணோடு கலந்து விடு...!' என்கிற பெயரில் புத்தகமாக வெளியிடுவதில் எனக்குப் பெருமகிழ்ச்சி. இது ஒரு உணர்ச்சிமிகுக் காதல் கதை.

காதல் காவியமாகிப் போவது ஒரு சிலருக்குத்தான். அப்படிக் காவியம் படைத்த ஒரு கிராமத்துக் காதலுடன் இந்த முறை உங்களைச் சந்திக்க வந்திருக்கிறேன். தாய்-தந்தையை இழந்து ஆதரவற்று நிற்கும் நம் நாயகனுக்கு உறவாக, உணர்வாக, உயிராக இருக்கிறாள் நம் நாயகி. இருவரது உன்னதமான அன்பில் நீங்களும் கலந்து கரைந்து போய் விடுவீர்கள் என்பதை சர்வ நிச்சயமாக நம்புகிறேன்.

ஒவ்வொரு முறையும் என்னை ஊக்கப்படுத்தி என் கதைகளின் தரத்தை உயர்த்தி அதைப் புத்தகமாக வெளியிடும் அருண் பதிப்பகத்தாருக்கு எனது நன்றிகள்.

உங்களது கருத்துக்களை nivetha.jeyananthan@gmail.com என்கிற மின்னஞ்சல் முகவரியில் தெரிவித்தீர்களானால் என் தவறுகளைத் திருத்திக் கொள்ள வசதியாக இருக்கும். இதோ அம்பரி - திவாகரனின் காதல் காவியம் உங்களுக்காக...

தமிழ் வாழ்க!

அன்புடன்,

**நிவேதா ஜெயாநந்தன்**



# எந்தன் கண்ணோடு கலந்து விடு...!

## 1

ஆசை கொல்லாமல் கொல்லும்.
அங்கம் தாளாமல் துள்ளும்...
என்னைக் கேட்காமல் ஓடும்
இதயம் உன்னோடு கூடும்.
விரகமே ஓர் நரகமோ சொல்!
பூவும் முள்ளாய் மாறிப் போகும்!

**த**மிழகத்தின் குட்டிக் காஷ்மீர் என்று செல்லமாய் அழைக்கப்படும் போடிநாயக்கனூர் நகராட்சி, தேனியை மாவட்டமாகக் கொண்டு தமிழ்நாடு - கேரளா எல்லையில் வீற்றிருக்கும் ஒரு மலைக் கிராமம்.

மேற்குத் தொடர்ச்சி மலையின் அடிவாரத்தில் இயற்கையின் அளவற்ற செழிப்பையும், அழகையும் பெற்றிருக்கும் இந்த ஊர் நிஜமாகவே இயற்கை அன்னை தந்த வரப்பிரசாதம்தான்.

ஏலக்காய் வாசமும், குளிர் காற்றும், கொட்டகுடி ஆற்றுத் தண்ணீரும், வன்முறையற்ற அமைதியான சூழ்நிலையும் அங்கு வாழும் மக்களைத் திருப்திப்படுத்தி விடுவதில் சந்தேகமில்லை.

மலைவாழ் மக்களின் பிரதானத் தொழிலான தேயிலையும், ஏலமும்தான் அந்த ஊரிலும் பெரும் பான்மை மக்களை வாழ வைத்துக் கொண்டிருந்தது.

அது தவிர பழத் தோட்டங்களும், கரும்புத் தோட்டங்களும், திராட்சைத் தோட்டங்களும் நிறைந்திருந்த அந்த ஊரில் விவசாயத்திற்குக் குறையொன்றுமில்லை.

போடி மெட்டு, மூணார், சோத்துப்பாறை அணை என இன்னும் பல சுற்றுலாத் தலங்கள் பெருமை சேர்க்க கம்பீரமாக வீற்றிருக்கும் இந்த வளர்ந்து வரும் கிராமம் தான் நம் நாயகன் - நாயகியின் சொந்த ஊர்.

ஐந்தாறு பள்ளிகளுடனும், ஒரு கல்லூரியுடனும் கல்வியிலும் ஓரளவு நன்றாகவே முன்னேறிவிட்ட நம் போடிநாயக்கனூரைச் சுற்றி எண்ணற்ற குக்கிராமங்கள் உண்டு.

அப்படி போடிநாயக்கனூரைத் தாலுகாவாகக் கொண்டு அவ்வூரின் செழுமையையும், அழகையும் கொஞ்சம் கூடக் குறையாமல் பெற்றிருக்கும் ஒரு



குக்கிராமம்தான் முந்தல். போடியிலிருந்து 25 கி.மீ. தொலைவிலிருக்கும் இந்தக் கிராமத்தில்தான் நம் கதையின் நாயகனும் நாயகியும் வசிக்கிறார்கள்.

அதோ தெரிகிறதே, ஒரு மாடி வீடு. அருகே சென்று பார்ப்போம். பச்சை இலைகள் இருபுறச் சுவர்களிலும் படர்ந்திருக்க... ஆங்காங்கு முளைத்திருந்த மல்லிகையும், முல்லையும் வெளிப்படுத்திய சுகந்தம் நம் மனதை மயங்கச் செய்கின்றது.

அதைத் தாண்டிச் சற்று உள்ளே சென்றால் விதவிதமான நிறங்களில் தொட்டிகளில் வளர்க்கப் பட்டிருந்த ரோஜாச் செடிகள். அருகிலேயே ஒரு வேப்ப மரம். பல வருடங்களாக இருக்கிறது போலும். நிறையக் கிளைகளுடன் படர்ந்து விரிந்தது. அந்த மரத்தடியில் கயிற்றுக் கட்டில் ஒன்று போடப்பட்டிருந்தது.

சரிதான். எப்போதும் மிதமான வெயிலுடன் வெம்மையைப் பரப்பாத இந்த ஊரின் தட்பவெப்ப நிலைக்கு மதிய வேளையில் இந்தக் கயிற்றுக் கட்டிலில் தலை சாய்த்தால் போதும். சுகமாக ஒரு தூக்கத்தைப் போட்டு விடலாம்.

'ம்மா...' என்ற சத்தம் கேட்டு நிமிர்ந்து பார்த்தால் அந்த வீட்டின் பக்கவாட்டில் ஒரு மாட்டுக் கொட்டகை யிருந்தது. அங்கே தன் தாயிடம் ஓடிச் சென்று அதன் மடியில் பாலைப் பருகிக் கொண்டிருந்தது ஒரு கன்றுக் குட்டி. மாட்டை வேடிக்கை பார்த்தது போதுமென்று செடி களைத் தாண்டிச் சென்று வீட்டினுள் நுழைந்தோம்.

விசாலமான முற்றத்துடன் கூடிய அந்த வீடு, ஒரு கிராமத்து வீட்டுக்கான அத்தனை அம்சங்களையும் பெற்றிருந்தது.

முற்றத்தில் அகலமான பித்தளைக் குடத்தில் தண்ணீர் நிரப்பி வைக்கப்பட்டிருந்தது. வயல் வேலைக்கும் தோப்பு, துரவிற்கும் சென்று விட்டு வீடு திரும்பும் ஆண்கள் தங்களது கை, கால்களைச் சுத்தம் செய்வதற்காக வைக்கப்பட்டிருந்தது.

அந்த முற்றத்திலிருந்து நிமிர்ந்து மேலே பார்த்தால் நீல வானமும் வேப்ப மரத்தின் கிளைகளும் நன்கு தெரிந்தன.

முற்றத்தைக் கடந்து நான்கு படிகளேறி நின்றால் இடது புறமும், வலது புறமும் இரண்டிரண்டு அறைகள் தெரிந்தன. அதில் வலது புறத்திலிருந்த அறையிலிருந்து புறப்பட்ட வாசமே அது சமையலறை என்பதைத் தெரிவித்தது.

ஒரு மூலையில் கலர் டிவியும், சற்றுத் தள்ளி ஒரு நாற்காலியில் டேபிள் ஃபேனும் இருந்தன.

இந்த அறைகளைக் கடந்து அந்தப் பெரிய நிலப்படியைத் தாண்டி உள்ளே சென்றால் இடதுபுறமாக மாடியறைக்குச் செல்லும் படிக்கட்டுகள் இருந்தன.

அங்கே ஒரு சாமி அறை. அதன் வளாகத்தைக் கடந்து வெளியே சென்றால் கொல்லைப் புறம். செடிகளுடனும், பூக்களுடனும்! தூரத்தில் வயல் வெளிகளும்,



தென்னந் தோப்புகளும்! அந்த வீட்டுக் கொல்லைப் புறத்தில் நின்றால் ஊரின் செழுமை முழுவதையும் அறிந்து கொள்ளலாம் போலும்! நாம் அந்த வீட்டையும், ஊரையும் பற்றிய வர்ணனையில் ஈடுபட்டிருந்த அந்த நேரத்தில் அந்த வீட்டு வாசலில்...

"ஏ அம்பரி... இன்னும் உள்ளே என்ன செய்து கொண்டிருக்கிறாய்? நேரமாவது தெரியவில்லையா? பஸ் போய்விடும். சீக்கிரம் வாடி!" எனக் கத்தியபடி கையில் புத்தகங்களுடன் தாவணியில் நின்றிருந்தாள் பதினெட்டு வயதே நிரம்பிய ஸ்திரீ ஒருத்தி.

"ஏன்டி வாசலில் நின்று கொண்டு சத்தமிடுகிறாய்? ஐந்து நிமிடம் பொறு. வந்து விடுகிறேன்," என்று உள்ளேயிருந்தபடி குரல் கொடுத்தாள் அம்பரி.

அவள் குரலிலிருந்தே தெரிந்தது அவள் எதையோ தின்றபடி பதிலளிப்பது.

"கடன்காரி. உனக்காக நான் எனது காலைச் சாப்பாட்டைத் தியாகம் செய்து விட்டு இங்கே வந்து நின்றால், நீ மூக்குப் பிடிக்கத் தின்று விட்டு வருவாயோ? தினமும் வகுப்பில் நீ தூங்கி விழும் ரகசியம் இதுதானா?" என்று அவள் கலகலவெனச் சிரிக்க,

"அடிக் கழுதை! இரு உனக்கு இருக்கிறது..." என்றபடியே, வீட்டுக்குள் ஓடிக் கொண்டிருந்தாள் அம்பரி.

வாசல் திண்ணையில் வெற்றிலையைக் குதப்பிய படி அமர்ந்திருந்த வள்ளியம்மைப் பாட்டி அந்தப்

பெண்ணிடம், "வாடியம்மா மகராசி! இன்னைக்கு நீயும் உன் சிநேகித்தியும் சேர்ந்து யார் உயிரை வாங்கப் புறப்படுறீங்க? வயசு வந்த பொம்பளைப் பிள்ளைக அடக்க ஒடுக்கமா வீட்ல உட்கார வேணாம்...? உங்க இரண்டு பேர் காலை ஒடிக்க வக்கில்லாம என்னை இப்படி உட்கார வைத் திருக்கிறானே ஆண்டவன்...!" என்று அந்தப் பாட்டி தன் தலையில் அடித்துக் கொள்ள...

"அய்யோ அம்மத்தா... நாங்க இன்னைக்கு எந்த வம்புக்கும் போகலை. இரண்டு பேரும் காலேஜ்க்குப் படிக்கப் போறோம். கையில புத்தகம் வைச்சிருக்கிறது தெரியலையா? நீ கொஞ்சம் உன் வாயை மூடிக்கிட்டு சும்மா இரு..." என்று அவள் மிரட்டிக் கொண்டிருந்த வேளையில்,

"அம்மா, நான் புறப்படுகிறேன்," என்றபடியே விறு விறுவென வெளியே ஓடி வந்தாள் அம்பரி.

"தேனு... வா வா. போகலாம். நேரமாகி விட்டதாகப் புலம்பித் தள்ளினாயே! இப்போது அப்பத்தாவுடன் அரட்டை அடித்துக் கொண்டிருக்கிறாய்!" என்று தேன்மொழியைத் திட்டியபடியே சற்றுத் தள்ளி நிற்க வைக்கப்பட்டிருந்த தன் சைக்கிள் எடுத்து வந்தாள் அம்பரி.

"உட்கார் சீக்கிரம். பஸ்ஸைப் பிடிக்க வேண்டாமா?" என்று பாவாடையைத் தூக்கிச் செருகியபடி சைக்கிள் மீது அவள் அமர்ந்த வேளை...

"புத்தகப் பையைக் கூட எடுத்துக் கொள்ளாமல் வெறும் கையோடு நீ எந்தக் கல்லூரிக்கடி செல்கிறாய்?



எனக்கென்று வந்து பிறந்திருக்கிறது பார்! முட்டாள் கழுதை!" என்று வைதபடியே பையைக் கொண்டு வந்து கொடுத்துச் சென்றார், அம்பரியின் தாய் சுப்புலட்சுமி.

அசடு வழிய அவள் பையை வாங்கிச் சைக்கிளில் மாட்ட, தேன்மொழி வாயை மூடிச் சிரிப்பை அடக்கினாள் என்றால், வள்ளிப் பாட்டி அவளைக் கண்டு வாய் விட்டே சிரித்தார்.

"புத்தகப் பைக்கட்டைக் கூட எடுத்துக்காம காலேசிக்குப் போய் நீ என்னத்தடி கிழிப்ப? வாத்தியார் வாயைப் பார்த்துப் பொழுதைப் போக்குவியா? இதிலிருந்தே தெரியுதடி... நீ படிக்கிற லட்சணம்.

"அரைப் பாவாடை போட்ட காலத்திலேயே பள்ளிக் கூடத்துக்குப் போக மாட்டேன்னு அடம் பிடிச்சுத் தென்னந் தோப்புல போய் உட்கார்ந்துகிட்டு காலத்தை ஓட்டுனவ நீ. உன்னையெல்லாம் காலேசிக்கு அனுப்புனா... இதுதான்டி நிலைமை. மக்குக் கழுதை!" என்று பாட்டி தன் வசையைத் தொடங்க, கோபமாக அவரருகே சென்றாள்.

"காலேசி... ஆமா காலேசி. அப்பத்தா... அது காலேஜ். சொல்லு பார்ப்போம். ஆங்கிலம் என்றால் உனக்கு என்னவென்றே தெரியாது. நீ என்னைக் கேலி செய்கிறாயா?

"ஏய்... கிழவி! என்னைப் போன்ற அறிவாளிகளுக்கு 100 பக்கம் அடங்கிய புத்தகமெல்லாம் தூசு மாதிரி. அதை எப்போதோ படித்து முடித்து விட்டேன். அதனால்தான்

அதை எடுத்துக் கொள்ளக் கூட மறந்து செல்கிறேன். ஒரு முறை படித்து முடித்ததைத் திரும்பத் திரும்பப் படிக்க நான் ஒன்றும் உன்னைப் போல் முட்டாள் அல்ல..." என்று எகிற,

"அப்புறம் ஏன்டியம்மா பன்னிரண்டாம் வகுப்பையே இத்தனை வருடமாகப் படிக்கிற?" என்று அப்பத்தா வினவியதும்,

"அது... அது..." என்று திணறியவளைக் கண்டு வயிற்றைப் பிடித்துக் கொண்டு விழுந்து விழுந்து சிரித்தாள் தேன்மொழி.

"ஏய்... என்னடி சிரிப்பு வேண்டிக் கிடக்கிறது, உனக்கு? நீயும்தான் என்னோடு சேர்ந்து இரண்டு வருடமாக ஒரே வகுப்பில் அமர்ந்திருக்கிறாய். நினைவில் வைத்துக் கொள்!" என்றவள்,

அப்பத்தாவிடம் திரும்பி, "இதோ பார் அப்பத்தா... எனக்கிருக்கும் விசாலமான அறிவிற்கு எல்லோரும் படிக்கும் கணக்கு, அறிவியலெல்லாம் போதவே போதாது. இந்தப் புத்தகங்களும், பாடங்களும் என் தாகத்தைத் தீர்ப்பதேயில்லை. அதனால் எனக்கு இந்தப் புத்தகங்களின் மீது அவ்வளவாகப் பிடிப்பில்லை.

"அதனால் தேர்வில் தோல்வியடைந்து விடுகிறேனே தவிர, எனக்குத் திறமையும், அறிவும் ஜாஸ்தி. என்னைக் குறைத்து எடை போடாதே... என்ன?" என்று மிரட்டினாள்.



"ஆமாங்கண்ணு. உனக்கிருக்கிற அறிவுக்கு இந்தப் புத்தகமெல்லாம் தூசுதான். மக்கு, மட சாம்பிராணி. உன் மாமன் வரட்டும். பைக்கட்டைக் கூட மறந்து இவ பள்ளிக்கூடத்துக்குப் போறா ராசான்னு அவன்கிட்டேயே சொல்றேன். உன்னை அடக்க அவன்தான் சரி! என்கிட்ட பேசுற வியாக்யானத்தை அவன் கிட்ட பேசிப் பாரு..." என்று பாட்டி அவளிடம் சவால் விட, கொதித்துப் போனவள்,

"ஏய் கிழவி... மாமாவிடம் நீ போட்டுக் கொடுத்து விட்டாய் என்று எனக்குத் தெரிந்தது... உன் இரண்டு காது தண்டட்டியையும் பிடித்து ஊஞ்சலாடி விடுவேன். ஜாக்கிரதை!" என்று மிரட்டி விட்டுத் திரும்பியவள்,

"பக்கத்து வீட்டு, எதிர் வீட்டுப் பாட்டிகளெல்லாம் போய்ச் சேர்ந்து எத்தனை வருடங்களாகி விட்டன! இந்தக் கிழவியை மட்டும் எப்படிடி எமன் கவனிக்காமல் இருக்கிறான்? என் உயிரை வாங்குகிறது..." என்று எரிச்சலுற்றபடியே தேன்மொழியை ஏற்றிக் கொண்டு தன் சைக்கிளில் புறப்பட்டாள் அம்பரி.

"ஆணா பிறக்க வேண்டியது, பொண்ணாப் பிறந்து என் மகன் மானத்தைச் சந்தி சிரிக்க வைக்குதே! அடியேய்! என்னையே மிரட்டிட்டா போற?" என்ற அப்பத்தாவின் குரல் மெதுமெதுவாகத் தேய,

"அப்பாடி...!" என்று மூச்சை இழுத்து விட்டபடி, இரு புறமும் தென்னை மரங்கள் நிறைந்த அந்தச் சாலையில் புன்னகையுடன் தன் சைக்கிளைச் செலுத்திக் கொண்டிருந்தாள் அம்பரி.

சாம்பலும், செஞ்சிவப்பு நிறமும் கலந்த பாவாடை - தாவணியில் இடையைத் தாண்டி நீண்டு சென்ற ஒற்றை ஜடையுடன், காதில் குடை ஜிமிக்கிகள் அசைந்தாட... முகத்தில் நிரந்தரமாகக் குடி கொண்டிருக்கும் கள்ளத்தன மற்ற சிரிப்புடன் நிதானமாகச் சைக்கிளைச் செலுத்திக் கொண்டிருந்தாள்.

அவள் முகத்தில் தேங்கியிருக்கும் வெகுளித் தனமே அவளது குணத்தைப் பிரதிபலிக்க... வில்லாக வளைந்திருந்த புருவங்களும், மையிடப்பட்டிருந்த அகண்ட பெரிய விழிகளும் அவளது குறும்பையும், சிறு பிள்ளைத் தனத்தையும் பிரதிபலித்தன.

வயலிலும், தோப்பிலும் தந்தையுடனும், மாமனுட னும் இறங்கி வேலை செய்பவள் என்பதால், இயல்பாகவே வனப்பான உடலுடன் இருந்தாள்.

பால் போன்ற நிறமும், எடுப்பான நாசியும் அவளைப் பேரழகியாகவே காட்டியது. தூக்கிச் செருகியிருந்த பாவாடையின் வழியே தெரிந்த தந்தக் கால்களைக் கொலுசு அலங்கரித்திருக்க...

அவளோ தன் அழகையும், வனப்பையும் பற்றிச் சிறிது கூடக் கர்வம் இல்லாது சிலுசிலுவென முகத்தில் மோதிய காற்றையும், மரங்கள் நிறைந்த சாலையையும் ரசித்தபடி வந்து கொண்டிருந்தாள்.

"அம்பரி... நீ இப்படி ஓட்டிச் சென்றாயானால் நாம் நாளைக்குத்தான் வகுப்பிற்குச் செல்வோம். கொஞ்சம்



விரைவாகத்தான் செல்லேன்டி!" என்று தேன்மொழி எரிச் சலுடன் கூற...

"தேனு... சீக்கிரம் வகுப்பிற்குச் சென்று என்னடி சாதிக்கப் போகிறோம்? எப்படியும் இந்த வருடமும் கோட்டை விடத்தான் போகிறோம்," என்று அவள் சிரித்தபடி கூற...

"நீ இந்த முறையும் தோல்வியடைந்தால் திவாகரன் அண்ணா உன்னைச் சும்மா விடமாட்டார். அவரை மறந்து பேசுகிறாயே?" என்றவளிடம்,

"அடி போடி! மாமாவைச் சமாளிப்பது எனக்குப் பெரிய விசயமே கிடையாது. சொல்லப் போனால் அவருக் காகத்தான் நான் இந்தக் கன்றாவியையெல்லாம் சகித்துக் கொள்வதே. மற்றப்படி படிப்பிற்கும், எனக்கும் ஏழாம் பொருத்தம்தான் என்று உனக்குத் தெரியாதா?

"என் ஆர்வமெல்லாம் விவசாயத்தில்தான். வயலில் இறங்கி கை, கால் இணங்க வேலை செய்து விட்டு அம்மா செய்யும் குடல் குழம்பைத் தின்று தென்னந் தோப்பில் மதியத் தூக்கத்தைப் போட்டு விட்டு மாலை வீடு வந்து சேர்வதை விட்டு விட்டுக் கை, காலை அசைக்காமல் ஏழு மணி நேரம் வகுப்பில் உட்கார்ந்து கொண்டு இந்தப் புத்தகத்தைப் புரட்டிக் கொண்டு...

"ச்சே, ச்சே... எனக்கு இதெல்லாம் சுத்தமாகப் பிடிப்பதில்லை தேனு. திவாகரன் மாமா வற்புறுத்துவதால் மட்டும்தான் இந்த டுடோரியல் காலேஜ் பக்கம் தலை காட்டுகிறேன்," என்றவளிடம்,

"ம்க்கும்..." என்று நொடித்துக் கொண்டாள் தேன் மொழி.

"அவர் வற்புறுத்துகிறாராம், படிக்கச் சொல்லி! என்னமாகப் பூசி மெழுகுகிறாள். ஒரு நாள் செல்லா விட்டாலும் மரத்தில் கட்டி வைத்து உதைப்பார் திவாகரன் அண்ணன். அதற்குப் பயந்து கொண்டுதான் இவள் இஷ்டமில்லா விட்டாலும் நேரத்திற்கு வகுப்பை அடைந்து விடுவது. ஆனால் இப்போது எப்படிச் சொல்கிறாள்! கீழே விழுந்தாலும் மீசையில் மண் ஒட்டக் கூடாது..." என்று அவள் வாய்க்குள்ளேயே புலம்ப...

"என்னடி முணுமுணுக்கிறாய்? வா வா. பஸ் வந்து விட்டது..." என்றவள்,

அங்கேயிருந்த பெட்டிக் கடை ஒன்றில் வண்டியை நிறுத்தி விட்டு, "மாரி அண்ணா, வண்டியைப் பார்த்துக் கொள்ளுங்கள்," என்று கூவியபடி சாவியை எடுத்துக் கொண்டு பேருந்தை நோக்கி ஓடினாள்.

இருவரும் பேசியதிலிருந்தே புரிந்து கொண்டிருப் பீர்கள். அவர்களிருவரும் செல்வது டுடோரியல் காலேஜ் என்றழைக்கப்படும் தேர்வில் தோல்வியுறும் மாணவர் களுக்குச் சிறப்புப் பயிற்சி அளிக்கும் வகுப்பிற்கு.

அம்பரிக்குப் படிப்பில் சிறு வயதிலிருந்தே ஈடுபாடு கிடையாது. இதற்காக அவளைப் பெற்றோரும் பெரி தாக அலட்டிக் கொள்ளவில்லை என்பதால் அவளைக் கண்டிப்பதற்கு யாருமில்லை என்றாகிப் போனது.



சுப்புலட்சுமி - மாணிக்கம் தம்பதியரின் ஒரே செல்ல மகள்தான் அம்பரி. தாய் சுப்புலட்சுமி கண்டிப்பானவர் தான் என்றாலும், மாணிக்கம் அவருக்கு நேரெதிராக இருந்ததுதான் அம்பரிக்குச் சாதகமாகிப் போனது.

வீட்டில் அனைத்தும் அவளது விருப்பப்படிதான். பள்ளிக்கூடத்திற்குச் செல்லாமல் தந்தையுடன் தென்னந் தோப்பிற்குச் சென்று விடுவாள். அங்கே தேங்காய் பறித்துப் போடுபவர்களை இளநீர் குடித்தபடி வேடிக்கை பார்த்து விட்டுத் தந்தையுடன் பம்பு செட்டில் ஆடிவிட்டு பண்ணை வீட்டிலேயே உறங்கி விடுவாள்.

மாணிக்கம் தன் மனைவியிடம் இதைப் பற்றிக் கூறாத போதும், எப்படியோ அறிந்து கொண்ட சுப்புலட்சுமி, தன் மாமியாரிடம் விஷயத்தைச் சொல்ல, வள்ளிப் பாட்டி அவளைக் கிழித்துக் கூறு போட்டார்.

அப்பத்தா தன்னைத் திட்டி விட்ட அவமானத்தைத் தாங்கிக் கொள்ள முடியாத பத்து வயது அம்பரி, அவர் உறங்குகையில் காதுக்குள் மண்ணைப் போட்டு விட்டு ஓடி விட்டாள். அன்றிலிருந்து அம்பரிக்கும் வள்ளியம்மைப் பாட்டிக்கும் ஒத்துப் போவதே யில்லை. எந்நேரமும் வாய்ச் சண்டைதான்.

பதினோராம் வகுப்புவரை அவளது அத்தை மகன் திவாகரனின் உதவியால் தட்டுத் தடுமாறிப் படித்து வந்தவள் பன்னிரண்டாம் வகுப்பில் சுத்தமாகப் படிப்பை வெறுத்துத் தேர்வில் தோல்வியுற்றுவிட, கடந்த இரண்டு வருடங்களாக மறு தேர்வு எழுதி வருகிறாள். இந்த

வருடமும் தோற்றுப் போய்விட்டால் எப்படியும் இனி தேர்வு எழுத அரசாங்கமே அனுமதிக்காது. அப்படியே படிப்பிற்கு முழுக்குப் போட்டு விட்டுத் தப்பித்து விட வேண்டும் என்பது தான் அவளது திட்டம்.

இப்படிக் கஷ்டப்பட்டு எதற்காக டுடோரியல் கல்லூரியில் சேர்ந்து படிக்க வேண்டும் என்றுதானே நினைக்கிறீர்கள்? அதற்கு முக்கியமான ஒரு நபர்தான் காரணம்.

படிப்பு பெண்களுக்கு எவ்வளவு முக்கியமானது என்பதை அவளைக் காணும் போதெல்லாம் எடுத்துக் கூறி, ஒரு குட்டி வகுப்பே எடுத்து விடும் அந்த நபருக்காகத்தான் அம்பரி இந்தத் தலைவலியைக் கட்டிக் கொண்டு திரிவதே. அந்த நபர் அவளது அருமை அத்தை மகன் திவாகரன்.

படிப்புதான் வரவில்லையே தவிர, மற்ற வேலைகள் அனைத்திலும் அம்பரிக்கு மிகுந்த ஈடுபாடு உண்டு. சமையல் செய்வது, வீட்டைச் சுத்தமாக வைத்துக் கொள்வது, வாசலில் கோலம் போடுவது, மாடுகளைக் குளிப்பாட்டுவது, அவைகளுக்குத் தீவனம் போடுவது, வயலில் இறங்கி வேலை செய்வதென அனைத்திலும் ஆர்வம் கொண்டவள்.

ஒரு நிமிடம் கூட சோர்ந்திருக்க மாட்டாள். உறங்கும் நேரம் தவிர, மற்ற நேரம் முழுதும் பம்பரமாகச் சுழன்று கொண்டு தானிருப்பாள்.

அம்பரியின் ஒன்றுவிட்ட மாமன் மகளான தேன்மொழிக்கும் அவளைப் போன்ற எண்ணம்தான். படிப்பில்



சுத்தமாக ஈடுபாடு கிடையாது. ஒரு நாள் பள்ளிக்கூடத்திலிருந்து தப்பி, செல்வம் மாமாவின் திராட்சைத் தோட்டத்தை வந்தடைந்த அம்பரி, அங்கே அவளைப் போலவே தேன்மொழியும் பள்ளிக்கு முழுக்குப் போட்டு விட்டு அமர்ந்து விட்டதைக் கண்டு அவளிடம் விசாரித்தாள்.

தன்னைப் போலவே அவளும் பதில் சொல்வதைக் கண்டு மகிழ்ச்சியடைந்த அம்பரி, "இனி நான் பள்ளிக்கூடத்திற்கு வந்தேனா என்று என் அம்மா கேட்டால், நீ ஆமாம் என்று சொல்ல வேண்டும். உன் அம்மா உன்னைப் பற்றிக் கேட்டாலும் நான் ஆமாம் என்று கூறி விடுகிறேன். சரியா?" என்று கேட்டு, அவளுடன் அன்றே உடன்படிக்கை செய்து கொண்டாள்.

அன்றிலிருந்து இன்றுவரை இருவரும் கூட்டுச் சேர்ந்து கொண்டு செய்யும் அட்டகாசங்களுக்கு அளவேயில்லை.

**அ**ன்று வகுப்பு முடிந்து வெளியே வந்த அம்பரி, "என்னடி, அந்த ஆள் ஒரேயடியாக அறுத்துத் தள்ளுகிறார்! காலையில் நெய்ப் பொங்கல் சாப்பிட்டதில் எனக்கு அப்படி ஒரு தூக்கம்..." என்று புத்தகப் பையை அவளிடம் கொடுத்து விட்டு நெட்டி முறித்தாள்.

அவளை முறைத்த தேன்மொழி தலையில் அடித்துக் கொண்டாள்.

அம்பரியைப் போலல்லாது தேன்மொழி கொஞ்சமேனும் வகுப்பைக் கவனிக்க முயல்வாள். ஏனெனில்

புத்தகங்களோடு திவாகரன் அவளைக் கண்டானானால் நிற்க வைத்துக் கேள்வி கேட்க ஆரம்பித்து விடுவான். பதில் தெரியாமல் விழித்தால், அங்கேயே அமர வைத்து, "உனக்கு என்ன புரியவில்லை... சொல்!" என்று வகுப் பெடுக்க ஆரம்பித்து விடுவான்.

அதனாலேயே வாய்க்கு வந்தது எதையேனும் சொல்லிச் சமாளிக்கக் கொஞ்சமேனும் அறிந்து வைத் திருக்க வேண்டுமே என்று பயந்து கொண்டு வகுப்பைக் கவனிப்பாள்.

அம்பரி அப்படியல்ல. வகுப்பு ஆரம்பித்ததும் நோட்டைத் திறந்து வைத்துக் கொண்டு பேனாவால் கோலம் போட ஆரம்பிப்பவள், சிறிது நேரத்தில் தனது முதல் கொட்டாவியை வெளியிடுவாள்.

அதன் பிறகு நேரம் செல்லச் செல்ல மெல்லக் கவிழ்ந்து, ஒன்று தேன்மொழி மீது விழுவாள். அல்லது மேஜையின் மீது கவிழ்ந்து உறங்கி விடுவாள்.

பல முறை வாத்தியார்கள் கண்டித்துப் பார்த்தும், தண்டித்துப் பார்த்தும், அவள் திருந்தாமல் போனதால் கட்டணம் செலுத்திய காரணத்திற்காக அவளை வகுப்பில் அமர அனுமதியளித்திருந்தனர்.

வாரத்தில் மூன்று நாட்கள் நடக்கும் இந்த வகுப்பில் கலந்து கொள்ளத்தான் அவள் இப்படிப் போராடுவதே!

மூன்று மணி நேரம் நன்றாக உறங்கி எழுந்து விட்டதால் புத்துணர்ச்சியுடன் பஸ் ஏறியவளிடம், "அம்பரி, நான் வழியில் மீனாட்சிபுரத்திலேயே இறங்கி விடுவேன். என் பெரியம்மா வீடுவரை செல்ல வேண்டும். நீ வீட்டிற்குச் சென்று விடு!" எனக் கூறி விட்டு அடுத்த பதினைந்து நிமிடத்தில் இறங்கி விட்டாள் தேன்மொழி.



அடுத்த சிறிது நேரத்தில் ஊர் வந்திறங்கிய அம்பரி, மாரியண்ணனின் கடையில் நிறுத்தி வைத்திருந்த சைக்கிளை எடுத்துக் கொண்டு வீட்டை நோக்கிப் புறப் பட்டாள்.

செல்லும் வழியிலிருந்த தென்னந்தோப்பிற்குள் நுழைந்தவள், சைக்கிளை நிறுத்திவிட்டு,

'எங்கே... யாரையும் காணோம்...' என்று யோசித்த படியே நடந்து சென்றாள். ஆங்காங்கே பறிக்கப்பட்டிருந்த தேங்காய்கள் குவித்து வைக்கப்பட்டிருக்க, சுற்றிச் சுற்றிப் பார்த்தபடி நடந்தவள் இடையில் போடப்பட்டிருந்த தடியைக் கண்டு பாவாடையைத் தூக்கிச் செருகி ஒரே குதியாகக் குதித்து இந்தத் தடியைத் தாண்டி எதிர்ப்புறம் சென்று விட வேண்டும் அம்பரி என்று தனக்குத் தானே கூறிக் கொண்டு குத்துச் சண்டைக்குச் செல்பவள் போலக் குதித்துத் தன்னை நிலைப்படுத்திக் கொண்டு, கைகள் இரண்டையும் பரபரவெனத் தேய்த்துக் கொண்டு, "ஏ..." என்றபடி ஓடிச் செல்ல...

இடையிலேயே இடுப்பில் செருகியிருந்த பாவாடை அவிழ்ந்து அவள் முயற்சிக்குத் தடை போட்டதால் அடுத்த அடி எடுத்து வைக்கையில் பாவாடை தடுக்கி, "ஆ..." என்றபடி கீழே விழப் போனவளை இரு நீண்ட வலுவான

கரங்கள் தாங்கிப் பிடிக்க... யார் என்று நிமிர்ந்து பார்த்த அம்பரிக்கு மயக்கமே வந்து விட்டது.

சிரிப்பும், கோபமுமாய் அவளை முறைத்தபடி நின்றிருந்தது, அவளது நேசத்திற்குரிய, அன்பிற்குரிய, எல்லையில்லாக் காதலுக்குரிய அவளது திவாகரன்.

## 2

தாங்குமோ...
ஓ... என் தேகமே...
மன்மதனின் மலர்க் கணைகள்
தோள்களிலே...
மோகம் தீரவே... வா என் அருகிலே...
உள்ளம் கோவில்! கண்கள் தீபம்!
பூஜை காணலாம்...!

"**எ**த்தனை முறை கூறியிருக்கிறேன் பரி! இப்படி ஓடி வராதே என்று? உனக்குத்தான் பாவாடையுடன் ஓட வராதே? பின் ஏன் இந்த வீண் முயற்சி? நான் பிடித்திரா விட்டால் இந்தத் தடியில் விழுந்து மண்டையை உடைத்துக் கொண்டிருப்பாய். சேட்டை செய்வதற்கு அளவில்லையா? இன்னும் நீ சிறு பிள்ளையா? ம்..." என்று வைதபடியே அவளை விலக்கி நிறுத்தினான் திவாகரன்.

உதட்டைக் கடித்தபடி தாவணியைத் திருகிக் கொண்டு, தலை குனிந்து நின்றிருந்தவளிடம், "இன்று எங்கே ஊர் சுற்றி விட்டு வருகிறாய்? எங்கே உன் ஆருயிர்த் தோழி



தேன்மொழி? இரண்டு கூட்டுக் களவாணிகளும் தோப்பில் என்ன செய்யத் திட்டமிட்டிருக்கிறீர்கள்?" என்று அவன் கேட்க,

"நாங்கள் ஒரு திட்டமும் போடவில்லை. தேன்மொழி மீனாட்சிபுரம் பெரியத்தை வீட்டிற்குச் சென்று விட்டாள். நாங்கள் ஒன்றும் ஊர் சுற்றவில்லை. வகுப்பிற்குச் சென்று வருகிறோம்," என்று ரோஷத்துடன் கூறினாள்.

"ஹ்ம்ம். அதாவது நன்றாகத் தூங்கி எழுந்து வருகிறாய் என்று சொல்!" என்று அவன் அதற்கும் நக்கலடிக்க, "என்னை எப்போதும் குறை கூறிக் கொண்டே இருக்காதே மாமா!" என்று சிணுங்கியபடியே மறுபுறம் திரும்பி நின்றவள்...

முன்னே விழுந்த நீண்ட பின்னலை விரலால் சுற்றியபடியே நிற்க, அவள் சிணுங்கியதுமே கோபம் குறைந்து போன திவாகரன் சிரிப்புடன் நிமிர்ந்து அவளை நோக்கினான்.

அந்தச் சாம்பல் நிறப் பாவாடையும், சட்டையும் அவள் வண்ணத்திற்கு வெகு பொருத்தமாய் அமைந் திருக்க, பின்னியிருந்த கூந்தலை அவள் முன்னே இழுத்துக் கொண்டதால் தெரிந்த அவள் முதுகுப் புறத்தில் சிறிய பொட்டளவில் அமைந்திருந்த கறுப்பு மச்சம் அவனை வெகுவாக ஈர்த்தது.

மாமன் மகளின் பின்னழகில் சொக்கிப் போனவன் மெல்ல அவளை நெருங்கி அவள் கரம் பற்றி, "என்னைக்

காணத்தான் வந்தாயா?" என்றபடி அவள் முதுகில் தன் கன்னத்தைத் தேய்த்தான்.

சிலிர்த்து விலகியவளின் முகம் முழுதும் சிவந்து விட, "கூ...கூசுகிறது மாமா!" என்றவளை அருகே இழுத்தவன் செவ்வரளிப் பூவாய் மாறிப் போய் விட்ட அவளது முகத்தை நிமிர்த்தித் தன்னைக் காணச் செய்தான்.

அவன் விழிகளைச் சந்திக்க முடியாமல் கண்களை மூடிக் கொண்டவளைக் கண்டு சிரித்தபடி, அவளது மூடிய விழிகளில் இதழ் பதித்தவன், மெல்ல அவள் கன்னம் வருடினான்.

"நீ மட்டும் என் வாழ்வில் வராமல் போயிருந்தால் நான் என்னவாகியிருப்பேன் பரி? ஒருவேளை கஞ்சிக்கும் வக்கற்றுத் தெருவில் பரதேசியாகத் திரிந்து கொண்டிருந்திருப்பேன் இல்லையா?

"இந்த வாழ்வும், இந்த மூச்சும், இந்த ஆரோக்கியமான உடலும் நீ அளித்ததல்லவா! என் உயிரும், உணர்வுமாய் மாறிப் போய் என்னைக் காப்பதற்காகவே பிறவியெடுத்தவளல்லவா நீ! ஏன் இதையெல்லாம் எனக்காகச் செய்தாய் பரி?" என கண்களில் அன்பையும், காதலையும் தேக்கி இமைக்காமல் அவளையே நோக்கிக் கொண்டிருந்தவனைக் கண்டு உயிர்வரை சிலிர்த்தது அம்பரிக்கு.

தன் கன்னங்களை ஏந்தியிருந்த அவன் கைகளைப் பற்றி, "ஏ...ஏனென்றால்... ஏனென்றால்... நீ... நீதானே மாமா எனக்கு எல்லாம். நீ வருத்தமுற்றால் என்னால் தாங்க முடியாதே!" என்றவளை வேகத்துடன் இழுத்துத் தன்னோடு இறுக அணைத்துக் கொண்டான்.

"என் கண்ணே... என் கண்ணே..." என்றபடி தன்னை மேலும் மேலும் அவனுள்ளேயே புதைத்து விடுபவன் போன்று அணைப்பவனின் மார்பில் சிரிப்புடன் கண் மூடிச் சாய்ந்து கொண்டாள் அம்பரி.

அவளுக்குத் தெரியும். ஒவ்வொரு முறை அவளை அணைக்கும் போதும் அவன், 'என் கண்ணே... என் கண்ணே...' என்றுதான் கூறுவான். பத்து வயதிலிருந்தே தொடங்கி விட்டதல்லவா இந்த அணைப்பு...!

அவளது இடையைச் சுற்றித் தன் கரங்களால் வளைத்துக் கொண்டவன், அவள் தலையில் தன் கன்னத்தைச் சாய்த்து, "மேடம் இன்று வகுப்பில் என்ன கற்றுக் கொண்டீர்கள்? இந்த வருடமேனும் தேறுமா?" என்று சிரித்தபடி வினவ, உச்சுக் கொட்டியபடி அவனை நிமிர்ந்து நோக்கியவள்... மீண்டும் அவன் மார்பிலேயே சாய்ந்து,

"எனக்குப் படிக்கவே பிடிக்கவில்லை மாமா. நீ ஏன் என்னைப் படிக்கச் சொல்லித் துன்புறுத்துகிறாய்?" என்று சிணுங்கியபடியே வினவ,

"அடிப்பாவி! படிப்பது உனக்குத் துன்பமாகத் தெரிகிறதா! பரி... படிப்பு வாழ்க்கையில் எத்தனை முக்கியமானது என்பதை நீ இன்னும் அறியாமல் இருக்கிறாயம்மா!" என்று அவன் ஆரம்பிப்பதற்குள்...

வேகமாக அவன் வாயைத் தன் கையால் மூடியவள்... "மாமா... மாமா... ப்ளீஸ் காலையில்தான் ஒரு அறுவையைச் சகித்துக் கொண்டு வந்திருக்கிறேன். நீ வேறு ஆரம்பித்து விடாதே!" என்று அவசரமாகக் கூற,

"அடிக் கழுதை! நான் அறிவுரை கூறுவது உனக்கு அறுவையாகத் தெரிகிறதா?" என்றபடி, அவள் கன்னத்தைச் சற்றுப் பலமாகவே அவன் கடித்து விட,

"ஆ!" என்று வலியில் முகம் சுருக்கியவளைக் கண்டு, "வலிக்கிறதா! சாரி சாரி கண்ணம்மா..." என்றபடியே மீண்டும் குனிந்தவன் கடித்த கன்னத்தில் அழுத்தமாக முத்தமிட... கண்கள் செருக, "மாமா..." என்றபடியே அவன் சட்டைக் காலரை இறுகப் பற்றினாள் அம்பரி.

அவளது கிறக்கம் அவனுக்கு மயக்கத்தைத் தர, அவளது இடையைப் பற்றித் தனக்கு வெகு அருகே இழுத்துக் கொண்டவன் அவளது நாடியிலிருந்து ஆரம்பித்து அவள் கன்னம் முழுதும் முத்தத்தால் ஊர்வலம் நடத்த... தன்னை மறந்து நின்றாள் அம்பரி.

இருவரும் தங்களை மறந்து முத்தத்தில் திளைத்திருந்த வேளை... "திவாகரா!" என்ற மாணிக்கத்தின் குரல் தூரத்தில் ஒலிக்க, சட்டென அவளை விட்டு விலகி நின்றான் திவாகரன். தடுமாறி நின்ற அம்பரி அவ்விடத்தை விட்டு ஓடிச் சென்றாள்.

அவள் சென்றதும் மாமனை நோக்கிச் சென்றவன், அவர் கையில் வைத்திருந்த பெரிய பெரிய நோட்டு



களைத் தன் கையில் வாங்கியபடியே அவரோடு நடந்தான். "என்னப்பா! தேங்காய்களெல்லாம் அப்படியே கிடக்கிறது. இந்நேரம் குடவுனைச் சென்றடைந்திருக்கும் என்றல்லவா எண்ணி வந்தேன். ம்?" என்று கேள்வி கேட்க,

"இல்லை மாமா. பறித்துப் போட்டவர்கள் அனைவரும் இளைப்பாறச் சென்றிருக்கிறார்கள். மதிய உணவிற்குப் பின் எடுத்துக் கொள்ளலாமென்று நான்தான் அனுப்பி வைத்தேன்." என்று அவன் அமைதியான குரலில் கூறினான்.

"வேலையை முடித்து விட்டுச் செல்ல... சொல்ல வேண்டியதுதானே! நீ அனைத்தையும் பார்த்துக் கொள்வாய் என்றுதானே தம்பி நான் வீட்டில் நிம்மதியாக இருப்பதே! வேலையாளின் இஷ்டப்படி நாம் வேலை செய்யக் கூடாது. நம் விருப்பப்படிதான் அவர்கள் வேலை செய்ய வேண்டும். கூலி கொடுப்பது நாம்தானே?" என்று அவர் வினவ, ஒன்றும் கூறாமல் தலை குனிந்தபடி நின்றிருந்தான் திவாகரன்.

இருவரது பேச்சையும் கவனித்தபடியே மீண்டும் அந்த இடத்திற்கு வந்தடைந்த அம்பரி, "மாமா என்ன தவறாகச் செய்து விட்டார் என்று கோபித்துக் கொள்கிறீர்கள் அப்பா! வேலையாட்களும் மனிதர்கள்தானே? இயந்திரம் அல்லவே!

"சற்று களைப்புத் தீர, இளைப்பாறி விட்டு வருவதில் என்ன தவறிருக்கிறது? ஒரு மணி நேரம் தாமதமாகக்

காய்கள் குடவுனைப் போய்ச் சேருவதால் என்னப்பா நஷ்டம் ஏற்பட்டு விடப் போகிறது? நீங்கள் கூலி கொடுக்கிறீர்கள் என்பதற்காக அவர்கள் களைப்புடன் பசியுடன் வேலை பார்க்க வேண்டுமா? மனிதாபிமான மில்லாமல் பேசாதீர்களப்பா!" என்று அவ்வளவு நேரமாக நாம் கண்ட சிறுபிள்ளைத் தோற்றமில்லாது முகத்தில் தீவிரத்துடன் தந்தையை எதிர்த்துப் பேசியபடி நின்றிருந் தாள் அம்பரி.

"கண்ணு, நீ இங்கேயா இருக்கிறாய்? அம்மா நீ இன்னும் வகுப்பிலிருந்து திரும்பி வரவில்லையென்று பீதியுடன் காத்துக் கொண்டிருக்கிறாள். மதியச் சாப்பாட் டிற்கும் நேரமாகி விட்டதே! செல் கண்மணி. பசியுடன் நீண்ட நேரம் நடமாடக் கூடாது. பின் கண்ணைக் கட்டிக் கொண்டு மயக்கம் வந்து விடும்," என்று அவர் கூற,

தந்தையைச் சிரிப்புடன் நோக்கியபடி அருகே சென் றவள், "இந்த மாணிக்கத்தின் மகள் அம்பரி மாத்திரம் பசியுடன் நடமாடக் கூடாது. ஆனால் யாரோ ஒரு ராம சாமி, குப்பு சாமியின் மகன்கள் சாப்பிடாமல் வேலை பார்க்கலாம். இல்லையாப்பா?" என்று கூற,

"தவறுதானம்மா. நான் அப்படிப் பேசியிருக்கக் கூடாதுதான். நேரத்திற்கு வேலை நடக்கவில்லையே என்கிற கோபத்தில் பேசி விட்டேன். மன்னித்து விடு. உன் மாமனையும் என்னை மன்னிக்கச் சொல்!" என்றவரை, "என் செல்ல அப்பா..." என்று அவரது இரு பக்க மீசை யையும் பிடித்திழுத்துக் கொஞ்சியவள்... "சரி. நான்



வீட்டிற்குச் சாப்பிடச் செல்கிறேன். நீங்கள் சாப்பிட்டா யிற்றாப்பா?" என்று வினவினாள்.

அவர், "ஆயிற்று..." என்றதும், "சரிப்பா. நான் வருகிறேன்," என்றவள் திவாகரனிடம், "வா மாமா! சாப்பிடச் செல்லலாம்," என்று கூறினாள்.

'வேலை முடியாமல் எப்படிச் செல்வது...!' என்று சிந்தித்தவன், "நீ செல் பரி. நான் பிறகு வருகிறேன்," என்று கூற...

"பிறகா... எப்போது? மாமா, இவ்வளவு நேரம் அப்பாவும், நானும் பேசியதைக் கேட்கவில்லையா? இந்த ஒரு சாண் வயிற்றுக்காகத்தான் நாம் மாடாக உழைப் பதே. அப்பாதான் வந்து விட்டாரே! அவர் காய்களை குடவுனுக்கு ஏற்றி விடுவார். நீ வா. நாம் சாப்பிட்டு வரலாம்," என்று அவனை அழைத்து விட்டு முன்னே நடந்தாள்.

தயங்கியபடியே மாமனின் முகம் நோக்கியவனிடம், "போடா! இங்கு நீ நிற்பது தெரிந்தால் இன்னும் பத்துப் பக்கத்திற்குப் பேசுவாள். நட நட..." என்று அவர் விரட்ட... தலையைக் கோதியபடியே நின்றவன்... "நீ நான்கு மணி வாக்கில் நேராக குடவுனுக்கே வந்துவிடு!" என்றவரிடம் தலையாட்டி விட்டு அம்பரியை நோக்கி ஓடினான்.

தோப்பைக் கடந்து வெளியே வந்ததும், "ஏய் வாயாடி, நில்!" என்று அவள் கைப்பற்றி நிறுத்தியவன்... அவளிடமிருந்து சைக்கிளை வாங்கிக் கொண்டு,

"மாமாவை எதிர்த்துப் பேசாதே என்கிறேனே பரி..." என்று மெல்ல ஆரம்பிக்க... வெடுக்கென அவன் புறம் திரும்பியவள்,

"நான் என்ன தவறாகவா பேசி விட்டேன்? வேலை செய்பவர்கள் பாவம்தானே! ஒரு மனிதாபிமானம் வேண்டாம்?" என்று மறுபுறம் பார்த்தபடி கூறிக் கொண்டே நடந்தவளைக் கைப்பற்றி நிறுத்தினான்.

"நீ அதற்காக மட்டுமா அவரை எதிர்த்துப் பேசினாய்?" என்று வினவ, அப்போதும் அவன் புறம் திரும்பாது நின்றவளின் முகம் பற்றித் திருப்பியவன், "சொல் பரி..." என்று மீண்டும் வினவினான்.

அவன் முகத்தைக் காணாமல் இரு திசைகளிலும் தன் பார்வையை அலைய விட்டவள், "அப்பா பேசியது உன்னைக் கஷ்டப்படுத்தி விட்டதோ என்று தோன்றியது எனக்கு. அதுபோக நீ... நீ எந்தத் தவறும் செய்யவில்லையல்லவா மாமா? அதனால்தான்..." என்று குரல் கம்மக் கூறினாள்.

பதில் கூறாமல் அவளது தோளை இறுகப் பற்றியபடி நடந்தான் அவன். ஏனோ அவனது அமைதி அவளை ஏதோ செய்ய...

குரலில் உற்சாகத்தை வரவழைத்துக் கொண்டு, "மாமா, என்னைச் சைக்கிளில் ஏற்றிச் செல். நான் முன்னே அமர்ந்து கொள்கிறேன். நீ ஓட்டு!" என்றபடி அவன் கையை விலக்கி ஏறி அமர்ந்தாள்.



"பரி... அத்தை மட்டும் நாமிருவரும் சேர்ந்து வருவதைக் கண்டால் எட்டு ஊருக்குக் கேட்குமளவிற்குக் கத்திக் கூப்பாடு போட்டு விடுவார்கள். நீ எதற்கும் நான்கடி தள்ளியே நட!" என்று அவன் கூற...

"வீட்டினருகே சென்றதும் நான் இறங்கிக் கொள்கிறேன். வா மாமா!" என்று கெஞ்சி அவனோடு சைக்கிளில் ஏறிக் கொண்டாள்.

இந்தப் பயணம் இப்படியே நீளக் கூடாதா என்று ஏங்கியவள், வீட்டிற்குச் சற்றுத் தொலைவிலேயே வண்டியிலிருந்து இறங்கிக் கொண்டாள்.

"பையை எடுத்துப் போ பரி. நான் அம்மத்தாவிற்கு வெற்றிலை வாங்கிக் கொண்டு வருகிறேன்," என்றவன், சைக்கிளைத் திருப்பிக் கொண்டு சென்று விட்டான்.

வெற்றிலை வாங்கிக் கொண்டு வீடு திரும்புகையில் திண்ணையில் வள்ளியம்மையுடன் சண்டையில் ஈடுபட்டிருந்தாள் அம்பரி. "கிழவி... உன்னை உயிரோடு விடமாட்டேன் பார்!" என்றவள், அவரது இரு காது தண்டட்டியையும் பிடித்து இழுக்க... "அய்யோ... ஆத்தா! வலிக்குதே... விடுடி. ராங்கி விடுடி!" என்று அவர் சத்தமிடுவதைக் கண்டு பதறி அருகே ஓடியவன்,

"பரி, விடு. சொல்கிறேனல்லவா! கையை எடுடி..." என்று அவளைப் பிடித்துத் தன் புறம் இழுத்துக் கொண்டவன், "உஃப்ஃப்..." என மூச்சை வெளியிட்டு, "ஏய், என்னடி பழக்கமிது? வாய்ச் சண்டையை விட்டு விட்டுக்

கைகலப்பில் இறங்கி விட்டாய்?" என்று அவளை நோக்கிச் சத்தமிட்டான் திவாகரன்.

"கையை விடு மாமா. உனக்கு இந்தக் கிழவியைப் பற்றி ஒன்றும் தெரியாது. ஏய் கிழவி! இன்று மாமா வந்ததால் நீ தப்பித்தாய். என்றாவது ஒரு நாள் உன் தண்டட்டியில் ஊஞ்சலாடாமல் விட மாட்டேன் நான்..." என்று அவள் கறுவ... சிரிப்பு பொத்துக் கொண்டு வந்தது திவாகருக்கு.

"அம்மத்தா... வெத்தலை..." என்று அவரிடம் நீட்டியவன், அவரருகிலேயே அமர்ந்து, "இன்று உங்கள் இருவருக்கும் என்ன பிரச்னை?" என்று விசாரித்தான்.

அம்பரி ஆரம்பிக்கும் முன் குறுக்கே புகுந்த வள்ளியம்மை, "அதை நான் சொல்கிறேன்," என்று தொடங்கி, "ராசா... பள்ளிக்கூடத்துக்குப் புஸ்தகமே எடுத்துக்காம போறவளை இந்த வீட்டுலதான்ய்யா நான் பார்க்கிறேன். உன் அத்தை மவ இந்த எடுபட்டவ... நல்லா படிக்கணும்னு நீ தலையா அடிச்சுக்கிற.

"இந்தக் கிறுக்கி, சினிமாவுக்குப் போறவ மாதிரி, வெறுங்கையை வீசிக்கிட்டு பள்ளிக்கூடத்துக்கு கிளம்புறா. இந்தக் கழுதையெல்லாம் பத்துப் பாத்திரம் கழுவிக்கிட்டு வீட்டில கிடக்கத்தான் லாயக்கு. இந்தச் சிறுக்கிக்காகக் காத்துக்கிட்டு இருக்காம நீ நல்லா படிச்ச பிள்ளையாப் பார்த்துக் கட்டிக்க கண்ணு..." என்று அவர் தன் பேரனைக் கொஞ்ச,



"ஏய் கிழவி! நீ செத்த..." என்று கடுங்கோபத்துடன் பாய்ந்தவளைக் கஷ்டப்பட்டுத் தடுத்து நிறுத்தியவன், "அய்யோ அம்மத்தா! நீயும் அவளுக்குச் சரியா வாயைக் கொடுத்து வாங்கிக் கட்டிக் கொள்கிறாயே! சும்மாதான் இரேன்," என்று சிரித்தபடியே கூறியவனிடம்...

"அவ கிடக்குறா கழுதை. நீ சாப்பிட்டியா ராசா?" என்று பாசமாக விசாரித்தவரிடம், "சாப்பிடத்தான் வந்தேன் அம்மத்தா. நீ சாப்பிட்டாயா?" என்று கேட்டு விட்டு உள்ளே சென்றான்.

"கிழவி... நீ வெற்றிலை இடிக்கும்போது ஒரு கைப்பிடி சுண்ணாம்பைக் கொட்டுகிறேன் பார்..." என்று கர்ஜித்தவள், விசுக்கென்று திரும்பிக் கொண்டு உள்ளே சென்றாள். முற்றத்தில் கை, கால் கழுவி விட்டுப் படியேறி வந்தவன்... தொலைக்காட்சிப் பெட்டியில் பார்வையைப் பதித்தபடி தலையணையில் சொகுசாகச் சாய்ந்திருந்த அத்தையைக் கண்டு தயங்கி ஒதுங்கிச் சென்றான்.

ஓரக்கண்ணால் அவனை நோக்கியபடி படுத்திருந்த அன்னையைக் கண்டு கொள்ளாது அவனருகே வந்தவள், "வா மாமா!" என்றழைத்துக் கொண்டு சென்றாள்.

வாழை இலையை விரித்து சாதம், கூட்டு, கறியென அவள் முக மலர்ச்சியுடன் பரிமாறத் துவங்க... இலையிலல்லாது அவன் பார்வை அவள் மீதே நிலைத்திருந்தது.

"ம்க்கும்..." என்ற செருமல் சத்தத்தில் சட்டென விழித்தவன் அத்தையின் புறம் பார்வையைத் திருப்பி

னான். "அடுத்தவனுக்குப் பரிமாறியது போதும். ஒண்ட வந்தவன் முதலில் தின்பதா? இந்த வீட்டுக்குச் சொந்தக்காரி முதலில் தின்பதா? நீ முதலில் சாப்பிடும் வழியைப் பார்..." என்று கடுமையான குரலில் அவள் குரல் மகளை நோக்கி ஒலிக்க...

வெடுக்கெனத் திரும்பியவள், "மாமா சாப்பிடுவதற்கு முன்பு நான் என்று சாப்பிட்டிருக்கிறேன்? என் வயிற்றை நிரப்பிக் கொள்ள எனக்குத் தெரியும். நீ டி.வி.யைப் பார்!" என்று கூறி விட்டு திவாகரனிடம் சாப்பிடுமாறு சைகை செய்தாள்.

கோபத்திலும், இயலாமையிலும் முகம் சிவக்கத் தலை குனிந்தவன், சாப்பாட்டை அளைந்த வண்ணம் அமர்ந்திருக்க, தவிப்புடன் அவன் முகம் நோக்கியவள் பின், "அம்மா... மாட்டுக்குத் தீவனம் போட வேண்டும் என்றாயே. தவிடு, புண்ணாக்கெல்லாம் வந்திறங்கி விட்டது. நீ சென்று தீவனத்தைக் கலக்கு, போ. நான் சாப்பிட்டு விட்டு வருகிறேன்," என்று கூற...

சேலையை உதறியபடி எழுந்த சுப்புலட்சுமி, இருவரையும் நோக்கி விட்டு, "அடங்காத கழுதை! மாமன், மாமன் என்று உயிரை விட்டுக் கொண்டு திரிகிறாள். எல்லாம் இவள் தந்தையைச் சொல்ல வேண்டும்..." என்று புலம்பியபடி கொல்லையை நோக்கிச் செல்ல... நிம்மதியாக மூச்சு விட்டபடி திவாகரனின் அருகே சென்றமர்ந்தாள்.

இறுகிப் போய் அமர்ந்திருந்தவனைத் தொட்டு, "சாப்பிடு மாமா..." என்று கூற, சிவந்த விழிகளால்



நிமிர்ந்து அவளை நோக்கினான் அவன். பதினைந்து வயதில் தாய் - தந்தையற்ற அநாதையாக என்று இந்த வீட்டினுள் காலடி எடுத்து வைத்தானோ... அன்றிலிருந்து பட்டுக் கொண்டிருக்கும் அவமானம்தான் இது. ஒரு நாள்... ஒரு பொழுது கூட இந்த அத்தையம்மாள் அவனை நிம்மதியாகச் சோறு தின்ன அனுமதித்ததில்லை.

கிடைக்கும் நேரங்களிலெல்லாம் அவனை அவ மதித்துக் கூறு போடுவதுதான் அவளது பொழுதுபோக்கு. முதலில் சிறிது நாட்கள் மனைவியைச் சத்தமிட்டு அடக்கிக் கொண்டிருந்த மாணிக்கமும், அதன் பின்பு கண்டு கொள்ளாமல் விட்டு விட, இந்த அத்தையம்மாள் அவனது தன்மானத்தைக் கிளறி விட்டு ஆனந்தப்பட்டுக் கொண்டிருந்தாள்.

இந்த வீட்டிற்கு வந்த புதிதில் அத்தையின் சுடு சொற்களைத் தாங்க இயலாது பல நாட்கள் சாப்பிடாமலேயே எழுந்து சென்று தன்னறைக்குள் முடங்கியிருக்கிறான் அவன்.

நாட்கள் செல்லச் செல்ல... அவன் ஆரோக்கியத்தை இழந்து எலும்பும் தோலுமாய் மாறி விட்டதைக் கண்டு அந்த வீட்டில் இரண்டு ஜீவன்கள் வருத்தமுற்றன.

ஒன்று வள்ளியம்மை. இன்னொன்று பதினொரு வயதே நிரம்பிய அம்பரி. மருமகள் அறியாமல் தான் சென்று கொடுக்கும் உணவையும் அவன் தவிர்த்து விடுவதால் என்ன செய்வதென்று தெரியாமல் தவித்தார் வள்ளியம்மை.

மாமன் படும் பாட்டை அந்தச் சிறிய வயதிலேயே புரிந்து கொண்ட அம்பரி, ஒரு நாள் நேராக அன்னையிடம் சென்று, "அம்மா... மாமாவிற்குச் சாப்பாடு போடு," என்றாள். மகளை வித்தியாசமாக நோக்கியவள், "என்னடி அதட்டுகிறாய்?" என்று கையை ஓங்க,

"மாமா சாப்பிட்டால்தான் நான் சாப்பிடுவேன். இல்லையென்றால் பட்டினியாகத் தானிருப்பேன்," என்று மிரட்டினாள். அவளது மிரட்டலைப் பெரிதாக எடுத்துக் கொள்ளாத சுப்புலட்சுமி நகர்ந்துவிட, சொன்னபடி அந்த நாள் முழுவதையும் பட்டினியுடனே கழித்தாள் அம்பரி.

மறு நாளும் இதே தொடர, பதறிப் போன மாணிக்கம், "ஏன்டாம்மா சாப்பிடாமலே இருக்கிறாய்?" என்று விசாரிக்க, "மாமா... மாமா சாப்பிட்டால்தான் நானும் சாப்பிடுவேன்," என்று கூறி மயங்கிச் சரிந்தாள்.

அவளைத் தெளிய வைத்து அவர்கள் அளித்த எந்தத் தின்பண்டங்களையும் வாயில் வைக்காமல், "மாமா... மாமா..." என்றபடியே அமர்ந்திருந்தாள்.

அவளது அன்பைக் கண்டு வள்ளியம்மை வாய் மூடிக் கதறி ஓடிச் சென்று திவாகரனை அழைத்து வந்தார்.

"நீ சாப்பிட்டால்தான் சாப்பிடுவேன் என்று இரண்டு நாட்களாகப் பிடிவாதம் பிடிக்கிறா ராசா. நீ ஒரு வாய் சாப்பிடு ராசா!" என்று கூற, விழிகள் அகல வியந்து போன திவாகரன் மறு கணம் மூக்கு விடைக்கக் கண்ணீர் சிந்தினான்.



"பரி..." என ஓடிச் சென்றவன், அவளைத் தூக்கிக் கொண்டு வந்து தன்னருகே அமரச் செய்து வேக வேகமாகச் சாதத்தைப் பிசைந்து அவள் வாயருகே கொண்டு சென்றான்.

"நீ... சாப்பிடு மாமா..." என்று திக்கித் திணறிக் கூறியவளைக் கண்டு கண்ணீர் விட்டபடியே தன் வாயில் அவன் போட்டுக் கொண்ட பின்புதான் அவள் உண்ணத் துவங்கியதே.

அன்றிலிருந்து அவன் உண்ட பிறகுதான் அவள் உண்பாள். அந்த வீட்டில் அப்பத்தாவையும், தன்னையும் தவிர மாமனுக்குப் பாசமாகப் பரிமாற யாருமில்லை என்பதைக் கண்டு கொண்ட அந்தச் சிறுமி அன்றிலிருந்து இன்றுவரை தானே பரிமாறுகிறாள்.

பெரும்பாலும் அவன் உண்ணும் நேரம் அன்னை அருகில் இல்லாது பார்த்துக் கொள்வாள். எப்போதாவது இப்படி மாட்டிக் கொள்ளும் சமயத்தில்தான் திவாகரன் அவமானப்படுவது.

அவனும் கூட அந்தச் சம்பவத்திற்குப் பின் மாறிப் போனான். அத்தை எவ்வளவு அவமானப்படுத்தினாலும் சாப்பாட்டைத் தவிர்க்க மாட்டான். அவன் அறிவான். அவன் உண்ணவில்லையென்றால் அம்பரியும் அன்று முழுதும் பட்டினியாகக் கிடப்பாள் என்று.

"மாமா..." என்று அம்பரி மூன்றாம் முறையாக உலுக்கியதும் நினைவிற்கு வந்தவன்... வேகமாக ஒரு வாயை விண்டு விட்டு, சோற்றை அள்ளி அவள் வாயில்

திணித்தான். தன் இலையிலிருந்த ஒரு பாதிச் சோற்றை அவளுக்கு ஒதுக்கி... "நீயும் சாப்பிடு கண்ணம்மா!" என்று கூற... அவளும் ஆனந்தமாக உண்ணத் துவங்கினாள்.

இருவரும் ஒரே இலையில் உண்பதைக் கண்டு சிரித்தபடியே அருகே வந்து பரிமாறினார் வள்ளியம்மை.

"போதும் அப்பத்தா. அள்ளி அள்ளி வைக்காதே. மாமாவிற்கு வை..." என்று அவள் தடுக்க, "நல்லா சாப்பிட்டாத்தான் கண்ணு சத்து. எதையும் ஒதுக்காம சாப்பிடு தாயி... அப்பத்தா முள் எடுத்துத் தாரேன். கொடு." என்று அருகே அமர்ந்து அவளை உண்ண வைத்துக் கொண்டிருந்த வள்ளியம்மையைக் கண்டு சிரிப்பு வந்தது அவனுக்கு சிறிது நேரத்திற்கு முன்பு மாமியார் மருமகளைப் போல் சண்டையிட்டுக் கொண்ட இருவரும் இப்போது பாசமலர்களாக இருப்பதைக் கண்டு.

உண்டு முடித்ததும் வெளியே புறப்படப் பார்த்தவனை, "மாமா... அப்பா நாலு மணிக்குத்தானே வரச் சொன்னார்... சிறிது நேரம் உறங்கி விட்டுச் செல். போ மாமா!" என்று வற்புறுத்தி அறைக்கு அனுப்பி விட்டு அன்னையைத் தேடிக் கொல்லைக்குச் சென்றாள்.

"அம்மா, தவிடு, புண்ணாக்கைக் கலக்கினாயா?" என்றபடி அருகே வந்தவளிடம், அவர் முறைத்துக் கொள்ள... "என்னம்மா! கோபமா? நீ மாமாவை இப்படி யாரோ போல் நடத்துவதும் தவறுதானே? இதைச் சொன்னால் என் மேல் கோபப்படுவாய். அம்மா... நீயும் மாறப் போவதில்லை. நானும் மாறப் போவதில்லை. கையை



எடு. நான் எடுத்துச் செல்கிறேன்," எனக் கூறித் தவிடு மூட்டையைத் தூக்கிச் சென்றாள். அவளை முறைப்பதைத் தவிர வேறு எதுவும் செய்ய முடியவில்லை லட்சுமியினால்.

மாடியறை ஜன்னல் வழியாகக் கீழே அம்பரியின் பேச்சைக் கேட்ட திவாகரன் கீழே கிடந்த தலையணையில் சாய்ந்து கண்களை மூடினான். மூடிய விழிகளுக்குள் கடந்த கால வாழ்வு வந்து நின்றது.

## 3

கோடி மின்னல் ஓடி வந்து பாவையானது...
இவள் ரதியினம்... உடல் மலர்வனம்...
இதழ் மரகதம்... அதில் மதுரசம்...
இவள் காமன் வாகனம்...
இசை சிந்தும் மோகனம்...
அழகைப் படைத்தாய்...
ஓ! பிரம்ம தேவனே...!

"ஏய்... குள்ளச்சி... நில்லடி!" என்று தன்னிடமிருந்து தப்பி ஓடப் பார்த்த பத்து வயதுச் சிறுமி அம்பரியின் இரண்டு கைகளையும் தனது ஒரு கையால் அசாத்தியமாகப் பிடித்தபடி சிரிப்புடன் நின்றிருந்தான் பதினைந்து வயதைத் தொட்டிருந்த திவாகரன்.

"கையை விடு மாமா. நான் குமரனைத் தேடி வந்தேன். குமரா... குமரா... எங்கேடா இருக்கிறாய்? அத்தை... உங்கள் மகனைக் கையை விடச் சொல்

ஜுங்கள். நான் போகணும்," என்று அழுகையுடன் கத்திக் கொண்டிருந்தவளை... "உஷ். மூச்சு விடக் கூடாது. அழுகையை நிறுத்து. அழுகையை நிறுத்தினால்தான் கையை விடுவேன்," என்று அவன் அதட்ட... அழுகையை அடக்கி விம்மியபடி நின்றிருந்தாள்.

தன் தோளில் இருந்த துண்டினால் அவளது கண்ணீரைத் துடைத்தவன், "எங்கே உன் கூட்டாளிகள்? குமரனும், தேனும் எங்கே இருக்கிறார்கள் என்று சொல்லி விடு. உன்னை விட்டு விடுகிறேன். மூவருமாகச் சேர்ந்து கொண்டு பக்கத்து வீட்டு சிந்தாமணிப் பாட்டி வீட்டில் ஓட்டைப் பிரித்து உள்ளிறங்கிக் கடலை உருண்டையைத் திருடித் தின்றிருக்கிறீர்கள்.

"ஆனால் குள்ளச்சி... நீயே காப் படி உயரத்தில் இருக்கிறாய். நீ எப்படி ஓட்டு மீது ஏறினாய்?" என்று அவன் விசாரிக்க, "அது... அது... குமரன்தான் ஏணி எடுத்துக் கொண்டு வந்து போட்டான். தேனுதான் என்னை ஏற்றி விட்டாள்!" என்று கூறினாள்.

"அடங்காத கழுதை!" என்று அவள் காதைத் திருகியவன், "ஏன்டி... தின்பண்டம் வேண்டுமென்றால் அம்மா செய்து தர மாட்டார்களா! அடுத்த வீட்டுக் கூரையைப் பிரித்தா திருடித் தின்பாய்? கிறுக்கி!" என்று அவன் அதட்ட,

"நான் மட்டுமா செய்தேன்? உன் தங்கையும், மாமன் மகனும்தான் முக்கால்வாசித் தவறைச் செய் தார்கள். அவர்களை விட்டு விட்டு என்னைப் பிடித்து வைத்திருக்கிறாய்?" என்று அவள் சுள்ளெனக் கூற...



"ஓ! அம்மைக்குக் கோபம் வேறு வருகிறதோ! உன்னை..." என்று அவளைத் தூக்கிச் சென்று அருகே யிருந்த தூணில் நிற்க வைத்துக் கையில் இருந்த துண்டினால் கட்டி வைத்தான்.

"திவா... என்னப்பா இது! அவளை ஏன் கட்டி வைத்துத் துன்புறுத்துகிறாய்?" என்று கேட்ட அன்னையிடம், "அம்மா... நீ சும்மா இரு. இந்த ரகளைக் கோஷ்டியை எப்படியேனும் அடக்கியாக வேண்டும். மூவருக்கும் இருக் கிறது இன்று. ஏய்... குள்ளச்சி... உன் கூட்டாளிகளை மரியாதையாக இங்கே வரச் சொல்லி விடு. நான் கண்டு பிடித்தேனானால் பிரம்படிதான்!" என்று மிரட்டியதும்,

மீண்டும் அழுகை முட்ட, "குமரா... தேனு..." என்று உச்ச ஸ்தாயியில் சத்தமிட... அந்த ஓட்டு வீட்டின் இடது புறத்திலிருந்து குமரனும், பக்கத்து வீட்டு மொட்டை மாடியிலிருந்து தேன்மொழியும் எட்டிப் பார்த்தனர்.

"அடக் களவாணிக் கழுதைகளா... இங்கேதான் இருக்கிறீர்களா? டேய் குமரா... மரியாதையாக இறங்கி வந்து விடு. கையில் மாட்டினாயென்றால் பிரம்பால் அடித்துக் காலை உடைத்து விடுவேன். இறங்குடா!" என்று அவன் குச்சியினால் அவனை அடிக்க...

கண்களில் கண்ணீரைத் தேக்கி வைத்துக் கொண் டிருந்த குமரன் ஓட்டிலிருந்து கீழே குதித்தான். அவன் இறங்கியதும் தேன் மொழியின் பக்கம் திரும்பியவன், "தேனு, நீ இறங்குகிறாயா? என்ன சொல்கிறாய்?" என்று கேட்க... அவளோ வாய் விட்டுக் கதறி, "இந்த மாடி

உயரமாக இருக்கிறது. என்னால் குதிக்க முடியவில்லை..." என்று அழுதபடியே கூற, சிரிப்பை அடக்கப் பெரும்பாடு பட்டுப் போனான்.

"இங்கே வா. அண்ணன் கையைப் பிடி!" என்றவன், மெல்ல அவளை இறக்கி விட்டான். தூணில் கை கட்டப் பட்ட நிலையில் அவன் முகத்தையே பார்த்துக் கொண்டு பேந்தப் பேந்த விழித்தபடி அம்பரி நின்றிருக்க, அவளுக்கு அடுத்து நின்றிருந்த குமரனோ, மாமன் முகத்தைப் பார்க்கலாமா வேண்டாமா என்றபடி கண்ணீர் விழிகளுடன் இருந்தான்.

அவனருகே நின்றிருந்த தேன்மொழியோ அழுகையை நிறுத்தாது தேம்பிக் கொண்டிருந்தாள்.

மூவரையும் நோக்கியவன், "சிந்தாமணிப் பாட்டி வீட்டில் கடலை உருண்டையைத் திருடத் திட்டம் போட்டது யாரு?" என்று வினவினான்.

"இவன்..."

"இவள்..."

"இவள்..."

என்று மூவரும் மாறி மாறி ஒருவரை மற்றொருவர் காட்டிக் கொடுக்க... அவன், "தேனு, நீ சொல். யார் ஐடியா இது?" என்று வினவினான்.

"அ...அண்ணா! அது அது... குமரன்தான் சொன்னான். சிந்தாமணிப் பாட்டி வீட்டில் தண்ணீர் எடுக்கப்



போகும்போது பார்த்தேன், பாட்டி கடலை உருண்டை செய்வதை. அவர் செய்யும் உருண்டை முத்தம்மா அத்தையின் பெட்டிக் கடையில் கிடைப்பதை விடச் சுவை யாக இருக்கும். நாம் போய்க் கேட்டால் பாட்டி தர மாட்டாள். அதனால் திருடித் தின்போம் என்றான்..." என்று நடந்ததைக் கூற...

"இல்லை மாமா இல்லை. சிந்தாமணிப் பாட்டி வீட்டு உருண்டை சுவையாக இருக்கும் என்று மட்டும்தான் நான் கூறினேன். திருடித் திங்கலாம் என்று சொன்னது இவள்தான்..." என்று அம்பரியைக் கை காட்டினான் அவன்.

ஆமாம்... என்பது போல் குற்ற உணர்வுடன் தலை குனிந்த அம்பரியிடம், "என்னடி! உன் வேலைதானா இது?" என்று அதட்டினான்.

"இ... இல்லை மாமா! திருடித் திங்கலாம் என்றெல் லாம் நான் சொல்லவேயில்லை. குமரன்தான் நாம் போய்க் கேட்டால் சிந்தாமணிப் பாட்டி தர மாட்டாள் என்றான். அதனால்தான் எ...எதற்குக் கேட்டுக் கொண்டு... நா... நாமே சென்று எடுத்துத் தின்று விடலாமென்றுதான் சொன்னேன்!" என்று கூற,

"ம்... இரண்டிற்கும் என்னடி பெரிய வித்தியாசம் இருக்கிறது? திருட்டுக் கழுதை...!" என்று ஙங்கென்று அவள் தலையில் குட்டு வைத்தான்.

முகம் சுருங்கி, அழுகையில் அவள் ஆழ்ந்து விட...

"ம்... அடுத்து என்ன நடந்தது?" என்று விசாரித்த வனிடம்,

"அப்புறம்... வீட்டு வாசல் வழியாகச் சென்றால் பாட்டி கண்டு பிடித்து விடுவாள் என்று ஓட்டு வழியாகச் செல்லலாம் என்று குமரன்தான் கூறினான். நானும் அவனும் ஏறி விட்டோம். அம்பரியால் ஏற முடியவில்லை. அவளுக்காக ஏணியைக் கஷ்டப்பட்டு நகர்த்தினோம் நாங்கள் இருவரும். அவள் ஏறி வந்ததும், ஓட்டினுள் இறங்கிப் பரண் மீது பாட்டி காய வைத்திருந்த உருண் டையை எடுத்து வந்தாள்.

"ஓ... ஓட்டு மேல அமர்ந்தே நாங்கள் சாப்பிட்டோம். அ... அப்புறம் குமரன் இன்னொரு உருண்டை கேட்டான் என்று அம்பரி மறுபடி உள்ளே இறங்கும்போது பாட்டி பார்த்து விட்டது..." என்று கூறினாள்.

"பாட்டி பார்த்ததும் தப்பிப்பதற்காக... அம்பரி..." என்று அவள் முகத்தைப் பார்த்த குமரன், "பாட்டியின் தண்டட்டியைப் பிடித்து இழுத்து விட்டு ஓடி வந்து விட்டாள் மாமா..." என்று கூற... அதற்கு மேல் அடக்க முடியாமல் விழுந்து விழுந்து சிரித்தான் திவாகரன்.

அதுவரை மூவரையும் திட்டி அதட்டிக் கொண்டிருந் தவன் திடீரெனச் சிரிப்பதைக் கண்டு மூவரும் திகைத்து, அவன் முகம் பார்க்க...

அம்பரியோ, "குமரா... நீ சொன்னது சரிதான். உன் மாமன் சரியான லூசுப் பயலாக இருப்பான் போலும்!" என்று கத்திக் கூறி விட...: சிரிப்பை நிறுத்தி அவளை



முறைத்த திவாகரன், "திருட்டுக் கழுதை!" என்றபடி பிரம்பை எடுத்துக் கொண்டு அருகே வந்தான். "அண்ணா... வேண்டாம். மாமா! வேண்டாம்..." என்றபடி இருபுறமும் சிதறி ஓடியவர்களுக்கு இரண்டிரண்டு அடிகளைக் கொடுத் தவன், இருவரும் ஓடிச் சென்றதும்... தூணின் மறுபுறம் தூணை இறுகக் கட்டிக் கொண்டு, தன் முகத்தைப் புதைத்துக் கண்களை அழுந்த மூடியிருந்த அம்பரியைக் கண்டு சிரித்து, அவள் கட்டை அவிழ்த்து முன்னால் இழுத்தான்.

அப்போதும் பயத்துடனே நின்றிருந்தவளைக் கண்டு, "வாய்க் கொழுப்பு ஜாஸ்தியாகி விட்டது குள்ளச்சிக்கு..." என்று கன்னம் கிள்ளி விட்டு, "போய் அத்தையிடம் எண்ணெய் வைத்துத் தலை வாரிக் கொள்!" என்று அனுப்பி வைத்தவன், "தேனு... குமரா... இரண்டு பேரும் உள்ளே வாருங்கள். அடிக்க மாட்டேன். வாருங்கள்!" என்றழைக்க... இருவரும் தயங்கியபடி வந்து சேர்ந்தனர்.

"ஏன்டா குமரா? இதுகளிரண்டும்தான் சிறு பிள் ளைகள். சேட்டை செய்கிறதுகள். உனக்கு என்னடா வந்தது? ஆறாம் வகுப்பு முடித்த பெரிய பையனல்லவா நீ!" என்று கூற, "அதிலும் ஃபெயில்!" என்று உள்ளே யிருந்து குரல் கொடுத்தாள் அம்பரி. "யார் ஃபெயில்? நீதான்டி மக்கு. நான் எங்கள் வகுப்பிலேயே முதல் மார்க் தெரியுமா?" என்று ரோசத்துடன் கூறியவனைச் சமா தானப்படுத்தி மூவரையும் கை, கால், முகம் கழுவ வைத்துப் படிக்க அமர வைத்தான்.

அம்பரியும், தேனும் முகத்தை ஒரு மாதிரி வைத்துக் கொண்டே அமர... குமரன் சற்று உற்சாகத்துடன் அமர்ந் தான். அவனைத் தவிர மற்ற இருவரும் மந்தமாகவே அமர்ந்திருக்க... இருவரையும் நோக்கித் தீப்பார்வை பார்த்தான் திவாகரன்.

"தேனு... பையைத் தூக்கு. ஓடி விடலாம்!" என்று குரல் கொடுத்தபடி தன் பையைத் தூக்கிக் கொண்டு ஓடி விட்டாள் அம்பரி.

அதன் பின் சிறிது நேரம் கழித்து வீட்டிற்குள் நுழைந்தவன் அடுக்களையில் அன்னையுடன் அமர்ந்து அருவாமனையில் காய் நறுக்கிக் கொண்டிருந்தவளைக் கண்டு சாந்தமாகப் புன்னகைத்தான்.

கிராமத்துப் பெண்களுக்கு இயல்பாகவே வந்து விடும் பழக்கமிது.

சிறு வயதிலிருந்தே அனைத்து வேலைகளுக்கும் பெண்களைப் பழக்கப்படுத்தி வைத்திருப்பார்கள். அதனால் தான் உழைத்து உரமேறிய உடலுடன் வனப்பாகக் காட்சி தருகிறார்கள்.

மாமனைக் கண்டதும் பயந்து அத்தையின் பின்னே மறைந்து கொண்டவளைக் கண்டபடியே அருகே வந்தவன், "அம்மா! இவளைப் பாரேன். படிக்கக் கூப்பிட் டால் மட்டும் காத தூரம் ஓடி விடுகிறாள். இங்கே வந்து உன்னுடன் வெங்காயம் உரித்துக் கொண்டிருக்கிறாள். நீ நாளை என்னிடம்தானே ராசாத்தி படிக்க வர வேண் டும்...?" என்று மிரட்ட,



"சும்மா அவளை அதட்டிக் கொண்டே இருக்காதே கண்ணா. பயந்து போகிறாள் பார்!" என்று அவள் கைப்பற்றி மரகதம் அழைத்துச் செல்ல, நாக்கைத் துருத்தி அவனுக்குப் பழிப்புக் காட்டியபடியே ஓடிச் சென்றாள் அம்பரி.

வள்ளியம்மை - ராமசாமி தம்பதியினருக்கு ஆணொன்று, பெண்ணொன்றுமாய் இரண்டு பிள்ளைகள். மரகதம், மாணிக்கம். இருவரும் ஆறு ஆண்டு இடை வெளியில் பிறந்தவர்கள்.

பெண் பிள்ளைக்கு முதலில் திருமணத்தை நடத்தி முடித்து விடலாமென்று எண்ணி மரகதத்தின் பதினேழாவது வயதிலேயே மரகதத்திற்குத் திருமணம் முடித்து வைத்தனர். மாப்பிள்ளை, ராமசாமியின் சொந்தத் தங்கையின் மகன். மரகதமும் அவரது கணவர் ராஜாராமனும் மகிழ்ச்சியான வாழ்வை வாழ்ந்ததற்கான சாட்சியாக அவர்களுக்கு அழகான மகன் பிறந்தான்.

சூரியனின் பெயரை வைக்க வேண்டும் என்று மரகதம் மிகவும் ஆசைப்பட்டதால் அவனுக்குத் திவாகரன் என்று பெயரிட்டனர்.

திவாகரனின் பன்னிரண்டாவது வயதில் ராஜா ராமன் நோய்வாய்ப்பட்டு இறந்து விட... மகனுடன் தனி மரமாகிப் போனார் மரகதம். பெரிதாகச் சொத்து எதுவும் அவர் சேர்த்து வைக்காததால், சற்றுக் கலங்கிப் போன மரகதம், இருக்கும் நிலத்திலேயே விவசாயம் செய்து

கொண்டு மகனைப் படிக்க வைத்தாள். அவனும் சூழ் நிலையைப் புரிந்து கொண்டு நன்றாகப் படித்து வந்தான்.

வறுமையென்றும், கவலையென்றும் மரகதம் ஒரு முறை கூடத் தாய் வீடு தேடிச் சென்றதில்லை. ராமசாமி இறந்த பின்பு அனைத்துச் சொத்துகளும் மாணிக்கத்தின் கவனிப்பில் சென்று விட்டதால் வள்ளியம்மையால் மகளுக்கு உதவ முடியவில்லை.

மாணிக்கத்திற்கோ, அவரது மனைவி சுப்புலட்சுமி யின் தொல்லை அதிகமாக இருந்ததால், தங்கையின் நிலை அறிந்தும் உதவி ஏதும் செய்ய முடியவில்லை.

ஆனால் அது குறித்து எவ்வித மனத்தாங்கலும் இல்லாமல்... எப்போதும் போல் பிள்ளைகள் வந்து சென்று கொண்டிருக்க, மரகதம் இயல்பாகத் தானிருந்தார்.

வள்ளியம்மைக்குப் பேரன் மீது பாசம் அதிகம். அவன் வீடு தேடி வரும் வேளைகளில் சுப்புலட்சுமி முகம் திருப்பிக் கொண்டாலும் அம்மத்தாவிற்காகவும், மாமா விற்காகவும் அவன் அடிக்கடி வந்து செல்வான்.

அதோடு நில்லாமல் அவனுடைய செல்ல மாமன் மகள் அம்பரியும் இருப்பதால்... மாமா வீடு செல்வதற்கு அவன் அதிக ஆர்வம் காட்டுவதில் வியப்பொன்றுமில்லை.

மாணிக்கம், மரகதத்தின் பெரியப்பா மகனின் வாரிசு தான் குமரன். அவரது தங்கையின் மகள்தான் தேன் மொழி. சுற்றிச் சுற்றி ஊர் முழுக்கச் சொந்த பந்தங் களைக் கொண்டிருப்பதால், மரகதத்திற்குக் கணவன்



இறந்த பின்பும் பாதுகாப்பான வாழ்வு கிடைத்தது. மற்றப்படி அவர்களிடமிருந்து எவ்வித உதவியையும் அவர் எதிர்பார்க்கவில்லை.

மாணிக்கத்திற்குச் சொந்தமாகத் தென்னந்தோப்பும், கரும்பு, வாழை, திராட்சைச் தோட்டங்களும் இருந்தன. அதனால் வருமானத்தைப் பொறுத்தவரை அவருக்கு எந்தக் கஷ்டமுமில்லை.

தங்கையின் நிலையை எண்ணி வருந்தி அவர் அவளுக்கு உதவி செய்ய முயன்றாலும், கைகேயியைப் போல் அவருக்கு அமைந்து விட்ட சுப்பு லட்சுமி அவரிட மிருந்து ஒரு துரும்பைக் கூட மரகதத்திற்கு நகர்த்தச் சம்மதிக்கவில்லை. மரகதமும் தன்மானம் மிக்கவள் என்பதால் அண்ணனின் வீடு தேடி வருவதைக் கூட நிறுத்திக் கொண்டாள்.

என்னதான் மரகதம் எந்த உதவியையும் எதிர் பாராமல் தன் உழைப்பில் வயிற்றுப்பாட்டைப் பார்த்துக் கொண்டாலும், ராஜாராமனுக்குச் சொந்தமான அந்த ஒரே நிலம் ஏகப்பட்ட கடனில் இருந்ததை லட்சுமி அறிந்தே இருந்தாள்.

எங்கே ஒரு நாள் அண்ணா என்று கண்ணைக் கசக்கிக் கொண்டு தன் வீட்டைத் தேடி வந்து விடுவாளோ என்று மிகவும் அஞ்சினாள்.

ஒரே பெண்ணைப் பெற்று வைத்திருக்கிறோம். அவளுக்குச் சீர் செய்து பணக்காரக் குடும்பத்தில் கல்யாணம் செய்து கொடுத்து அவள் சீரும், சிறப்புமாய்

வாழ்வதைக் கண்ணாரக் காண வேண்டும் என்று ஆசை வைத்திருந்தாள் லட்சுமி. அதற்கு இடைஞ்சலாக மரகதமும், அவள் மகனும் இந்த வீட்டில் வந்தமர்ந்து கொண்டு விடுவார்களோ என்று பயந்தாள்.

அவள் அஞ்சியதைப் போல் அடுத்து ஒரு சம்பவம் நடந்தது. இயல்பிலேயே சாந்த சொரூபியான மரகதம், கொண்ட கணவனும் உயிரிழந்து போன பின்பு, மகனுக்காகவேனும் வாழ்ந்தாக வேண்டும் என்று முடிவு செய்து கொண்டு தன்னால் இயன்றவரை உழைத்து அவனைப் படிக்க வைத்துக் கொண்டிருந்தாள்.

நிலத்தின் மீது ராஜாராமன் வாங்கியிருந்த கடனிற்கான வட்டியைக் கட்டுவதற்கே வருமானத்தில் பெரும் பகுதி அழிந்து விட, உண்பதற்கும், உடுத்துவதற்கும் மிச்ச வருமானம் சரியாக இருந்தது.

எப்படி மகனைப் பெரிய படிப்புப் படிக்க வைத்து உத்தியோகத்திற்கு அனுப்புவது என்றெண்ணி எண்ணித் தினமும் தூக்கமில்லாமல் தவித்தாள். சரியாக உண்ணாமல், உறங்காமல் நோயாளியாகிப் போனவள்... ஒரு நாள் இரவு இறந்தும் போனாள்.

அந்த நாளின் காலை பள்ளி செல்லத் தயாராகிக் கொண்டிருந்த திவாகரன், "அம்மா, இன்னுமா தூங்கிக் கொண்டிருக்கிறாய்? வயலுக்குச் செல்லவில்லையா? எனக்குப் பசியெடுக்கிறது. பள்ளிக்குச் செல்ல வேண்டும். எழுந்திரும்மா!" என்று தலை வாரியபடியே குரல் கொடுத்தவன்... அன்னை இன்னும் எழாமல் இருப்பதைக் கண்டு



பயந்து அருகே சென்று, "அம்மா!" என்று தோள் பற்றித் திருப்ப, கண்கள் மூடிய நிலையில் தொய்ந்து கிடந்த அவரது உடல் சில்லிட்டுப் போயிருந்தது.

"அம்மா... அம்மா..." என்று உலுக்கியவனுக்கு அம்மா இனி எழுந்திருக்கவே மாட்டாள் என்பது புரிந்து போக... கரகரவெனக் கண்களிலிருந்து கண்ணீர் வழிய, "அம்மா..." எனக் கட்டிக் கொண்டு கதறி அழுதான்.

அவனது ஓலம் கேட்டு எட்டிப் பார்த்த சிந்தாமணிப் பாட்டி நிலைமையைப் புரிந்து கொண்டு, அருகே வந்து அவனை ஆறுதல் படுத்த... தான் அநாதையாகிப் போன துக்க நிலையை எண்ணிக் கதறினான் திவாகரன்.

அதன் பிறகு விசயம் ஊர் முழுதும் பரவி விட, வள்ளியம்மையும், மாணிக்கமும் பதறி ஓடி வந்தனர். புத்தகப் பையைத் தூக்கிக் கொண்டு பள்ளியை நோக்கிச் சென்று கொண்டிருந்த அம்பரி வழியில் தேன்மொழியின் தந்தை வருவதைக் கண்டு,

"செல்வம் மாமா!" என்று ஓடிச் செல்ல, "பள்ளிக்கூடத்துக்குப் புறப்பட்டு விட்டாயா கண்ணு?" என்று வினவியவரிடம், "ஆமாம் மாமா. தேனு இன்னும் வரவில்லையே?" என்று கேட்டாள்.

"பள்ளிக்கெல்லாம் இன்று போக வேண்டாம். வா!" என்று அவளைத் தூக்கித் தன் சைக்கிளில் அமர்த்திக் கொண்டவர், திவாகரனின் வீட்டிற்குச் சென்றார்.

'ஐ! பள்ளிக்கு இன்று விடுமுறையா?' என்று குதூகலமான அம்பரி அவருடன் உற்சாகத்துடனே புறப்

பட்டாள். ஆனால் அவர் திவாகரனின் வீட்டில் வண்டியை நிறுத்தியதும், வீட்டினுள் ஒலித்த அழுகைக் குரல்களும், ஒப்பாரியும் அம்பரியின் மனதில் திகிலை ஏற்படுத்தின.

காரணத்தை அறிந்து கொள்ளாமலேயே அந்தச் சூழ்நிலை அவளுக்கு அழுகையை வரவைக்க, "மா...மா..." என்று அவர் கையைப் பற்றியவளை... அழைத்துக் கொண்டு உள்ளே நுழைந்தார்.

தலைவிரி கோலத்தில், "என் உசுரை எடுத்துக்கிட்டு என் மகளை விட்டிருக்கக் கூடாதா, ஆண்டவனே...! என் பேரனை இப்படி அநாதையா நிக்க வைச்சுட்டியே..." என்று மாரில் அடித்துக் கொண்டு அழுத வள்ளியம்மையைக் கண்டதும் அவளுக்கு அழுகை பெருகியது.

அழுதபடியே அவள் நிமிர்ந்து பார்க்க... அருகே யிருந்த ஒற்றைக் கட்டிலில் மாலை போட்டு மரகதம் அத்தையைப் படுக்க வைத்திருந்தனர்.

அந்தக் கோலத்தில் அத்தையைக் கண்டதும் அழுத படியே அருகே ஓடிச் சென்று பார்த்தவளை மாணிக்கம் கைப்பற்ற... "அப்பா... அத்தை... அத்தை..." என்றபடியே, தந்தையின் காலில் முகம் புதைத்து அழுதாள் அம்பரி.

எவ்வளவு பாசமான அத்தை! பெண் பிள்ளைக ளென்றால் அவளுக்குக் கொள்ளைப் பிரியம். அதிலும் அவரது காலைச் சுற்றிக் கொண்டு திரியும் அம்பரியின் மீது அவருக்குத் தனிப் பாசம்தான். அண்ணன் மகள் வேறு! சொல்லவா வேண்டும்? அவரிடமே குளித்து அவரிடமே எண்ணெய் வைத்துப் படியத் தலை வாரி...



அவருடனே அலைவாள். அதோடு நில்லாது அவர் செய்து தரும் கம்புத் தோசையும், தேங்காய்ச் சட்னியும், கேப்பை உருண்டையும் அவளுக்கு மிகவும் பிடித்த மான ஒன்று. காலை வந்து சேர்ந்தால் அவருக்கு உதவி செய்து கொண்டு அவருடனே கதை கேட்டபடி உறங்கி யும் போவாள்.

அப்படிப்பட்ட அத்தை இன்று உயிரற்றுக் கட்டிலில் கிடப்பதைக் கண்டு அவளுக்குத் துக்கம் பொங்கியது.

'திவாகரன் மாமா...! அவன்... அவன் என்ன செய்கிறான்? அன்னை அம்மியில் சட்னி அரைப்பதற்குக் கூட அனுமதிக்காமல் அந்த வேலையையும் தானே செய்பவன். அவர் மீது உயிரையே வைத்திருப்பவன். அவன்... அவன் எங்கே?' என்றபடியே தந்தையின் கால்களைக் கட்டியபடியே நிமிர்ந்து அவனைத் தேடினாள்.

மரகதத்தைக் கிடத்தி வைத்திருந்த கட்டிலின் அருகே எங்கோ வெறித்தபடி இறுகிப் போய் அமர்ந்திருந்தான் அவன். கன்னங்களில் கண்ணீர்க் கோடுகளின் தடம் தெரிந்தது.

அவனையே பார்த்தபடி தந்தையை இறுகக் கட்டிக் கொண்ட அம்பரிக்கு, உள்ளே ஏதோ செய்தது. அதன் பின்பு நடந்த சடங்குகள் அனைத்திலும் இயந்திரத் தனமாகச் செயல்பட்டவனை... வள்ளியம்மை, "வாய் விட்டு அழுது விடு ராசா. வேண்டாமய்யா..." என்று எவ்வளவோ கெஞ்சியும் நேர் வெறித்த விழிகளும், சில்லிட்டுப் போன உடலுமாக இறுக்கத்துடனிருந்தான் அவன்.

கடைசியாக அவரைப் புதைக்குமிடத்தில் மாணிக்கம், "அம்மா முகத்தைக் கடைசியாக ஒரு முறை பார்த்து விடு ராஜா!" என்று கூற... திகைத்து அவர் முகம் நோக்கிய வனுக்கு அன்னையை இனி கண்ணால் கூடக் காண முடியாது என்கிற உண்மை புலப்பட... நடப்பை உணர்ந்து கொள்ள முடியாமல்.... துக்கம் தொண்டை அடைக்க அழுகை வெடித்துச் சிதறியது அவனுக்கு.

பெருங் குரலெடுத்துக் கதறியவனை மாணிக்கமும், செல்வமும் ஆறுதல் கூற முடியாமல் திணறினர். "அம்மா... அம்மா..." என்று மண்டியிட்டு அவர் காலடியைப் பற்றிக் கொண்டு அழுது தீர்த்தவனைச் சமாதானப்படுத்தி அனைத்தையும் முடித்துக் கொண்டு வீடு வந்து சேர்ந் தனர்.

எவ்வளவோ வற்புறுத்தியும் சாப்பாடு, தண்ணீரின்றி அழுதபடியே கரைந்து போனவனைக் கண்டு துக்கமானது வள்ளியம்மைக்கு. மரகதம் இறந்து போன மறுநாளே கடன்காரர்கள் வந்து அந்த நிலத்தை விற்றுப் பணத்தை அடைக்குமாறு கூற, பதினைந்து வயதே நிரம்பிய அச் சிறுவனுக்கு என்ன செய்வதென்று ஒன்றும் புரியவில்லை.

அன்னை, படிப்பு, வீடு, நிலம் என்றிருந்தவனுக்குப் பணம், கடன் என்ற வார்த்தைகளுக்கான அர்த்தமெல் லாம் சுத்தமாகப் பிடிபடவில்லை.

பேந்தப் பேந்த விழித்தபடி அவன் நிற்க, மாணிக் கமும், செல்வமும் அவனிடம், "நிலத்தை விற்றாலொழிய உன் அப்பா, அம்மா வாங்கிய கடனை அடைக்க முடியாது



திவாகரா! என்ன சொல்கிறாய்? அவர்களிடமே விற்று விடலாமா?" என்று கேட்க, பதில் சொல்ல முடியாமல் விக்கித்து நின்றான் அவன். இருக்கும் ஒரே நிலத்தையும் விற்று விட்டால் அவனது எதிர்காலம் என்னவாவது? உணவிற்கும், படிப்பிற்கும் என்ன செய்வான் அவன்? ஒன்றுமே பிடிபடாமல் போக... விழித்துக் கொண்டு நின்ற வனின் தோளை அழுத்தி விட்டு இருவரும் நகர்ந்து விட்டனர்.

அதன் பின்பு அவர்களே நிலத்தைக் கடன்காரர் களிடம் விற்று விட்டனர் போலும். ஒரே ஒரு முறை செல்வம் வந்து, "தம்பி, நிலப் பத்திரமெல்லாம் அம்மா எங்கே வைத்திருக்கிறார்கள்?" என்று கேட்கும்போது, கையை மட்டும் உயர்த்தி, இரும்புப் பெட்டியைக் காண் பித்தான். அவ்வளவுதான் அவனுக்குத் தெரியும்.

வள்ளியம்மை அவனுக்குச் சாப்பாடு சமைத்து ஒவ்வொரு வேளையும் போராடி உண்ண வைக்க... அவன், எதற்காகச் சாப்பிட வேண்டும்? இனி உயிர் வாழ்ந்து என்ன பிரயோஜனம் என்கிற மனநிலையுடன் உலா வந்தான்.

அன்னையின் புடவைகளைக் கையில் வைத்துக் கொண்டு, மணிக் கணக்கில் அமர்ந்து கொண்டும், விட்டத்தை வெறித்துக் கொண்டும் முடங்கிப் போனான். பதினாறாம் நாள் கருமாதியின் போது மரகதத்தின் புகைப் படத்திற்கு மாலையிட்டு வள்ளியம்மை, "அம்மாவைக் கும்பிட்டுக் கொள் கண்ணு. இனி அவதான் உனக்குச்

சாமி!" என்று கூற, அந்தக் கறுப்பு, வெள்ளைப் புகைப் படச் சட்டத்தின் உள்ளே சாந்தமாகப் புன்னகைத்துக் கொண்டிருந்த அன்னையைக் கண்டு அழுகை பெருகியது அவனுக்கு.

"என்னை இப்படி அநாதையாக்கி விட்டுச் சென்று விட்டாயேம்மா! இனி எனக்கென்று யார் இருக்கிறார்கள் இந்த உலகில்? என் வாழ்வின் ஒரே ஆதாரமான நீயே சென்று விட்ட பின்பு இனி யாருக்காக நான் வாழ வேண்டும் அம்மா? என்னை விட்டு ஏன் சென்றாய்? என்னையும் அழைத்துக் கொண்டு செல்லாமல் இப்படித் தனித்து நிற்க வைத்து விட்டாயேம்மா.

"உன் கையால் உண்ணாமல்... உன் மடியில் உறங்காமல்... உன் அருகாமையின் நிம்மதியை உணராமல்... நான் எப்படி இருக்க முடியும்? நான் ஏன் உயிர் வாழ வேண்டும்? என்னையும் உன்னோடு அழைத்துக் கொள்ளம்மா! என்னால் நீயின்றி வாழ முடியாது. அம்மா... அம்மா..." என்று அவன் கண்ணீர் விட்டுக் கதற... அதைக் கண்ட அம்பரிக்குக் கண்கள் கலங்கின.

கூடியிருந்த அனைவரது மனமும் நெகிழ்ந்து கண்களில் கண்ணீர் வழிய, சட்டெனத் தந்தையின் புறம் திரும்பிய அம்பரி, "அப்பா! மாமாவை... மாமாவை நம் வீட்டிற்கே கூட்டிச் சென்று விடலாம்ப்பா... மாமா, அத்தை இல்லாமல் எப்படித் தனியாக இருப்பாரப்பா? நம்முடனே அழைத்துச் செல்லலாமப்பா. ப்ளீஸ்ப்பா!" என்று கண்ணீருடன் அவர் கையைப் பற்றி இழுத்துக் கெஞ்ச... வள்ளியம்மைக்கும் அது சரியென்றே பட்டது.



"அவனை ஆதரிக்கத்தான் யார் உண்டு இவ்வுலகில்? சொந்தத் தாய்மாமனான மாணிக்கத்தைத் தவிர! இருக்கும் ஒரே நிலமும் பறி போய்விட்ட நிலையில் சாப்பாட்டிற்கு என்ன செய்வான் அவன்? படிப்பை எப்படித் தொடர்வான்? நம்மைத் தவிர யார் இருக்கிறார்கள் அவனுக்கு?" என்று மகனிடம் அவர் எடுத்துக் கூற... மனைவியை எண்ணி ஒரு கணம் பயந்தாலும், மரகதம் உயிருடன் இருந்தபோதுதான் அவளுக்கு உதவ முடியாமல் போனது. இவனுக்கேனும் ஆதரவு கொடுத்து அந்தப் பாவத்தைப் போக்கிக் கொள்ள வேண்டும் என்று முடிவு செய்தார் மாணிக்கம்.

இரண்டு நாட்கள் கழிந்ததும், மெல்ல திவாகரனிடம் ஆரம்பித்தார் வள்ளியம்மை. "கண்ணு, மாமா உன்னை அவன் வீட்டிலேயே வந்து இருக்கச் சொல்லி விட்டான். அம்மா இல்லாமல் இங்கே ஒத்தையாளாக நீ என்ன செய்வாய்? அங்கே வந்து இருந்துக்கோ கண்ணு. அது தான் உன் எதிர்காலத்துக்கு நல்லது!" என்று கூற, உதட்டைக் கடித்தபடி தயங்கினான் திவாகரன்.

அவனுக்குத் தெரியும். அவனும், மரகதமும் கஷ்டப்பட்ட காலத்திலேயே அவர் மனைவிக்குப் பயந்து கொண்டு எந்த உதவியும் புரியாதவர். அப்பேர்ப்பட்டவரின் வீட்டில் எப்படிச் சென்று தங்க முடியும்? அன்னையும் இதுவரை அவரிடம் எந்த உதவி கேட்டும் சென்று நின்றதில்லை. அந்த அத்தை அவன் வீட்டிற்கு வந்தாலே முகம் கொடுத்துப் பேச மாட்டார். காலம் முழுதும் அவர் கையால் எப்படிச் சாப்பிட முடியும்?

அவன் யோசிப்பதைக் கண்ட வள்ளியம்மை, "இருந்த ஒரே நிலமும் கைவிட்டுப் போய் விட்டது தம்பி. உன் படிப்புக்கும், சாப்பாட்டுக்கும் வழி வேணுமே..." என்று வருத்தத்துடன் கூற, "நான்... நான் வேலை பார்த்து என் வயிற்றுப்பாட்டைப் பார்த்துக் கொள்வேன் அம்மத்தா!" என்று கூறி அவன் மரகதத்தின் மகன் என்று நிரூபிக்க... பெருமையுடன் அவனை நோக்கிய வள்ளியம்மை, "மாமன் இருக்கும்போது நீ ஏன் ராசா யாருமில்லாதவன் மாதிரி எங்கேயோ வேலை பார்த்து வாழ்க்கையை ஓட்டணும்? நீ அங்க வந்து இரு ராசா. இந்த அம்மத்தாவுக்காக வேணும்..." என்று கண்ணீர் விட்டார்.

"அது இல்லை அம்மத்தா! அத்தை... அத்தைக்கு என்னைக் கண்டாலே பிடிக்காதே. நா... நான் எப்படி அங்கே வந்து இருக்க முடியும்?" என்று மெல்ல வினவிய வனுக்கு வள்ளியம்மை பதில் கூறும் முன் கதவிற்குப் பின்னே பாதி முகத்தை மட்டும் வெளியே நீட்டிய அம்பரி, "அம்மா ஒன்றும் கூறாமல் நான் பார்த்துக் கொள் கிறேன். நீ வா மாமா!" என்று கூற... நிமிர்ந்து அவளை நோக்கினான் திவாகரன்.

"வள்ளியம்மை..." என்று பக்கத்து வீட்டுச் சிந்தாமணிப் பாட்டி குரல் கொடுக்க... "இதோ வர்ரேன்..." என்றபடி அவர் எழுந்து சென்றார்.

அவர் சென்றதும், அவளை நோக்கி, "இங்கே வா!" என்று அவன் கை அசைக்க... மெல்ல அவனருகே வந்து மண்டியிட்டு அமர்ந்தாள்.



"தலையே வாராமல் ஏன் இப்படி பங்கரையாகத் திரிந்து கொண்டிருக்கிறாய்?" என்றபடியே அவன் அவளது தலையைக் கோதி விட... மாமா பழையபடி பேசுகிறான் என்கிற ஆச்சரியத்தில் நிமிர்ந்து அவன் முகம் நோக்கி னாள்.

"குள்ளச்சி... என்ன அப்படிப் பார்க்கிறாய்?" என்று வினவியவனிடம், "நீ அழாமல் இப்படிச் சிரித்தபடியே இருக்கலாமில்லையா மாமா? நீ... நீ அழுவதைக் காணும் போது எனக்கு மிகவும் அழுகையாக வருகிறது. இனி நீ அழாதே மாமா..." என்று அவள் கூற, வியப்பில் விரிந்த விழிகளுடன் அவள் முகம் பார்த்தான் திவாகரன்.

## 4

இளமைச் சுமையை...
மனம் தாங்கிக் கொள்ளுமோ...!
குலுங்கும் அலையைக்
கடல் மூடிக் கொள்ளுமோ!
குளிக்கும் ஓர் கிளி... கொதிக்கும் நீர்த்துளி...
ஊதலான மார்கழி... நீளமான ராத்திரி...
நீ வந்து ஆதரி...!

**தி**வாகரன் அம்பரியின் வீட்டிற்கு அன்றே குடியேறி னான். முழுத் தயக்கத்துடனும். வக்கற்றுப் போன தனது தலையெழுத்தை எண்ணிச் சுய பச்சாதாபத்திலும்தான் அவன் அந்த வீட்டில் காலடி எடுத்து வைத்ததே. அம்பரி

யும், வள்ளியம்மையும்தான் அவனது தயக்கத்தைப் போக்கி அவனை இயல்பாக்கப் பெரும்பாடு பட்டுக் கொண்டிருந்தனர்.

எப்போதும் தன் வீட்டிற்கு வந்தால் சைக்கிள் சாவியைச் சுற்றியபடி வீட்டை நோட்டம் விட்டு, "குள்ளச்சி, புத்தகப் பையை இப்படித் தூக்கி எறிந்திருக்கிறாய்! அது என்ன பேனா, பென்சில் எல்லாம் இப்படிக் கிடக்கிறது? படிப்பதுமில்லை. படிப்பை மதிப்பதுமில்லை..." என்று அதட்டி மிரட்டுவான்.

தலையில் ஙங் ஙங்கென்று குட்டு வைத்து விடுவான் என்பதால் அவன் சைக்கிள் தெரு முனைக்குள் நுழையும் போதே வேகமாக அனைத்தையும் சீர் செய்து வைத்து விடுவாள்.

இப்போது வீட்டிற்குள் நுழைந்து பல மணி நேரமாகியும் கூட குனிந்த தலையுடன் அமர்ந்திருந்தவனைக் கண்டு அம்பரிக்கு என்னவோ போல் இருந்தது. "மாமா... இங்கே பார். நான் வரைந்த கோலம். இதோ நான் பின்னிய கூடை. களிமண்ணில் பொம்மை செய்தேன் பார்..." என்று ஒவ்வொன்றாகத் தூக்கிக் கொண்டு வந்து காட்டினாள். அவன் ஒரு சிரிப்புடன் பார்வையிட்டு விட்டு மீண்டும் பழைய நிலையிலேயே அமர்ந்து விட... என்ன செய்வதென்று புரியாமல் தவித்துப் போனாள்.

குமரனையும், தேனையும் அழைத்து வந்து அவன் முன்பு விளையாடினாள்... ஆடினாள்... பாடினாள்... புத்தகத்தை எடுத்துக் கொண்டு வந்து, "கணக்குப் பாடம் சொல்லித் தா மாமா!" என்றாள். அவன் எதிலும் ஈடுபாடு இல்லாதிருப்பதைக் கண்டு பெரிதும் சோர்ந்தாள்.



அவன் சாமியறையின் முன்னேயிருந்த வளாகத்தில் படுத்துக் கொள்வதைக் கண்ட வள்ளியம்மை, "மாணிக்கம்! மாடியறையை அவனுக்கு ஒதுக்கிக் கொடுப்போம். அவன் அங்கேயே தங்கிக்கட்டும்..." என்று கூற, சரியென்று தலையாட்டினார் மாணிக்கம்.

"ம்க்கும்... ஒண்ட வந்தவனுக்குத் தனியறை வேறு..." என்று நொடித்துக் கொண்ட மருமகளைக் கண்டு கொள்ளாது, "அம்பரி, வா கண்ணு. மாமனுக்கு மாடியறையை ஒழித்துக் கொடுப்போம்..." என்று கூறி, அவளை அழைத்துக் கொண்டு போய் அந்த அறையைச் சுத்தம் செய்தார்.

அறையைத் தயார்ப் படுத்தியதும், "போ கண்ணு. மாமனைக் கூட்டிக்கிட்டு வா!" என்று அவர் கூற, ஓடிச் சென்று கொல்லைப் புறத்தில் நின்று கொண்டு வயலை வெறித்துக் கொண்டிருந்தவனை அழைத்து வந்தாள். "எங்கே இழுத்துச் செல்கிறாய் பரி?" என்று எரிச்சலுடன் வினவியவனிடம்,

"நீ வா மாமா. உனக்கு ஒரு இன்ப அதிர்ச்சி வைத்திருக்கிறேன்," என்றழைத்துச் சென்றவள்... மாடியறைக்குச் சென்று, "இதுதான் உன் அறை. இனி நீ இங்கேயே தங்கிக் கொள்ளலாம்," என்று கூற... தயக்கமும், மகிழ்ச்சியுமாய்த் தலையாட்டினான் அவன்.

மாடியறையை அவனுக்கென்று ஒதுக்கிக் கொடுத்த பின்பு, அவன் அந்த அறையை விட்டு வெளியே வருவதே யில்லை. வள்ளியம்மை வற்புறுத்திச் சாப்பாடு எடுத்துக் கொண்டு போய்க் கொடுத்தால்தான் உண்டு.

அன்றிரவும் அப்படித்தான். அம்பரியிடம் ஒரு தட்டைக் கொடுத்து, "திவாகரனிடம் கொண்டு போய்க் கொடு, போ..." என்று அனுப்பினார் வள்ளியம்மை.

சாப்பாட்டுத் தட்டைத் தூக்கிக் கொண்டு மாடி யறைக்குச் சென்ற அம்பரி, 'மாமா...' என்றழைக்க வாய் திறந்தவள்... அப்படியே நின்று விட்டாள்.

அங்கே அன்னையின் ஒரு சேலையைக் கையில் வைத்துக் கொண்டு அழுகையில் கரைந்து கொண் டிருந்தான் அவன். "மாமா..." என்று கம்மிய குரலில் அவள் அழைத்ததும், திடுக்கிட்டு நிமிர்ந்தவன்... வேகமாகக் கண்களைத் துடைத்துக் கொண்டு, "எ... என்ன பரி?" என்று வினவினான்.

"சா... சாப்பாடு கொண்டு வந்திருக்கிறேன்," என்று கூறியவளிடம், "எனக்குச் சாப்பாடு வேண்டாமென்று அம்மத்தாவிடம் கூறினேனே..." என்றான் அவன்.

"அ... அது வந்து... மாமா, சரியாகச் சாப்பிட வில்லையென்றால் வளராமலேயே போய் விடுவோமாம். ராஜேந்திரன் அண்ணன் மாதிரி குள்ளமாகவேதான் இருப்போமாம். கை, காலெல்லாம் பலமிழந்து போய் விடுமாம். வயல் வேலையெல்லாம் பார்க்க முடியாதாம்..."



என்று வள்ளியம்மை தனக்குக் கூறும் அறிவுரைகளை அப்படியே அவனுக்கும் அவள் எடுத்து விட...

தலையைச் சொறிந்தபடி யோசித்து யோசித்து... அவள் சொன்ன விதம் அவனுக்குச் சிரிப்பை வர வழைத்தது. "நான்தான் ஏற்கெனவே வளர்ந்து விட்டேனே. பின் எப்படி குள்ளமாவேனாம்?" என்று அவன் கேட்க,

"அது அது..." என்றவள், விழித்துக் கொண்டு நிற்க... "நீதான் குள்ளச்சி. நிறையச் சாப்பிட வேண்டும். இன்னமும் வளராமலேயே இருக்கிறாயே!" என்றவன், அவளிட மிருந்த தட்டை வாங்கிக் கீழே வைத்தான்.

அவன் தட்டை வாங்கிக் கொண்ட பின்பும் செல் லாமல் இருந்தவளைக் கண்டு என்னவென்று விசாரித் தான். "நீ சாப்பிட்ட பின்பு தட்டை வாங்கிக் கொண்டுதான் திரும்பி வர வேண்டுமென்று அப்பத்தா சொல்லி விட்டது..." என்று கூற,

அம்மத்தாவின் அன்பை எண்ணிக் கண்களில் நீர் கசிந்தது அவனுக்கு. அந்த வயதான கிழவி மட்டும் இல்லாது போயிருந்தால் என்னவாகியிருப்பானோ? வேக வேகமாக அள்ளி உண்டவன் தட்டை ஏந்திக் கொண்டு கீழே வந்தான்.

"ஓ! துரைக்குத் தனியாக உட்கார்ந்தால்தான் உண்ண வருமோ? பாவம் பார்த்துக் கூட்டி வந்தால் தனி அறை, ஸ்பெஷல் சாப்பாடு என்று ராஜ வாழ்க்கை கேட்கிறதோ? உன் தகுதிக்கும், நிலைக்கும் தகுந்தாற்

போல் நடந்து கொள். மூன்று வேளை ஓசிக் கஞ்சிக் குடித்து வயிற்றை நிரப்புபவனுக்கு ராஜ மரியாதையா! எனக்கென்று வந்து வாய்க்கிறது பார்..." என்று சுப்புலட்சுமி தன் சுடுசொற்களை அவன் மீது வீச... அம்பரியின் கைகளை இறுகப் பற்றியிருந்த திவாகரனின் கரங்கள் விரைத்துப் போயிருந்தன.

அம்மா என்ன சொல்கிறாள் என்று புரியா விட்டாலும், அவள் திவாகரனைத் திட்டுகிறாள் என்பதைக் கண்டு கொண்ட அம்பரி அண்ணாந்து அவன் முகத்தைப் பார்க்க...

அவளது கையை விலக்கி விட்டு விறுவிறுவெனக் கொல்லையை நோக்கி நடந்தவனுக்குச் சாப்பிட்ட சாப்பாடு குமட்டிக் கொண்டு வந்தது. ஓசிக் கஞ்சி குடித்து நான்... நான் வயிறு வளர்க்கிறேனா? இரு வேளைக் கஞ்சியென்றாலும் அன்னையுடன் உழைத்துச் சாப்பிட்டு நிம்மதியாக இருந்தானே!

தன்மானமும், ரோசமும் நிறைந்த அவனுக்கா இந்த நிலைமை? ஆதரவற்றுத் தன் வீட்டில் சோற்றுக்காக ஒதுங்கியிருக்கும் அநாதை அவன் என்பதை நொடிக்கொரு முறை தன் சொல்லம்புகளால் அவனை ஏசிக் கூறு போட்டாள் சுப்புலட்சுமி.

தின்ற சோறு வயிற்றுக்குள் செல்லாமல் தொண்டையிலேயே இறுக்க... அன்பிலாச் சோறு என்பிலே குத்தியது என்பது போல், திவாகரனுக்கும் உணவு தொண்டையை விட்டு இறங்க மறுத்தது... கண்களில் கண்ணீர் நிறையத்



தலையை அழுத்திப் பிடித்தவன்... உண்ட நான்கு வாய்ச் சோற்றையும் வாந்தி எடுக்க... வயிற்றையும், தலையையும் பிடித்தபடி அழுகையுடன் வாந்தி எடுத்தவனைக் கண்டு பதறிப் போன அம்பரி அவனுக்கு ஏதோ ஆகி விட்டதோ என்று பயந்து ஓடிப் போய் வள்ளியம்மையை அழைத்து வந்தாள்.

"அப்பத்தா! மாமாவிற்கு ஏதோ ஆகி விட்டது. வயிற்றைப் பிடித்துக் கொண்டு வாந்தி எடுக்கிறது அப்பத்தா... அம்மா மாமாவை ஏதோ திட்டி விட்டாள். அதனால்தான் மாமா அழுகிறது. நீ வா அப்பத்தா! எனக்குப் பயமாக இருக்கிறது..." என்று பதறியபடி வள்ளியம்மையை இழுத்து வந்தாள்.

"என்ன கண்ணு செய்கிறது, உனக்கு?" என்றபடியே பதறி ஓடி வந்த வள்ளியம்மை அவனைச் சுத்தம் செய்ய முயல, "என்னால்... என்னால் முடியலையே அம்மத்தா... என்னை வேறு எங்கேனும் கொண்டு சென்று விட்டு விடு. நான் இங்கே இருக்க மாட்டேன்," என்று கதறினான் அவன்.

"அப்படிச் சொல்லாதே கண்ணு... எனக்காகவேனும் நீ இங்கே இருந்தாகணும். உன்னை அநாதையா அலைய விட்டுட்டு என்னால் இங்க எப்படி கண்ணு சோறு திங்க முடியும்? உன் அத்தைக்காரி கிடக்கிறாள். விவரம் கெட்டவள். இட்லி சுட்டு வித்துக்கிட்டு பொழப்பு நடத்திக் கொண்டிருந்தவளுக்குச் சொத்துக்கார மனுசன் கிடைச்சா இதுதான் கண்ணு நிலைமை. உண்மையிலேயே ஒண்ட

வந்தது அவள்தான். நீ இல்லை. உனக்கு இந்த வீட்டில் எல்லா உரிமையும் இருக்கு கண்ணு.

"உன் அம்மாவுக்கு நான் இதுவரை பெருசா எதுவும் செஞ்சதில்லை. தன்மானத்தோட வாழ்ந்து இறந்தும் போனவ அவ. உன்னை அப்படிக் கைவிட்டா என்னால நிம்மதியா சாகக் கூட முடியாது ராசா. உன்னை எப்படியும் நான் ஆளாக்கிருவேன். உன் அத்தைக்காரி பேசுறதைக் காதுலயே வாங்காத கண்ணு..." என்று அவனைச் சமாதானம் செய்தார் வள்ளியம்மை.

அதுவரை திவாகரனின் சட்டையைப் பற்றியபடி இருவரது முகத்தையும் மாறி மாறிப் பார்த்துக் கொண்டிருந்த அம்பரி, "ஆமாம் மாமா. அம்மா பேசுவதை நீ காதிலேயே வாங்க வேண்டாம். நானும் அப்பத்தாவும் இருக்கிறோமே. எங்களுக்காகவேனும் இங்கேயே இரு மாமா!" என்று கூற, அவள் தலையைப் பற்றித் தன் இடையோடு அழுத்திக் கொண்டான் அவன்.

அதன் பின்பு வள்ளியம்மை அளித்த பாலைப் பருகி விட்டு... அவர் மடியிலேயே திண்ணையில் சாய்ந்து விட்டான் திவாகரன். அவன் உறங்கும்வரை விழித்திருந்த அம்பரி, அவன் உறங்கி விட்டதை எட்டிப் பார்த்து உறுதி செய்து விட்டுத் தூங்கினாள்.

அதன் பின்பு வந்த நாட்களில் அத்தையின் வார்த்தைகளைத் தாங்க இயலாமல் அவன் சாப்பாடு என்பதைத் தியாகமே செய்து விட... அதைக் கண்ட அம்பரி அடாவடியாகத் தானும் சாப்பிடாமல் இருந்து அன்னை



யிடம் சாதித்தாள். அதுவரை அம்பரியைச் சிறு குழந்தையாக, வால்தனம் நிறைந்த போக்கிரிப் பிள்ளையாக மட்டுமே எண்ணி வைத்திருந்த திவாகரனுக்கு, அவள் மீது பாசமும், அன்பும் பொங்கியது.

அன்னை இறந்ததிலிருந்து அவளது நடவடிக்கைகள் அனைத்தையும் யோசித்துப் பார்த்தவனுக்கு... அவள் தன்மீது எப்பேர்ப்பட்ட பேரன்பைக் காட்டுகிறாள் என்று வியந்து போனான். அன்னைக்குப் பிறகு தனக்கென யாருமில்லையென்று மறுகிக் கொண்டிருந்தவனை உனக்கு நான் இருக்கிறேன் மாமா... என்று ஒவ்வொரு விசயத்திலும் சொல்லாமல் நிரூபித்துக் கொண்டிருந்தாள் அவள்.

அன்னையின் ஆவிதான் அவளுக்குள் புகுந்து விட்டதோ என்று ஆச்சரியமாகிப் போன திவாகரன் அதன் பின்பு அவளுக்காகவேனும் சாப்பாடு விசயத்தில் சரியாக நடந்து கொண்டான். அவன் சாப்பிடா விட்டால் அவளும் பட்டினி கிடப்பாளே...! தினமும் அவள்தான் அவனுக்குப் பரிமாறுகிறாள், பெரிய மனுசியைப் போல்.

அவன் சாப்பிட்ட பின்புதான் சாப்பிடுவேன் என்கிற பிடிவாதம் வேறு...! எப்போதும் ஒரு வாய் அள்ளி உண்டதும் அவளுக்கும் ஊட்டி விட்டுத்தான் அவன் சாப்பிடுவான்.

இருவரது அன்பையும் கண்ட வள்ளியம்மைக்கு நெகிழ்ச்சியாக இருந்தது. மரகதமும், மாணிக்கமும் கூட இவ்வளவு பாசத்துடன் இருந்ததில்லை. ஆனால் அவர்கள்

இருவருக்கும் பிறந்த இரண்டு ஜீவன்களோ தன்னலமற்ற பாசத்தை இந்த அறியாத வயதில் ஒருவரின் மீது மற்றொருவர் செலுத்திக் கொண்டு இன்பமாக இருந்தனர்.

ஆனால் சுப்புலட்சுமியோ தன் வீட்டிற்கு இலவச இணைப்பாக நுழைந்து விட்டவன்... தின்று, உறங்கி சொகுசு வாழ்வு வாழக் கூடாது என்பதில் முனைப்பாக இருந்தாள்.

எப்படியும் அவனை வெளியே துரத்த முடியாது. அன்னை - தந்தையற்ற அநாதைப் பையனை இப்படிக் கைவிட்டு விட்டீர்களே என்று ஊரே காறித் துப்பும். எதற்காக வீண் வினை! இவனை இப்படியே நிரந்தரமான வேலையாளாக வைத்துக் கொள்ள வேண்டியதுதான் என்றெண்ணிக் கொண்டு அவனை அநியாயமாக வேலை வாங்கினாள்.

அவன் பள்ளிக்குக் கிளம்பும் நேரம்... "இங்கே வாடா. மாட்டுக்கு இந்த வைக்கோலைப் போடு," என்று வேலை ஏவ ஆரம்பிப்பவள்... பால் கறப்பது, மாணிக் கத்திற்குச் சாப்பாடு கொடுத்தனுப்புவது, செடிகளைப் பராமரிப்பது, வீட்டு வேலை செய்ய வைப்பதென அத்தனையையும் அவனையே செய்ய வைத்தாள்.

வேலை செய்வதற்குத் திவாகரன் தயங்குபவன் இல்லைதான். அடுத்தவர்களின் வீட்டில் வந்தமர்ந்து கொண்டு சொகுசாக வாழ வேண்டுமென்று அவனும் விரும்ப வில்லை. மாணிக்கத்துடன் சென்று கணக்கு வழக்கிலும், திராட்சை வளர்ப்பிலும் கலந்து கொண்டுதான்



இருந்தான். விவசாயத்தில் ஈடுபாடு இருந்ததால் அவருக்கு உதவி புரிந்து கொண்டுதான் திரிந்தான்.

ஆனால் பள்ளிக்குச் செல்லும் வேளையில் லட்சுமி அவனை அழைத்து வேலை ஏவுவதுதான் அவனுக்குப் பிடிக்கவேயில்லை.

மரகதம் மகனைப் படிக்க வைத்துப் பெரிய ஆளாக்கி விட வேண்டுமென்று நினைத்திருந்தார். அன்னையின் ஒரே ஆசையையும் நிறைவேற்ற முடியாமல் போய் விட்டதே என்று பெரிதும் வருந்தினான்.

தொடர்ந்து நான்கைந்து நாட்கள் பள்ளிக்குச் செல் லாமல் வீட்டு வேலை பார்த்துக் கொண்டிருந்தவனை அம்பரி கவனித்து விட்டாள்.

"மாமா, நீ பள்ளிக்குப் போகவில்லையா?" என்று கேட்டபடி, அவனுடன் சேர்ந்து மொட்டை மாடியில் வத்தலைக் காய வைத்துக் கொண்டிருந்தாள்.

வழக்கமான சிரிப்புடன் அவளை நோக்கியவன், "நீ ஏன் குள்ளச்சி ஸ்கூலுக்குப் போகவில்லை? என்ன இன்றும் மட்டம் போட்டு விட்டாயா?" என்று வினவ, "அ...அது... எனக்குத் தலைவலி மாமா. அதனால்தான் செல்லவில்லை. நான் உன்னைக் கேட்டேனே..." என்றவளிடம், பதில் சொல்லாமல்... பெருமூச்சை வெளி விட்டபடி வத்தலைப் பரப்பி விட்டு எழுந்தவன்,

"நீயேனும் நன்றாகப் படி அம்பரி..." எனக் கூறி விட்டுக் கையைக் கழுவிக் கொண்டு இறங்கிச் சென்று விட்டான்.

மாமா ஏன் இப்படிச் சொல்கிறான் என்று குழம்பிப் போன அம்பரி, நேராக வள்ளியம்மையிடம் சென்று விசாரிக்க...

"உன் ஆத்தாக்காரிதான் இப்படி சதி செஞ்சு உன் மாமனைப் படிக்க விடாமல் பண்ணுகிறாள். என் கண்ணனை எப்படியெல்லாம் வேலை வாங்கிக் கஷ்டப் படுத்துகிறாள். ராட்சசி. உன் ஆத்தாளுக்கு நல்ல சாவே வராதுடி!" என்று அவர் கரித்துக் கொட்ட... இந்த முறை தந்தையிடம் சென்று நின்றாள் அம்பரி.

மதியச் சாப்பாட்டை முடித்து விட்டுச் சாய்வு நாற்காலி யில் சாய்ந்திருந்தவரிடம் சென்றவள், "அப்பா..." என விளித்து, "மாமா இப்போதெல்லாம் பள்ளிக்குச் செல்வதே யில்லைப்பா... அம்மா தினமும் அதைச் செய், இதைச் செய் என்று வேலை வாங்கி அவரைப் பள்ளிக்குச் செல்ல விடாமல் செய்கிறாள். நீ அம்மாவிடம் சொல்கிறாயாப்பா. அவரைப் பள்ளிக்குச் செல்ல அனுமதிக்கச் சொல்லி...?" என்று அவர் தாடையைப் பற்றியவள்...

தொடர்ந்து, "மாமா கூடப் படிக்கும் பெண்க ளெல்லாம் பேசிக் கொள்வதைக் கேட்டிருக்கிறேன்ப்பா. மாமா ரொம்ப நன்றாகப் படிப்பாராம். பள்ளியிலேயே முதலாம். பாவமில்லையாப்பா? மாமா ஒரு நாள் கூடப் பள்ளிக்குச் செல்லாமல் இருந்ததே யில்லைப்பா. அம்மாவிற்கு வேலை செய்ய ஆள் வேண்டுமானால் நான் வீட்டிலிருந்து எல்லா வேலைகளையும் பார்த்துக் கொள்கிறேன். மாமாவைப் பள்ளிக்கு அனுப்பலாம்ப்பா..."



என்று அவள் கெஞ்சிக் கேட்க, உருகிப் போன மாணிக்கம் மனைவியை அழைத்துக் கண்டித்தார்.

"வீட்டு வேலை செய்ய உனக்கு ஆளா கிடைக்க வில்லை? அவன்தான் வயலிலும், வாழைத் தோட்டத் திலும் எனக்கு ஒத்தாசையாக அத்தனை வேலைகளையும் இழுத்துப் போட்டுக் கொண்டு செய்கிறானே. அவனை எதற்காக வீட்டு வேலை செய்ய வைக்கிறாய்?

"நன்றாகப் படிப்பவனைப் பள்ளிக்குச் செல்ல விடாமல்... என்னம்மா இது? அவன் உதவித் தொகையில் படிப்பவன். அவன் படிப்பதால் உன் சொத்திற்கு எந்தப் பாதிப்பும் வந்து விடாது. அவனை இனியேனும் படிக்க விடு!" என்று கூற, "என்னவோ செய்யுங்கள்..." என்று நொடித்துக் கொண்டு எழுந்து சென்றாள் சுப்புலட்சுமி.

மாணிக்கம் பேசியது அனைத்தையும் கேட்ட வள்ளியம்மை, பேத்தியை அள்ளிக் கொஞ்சி விட்டுப் பேரனைத் தேடிச் சென்றார். "கண்ணு... ராசா..." என்று அவனை அழைத்தவர், சீம்பாலில் செய்த இனிப்பை அவனுக்கு ஊட்டினார்.

"என்ன அம்மத்தா?" என்றபடியே விழுங்கியவனிடம், "நீ இனி பள்ளிக்குப் போகலாம் கண்ணு... அம்பரி அவ அப்பன் கிட்டப் பேசி சம்மதம் வாங்கிட்டா. இனி உன் அத்தைக்காரி உன்னை ஒரு வார்த்தை கேட்க மாட்டாள்..." என்றவர் நடந்தது அனைத்தையும் கூற,

அதுவரை தனது தலையெழுத்தை எண்ணி நொந்தபடி அருகே இருந்த ஆட்டைத் தடவிக் கொடுத்த

படியே அமர்ந்திருந்த திவாகரனுக்கு... அன்னையின் ஆசை நிறைவேறப் போகிறது என்று மகிழ்ச்சி பொங் கியது... கைகூப்பி வானத்தை நிமிர்ந்து நோக்கி, "அம்மா!" என்று கண் மூடி வேண்டியவன்... கண்ணீருடன், "அம்பரி எங்கே அம்மத்தா?" என்று வினவினான்.

"உன் அறையைச் சுத்தம் செய்ய விளக்குமாறோட போனா கண்ணு..." என்று அவர் கூற, வேகமாக மாடிப் படிகளில் தடதடவென ஓடிச் சென்றான்.

எங்கிருந்து வந்தாள் இவள்? அடுத்தடுத்து அவனுக்கு நன்மைகளைச் செய்து அவனுக்காகவே பிறவியெடுத்த தேவதையைப் போல் நடந்து கொள்கிறாளே...! எங்கிருந்து வந்தது இத்தனை பாசம் அவளுக்கு? 'நான் வேலை செய்கிறேன். மாமாவைப் பள்ளிக்கு அனுப்பு!' என்றா ளாமே... என்று எண்ணியவனுக்குக் கண்களில் ஆனந்தக் கண்ணீர் ஆறாய்ப் பெருகியது.

ஓடிச் சென்று அறை வாசலில் நின்றவன் அங்கே மரகதத்தின் புகைப்படத்திற்கு வட்டமாகப் பொட்டு வைக்க முயன்று கொண்டிருந்தவளைக் கண்டு, "பரி..." என்று அழுகைக் குரலில் அழைத்தான்.

அவன் குரல் அழுகையுடன் ஒலித்ததும், பதறித் திரும்பியவளின் முகத்திலிருந்த உணர்ச்சிகளைக் கண்ட வன், வேகமாக ஓடி வந்து அவளைப் பற்றித் தூக்கித் தன்னோடு இணைத்துக் கொண்டவன், "என் கண்ணே... என் கண்ணே...!" என்று புலம்பியபடி கண்ணீர் விட்டான். அதே வேகத்தில் அவளை நிமிர்த்தி முகம் நோக்கியவன்.



அவள் கன்னத்தில் அழுந்த முத்தமிட, அந்த வயதிலும் கூச்சமாக இருந்தது அம்பரிக்கு.

"என்ன... என்னவாயிற்று மாமா?" என்று வினவிய வளிடம், "நான் சொல்வது உனக்குப் புரியப் போவதில்லை கண்ணம்மா. ஆனால்... ஆனால் நீ எனக்குச் செய்து கொண்டிருக்கும் அனைத்து உதவிக்கும் நன்றி கூறாமல் என்னால் இருக்க முடியவில்லை. ரொம்ப ரொம்ப நன்றி!" என்று அவன் மிகுந்த உணர்ச்சியுடன் கூற, அவன் தோளைக் கட்டிக் கொண்டு விழித்தபடியே நின்றிருந்தாள் அம்பரி.

கண்களைத் துடைத்துக் கொண்டு அவளை நோக் கியவன் குங்குமம் தோய்த்திருத்த அவளது நடு விரலைப் பற்றி புகைப்படத்தில் புன்னகைத்துக் கொண்டிருந்த அன்னையின் நெற்றியில் வைத்தான்.

"ஐ... வட்டமாக வந்து விட்டது மாமா..." என்று குதூகலித்துச் சிரித்தாள் அந்தச் சிறுமி.

அடுத்து வந்த நாட்களில் இருவரும் பள்ளிக்குச் செல்ல... மறுபடியும் குமரன், தேனு, அம்பரி மூவருக்கும் டியூசன் எடுத்துக் கொண்டும், அவர்களை அடித்து விரட்டிக் கொண்டும், தனது வாழ்வைத் தொடர்ந்து கொண்டிருந் தான் திவாகரன்.

அவ்வப்போது சுப்புலட்சுமியின் ஏச்சு, பேச்சுகளைக் கேட்க நேர்ந்தது. மாணிக்கத்துடன் அவரது தோப்பு, தோட்டங்களில் வேலை செய்து வந்தான் அவன்.

இப்படியாக இரண்டு வருடங்கள் ஓடி விட... அந்த வருட இறுதியில் பன்னிரண்டாம் வகுப்புத் தேர்வை எழுதியிருந்தான். குள்ளச்சி அம்பரியும் நன்றாக வளர்ந்து விட்டிருந்தாள். அந்த வருடத் தேர்வு முடிந்த மறுநாள் காலை. வயிற்றிலும், கை கால்களிலும் குடைச்சலை உணர்ந்தவள்... குளியலறைக்குச் சென்று தான் பூப்பெய்து விட்டதைப் புரிந்து கொண்டாள்.

பச்சை நிறப் பாவாடை சட்டையில் தயங்கியபடியே கொல்லையில் நின்றிருந்தவள்... யாரிடம் சொல்வது என்று நிமிர்ந்த போது. அவளது மாமன் திவாகரன் நின்றிருந்தான்.

என்றும் போலல்லாது, அன்று அவன் முகம் பார்க்க மிகவும் கூச்சமும், வெட்கமுமாய் இருந்தது அவளுக்கு. சட்டெனத் தூணிற்குப் பின்னே மறைந்தவளைக் கண்ட திவாகரன், "ஏய்... திருட்டுக் கழுதை. என்னைப் பார்த்து ஏன்டி ஒளிகிறாய்? என்ன செய்து வைத்திருக்கிறாய்... ம்?" என்று அருகே வரப் பார்க்க...

"பக்கத்தில் வராதே மாமா. சொன்னால் கேள்!" என்று அவள் ஒரு மாதிரியாகச் சிணுங்கவும், வியந்து போன திவாகரன், "பரி, என்னம்மா? என்னவாயிற்று? பூச்சி ஏதும் கடித்து விட்டதா? உண்மையைச் சொல். மாமா அடிக்க மாட்டேன்," என்று கவலையுடன் விசாரித்தான்.

"அப்படி யெல்லாம் ஒன்றுமில்லை மாமா. நீ அப்பத்தாவைக் கூப்பிடு!" என்று அழுத்திக் கூறியவளிடம், "இங்கே பார் பரி. என்னவாயிற்று என்று என்னிடம் கூறு. சுவருக்குப் பின்னே ஒளிந்து கொண்டால் என்னவென்று நினைத்துக் கொள்வேன் நான்?" என்று மீண்டும் பதறியவனிடம், தலையை மட்டும் நீட்டி, "எனக்கு ஒன்றுமாகவில்லை மாமா. நீ அப்பத்தாவைக் கூப்பிடு!" என்றாள். "சரி இரு..." எனக் கூறி விட்டு வள்ளியம்மையை அழைத்து வந்தான்.



"என்னடி சிறுக்கி! கொல்லையில் நின்னுகிட்டு என்ன விளையாட்டு இது?" என்று திட்டியபடியே அருகே வந்தவரிடம், "அய்யோ கிழவி... இங்கே வா!" என்று கையைப் பற்றி இழுத்தவள்...

அவர் காதுக்குள் விசயத்தைக் கூற மலர்ந்து போனது அவரது முகம். ஒரே பேத்தியல்லவா?

"என் ராசாத்தி... என் கண்ணு..." என்று அவள் முகத்தை வழித்துக் கொஞ்சியவர், "இங்கே உட்கார்... நான் அம்மாவைக் கூட்டி வாரேன்!" என்று அவர் மகிழ்ச்சியுடன் உள்ளே செல்ல, குழம்பிப் போனான் அவன்.

"அம்மத்தா... என்னவாயிற்று அவளுக்கு? ஏன் கொல்லையிலேயே உட்கார வைத்து விட்டாய்? என்ன அம்மத்தா?" என்றவனிடம்,

"உன் மாமன் மவ வயசுக்கு வந்துட்டா கண்ணு... அதான் அங்க உட்கார வைச்சிருக்கேன்..." எனச் சந்தோசத்துடன் கூறி விட்டு அவர் உள்ளே சென்று விட... தன் கண் முன்னே நாணியபடி தலை குனிந்து அமர்ந்

திருந்த அம்பரியை விரிந்த விழிகளுடன் திகைத்து நோக்கினான் அவன்.

எப்போதும் போலல்லாது சிவந்து போன முகத்துடன் கை விரல்களைப் பிசைந்தபடி இருந்தவள் மிகவும் அழகாகி விட்டதாகத் தோன்றியது அவனுக்கு.

கலைந்த தலையுடன், அழுகை முகத்துடன் காட்சி தரும் சிறு குழந்தை இன்று ஆளாகி விட்டதை எண்ணிச் சற்றுத் தடுமாறிப் போனான்.

மாமன் தன்னையே உற்றுப் பார்ப்பதால் அவளது குண்டு, குண்டுக் கன்னங்களில் செம்மையேறிவிட... விரிந்து தன் முன்னே விழுந்த கூந்தலைச் சுருட்டிக் கொண்டு, வலது காலின் பெரு விரலைத் தரையில் அழுத்தி, "அப்படிப் பார்க்காதே மாமா!" என்று அவள் சிணுங்கிக் கொள்ள...

அவள் முகத்தைக் கையில் ஏந்தித் தன் முகம் காணச் செய்து, கொஞ்ச வேண்டும் போல் இருந்தது அவனுக்கு. "பரி!" எனக் காலடி எடுத்து வைத்தவன், "அம்பரிக் கண்ணு..." என்ற சுப்புலட்சுமியின் குரல் தடை போட... சட்டெனப் பின்வாங்கினான்.

அதன் பின்பு அந்த ஊரில் வசிக்கும் அவளது அத்தைமார் அனைவரும் ஒன்றுகூடி அவள் தலையில் தண்ணீர் ஊற்றிக் குளிக்க வைத்துக் கொல்லைப் புறத்தின் ஒரு மூலையிலிருந்த திண்ணையிலேயே உட்கார வைத்தனர். மகள் பெரிய மனுஷியாகி விட்ட விசயம் கேள்விப்பட்ட மாணிக்கம் ஓடி வந்து மகளைக் கண்டார்.



அதன் பின் ஊரில் போவோர் வருவோருக்கெல்லாம் அந்த ஏழு நாட்களும் விருந்தென்று ஆகி விட... வீடே அல்லோல கல்லோலப்பட்டது.

அம்பரியைச் சுற்றி எப்போதும் பெண்கள் கூட்டம் இருந்து கொண்டே இருந்தது. திவாகரனால் அவள் முகத்தைக் கூடக் காண முடியவில்லை.

அவ்வப்போது ஜன்னல் வழியே தெரியும் அவளது மஞ்சள் நிறைந்த முகம்.... இரவு அவன் கண் மூடுகையில் மனத்திரையில் நின்று அவனைத் தூங்க விடாமல் அலைக்கழிக்கும். ஒரு முறை கூட அவளைக் காண முடியவில்லையே என்று அவன் ஏங்கிக் கொண்டிருக்க... அந்த வாய்ப்பு அவனைத் தேடி வந்தது.

அவளது சடங்கின் ஒரு பகுதியாக... பெண்ணிற்குக் குடிசை கட்டும் நிகழ்வு வந்தது.

தாய்மாமன் என்று அவளுக்கு யாருமில்லாததால் திவாகரனே கட்டட்டும் என்று வள்ளியம்மை கூற, மாணிக்கமும் அதற்குச் சம்மதித்தார்.

உடனே திவாகரனை அழைத்தவர், "திவாகரா! பெண்ணுக்குத் தாய்மாமன் குடிசை கட்டணும். உன்னைக் கட்டச் சொல்லி அம்மத்தா சொல்கிறாள். ஓலையைக் கொல்லையில் போட்டு வைத்திருக்கிறேன். எடுத்துக் கட்டி விடு!" என்று கூறி விட்டு, அவர் வெளியே சென்று விட, குதூகலத்துடன் சரியெனத் தலையாட்டிய திவாகரன் அம்மத்தாவுடன் கொல்லைக்குச் சென்றான்.

அங்கே... திண்ணையில் விரிக்கப்பட்டிருந்த பாயில் மஞ்சளும், சிவப்பும் கலந்த பாவாடை தாவணியில், ஒற்றைப் பின்னலுடனும், தலை நிறைய மல்லிகைப் பூவுடனும், அன்று மலர்ந்த சிவப்பு ரோஜாவைப் போல் கொள்ளை அழகுடன் அமர்ந்திருந்தாள் அம்பரி.

அந்த நாட்களுக்கே உரித்தான சோபை அவளது முகத்தில் நிறைந்திருக்க, தொடர்ந்து கொடுக்கப்பட்டு வரும் சத்தான உணவுகளினால், சற்று மெருகேறியிருந்தாள்.

அந்த மஞ்சள் முகமும், மல்லிகைப் பூவும், திராட்சை விழிகளும், சிவப்பேறிய இதழ்களும், அவளைப் புதிதாகக் காட்டின. அதை விட அழகு, அந்தப் பாவாடை, தாவணி யில் புதிதாக அவளுடன் ஒட்டிக் கொண்டிருந்த வெட்கமும், கூச்சமும்.

அவன் வந்து நின்றதும், தலையைக் குனிந்து கொண்டு சுவரோடு ஒட்டிக் கொண்டவள்... வெட்கத்துடன் அமர்ந்திருக்க, அவனைக் கண்டதும் மட்டும் அவள் வெளிப்படுத்தும் இந்த உணர்வு அவனுக்குள் ஏதேதோ மாற்றங்களை உண்டாக்கியது.

அவளைக் கண்டபடியே சிலிர்ப்புடன் நின்று விட்டவனை வள்ளியம்மை உலுக்க, சட்டென நகர்ந்து சென்று ஓலையைத் தூக்கிக் கொண்டு வந்து, கயிற்றை எடுத்து, அவள் முகம் கண்டபடியே கட்டத் துவங்கினான். "நீ கட்டு கண்ணு. நான் இதோ வாரேன்," என்றபடி அம்மத்தா உள்ளே சென்று விட... திவாகரனுக்கு முகத்தில் புன்னகை உண்டானது.



ஓலையைக் கட்டி முடித்து அவளருகே அமர்ந்தவன், "பரி..." என்றழைக்க, "ம்..." என்றபடி இன்னமும் அதிக மாகச் சுவருடன் ஒண்டினாள்.

"நீ ஏன் இவ்வளவு வெட்கப் படுகிறாய் பரி? எனக்கு உன்னை இப்படிப் பார்க்கப் புதிதாக உள்ளது!" என்றவன் தொடர்ந்து, "நீ... நீ மிகவும் அழகாகி விட்டாய் பரி...!" என்று கூற, முகம் சிவந்து போனாள் அவள்.

அவளிடத்திலிருந்து புறப்பட்ட வாசம் அவனை ஏதோ செய்ய... "கண்ணம்மா..." என்று மெல்லிய குரலில் அழைத்தான். அவள் "ம்..." என்றதும், "ஒரு முறை நிமிர்ந்து என்னைப் பாரேன்!" என்று கூற, அவள் "ம்ஹூம்..." என்று சிணுங்கிக் கொண்டாள்.

"ஒரே ஒரு முறைடா... மாமாவை நிமிர்ந்து பார்!" என்று கூற, மெல்ல நிமிர்ந்து அவன் முகத்தை நோக் கியவள், அவன் பார்வையில் தெரிந்த மாற்றத்தைக் கண்டு சட்டென இரு கைகளால் தன் முகத்தை மூடிக் கொண்டாள்.

அவள் முகத்திலிருந்து அவளது கைகளைப் பிரித் தவன் அவளது இரண்டு கைகளையும் பற்றித் தன் சட்டைப் பாக்கெட்டில் மறைத்து வைத்திருந்த கண்ணாடி வளையல்களை எடுத்து அவள் கைகளில் மாட்டி விட்டு அவள் முகம் நோக்கியவன்... அவள் தன்னை ஆசை யுடன் நோக்குவதைக் கண்டு என்ன நினைத்தானோ... பற்றியிருந்த அவளது இரண்டு கைகளிலும் முத்த

மிட்டு, "சீக்கிரம் இந்தத் திண்ணையிலிருந்து வெளியே வா, கண்ணம்மா!" என்று கூறி விட்டு நகர்ந்து சென்றான்.

வயது, உடல், மனது என அனைத்திலும் மாற்றத்தை உணர்ந்திருந்த அம்பரிக்கு... அவன் அளித்த முதல் முத்தம் சிலிர்த்தெழ வைத்தது.

## 5

சேலை மூடும் இளஞ்சோலை...
மாலை சூடும் மலர்மாலை...
இருபது நிலவுகள்...
நகமெங்கும் ஒளி விடும்...
இளமையின் கனவுகள்...
விழியோரம் துளிர்விடும்...
கைகள் இடைதனில் நெளிகையில்...
இடைவெளி குறைகையில்...
எரியும் விளக்கு சிரித்துக் கண்கள் மூடும்...!

அந்த வாரக் கடைசியில் அம்பரியின் பூப்புனித நீராட்டு விழா ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததால் அம்பரியைச் சுற்றி எப்போதும் அவளது தோழிகளும், உறவினர்களும் குவிந்திருந்தனர்.

திவாகரனும் மாணிக்கத்திற்கு உதவி புரிந்து கொண்டு அவருடனே திரிந்ததால் அம்பரியைக் காண முடியாமல் போனது. அவ்வப்போது காண நேர்ந்தாலும்



தலை குனிந்தபடி அவள் அமர்ந்து கொள்வதால் திவாகரனால் அவள் முகத்தைச் சரியாகப் பார்க்க முடிவதில்லை.

விழா அன்று காலை வீடே பரபரப்பாகக் காட்சி தர, அந்த ஊரிலிருக்கும் ஆடுகளும், கோழிகளும் அம்பரியின் வீட்டில் குழம்பாகவும், கறியாகவும் மாறிக் கொதித்துக் கொண்டிருந்தன.

அந்த வாரம் முழுதும் ஒவ்வொரு சொந்தங்களாக வந்து சேர்ந்ததால் அம்பரியின் வீடு முழுதும் மனிதத் தலைகளால் நிரம்பியிருந்தது.

அம்பரியின் தோழிகள் ஒருவரையொருவர் கேலி செய்து கொண்டு ஒரு புறம் நின்றிருக்க.. மறுபுறம் சுப்புலட்சுமியுடன் பல உறவுக்காரப் பெண்கள் கூடி அடுத்து நடக்கப் போகும் சடங்கைப் பற்றி ஒவ்வொருவருக்கும் தெரிந்ததைக் கூறிக் கொண்டு விவாதத்தில் ஈடுபட்டிருந்தனர்.

வள்ளியம்மை ஒரு புறம் மஞ்சள், சிகைக்காயெனக் கலந்து வைத்துக் கொண்டிருக்க, அந்த வீட்டுச் சிறார்கள் அனைவரும் வாசலில் போடப்பட்டிருந்த பெரிய கோலத்தைச் சுற்றி விளையாடிக் கொண்டிருந்தனர்.

வீட்டு வாசலை வாழை மரங்களும், மாவிலைத் தோரணங்களும் நிறைத்திருக்க, வேப்ப மரத்தடியில் கிழவன்மார்களும், ஆண்களும் அமர்ந்து கொண்டு ஊர்க் கதைகளைப் பற்றி அளந்து கொண்டிருந்தனர். மறு புறம் கை நிறைய விறகுகளைச் சுமந்து கொண்டு திவாகரனும்,

குமரனும் வீட்டின் எதிரே போடப்பட்டிருந்த பந்தலின் பின்னே பெரிய பெரிய அண்டாக்களில் சமையல் நடந்து கொண்டிருந்த இடத்திற்குச் சென்று போட்டனர்.

"திவாகரா... வாழை இலை இன்னும் வந்து போடாமல் இருக்கிறான் பார் கேசவன். நீ நம் தோப்பிற்குச் சென்று அவன் என்ன ஆனான் என்று பார்த்து வா கண்ணா!" என்று மாணிக்கம் ஏவ, "இதோ போகிறேன் மாமா..." என்றபடி சைக்கிளில் பறந்தான் திவாகரன்.

"குமரா... அத்தையிடம் வாசலில் அமர்ந்திருப்பவர் களுக்குக் காபி கொடுக்கச் சொல், கண்ணு..." என்று அவனையும் அனுப்பியவர், சமையல் நடக்கும் இடத் திற்குச் சென்றார்.

பெண்கள் அனைவரும் ஒன்று கூடி ஒரு முடிவிற்கு வந்தபின் கரைத்து வைத்திருந்த சிகைக்காய், எண்ணெய், மஞ்சள் போன்றவற்றை எடுத்துக் கொண்டு அம்பரி அமர்ந்திருந்த இடம் நோக்கிச் சென்றனர்.

தூக்கிச் செருகப் பட்டிருந்த கொண்டையுடன் ஏதாவது செய்து இந்த ஓலைக் குடிசையை விட்டு என்னை வெளியே வர வையுங்களேன் என்பது போல முகத்தை வைத்துக் கொண்டு நின்றிருந்தவளிடம், "வா கண்ணு. அங்கே போய் உட்காரு!" என்று வள்ளியம்மை விரட்டி னார்.

"அப்பத்தா! இன்னும் எவ்வளவு மணி நேரம் என்னை இப்படி வாட்டி எடுக்கப் போகிறாய்?" என்று



சிணுங்கிக் கொண்டவளிடம், "அப்படியெல்லாம் சொல்லக் கூடாது கண்ணு. அமைதியா இரு..." என்று அதட்டி அடக்கியவர், அங்கே போடப்பட்டிருந்த நாற்காலியில் அவளை அமர வைத்தார்.

பாட்டிகள் அனைவரும் சேர்ந்து சமைந்த பெண் களுக்கான பல நாட்டுப்புறப் பாடல்களைப் பாடத் துவங்க, அத்தைமார் ஒவ்வொருவராக வந்து அவள் தலையில் எண்ணெயையும், சிகைக்காயையும் இட்டு முகத்தில் மஞ்சளை அப்பி விட்டுச் சென்றனர்.

கிழவிகளின் குரலில் ஒலித்த கீதமும், சுற்றியிருப் போரின் கேலியும், கிண்டலும் அவளுக்குப் புதுமையான உணர்வைக் கொடுத்தது. சிரிப்பும், வெட்கமுமாய் அமர்ந்திருந்தாள்.

"தலை கனக்குது, அப்பத்தா... போதும்!" என்று அவள் கெஞ்சியதும், ஒரு வழியாக அனைவரும் போது மென ஒப்புக் கொண்டு, அவளை நீராடுவதற்கு அனுப்பி வைத்தனர்.

குளித்து முடித்து வந்தவளை ஓலைக் குடிசைக்குள் அழைத்துச் சென்று, தாய்மாமன் துணியாகச் செல்வம் வாங்கி வந்திருந்த புடவையை அணிவித்தனர்.

கருத்து அடர்ந்திருந்த நீண்ட கூந்தல் பின்னலாகித் தொங்க, அந்தப் பின்னலில் முடிவில் கருப்பு நிறக் குஞ்சம் மாட்டப்பட்டிருந்தது. அத்தைமார் வாங்கி வந்திருந்த பூவில் பெரும் பகுதி அவளது தலையில் குடியேறி

யிருக்க, கழுத்திலும், காதிலும் அவள் அணிந்திருந்த அணிகலன்களே அவளது தந்தையின் செல்வ நிலையைப் பறை சாற்றின.

இடுப்பில் ஒட்டியாணத்தை மாட்ட வந்த வள்ளியம்மையிடம், "வேண்டாம் அப்பத்தா! ப்ளீஸ்..." என்று மன்றாடி எப்படியோ ஒட்டியாணம் கட்டுவதில் தப்பித்து விட்டிருந்தாள். மருதாணியிடப்பட்டிருந்த கை விரல்களும், கால் விரல்களும் மஞ்சளும், சிவப்பும் கலந்து பொன்னிறத்தில் ஜொலிக்க... அந்த அழகான பாதங்களைப் புது வெள்ளிக் கொலுசு அலங்கரித்திருந்தது.

கை நிறையக் கண்ணாடி வளையல்களும், பொன் வளையல்களும் மின்ன, அவள் ஒவ்வொரு முறை கையை உயர்த்தும் போதும் அது ஓசை எழுப்பிச் சிரித்துக் கொண்டிருந்தது.

காதுகளில் அழகான குடை ஜிமிக்கி அங்குமிங்கும் ஆடி அவளது முக அபிநயங்களுடன் போட்டி போட்டுக் கொண்டிருந்தது.

கடைசியாக இந்த ஆடைகளும், ஆபரணங்களும் இவளுக்குத் தேவைதானா என்று நாம் எண்ணமிடும் அளவிற்கு அந்தப் பொன் முகம் இளமை அழகைக் கொள்ளை, கொள்ளையாகக் கொண்டிருந்தது.

தேன்மொழி அவளை அழைத்துக் கொண்டு குடிசையிலிருந்து வெளி வர, அனைவரது கண்களும் அவளையே பார்ப்பது கண்டு கொஞ்சம் கூச்சமாக இருந்தது அவளுக்கு. 'இன்னைக்கும் நான் ஒட்டு மேல



காய வைச்சிருந்த மாங்காயைத் திருடிட்டியாடி. உன் கையை ஒடிச்சாத்தான் சரி வரும்..." என்று அவளை விடாமல் துரத்தும் பக்கத்து வீட்டுப் பொன்னுத்தாயி பாட்டி கூட இன்று அவளைப் பார்த்துப் புன்னகையுடன் அமர்ந்திருக்க, அவளுக்கு ஆச்சரியமாகிப் போனது.

தேன்மொழியின் அன்னையும், இன்னும் சில அத்தைமாரும் அவளுடன் சேர்ந்து கொண்டு, முற்றத்தில் போடப்பட்டிருந்த நாற்காலியில் அவளை அமர வைத்தனர்.

ஜமுக்காளம் விரிக்கப்பட்டு அதன்மீது போடப்பட்டிருந்த நாற்காலியின் முன்பு பல தாம்பாளங்களில் பழங்களும், சேலைகளும், தின்பண்டங்களும், நகைகளும் வைக்கப்பட்டிருந்தன.

சுற்றி உறவுக்காரர்கள் கூடி யிருக்க... வள்ளியம்மை வந்து, "என் ராசாத்தி..." எனக் கூறி அவள் முகம் வழித்து முத்தமிட்டுச் சென்றார்.

மாணிக்கமும், சுப்புலட்சுமியும் கூட மகளைக் கண்டு மகிழ்ந்தனர்.

கையில் சந்தனமும், குங்குமமும், வெற்றிலை பாக்கும் வைத்த தட்டுடன் தேன்மொழி அம்பரியின் அருகில் நின்று கொள்ள, உறவினர் ஒவ்வொருவராக வந்து கழுத்தில் ரோஜா மாலையுடன் அமர்ந்திருந்த அம்பரியின் முகத்தில் சந்தனம் தடவி அவள் நெற்றியில் குங்குமமிட்டு ஆசிர்வதித்து விட்டுச் சென்றனர்.

அவர்கள் அளித்துச் செல்லும் பணத்தையும், பரிசையும் அவளுக்கு இடது புறத்தில் குமரன் அமர்ந்து வசூலித்துக் கொண்டிருந்தான்.

"பார்த்தாயா அம்பரி? இந்தக் களவாணிப் பயலிடம் போய்க் காசு விசயத்தைக் கொடுத்திருக்கிறாரே மாமா! இவன் பாதிக் காசைத் தன் பாக்கெட்டுக்குள் போட்டுக் கொள்ளப் போகிறான் பார்," என்று தேன்மொழி அவளது காதுக்குள் முணுமுணுக்க, "ஏய், யாரைடி களவாணிப் பயல் என்கிறாய்?" என்று அவன் எகிறினான்.

"ஏய், சும்மாத்தான் இரேன்டி!" என்று அவளை அதட்டி விட்டு அடுத்து வந்தவரைக் கவனித்தாள் அம்பரி.

இப்படியாக ஒவ்வொருவராகப் பொட்டு வைத்து விட்டுச் சாப்பாடுப் பந்தலை நோக்கிச் சென்றனர். செல்வமும், திவாகரனும் இன்னும் பலரும் அனை வருக்கும் பரிமாறத் துவங்க... பந்தி களை கட்டியது. சிறியவரிலிருந்து பெரியவர்வரை அனைவரும் வஞ்சகம் பார்க்காமல் உண்பவர் என்பதால், பந்தி நல்லபடியாகச் சென்று கொண்டிருந்தது.

இங்கே அம்பரியின் அருகே வள்ளியம்மை வந்து அவள் முகத்தில் சந்தனம் தடவிக் குங்குமமிட, அவர் காலில் பணிந்தவளை, "உன் மனசுக்குப் பிடிச்சவனைக் கட்டிக்கிட்டு நூறு வருஷம் சந்தோசமா இரு தாயி!" என்று ஆனந்தக் கண்ணீருடன் வாழ்த்தினார் அப்பத்தா. சிரிப்புடன் அவர் கண்ணீரைத் துடைத்தவள் அவரைத் தன்னருகிலேயே இருத்திக் கொண்டாள்.



சிறிது நேரத்தில் கூட்டம் அடங்கியவுடன் அவளது பார்வை தன்னாலேயே திவாகரனைத் தேடத் துவங்கி விட்டது. மாமாவை எங்கே காணோம்? யாரிடம் சொல்லி வரவழைப்பது என்றெண்ணியவள் அப்பத்தாவிடம் திரும்பி மெல்லக் குனிந்து,

"மாமா எங்கே அப்பத்தா? எனக்குப் பொட்டு வைக்க வரவேயில்லையே... வரச் சொல் அப்பத்தா!" என்று கெஞ்ச அவள் மனதைப் புரிந்து கொண்ட அப்பத்தாவும் குமரனிடம் திவாகரனை அழைத்து வரச் சொன்னார்.

செல்வத்துடன் சேர்ந்து கொண்டு அனைவரிடமும் சிரிப்பும், கேலியுமாய்ப் பந்தியில் பம்பரமாய்ச் சுற்றிக் கொண்டிருந்த திவாகரனிடம் சென்ற குமரன், "மாமா! உங்களை அப்பத்தா வரச் சொன்னார்கள். இப்போதே வருவீர்களாம்," என்று கூற...

"சரி. இதோ வருகிறேன்!" என்றவன், கையில் வைத்திருந்த பாத்திரத்தைக் கீழே வைத்து விட்டு, அவன் பின்னோடேயே நடந்தான்.

வியர்வையில் வழிந்த நெற்றியைக் குனிந்து அணிந்திருந்த வேஷ்டியிலேயே துடைத்து விட்டு விறுவிறு வென உள்ளே சென்றவன், முற்றத்தில் நாற்காலியில் அமர்ந்திருந்த அம்பரியைக் கண்டு மூச்சடைக்க, கண் சிமிட்டவும் மறந்து நின்றுவிட்டான்.

அவள் நிறத்தைப் பளீரென எடுத்துக் காட்டும் புடவையில் கன்னம் இரண்டிலும் சந்தனம் அப்பிக் கிடக்க... நெற்றியில் குங்குமத்துடனும், தலை நிறைய

மல்லிகைப் பூவுமாகக் கண்டவனுக்கு மகிழ்ச்சி பெருகியது. அவனது குள்ளச்சி இன்று வளர்ந்த பெண்ணாகி விட்டாள்.

இதழில் முறுவல் விரிய, தலையைத் தாழ்த்தி மீண்டும் நிமிர்ந்து அவளைக் கண்டபடியே மாவிலைத் தோரணங்களை விலக்கிக் கொண்டு உள்ளே நுழைந் தவனைக் கண்டு அம்பரிக்கும் இதயம் படபடவென அடித்துக் கொண்டது.

ஒரு நிமிடம் அவளைச் சுற்றி ஒலிக்கும் குரல்கள் அனைத்தும் அவள் காதுகளை எட்டாமல் போய் விட, தன்னை நோக்கி நடந்து வரும் திவாகரனைத் தவிர அவள் மனதில் அந்த நிமிடம் எதுவுமே பதியாமல் போனது.

"வா ராசா..." என்ற வள்ளியம்மையின் குரல் இருவரையும் கலைக்க, அவரை நோக்கித் திரும்பினர். "என்ன கண்ணு, உன் மாமன் மவளைக் கவனிக்காம கூட உனக்கு அப்படியென்ன வேலை? தேனு! அந்த சந்தனத்தை அண்ணன் கிட்ட கொடு!" என்று கூற,

சிரிப்புடன் தேன்மொழி நீட்டிய சந்தனத்தை எடுத்து, அவள் கன்னங்கள் இரண்டிலும் தடவியவன் குங்குமத்தை எடுத்து அவள் நெற்றியில் இட்டான்.

பின் அந்தத் தட்டிலிருந்த அர்ச்சதையை எடுத்து அவன் அவள் தலையில் தூவ... சட்டென அமர்ந்திருந்த நிலையிலேயே குனிந்து அவன் காலைப் பற்றித் தன்



கண்ணில் ஒற்றிக் கொண்டு ஆசிர்வாதம் பெற்றுக் கொண்டாள் அம்பரி.

"என்ன செய்கிறாய் பரி?" என்று அவன் பதறி விலகும் முன், அனைத்தும் நடந்து விட... அவளைச் சுற்றியமர்ந்திருந்த கிழவிகள் அனைவரும் சிரிக்கத் துவங்கி விட்டனர்.

கோபமாக அவள் புறம் திரும்பியவன், "உனக்குக் கொஞ்சமேனும் அறிவிருக்கிறதா பரி?" என்று பாய, "அவளை ஏன் திட்டுற கண்ணு? அவ சரியாத்தான் செஞ்சிருக்கா. முறை மாமன் கிட்ட ஆசிர்வாதம் வாங்காம வேற யார்கிட்ட வாங்குவா?" என்று கிழவிகள் மீண்டும் சிரிக்கத் துவங்க, திரும்பி அம்பரியின் முகத்தை நோக் கினான் அவன்.

அவர்களுடன் சேர்ந்து கொண்டு சிரித்தாலும், அம்பரியின் முகத்தில் ஒரு தீவிரம் இருந்தது. ஒன்றும் கூறாமல் தானும் சிரிப்புடன் விலகியவன், அவளைத் திரும்பித் திரும்பிப் பார்த்தபடி மனமில்லாமல் வெளி யேறினான்.

பெரும்பாலான உறவினர்கள் உண்டு முடித்து விட்டு மரத்தடியிலும், அருகிலிருந்த தோப்பிலும் தஞ்சமடைய, வீட்டு மனிதர்கள் அடுத்தடுத்து உண்ணத் துவங்கினர். பெரியவர்கள் அனைவரும் உண்டு முடித்ததும் அம்பரி யும் அவளது பட்டாளங்களும் சாப்பாட்டுப் பந்தலை வந்தடைந்தனர்.

அங்கே தன் மாமன் ஓடி, ஆடி வேலை செய்வதைக் கண்டபடியே அமர்ந்தாள் அம்பரி. "வாங்க, பெரிய மனுஷி!" என்று கேலி செய்தபடி செல்வம் மாமா பரிமாறத் துவங்க...

குமரன், தேன்மொழி, அம்பரி மூவரும் வரிசையாக அமர்ந்தனர். தன் இலையில் இடப்பட்ட பிரியாணியை அளைந்தபடி, 'மாமா சாப்பிட்டானோ, என்னவோ?' என்று திவாகரன் முகத்தைப் பார்த்தபடி இருந்தவள், குனிந்து தேன்மொழியிடம், "தேனு! உன் அண்ணன் சாப்பிட்டாரா என்று கேளேன்..." என்று கூறினாள்.

அவள் குனிந்து தேன்மொழியின் காதைக் கடிப்பதைக் கண்டபடியே குழம்பை ஒவ்வொரு இலையிலும் ஊற்றிக் கொண்டிருந்த திவாகரன், அவள் அருகே வந்ததும் நின்று அவள் முகத்தைக் கண்டு விட்டு உண்ணாமல் அவள் பிசைந்து கொண்டிருந்த சாப்பாட்டை எடுத்துத் தன் வாயில் போட்டுக் கொண்டு அவள் முகம் பார்த்தான்.

சட்டென முகம் மலர்ந்தவளைக் கண்டு சிரித்தபடி அவளுக்கும் ஊட்டியவனைக் கண்ட செல்வம் அவர்கள் அருகே வந்து, "நீ சாப்பிடாமல் அவள் என்றைக்கடா உண்டிருக்கிறாள்? நீயும் அவளுடனே அமர்ந்து கொள்!" எனக் கூறி ஒரு நாற்காலியை இழுத்து அவனருகே நகர்த்தி விட்டுச் சென்றார்.

அவர் கூறியதும் உண்மை தானே? ஓலைக் குடிசைக்குள் ஏழு நாட்கள் அமர்ந்திருந்த போதும்



வள்ளியம்மையிடமோ, தேன்மொழி, குமரனிடமோ நேரம் தவறாமல் அவனுக்குச் சாப்பாடு வரச் செய்து கொண்டுதானே இருந்தாள். அவனது தேவதை அல்லவா அவள்...!

சிரிப்பும், பெருமையுமாய் அவளது முகம் கண்டபடியே உண்டவனை நிமிர்ந்து நோக்கியவள், "ரொம்பவும் வேலையா மாமா? முகமெல்லாம் வியர்த்து வழிகிறதே!" என்றபடியே தன் கையிலிருந்த கைக்குட்டையால் துடைத்து விட, அவள் கைப்பற்றித் தடுத்தவன், "உனக்காகத்தானே செய்கிறேன். அதனால் களைப்புத் தெரியவில்லை..." என்று கூற, விரிந்த விழிகளுடன் அவனை நோக்கினாள்.

அவள் கண்களுக்குள் தொலைந்து போனவனும், "இன்று நீ மிகவும் அழகாக இருக்கிறாய் கண்ணம்மா. இந்தப் புடவை, பூ, அணிகலன்கள், இந்த மருதாணி அப்புறம்..." என்று அடுக்கிக் கொண்டே போனவனைக் கண்டு, அவள் முகம் சிவக்க...

"அப்புறம் முக்கியமாக என்னைக் கண்டதும் உன் முகத்தில் தோன்றுகிறதே இந்த வெட்கம். இதுதான் உன்னை மிகவும் அழகாகக் காட்டுகிறது..." என்று மெல்லிய குரலில் கூற, அந்தக் குரல் அவளது உயிர் வரை ஊடுருவிச் சென்றது. "போ மாமா!" என்று சிணுங்கிக் கொண்டவளிடம், "சாப்பிடு..." எனக் கூறிச் சாப்பிட வைத்தான்.

அன்றே உலக்கையிலிருந்தும், ஓலைக் குடிசையிலிருந்தும் அம்பரிக்கு விடுதலை கிடைத்து விட்டதால்,

குதூகலமாக வீட்டினுள் வலம் வந்தாள். ஆனாலும் பழைய துள்ளல் அவளிடம் சற்றே குறைந்திருந்தது போல் தோன்றியது திவாகரனுக்கு.

எப்போதும் காலில் சக்கரம் கட்டியிருப்பவள் போன்று ஓடித் திரிபவள் இப்போது நிதானமாக நடக்கப் பழகியிருந்தாள். மாந் தோப்பிலும், கரும்புத் தோட்டத்திலும் அவளது வானரக் கூட்டத்துடன் சுற்றித் திரிபவள்... இப்போ தெல்லாம் எப்போதாவதுதான் வெளியில் தென்படுகிறாள்.

இவையனைத்தையும் விட அவனைக் கண்டதும் அவள் முகத்தில் தோன்றும் வெட்கம் கலந்த மகிழ்ச்சி. அவன் சற்று உற்றுநோக்கினால் சட்டென இமை தாழ்த்தி முகம் சிவந்து பின் நிமிர்ந்து அவனை நோக்குவது. தெரியாமல் கை பட நேர்ந்தால் கூட ஓடி விடுவது... என அவளுக்குள் குடி புகுந்துவிட்ட இந்த மாற்றங்கள் ஏனோ அவனுக்கு வித்தியாசமான சுகத்தைத் தந்தன.

அது என்னவென்று அவன் யோசிக்கும் முன் அடுத்தடுத்து அவனது வாழ்க்கையில் சில முக்கியமான சம்பவங்கள் நடைபெற்றன.

அம்பரி பூப்பெய்தி இரு மாதங்களுக்குப் பின் திவாகரனின் பன்னிரண்டாம் வகுப்புத் தேர்வு முடிவுகள் வெளிவந்தன. நல்ல மதிப்பெண்கள் பெற்று அந்தப் பள்ளியில் முதல் மதிப்பெண் பெற்றுத் தேறியிருந்தான் அவன்.

தேனி கலைக் கல்லூரியிலேயே சேர்ந்து விடலா மென்று நண்பர்கள் அவனை உற்சாகப்படுத்த, அடுத்த



ஒரு வாரத்தில் கல்லூரிக்குச் சென்று அவன் தேர்ந் தெடுக்கப் போகும் பிரிவைப் பற்றியும், கட்டணம் போன்றவற்றைப் பற்றியும் விசாரித்தான்.

அவனது மதிப்பெண்ணிற்கு அந்தக் கல்லூரி யிலேயே இடம் கிடைத்து விடும் என்பது உறுதியாகி விட, கட்டணத்தை மறுநாள் கட்டுவதாகக் கூறி விட்டு வீடு வந்து சேர்ந்தான்.

அன்று மகிழ்ச்சியுடன் வீட்டிற்குள் நுழைந்தவன் வாசலில் அமர்ந்திருந்த வள்ளியம்மையிடம், "அம்பரி எங்கே அம்மத்தா?" என்று விசாரித்து விட்டு அவள் இருக்கும் இடம் தேடி வேகமாக அவளிடம் ஓடிச் சென்றான்.

சமையலறையில் அப்போது அரைத்த மாவில் உப்பைக் கரைத்துக் கொண்டிருந்தவளிடம், "பரி..." என ஓடிச் சென்று அவளைத் தூக்கிச் சுற்றியவன், "எனக்குத் தேனி காலேஜில் இடம் கிடைத்து விட்டது..." என்று கூற...

கண்கள் விரியச் சிரிப்புடன் அவனை நோக்கியவள், "ஐ... நிஜமாவா மாமா?" எனக் கூறி, அவன் ஆமாம்... எனத் தலையாட்டியதும், "ரொம்பவும் சந்தோசம் மாமா. நீ கல்லூரிக்குச் சென்று பெரிய படிப்பைப் படிக்க வேண்டு மென்கிற அத்தையின் ஆசை நிறைவேறப் போகிறது." என்று சிரித்தவள், தொடர்ந்து, "நீ காலையில் கல்லூரிக்கு விசாரிக்கச் செல்லப் போகிறாய் என்றதுமே நான் வீரபாண்டி கௌரி மாரியம்மனுக்குக் காணிக்கை முடிந்து வைத்து விட்டேன் மாமா. நீ கல்லூரியில் சேர்ந்த பின்பு

நிச்சயம் ஒரு முறை கோயிலுக்குச் செல்ல வேண்டும். அந்த அம்மனின் அருளால்தான் அனைத்தும் நல்ல படியாக நடக்கிறது..." என்று கூற,

அவன் சிரித்து, "அந்த அம்மனின் அருளால் அல்ல. இந்த அம்மனின் அருளால்தான் நடக்கிறது. நீ... நீ மட்டும் அத்தையை எதிர்த்திராவிட்டால் நான் இன்று இவ்வளவு மகிழ்ச்சியாக இருந்திருப்பேனா கண்ணம்மா?" என்று அவள் கண்களைப் பார்த்தபடியே கூற...

சிவந்து தலை குனிந்தவள், அப்போதுதான் அவன் தன்னைத் தூக்கிக் கொண்டு நிற்பதை அறிந்து சட்டெனத் துள்ளி விலகினாள்.

அவன் குழம்பி அவளை நோக்குகையிலேயே, "நான்... நான் அப்பத்தாவிடம் சொல்லப் போகிறேன்," எனக் கூறி விட்டு ஓடிச் சென்று விட்டாள்.

அதன் பின் தானும் வள்ளியம்மையுடன் திண்ணையில் அமர்ந்தவனிடம் கட்டணத்தைப் பற்றியெல்லாம் விசாரித்தார் வள்ளியம்மை. "3500 ரூபாய் கட்ட வேண்டும், அம்மத்தா. நாளைக்கு வருவதாகக் கூறியிருக்கிறேன்," என்றவனிடம், "இந்த முறையேனும் அம்மத்தா உனக்குக் காசு தாரேன் ராசா. மறுக்காத. அவ்வளவு பணத்துக்கு நீ எங்கே போவ?" என்று கவலையுடன் வினவினார் வள்ளியம்மை.

"அதெல்லாம் வேண்டாம் அம்மத்தா. நான்தான் தினமும் மாமாவுடன் நம் தோப்புகளனைத்திலும் வேலை பார்க்கிறேனே. மாமா எனக்கு ஒவ்வொரு வாரமும்



சம்பளம் தருவார் அம்மத்தா. இரண்டு வருடமாக அந்தக் காசை உண்டியலில் சேர்த்து வைத்திருக்கிறேன். அது எப்படியும் 4000, 5000 தேறும். அதை வைத்துக் கட்டி விடுகிறேன்," என்று அவன் கூறியதும்,

"இது மட்டுமா மாமா இருக்கிறது? சீருடை, பாடப் புஸ்தகம், நோட்டு எல்லாம் இருக்கிறதே... அப்பத்தா தருவதை வாங்கிக் கொள் மாமா. போதவில்லையென்றால் நான் அப்பாவிடமும் வாங்கித் தருகிறேன்," என்று கூறினாள் அம்பரி.

அவள் கூறியதைக் கேட்டுக் கலகலவெனச் சிரித்தவன்... "குள்ளச்சி... சீருடை அணிந்து செல்ல அது என்ன பள்ளிக்கூடமா? கல்லூரிடி... பின் பாடப் புஸ்தகமெல்லாம் அங்கேயிருக்கும் நூலகத்திலேயே எடுத்துப் படித்துக் கொள்ளலாம். நான்தான் மாமாவுடன் வாரக் கடைசியில் வேலை பார்க்கப் போவேனே...

"இனி மாமா கொடுக்கும் சம்பளமெல்லாம் என் படிப்பிற்குத்தான்... நான் பார்த்துக் கொள்வேன் குள்ளச்சி. நீ கவலைப்படாதே!" என்று கூறி விட்டுப் பின், "சரி, என்னுடன் வா. உண்டியலில் இருக்கும் காசை எண்ணிப் பிரித்து வைக்கலாம்..." என்று கூறி, அவளை அழைத்துச் சென்றான்.

அவன் அறையின் ஒரு மூலையில் வைக்கப் பட்டிருந்த உண்டியலைத் திறந்து அதிலிருந்த சில்லறைகளையும், ரூபாய் நோட்டுகளையும் தனித்தனியாகப்

பிரித்து எண்ணினர். மொத்தப் பணத்திலிருந்து மூவா யிரத்து ஐந்நூறு ரூபாயை எடுத்தவள், அவன் கையில் கொடுக்க... அவனும் சிரிப்புடன் வாங்கிக் கொண்டான். மீதிப் பணத்தை அதனுள்ளேயே போட்டு வைத்தவள்... எழுந்து சென்று உண்டியலை அதனிடத்திலேயே வைத் தாள்.

பின் அறையைச் சுற்றிப் பார்த்தவள், "என்ன மாமா போர்வையைக் கூட மடிக்காமல் வைத்திருக்கிறாய். சுத்தம் செய்யாமலே இருக்கிறதே அறை..." என்று கூற... "ம்... நீதான் முன்னைப் போலெல்லாம் இந்த அறைப் பக்கம் வருவதேயில்லையேடி..." என்றபடியே அவள் முகம் பார்க்க... அவளோ வழக்கம் போல் சிவந்து ஓடி விட்டாள்.

## 6

தேகம் யாவும் தீயின் தாகம்...
தாகம் தீர நீதான் மேகம்...
கண்ணுக்குள் முள்ளை வைத்து
யார் தைத்தது?
தண்ணீரில் நிற்கும் போதே வேர்க்கின்றது...!
கொஞ்சம் பொறு கொஞ்சம் இரு
தாவணி விசிறிகள் வீசுகிறேன்...!
மன்மத அம்புகள் தைத்த இடங்களில்
சந்தனமாய் எனைப் பூசுகிறேன்...!



மறு நாள் கல்லூரிக்குச் சென்று பணத்தைக் கட்டி ரசீது வாங்கிக் கொண்டவன்... அந்த மாத இறுதியில் கல்லூரி திறக்கவிருப்பதாக அங்கிருந்த அதிகாரி கூறியதும் சரியெனத் தலையாட்டி விட்டு வந்தான்.

சிறு வயதிலிருந்து வயல்களிலும், தோட்டம், தோப்பு களிலும் வலம் வந்தவனுக்கு விவசாயத்தின் மீதுதான் ஆர்வம், ஆசை அனைத்துமே. அதனால் கல்லூரியிலும் பி.எஸ்ஸி. அக்ரி படிப்பைத் தேர்வு செய்திருந்தான். சுப்புலட்சுமியைத் தவிர அந்த வீட்டில் அனைவருக்கும் திவாகர் கல்லூரிக்குச் செல்வதில் மிகவும் மகிழ்ச்சி.

அனைவரும் ஆவலுடன் எதிர்பார்த்த மாத இறுதியும் வந்து விட... அன்று திவாகரன் கல்லூரிக்குச் செல்லும் நாள்.

காலையில் விரைவாக எழுந்து குளித்து விட்டுத் தலையைத் துவட்டியபடி தன்னறைக்குள் நுழைந்தவன் ஊதுபத்தியின் மணத்தை உணர்ந்து நிமிர்ந்து பார்த்தான்.

அங்கே கருநீலத் தாவணியில் ஈரத்தலை முடியில் சுற்றப் பட்டிருந்த துவாலையை எடுக்கக் கூட மறந்து அவனது அன்னையின் படத்தின் முன்பு விளக்கேற்றி வைத்துக் கொண்டிருந்தாள் அம்பரி.

மனம் முழுதும் நிம்மதியில் நிறைய... மெல்ல நடந்து சென்று தானும் அவளருகே நின்று கொண்டு அன்னையை வணங்கினான். "மாமா நீங்கள் நினைத்த படி இன்று கல்லூரிக்குச் செல்லப் போகிறார், அத்தை.

அவர் நினைக்கும் அனைத்தும் நடந்து வாழ்க்கை முழுதிற்கும் அவர் நிம்மதியுடனும், சந்தோசத்துடனும் இருக்க வேண்டும்..." என்று அவள் வேண்ட,

"அம்பரி என்னுடன் இருப்பது நீங்கள் எனக்குத் துணையிருப்பது போலத் தோன்றுகிறதம்மா. இன்றுவரை அவள் எனக்குச் செய்திருக்கும் அனைத்து உதவிக்கும் நான் என்ன கைம்மாறு செய்யப் போகிறேன்? அவள் என்றைக்கும் க்ஷேமமாக இருக்க வேண்டும்," என்று அவனும் மாறி மாறி வேண்டிக் கொண்டு திரும்பினர்.

"என்ன பரி? நீயும் சீக்கிரம் எழுந்து விட்டாயா!" என்று வினவியவனிடம், "ஆமாம் மாமா. இன்று நீ கல்லூரிக்குச் செல்கிறாயல்லவா? அதனால்தான்!" என்றவள், ஒரு நிமிடம் தயங்கி, "மா...மா... நா... நான் உனக்கு ஒரு பரிசு வைத்திருக்கிறேன். மறுக்காமல் முக்கியமாக என்னைத் திட்டாமல் வாங்கிக் கொள்ள வேண்டும். செய்வாயா?" என்று கேட்டாள்.

"பரிசா!" என்று சிரித்தவன், "சரிடி குள்ளச்சி... திட்ட மாட்டேன். உன் பரிசைக் கொடு," என்று கூற, மகிழ்ச்சியுடன் ஓடிச் சென்று படுக்கைக்கு அடியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த ஒரு பெரிய பிளாஸ்டிக் பையை எடுத்து வந்தாள். என்னவென்று வாங்கிப் பார்த்தவன், அதில் ஐந்து செட் சட்டை, பேண்ட்டுகள் இருப்பதைக் கண்டு, "என்ன பரி இதெல்லாம்? யார் இதையெல்லாம் வாங்க உனக்குக் காசு தந்தது?" என்று அதட்டினான்.



"பார்த்தாயா? திட்டுகிறாயே! நான் வாங்கவில்லை மாமா. அப்பத்தாதான். கல்லூரிக்குச் சீருடை இல்லை யென்று விட்டானே உன் மாமன். அவனுக்கு நல்ல துணியாக நான்கு வாங்கலாம் என்று சொன்னது. நானும், அப்பத்தாவும்தான் தேனிக்குச் சென்று இதையெல்லாம் வாங்கினோம்.

"ஆ...ஆனால் மாமா இந்த மெரூன் நிறச் சட்டை மட்டும் நான் வாங்கினேன். போன வாரம் வாழைத் தோப்பில் 100 இலை அறுத்ததற்காக அப்பா எனக்கு 500 ரூபாய் தந்தார். அதை வைத்து இந்தச் சட்டைதான் வாங்க முடிந்தது மாமா!" என்று மெல்லிய குரலில் கூறிய வளிடம், நன்றாக முறுவலித்து, சட்டையை மெல்ல வருடி, "தாங்க்ஸ் குள்ளச்சி..." என்று கூறினான்.

சிரித்துக் கொண்டே அவன் மறுபுறம் திரும்பியதும், "மா...மாமா" என்று அவள் மீண்டும் அழைக்க... "என்ன?" என்று வினவியவனிடம், "இ...இந்தச் சட்டையை இன்று அணிந்து கொண்டு செல்கிறாயா?" என்று தயங்கித் தயங்கி வினவியவளிடம், சிரித்தபடி சரியெனத் தலை யாட்டினான் அவன். அவன் உடை மாற்றச் சென்றதும் இவள் விரைவாகச் சென்று காலைச் சாப்பாடை எடுத்துக் கொண்டு வந்தாள்.

க்ரீம் நிறப் பேண்ட்டும், மெரூன் நிறச் சட்டையும் அணிந்து தலை வாரி இரு புருவங்களுக்கும் மத்தியில் குங்குமம் இட்டிருந்தான். தட்டை ஏந்திக் கொண்டு அவன் அறையை நோக்கி வந்தவளைக் கண்டு, அவன்

புன்னகை செய்து, "நன்றாக இருக்கிறதா?" என்று கேட்க, விழி விரித்து அவன் புன்னகையைக் கண்டவளுக்கு அந்த வெண் பற்களும், இதழ் விரித்து அவன் சிந்திய புன்னகையும் ஏதோ செய்தது. தயங்கியபடி தலை குனிந்தவள் "ம்..." என்று தலையாட்ட... அவள் கையில் இருந்ததைக் கண்டவன்,

"என்ன இது பரி? நான் வெளியே சாப்பிட்டுக் கொள்ள மாட்டேனா! ஏன் சிரமப்படுகிறாய்?" என்று கடிந்து கொள்ள... "வெளியே ஏன் சாப்பிட வேண்டும் மாமா? உடம்பு கெடுவதோடு மட்டுமல்லாது வீண் செலவு தானே. உன்னைச் சாப்பிட வைப்பதைத் தவிர எனக்குப் பெரிய வேலை ஒன்றுமில்லை. சாப்பிடு," எனக் கூறி அவனை அமரச் செய்து சாப்பிட வைத்து அனுப்பினாள்.

புது நண்பர்களுடனும், சிறந்த ஆசிரியர்களுடனும் கல்லூரிக்கே உரிய கலாட்டாக்களுடனும், மகிழ்ச்சியுடனும் திவாகரனின் கல்லூரி வாழ்க்கை இனிதே தொடங்கியது.

மாணிக்கம் மாமாவுடன் வாரக் கடைசியில் வேலை செய்து கொண்டு அதில் வரும் பணத்தைத் தனது சொந்தப் படிப்புச் செலவிற்காக உபயோகித்து வந்தான். வீட்டில் இருக்கும் சமயங்களில் குமரன், தேன்மொழி, அம்பரிக்குப் படிப்புச் சொல்லித் தருவான்.

வழக்கம் போல் குமரன் சிறிது கவனத்துடன் அவன் சொல்லித் தருவதை மனதில் ஏற்றுக் கொள்வான்.

மற்ற இருவரும் கடனே என்று புத்தகத்தைத் திறந்து வைத்துக் கொண்டு அவன் முகத்தைப் பார்த்தபடி அமர்ந்



திருப்பர். இருவர் தலையிலும் குட்டு வைத்துக் கணக்குச் சொல்லிக் கொடுப்பான்.

சிறிது நேரம் பொறுத்துப் பார்க்கும் இருவரும்... அவன் அசந்த நேரம் பார்த்து பையைத் தூக்கிக் கொண்டு ஓடி விடுவர். மறுநாள் அவன் கையில் மாட்டும்போது பிரம்படி கொடுப்பான்.

அன்றும் அப்படித்தான். மறுநாள் கணக்குப் பரிட்சையென்று மூவரும் அமர்ந்து, அவனிடம் பாடம் கற்றுக் கொண்டிருந்தனர். திவாகரனுக்கும் அந்த வருடம் கடைசி செமஸ்டர் என்பதால் தானும் ஒரு புத்தகத்தை வைத்துப் படித்துக் கொண்டிருந்தான்.

மூவருக்கும் ஐந்து கணக்குகளைக் கொடுத்து இதை முடித்து விட்டுத்தான் மூவரும் நகர வேண்டும் என்று அவன் கூறி விட... அமைதியாக அமர்ந்து எழுதிக் கொண் டிருந்தனர்.

அம்பரியின் பார்வை அடிக்கடி நோட்டில் முகத்தைப் புதைத்து விடுபவள் போன்று குனிந்த தலை நிமிராமல் அமர்ந்திருந்த தேன்மொழியின் மீது படிந்து கொண் டிருந்தது.

"எல்லாக் கணக்கும் தெரிகிறதா? அமைதியாக எழுதுகிறாளே!" என்று புலம்பியபடி அவளது நோட்டை எட்டிப் பார்த்துக் கொண்டிருந்தவளின் தலையில் ஙங் கென்று குட்டினான் திவாகரன்.

"எழுந்து போய் அங்கே உட்கார். போடி!" என்று அவன் அதட்டியதும், தலையைத் தடவியபடி முகத்தை

ஒரு மாதிரி வைத்துக் கொண்டு தூரமாகச் சென்று அமர்ந்தாள். குமரன் முதலில் அனைத்துக் கணக்கு களையும் எழுதி முடித்து அவனிடம் சென்று கொடுத்தான்.

அவன் சரியாகச் செய்திருக்கிறாயடா... என்று பாராட் டியதும், மேலும் தனது சந்தேகங்களையெல்லாம் கேட்டு முடித்து விட்டு எழுந்து சென்று விட்டான்.

அதன் பின் சில நிமிடங்கள் கழித்து எழுந்த தேன்மொழி அவனருகே தயங்கித் தயங்கிச் சென்று நோட்டை நீட்டலாமா வேண்டாமா என்று பயந்து ஒரு வழியாக மெல்ல, "அண்ணா..." என்றழைத்து, தான் எழுதியதைக் கொடுத்தாள்.

அவன் கொடுத்த ஐந்து கணக்குகளில் மூன்றை மட்டுமே சரியாகச் செய்திருந்தாள். அடுத்து இரண்டு கணக்குகளையும் அவன் அவளுக்கு மீண்டும் சொல்லிக் கொடுத்ததும் புரிந்தது போல் தலையாட்டி விட்டு, "நாளை பரிட்சையில் சரியாகச் செய்து விட வேண்டும். சரியா? இப்போது கிளம்பு!" என்று அவன் கூறியதும், விட்டால் போதுமடா சாமி என்று ஓடி விட்டாள்.

கடைசியாக ஒரு கணக்கைக் கூட ஒழுங்காக முடிக்காமல் தலையைச் சொறிந்து கொண்டு அமர்ந் திருந்தது அம்பரி மட்டுமே. "நீ எப்போது எழுந்து வருகிறா யென்று பார்ப்போம்..." என்பது போல அவளை முறைத்து விட்டு, அவன் தன் புத்தகத்தில் தலையைப் புதைத்துக் கொண்டான். மொட்டை மாடியில் அமர்ந்திருந்தவளை வள்ளியம்மை, "அம்பரி... உங்கய்யனுக்குத் தேங்காய்த்



துவையல் அரைக்கணும்னியே, வா ராசாத்தி!" என்று குரல் கொடுக்க... "இதோ வருகிறேன் அப்பத்தா!" என்று வேகமாகப் பையைத் தூக்கிக் கொண்டு ஓடப் பார்த்த வளின் கையை அழுத்தமாகப் பற்றியவன்... எழுந்து, "அம்மத்தா! அவளுக்கு நாளைக்குப் பரிட்சை இருக்கிறது. நீங்களே இன்று அரைத்துக் கொள்ளுங்கள்," என்று கூற, "சரி ராசா!" என்று சென்று விட்டார்.

கிடைத்த ஒரு வாய்ப்பும் கை நழுவிப் போனதால் அம்பரிக்கு அழுகையே வந்தது. வெடுக்கெனக் கையை இழுத்துக் கொண்டு போய் மறுபடி அமர்ந்தாள்.

ஒவ்வொரு பக்கத்தைத் திருப்பும் போதும் அவள் முகத்தைக் கண்ட திவாகரனுக்குச் சிரிப்பை அடக்க முடியவில்லை. நோட்டையும் அவனையும் அழுகை முகத்துடன் பார்த்துக் கொண்டிருந்தாள்.

வளர்ந்து குமரியாகி விட்டாள்! ஆனால் இன்னமும் படிப்பதற்குக் கண்ணீர் விடத்தான் செய்கிறாள்! ஒரு முடிவிற்கு வந்தவனாக எழுந்து அவளருகே சென்று, "நோட்டைக் கொடுடி!" என்றான்.

அவளும் எழுந்து நின்று சற்றுத் தயங்கி அவனிடம் நீட்டினாள். முதல் கணக்கைத் தட்டுத் தடுமாறி ஆரம்பித் திருந்தவள் விடையை மட்டும் சரியாக எழுதியிருப்பதைக் கண்டு, "என்னடி? இடையில் தப்புத் தப்பாக எழுதி யிருக்கிறாய். மனப்பாடம் செய்து விட்டாய்... ம்?" என்ற வனுக்குப் பதில் கூறாமல் தாவணியைச் சுருட்டிக் கொண்டு தலை குனிந்து நின்றிருந்தாள்.

அந்த ஒரு கணக்கை மட்டும்தான் புத்தகத்தில் இருந்தபடி கொடுத்திருந்தான். மற்ற அனைத்தும் அவன் சொந்தமாகத் தந்தது. அதனால் அந்த ஒரு கணக்கிற்கான விடையை மட்டும் சரியாக எழுதி விட்டாள்.

வந்த சிரிப்பை அடக்கி அவளை முறைத்தவன், "திருட்டுக் கழுதை... விடையை மட்டும் மனப்பாடம் செய்து எழுதி விட்டு மற்றவற்றை இப்படிக் கிறுக்கி வைத்திருக் கிறாய்!" என்றபடி, அவளது கையைக் கிள்ளப் போனான்.

அவன் கிள்ள வருவதைக் கண்டு அவள் வேக மாகக் கையைப் பின்னிழுத்துக் கொள்ள... மஞ்சள் நிறப் பாவாடை, தாவணியை மீறிப் பொன் மஞ்சளாகத் தெரிந்த இடையில் பதிந்தது அவன் கரம். இதைச் சற்றும் எதிர் பாராததால் அவன் தடுமாறிப் போக... அம்பரியோ துள்ளி விலகி, மறுபுறம் திரும்பி நின்று கொண்டாள்.

"சா... சாரி பரி. தெ...தெரியாமல் பட்டு விட்டது!" என்று கூறியபடி மன்னிப்புக் கேட்டுக் கொண்டு அவளருகே வந்தவன், கீழேயிருந்த பையைப் பாராமல் தடுக்கி அவள் மீதே சரிய... எதிரிலிருந்த துணி உலர்த்தும் கம்பியின் மீது மோதி விடுவாளோ எனப் பயந்து ஒரு கையால் அவளைத் தன்னோடு அணைத்து மறு கையால் கம்பியை இறுகப் பற்றினான்.

அடுத்தடுத்து நடந்து போன தாக்குதல்களைச் சமாளிக்க முடியாத அம்பரி நடுங்கிப் போய் அவனிட மிருந்து வேகமாக விலகி ஓடிச் சென்றாள். அவளது கொலுசொலி தேய்ந்து மறைந்து போனதும், மறுபுறம் திரும்பி நின்றவனுக்கு அவளது மென்மை ஏனோ புரியாத சுகத்தைக் கொடுத்தது. கம்பியைப் பற்றியபடி அவளை இறுகப் பற்றியதும் அவளிடமிருந்து புறப்பட்ட சிகைக்காய் வாசனையும், மஞ்சள் வாசனையும் நுகர்ந்தவனுக்கு அன்னையின் நினைவு வந்தது.



தந்தை இறக்கும் முன் அன்னையும் இப்படித்தான் மஞ்சள், சிகைக்காய் வாசனையுடன்தான் இருப்பாள். அவள் மடியிலும், மாரிலும் சாய்கையில் இதே வாசனை யைத்தான் அவன் நுகர்ந்திருக்கிறான்.

கண் மூடி அந்த வாசனையை நினைவிற்குக் கொண்டு வந்தவனுக்கு மனக்கண்ணில் தன் மார்பில் சாய்ந்த அம்பரியின் மென்மையே நின்றது. என்ன இது? ஏன் இப்படியெல்லாம் தோன்றுகிறது? இதுவரை அவளைத் தொட்டதேயில்லையா என்ன?

ஏன் இப்போது மட்டும் அவளது ஸ்பரிசமும், வாசமும் வித்தியாசமாகத் தோன்றுகிறது என்று குழம்பிப் போனவனை, மேலே யோசிக்க விடாமல் வள்ளியம்மை யின் குரல் அழைத்தது.

அவளது பையையும், புத்தகங்களையும் எடுத்துக் கொண்டு கீழே சென்றவன் மேஜையில் வைத்து விட்டுச் சாப்பிட அமர்ந்தான். தனக்குப் பரிமாறிய வள்ளியம்மை யிடம், "அவள் சாப்பிட்டாளா அம்மத்தா?" என்று விசாரிக்க... "நீ சாப்பிட்டுப் போனப்புறம் சாப்பிட்டுக் கிறேன்னு சொல்லிட்டா ராசா!" என்று அவர் கூறியதும், மேலே எதுவும் பேசாமல் உண்டு முடித்தான்.

அடுத்த இரண்டு, மூன்று நாட்களுக்கு அவனால் அம்பரியைக் காண முடியவில்லை. அவள் எதிரே வந்தால் கூடத் தலையைக் குனிந்து கொண்டு வேறு புறம் சென்றான். ஏனோ முன்னைப் போல் அவனால் அவளை நிமிர்ந்து பார்க்கவும், இயல்பாகப் பேசவும் முடியவில்லை.

இப்படியாகச் சில மாதங்கள் செல்ல... ஒரு நாள் காலை அம்பரியைப் பள்ளிக்கு அழைத்துச் செல்ல வாசலில் சைக்கிளுடன் குமரன் காத்திருந்தான். தனது கல்லூரியின் இரண்டாம் வருடத்தின் பாதியில் இருந்த திவாகரன் கல்லூரிக்குச் செல்வதற்காக வெளியே வந்தான்.

"குமரா, என்னடா பள்ளிக்குச் செல்லாமல் இங்கே என்ன செய்கிறாய்?" என்று வினவியவனிடம், "அது... அது வந்து... நா... நான் அம்பரியை அழைத்துச் செல்ல வந்திருக்கிறேன் மாமா!" என்றான் அவன்.

"குள்ளச்சிக்குத் துணையா? அவளே பத்துப் பேருக்குத் துணை போவாள். நீயென்னடா அவளை அழைத்துச் செல்ல வந்திருக்கிறேன் என்கிறாய்? என்ன நடந்தது?" என்று விசாரித்தான் அவன். "அது வந்து மாமா..." எனச் சற்றுத் தயங்கியவன்,

"என் வகுப்பில் படிக்கும் மாணவன் ஒருவன் அம்பரியைத் தொந்தரவு செய்து கொண்டே இருக்கிறான். தினமும் அவள் பள்ளி வரும் வேளையில் பின் தொடர்ந்து கொண்டு தொல்லை கொடுக்கிறானாம்!" என்று தொடங்கியவனிடம், "குள்ளச்சி சும்மா விட்டிருக்க மாட்டாளே..." என்று இடை புகுந்தான் அவன்.



"அவள் சும்மா விடவில்லைதான் மாமா. கல்லை விட்டு எறிந்து அவன் மண்டையை உடைத்து விட்டாள். அவன் பெரிய வகுப்பு மாணவர்களையெல்லாம் அழைத்து வந்து கலாட்டா செய்து அவளை மிரட்டி விட்டுப் போய் விட்டானாம்.

"அதனால் அவள் கொஞ்சம் பயந்து போய் விட்டாள். நான் என் நண்பர்களின் மூலமாகத் தெரிந்து கொண்டு அவளிடம் விசாரித்தேன். அவள்தான் என்னைத் துணைக்கு வரச் சொன்னாள் மாமா!" என்று முடித்தான் அவன்.

"ஓ! இவ்வளவு நடந்திருக்கிறது. ஒரு வார்த்தை சொல்லியிருக்கிறாளா பார். குள்ளச்சி... வரட்டும்!" என்று மனதுக்குள் திட்டிக் கொண்டவனை, அம்பரியின் கொலுசொலி கலைத்தது.

"போகலாமா குமரா?" என்றபடியே அவனது சைக்கிளின் பின்னே அமர்ந்தவள், மெல்ல நிமிர்ந்து திவாகரனைப் பார்க்க, அவனோ அவளை முறைத்துக் கொண்டு நின்றிருந்தான். 'ஏன் முறைக்கிறான்? இந்த லூசுக் குமரன் உளறி வைத்திருப்பானோ...!' என்று எண்ணமிட்டபடி பரபரவென நகம் கடித்துக் கொண்டிருந்தவளை, "ஏய்... இறங்குடி!" என்றான் திவாகரன்.

சட்டென சைக்கிளை விட்டு இறங்கியவள், என்ன வென்று அவன் முகத்தைப் பார்க்க... அவன் குமரனிடம், "குமரா... நீ கிளம்பு. இனி நான் பார்த்துக் கொள்கிறேன்." என்று கூற... குமரன் சென்று விட்டான். தன் சைக்கிளை

எடுத்துக் கொண்டு அவளருகே வந்தவன், "என்ன விழித்துக் கொண்டு நிற்கிறாய்? ஏறுடி!" என்று அதட்ட... வேகமாக அமர்ந்து கொண்டாள்.

வழியிலிருந்த கரும்புத் தோட்டத்தின் வெளியே நின்றிருந்த ஒரு பதினைந்து வயது விடலையைக் கண்டவன், "இவனா?" என்று அம்பரியிடம் விசாரிக்க... அவள், "ஆமாம்..." என்றாள்.

சைக்கிளை நிறுத்தி விட்டு அவனருகே சென்றான். புதியவன் ஒருவனுடன் அம்பரி வருவதைக் கண்டதுமே ஓடிச் செல்ல எத்தனித்தவன், அவனை அருகே கண்டதும் வெளிறிப் போனான்.

நெடுநெடுவெனப் பனை மரம் போல் உயரமாக வளர்ந்திருந்தவனைக் கண்டதும், அவனுக்குத் தொண்டை வறண்டு போனது. "நீதான் இவள் பின்னாடியே சுற்றித் தொந்தரவு கொடுக்கிறாயா! ஏன்டா, பெரிய வகுப்புப் பயல்களை அழைத்து வந்து மிரட்டுகிறாயாம்... ம்?" என்றவன் ஙங்கென்று அவன் தலையில் குட்ட... அம்பரி களுக்கென்று சிரித்தாள்.

"இ...இல்ல அண்ணா!" என்று பம்மியவனின் சட்டையைப் பற்றி, "ஏன்டா, நீ கரும்புத் தோட்டத்தில் வேலை செய்யும் முனியாண்டியின் மகன்தானே? அடப் பாவி...! உன் தந்தை உன் படிப்பிற்காகப் பகலிரவு பார்க்காமல் உழைத்துக் கொண்டிருக்கிறார். நீ பொறுக்கித் தனம் பண்ணிக் கொண்டு திரிகிறாயா?" என்று அவன் முதுகிலேயே போட... "அண்ணா! விட்ருங்கண்ணா.



இனி அவ பின்னாடி சுத்த மாட்டேண்ணா!" என்று கெஞ்சியவனிடம், "உன்னை உங்கய்யாவிடம் சென்று விட்டு விடுகிறேன். அவர் பேசிக் கொள்ளட்டும். வாடா!" என்று இழுத்தவனின் கையைப் பற்றி, "இனி வர மாட்டேன் அண்ணா. அய்யா கிட்ட சொல்ல வேண்டாம்..." என்று அவன் கண்ணீர் வடிக்கவும்,

"சரி, இனி அவள் பின்னே நீ திரிவதை நான் பார்த்தேனானால் காலை ஒடித்து உன் அய்யனிடம் சென்று போட்டு விடுவேன். சரியா?" என்று மிரட்டி அனுப்பி வைத்தான்.

அவன் சென்றதும் சிரிப்பு மாறாமல் நின்றிருந்த அம்பரியின் அருகே வந்தவன், அவளை முறைத்து, "என்னடி சிரிப்பு வேண்டிக் கிடக்கிறது உனக்கு? இவ்வளவு பெரிய பிரச்னையாகியிருக்கிறது. நீ ஒரு வார்த்தை என்னிடம் கூறினாயா? எதுவாக இருந்தாலும் என்னிடம் தானே முதலில் கூறுவாய்.

"இப்போது என்னடி புதிதாகக் குமரனைத் துணைக்கு அழைத்துக் கொள்கிறாய்? இனி யொரு முறை என்னிடம் நீ எதையும் மறைத்தாய் என்று தெரிந்தது, கண்ணை நோண்டி விடுவேன்..." என்று அவன் மிரட்ட, கலகல வெனச் சிரித்தாள் அவள்.

"சிரிக்காதேடி குள்ளச்சி!" என்றபடியே சைக்கிளை உருட்டிக் கொண்டு நடந்தவனிடம், "நான் உன்னிடம்தான் கூறலாமென்று நினைத்தேன் மாமா. ஆனால் இது போன்று சின்னப் பிரச்னைக்கெல்லாம் உன்னைத்

எடுத்துக் கொண்டு அவளருகே வந்தவன், "என்ன விழித்துக் கொண்டு நிற்கிறாய்? ஏறுடி!" என்று அதட்ட... வேகமாக அமர்ந்து கொண்டாள்.

வழியிலிருந்த கரும்புத் தோட்டத்தின் வெளியே நின்றிருந்த ஒரு பதினைந்து வயது விடலையைக் கண்டவன், "இவனா?" என்று அம்பரியிடம் விசாரிக்க... அவள், "ஆமாம்..." என்றாள்.

சைக்கிளை நிறுத்தி விட்டு அவனருகே சென்றான். புதியவன் ஒருவனுடன் அம்பரி வருவதைக் கண்டதுமே ஓடிச் செல்ல எத்தனித்தவன், அவனை அருகே கண்டதும் வெளிறிப் போனான்.

நெடுநெடுவெனப் பனை மரம் போல் உயரமாக வளர்ந்திருந்தவனைக் கண்டதும், அவனுக்குத் தொண்டை வறண்டு போனது. "நீதான் இவள் பின்னாடியே சுற்றித் தொந்தரவு கொடுக்கிறாயா! ஏன்டா, பெரிய வகுப்புப் பயல்களை அழைத்து வந்து மிரட்டுகிறாயாம்... ம்?" என்றவன் நங்கென்று அவன் தலையில் குட்ட... அம்பரி களுக்கென்று சிரித்தாள்.

"இ...இல்ல அண்ணா!" என்று பம்மியவனின் சட்டையைப் பற்றி, "ஏன்டா, நீ கரும்புத் தோட்டத்தில் வேலை செய்யும் முனியாண்டியின் மகன்தானே? அடப் பாவி...! உன் தந்தை உன் படிப்பிற்காகப் பகலிரவு பார்க்காமல் உழைத்துக் கொண்டிருக்கிறார். நீ பொறுக்கித் தனம் பண்ணிக் கொண்டு திரிகிறாயா?" என்று அவன் முதுகிலேயே போட... "அண்ணா! விட்ருங்கண்ணா.



இனி அவ பின்னாடி சுத்த மாட்டேண்ணா!" என்று கெஞ்சியவனிடம், "உன்னை உங்கய்யாவிடம் சென்று விட்டு விடுகிறேன். அவர் பேசிக் கொள்ளட்டும். வாடா!" என்று இழுத்தவனின் கையைப் பற்றி, "இனி வர மாட்டேன் அண்ணா. அய்யா கிட்ட சொல்ல வேண்டாம்..." என்று அவன் கண்ணீர் வடிக்கவும்,

"சரி, இனி அவள் பின்னே நீ திரிவதை நான் பார்த்தேனானால் காலை ஒடித்து உன் அய்யனிடம் சென்று போட்டு விடுவேன். சரியா?" என்று மிரட்டி அனுப்பி வைத்தான்.

அவன் சென்றதும் சிரிப்பு மாறாமல் நின்றிருந்த அம்பரியின் அருகே வந்தவன், அவளை முறைத்து, "என்னடி சிரிப்பு வேண்டிக் கிடக்கிறது உனக்கு? இவ்வளவு பெரிய பிரச்னையாகியிருக்கிறது. நீ ஒரு வார்த்தை என்னிடம் கூறினாயா? எதுவாக இருந்தாலும் என்னிடம் தானே முதலில் கூறுவாய்.

"இப்போது என்னடி புதிதாகக் குமரனைத் துணைக்கு அழைத்துக் கொள்கிறாய்? இனி யொரு முறை என்னிடம் நீ எதையும் மறைத்தாய் என்று தெரிந்தது, கண்ணை நோண்டி விடுவேன்..." என்று அவன் மிரட்ட, கலகல வெனச் சிரித்தாள் அவள்.

"சிரிக்காதேடி குள்ளச்சி!" என்றபடியே சைக்கிளை உருட்டிக் கொண்டு நடந்தவனிடம், "நான் உன்னிடம்தான் கூறலாமென்று நினைத்தேன் மாமா. ஆனால் இது போன்று சின்னப் பிரச்னைக்கெல்லாம் உன்னைத்

தொந்தரவு செய்வதா என்று என் முடிவை மாற்றிக் கொண்டேன். அவன் பெரிய கிளாஸ் பயல்களைக் கூட்டி வந்து என்னை மிரட்டியதைப் போல் நான் நம் வேலுவை என்னுடன் அழைத்து வந்து முட்ட வைத்து அவனை மிரட்ட வேண்டும் என்று நினைத்திருந்தேன். அதற்கு முன்பு நீ வந்து அனைத்தையும் கெடுத்து விட்டாய். போ மாமா!" என்று சலித்துக் கொண்டவளைக் கண்டு அவனுக்குச் சிரிப்பு வந்தது.

"ஹா... ஹா.. குள்ளச்சி.. அதனால்தான் காலை யிலேயே வேலுவைத் தொழுவத்திலிருந்து அவிழ்த்துக் கொண்டு போனாயா? இப்போது எங்கே வைத்திருக் கிறாய்?" என்றவனிடம், "இதோ வருகிறது பார்!" என்று கை காட்டினாள் அவள்.

கரும்புத் தோட்டத்திலிருந்து காளை ஒன்று கேசவ னுடன் நடந்து வந்து கொண்டிருந்தது.

"உனக்குக் கேசவனும் உதவியா குள்ளச்சி?" என்றவனிடம், "அய்யோ மாமா! அண்ணனுக்கு எதுவும் தெரியாது. அப்பாவிடம் சொல்லி விட்டால் பெரிய பிரச்னையாகி விடும். நீ எதுவும் சொல்லாதே!" என்று மெல்லிய குரலில் எச்சரித்தாள்.

"என்ன கண்ணு... மாட்டைக் கூட்டியாரச் சொன்ன?" என்ற கேசவனிடம், "அந்த வேலையை இந்தக் காளை மாடு முடித்து விட்டது அண்ணா! நீங்கள் வேலுவை வீட்டிலேயே விட்டு விடுங்கள்." என்று குறும்புடன் கூறி அவரை அனுப்பி வைத்தாள்.



"கழுதை! நான் உனக்கு மாடா?" என்று அவள் காதைத் திருகியவனிடம், "ஆ...!" என்று சிணுங்கியவள், பின் கலகலவெனச் சிரிக்க, அவளையே பார்த்திருந்தவன் ரெட்டை ஜடையிலும், பள்ளிச் சீருடையான வெள்ளை, கருநீலப் பாவாடை தாவணியிலும் அழகாக ஜொலித் தவளை, "நீ என்னிடம் இப்படிச் சிரித்து எத்தனை நாட் களாயிற்று தெரியுமாடி?" என்று வினவ...

அவனை நிமிர்ந்து நோக்கியவள், பின் சிரிப்பதை நிறுத்தி, "நீதானே மாமா இப்போதெல்லாம் என்னை விட்டு விலகி விலகிச் செல்கிறாய். என்னிடம் பேசுவதுமில்லை, என் முகத்தைக் கூடப் பார்ப்பதுமில்லை. காலேஜில் நிறையப் பெண் பிள்ளைகளைப் பார்ப்பதால் உனக்கு என்னைப் பிடிக்காமல் போய் விட்டது போலும்!" என்று கழுத்துச் சங்கிலியைத் திருகியபடி பேசிக் கொண்டே சென்றவளின் கைப் பற்றி நிறுத்தியவன்... அவள் கண்களை நேராகச் சந்தித்து...

"உலக அழகியே என் கண் முன்னே வந்து நின்றாலும் உன்னைத் தவிர என்னால் வேறு எவளையும் ஏறெடுத்துப் பார்க்க முடியாது. உன்னை எனக்குப் பிடிக் காமல் போகுமாடி?" என்று வினவ... அவன் பார்வை யையும், பேச்சையும், அழுந்தப் பற்றியிருந்த அவன் கரத்தையும் கண்டு விதிர்விதிர்த்துப் போனவள்...

"நா... நான் போகிறேன்." எனக் கூறி விட்டு ஓடிச் சென்று விட்டாள்.

# 7

கூந்தலில் நுழைந்த கைகள்
ஒரு கோலம் போடுதோ...
தன்னிலை மறந்த பெண்மை
அதைத் தாங்காதோ...
உதட்டில் துடிக்கும் வார்த்தை
அது உறைந்து போனதோ...
உள்ளங்கள் துடிக்கும் ஓசை
இசையாகாதோ!
மன்னவனே உன் விழியால்
பெண் விழியை மூடு...
ஆதரவாய்ச் சாய்ந்து விட்டாள்!
ஆரிரரோ பாடு...
யார் இவர்கள்...? இரு பூங்குயில்கள்...
இளம் காதல் மான்கள்!

அவளைத் தவிர அவனுக்கு யாரைப் பிடிக்கும்? அவளைத் தவிர யார் இந்த உலகில் அவன் கண்ணுக்கு அழகாகத் தெரிவார்கள்? அவளைப் போல் கருணையும், அன்பும் நிறைந்தவர் யார் உண்டு இவ்வுலகில்? அவனது அன்னை மரித்துப் போன பின்பு வாழ்வின் மீது பற்றற்றுத் திரிந்தவனைத் தன் பிஞ்சுக் குணத்தால் மாற்றியவ ளல்லவா அவள்? அவள்தானே அவனுக்கு எல்லாம்? அவளைச் சுற்றித்தானே அவனது பூமி சுற்றுகிறது. மாமன் மகள் என்கிற உரிமை, இயல்பாக எழுந்த பாசம்,



அவள் தன் மீது காட்டிய அக்கறையில் ஒளிந்திருந்த ஆழமான அன்பு, தாய்க்குப் பின் அவனுக்கு எல்லாமு மாக மாறி இன்று அவனை வாழ வைத்துக் கொண்டிருப்ப வளின் மீது அவனுக்கு எல்லையில்லாத காதல் நெஞ்சில் அலையாக எழுந்து பொங்கி வழிந்து கொண்டிருப்பதில் ஆச்சரியப்பட எதுவுமில்லைதான்.

பூப்பெய்திய பின் அவளைக் கண்டதும் அவன் மனதில் என்னென்னவோ ஆசைகள் எழுந்ததே! அவனைக் கண்டதும் முகம் சிவந்து தலை தாழ்த்திக் கொண்டவளின் வெட்கத்தைக் கண்டதும் மனதில் சுகமாக ஏதோ ஒன்று தோன்றியதே! அவள் கைப்பற்ற நேர்ந்தால் கூட, அவளது மென்மை நெஞ்சுக் கூட்டுக்குள் இதத்தைப் பரப்பி விட்டுச் சென்றதே! இவையனைத்தும் காதலின் அறிகுறி என்றால் அவனுக்குக் காதல் வந்து விட்டது தான்...!

அறியாத வயதில் அழுக்குத் துணியுடன் தன் மேலே வந்து அவள் விழும் போதிலிருந்தே காதல்தான் போலும்! அந்த வயதில் அதற்குப் பெயர் வைக்க முடி யாமல் போனது. இப்போது பருவம் வந்தபின் இத்தகைய உணர்வுகளை இனம் பிரிக்க முடிகிறதே! தூய அன்பும், கொள்ளை ஆசையும், நெஞ்சு நிறைய நன்றி உணர்வும், அவள் தனக்கே உரியவள் என்கிற கர்வமும், அவளைக் காக்கும் உரிமை தன் ஒருவனுக்குத்தான் உள்ளது என்கிற மனப்பான்மையும் கலந்து அவனுக்குள் அக்மார்க் காதலை வரவழைத்திருந்தது.

அவனது மனதின் எண்ணங்களை அறிந்து கொண்ட பின்பு அவன் அம்பரியைப் பார்க்கும் பார்வையே மாறிப் போனது. அவனது பார்வை சிவப்பையும், நடுக் கத்தையும் ஏற்படுத்தினாலும் இவன் ஏன் இப்படிப் பார்த்து வைக்கிறான் என்று நொடித்துக் கொண்டாள்.

படிப்பும், வாரக் கடைசியில் வேலையும் அம்பரியின் அருகாமையுமாய் நிம்மதியாக வாழ்க்கையைக் கடத்திக் கொண்டிருந்தான்.

**அ**ன்று மரகதத்தின் நினைவு நாள். கல்லூரி மூன்றாம் வருடத்தில் அடியெடுத்து வைத்திருந்த திவாகரன் அன்று வீட்டில் தானிருந்தான்.

அம்பரியும், அவனும் சேர்ந்து அவனது அறையில் மாட்டப்பட்டிருந்த மரகதத்தின் புகைப்படத்தைத் துடைத்துப் பொட்டிட்டு மாலை போட்டு விளக்கேற்றி வைத்து வணங் கினர்.

"பரி, கோவிலுக்குச் சென்று வரலாமா?" என்று வினவியவனிடம், அவள் சரியென்று தலையாட்ட, இருவரும் கோவிலுக்குப் புறப்பட்டனர். முந்தைய வாரக் கடைசியில் வேலை செய்ததில் கையில் சேர்ந்திருந்த பணத்தை வைத்து அந்தக் கோவிலைத் தினமும் சுத்தம் செய்வோருக்கும், காலணி போடும் இடத்தில் அமர்ந்திருந்த தாத்தாவிற்கும் சாப்பாடு வாங்கிக் கொடுத்தான்.

அவர்கள் மகிழ்ச்சியுடன் வாங்கிக் கொள்ள, கோவிலைச் சுற்றிக் கும்பிட்டு விட்டு மரத்தடியில் அமர்ந்தனர்.



"எங்கே உன் கூட்டாளிகளைக் காணோம்?" என்று விசாரித்தவனிடம், "தேனு மீனாட்சிபுரத்திற்குப் போய் விட்டாள். குமரன் பய மட்டையைத் தூக்கிக் கொண்டு அவன் நண்பர்களுடன் விளையாடப் போய் விட்டான்..." என்று பதில் கூறியவளின் முகத்தைப் பார்த்தபடி அமர்ந் திருந்தவன்,

"குங்குமத்தை நெற்றியில் இடாமல் கையில் வைத்துக் கொண்டிருக்கிறாய்?" எனக் கேட்டு அதை எடுத்து அவள் நெற்றியில் இட்டான்.

அவன் செய்கையில் சிலிர்த்துச் சிவந்து, தலை குனிந்து கொண்டவளின் அருகே நெருங்கி அமர்ந்து, "நீ அடிக்கடி இப்படிச் சிவந்து போவதுதான் எனக்கு ரொம்பவும் பிடித்திருக்கிறது குள்ளச்சி!" என்று கூற, அவளோ மேலும் சிவந்து அவனை விட்டு விலகி அமர்ந்தாள்.

கோவிலில் இருந்து வீட்டிற்குத் திரும்பிய இருவரை யும் கண்ட வள்ளியம்மை, "அம்பரி, மத்தியானத்துக்கு அத்தைக்குப் படைக்க விதவிதமா சமைக்கிறேன்னு சொன்னியே... அப்பத்தா எல்லாக் காயும் நறுக்கி வைச் சுட்டேன். அரைக்கிறதைப் பார்த்து எடுத்துக் கொடு. அரைச்சுத் தாரேன்," என்று கூற,

"ஐ, நறுக்கி வைத்து விட்டாயா அப்பத்தா? ரொம்ப நன்றி கிழவி. அரைப்பதை யெல்லாம் நான் பார்த்துக் கொள்கிறேன். நீ உன் பேரனுடன் பேசிக் கொண்டு உட்கார்..." எனக் கூறி விட்டுச் சிட்டாகப் பறந்தாள்.

அவள் ஓடிச் செல்வதையே சிரிப்புடன் பார்த்திருந் தவன், வள்ளியம்மையின் அருகே அமர்ந்து, "குள்ளச்சி நன்றாக வளர்ந்து விட்டாள் இல்லையா அம்மத்தா?" என்று கேட்க, "பின்னே? உன் உசரத்துக்கு ஈடா வர வேணாமா கண்ணு?" என்று அவர் கூறியதும்,

திடுக்கிட்டு அவரை நோக்கியவன், "எ...என்ன சொல்கிறாய் அம்மத்தா? என் உயரத்திற்கு ஈடாகவா?" என்று வினவினான்.

"ஆமா ராசா, நீ ரொம்ப உசரமாவும், அவ குள்ள மாவும் இருந்தா மணமேடையில ஒண்ணா பார்க்க நல்லா இருக்காதுல்ல?" என்று அம்மத்தா சிரிப்பும், கேலியுமாய் வினவவும்... தயங்கியபடி அவரை நோக்கியவன், "இதெல்லாம் நடக்குமா அம்மத்தா? அம்பரி எனக்குக் கிடைப்பாளா?" என்று ஏக்கமாக வினவ,

அவன் தலையைக் கோதியவர், "உன் மாமன் மவளைக் கட்டிக்க உன்னைத் தவிர யாருக்கு ராசா உரிமை இருக்கு? அவளும்தான் உன்னை விட்டுட்டு வேற ஒருத்தனை ஏறிட்டும் பார்ப்பாளா? உனக்கு அவ, அவளுக்கு நீ...ன்னு அந்தப் பிரம்மனே எழுதி வைச் சிருக்கானே!" என்று கூறியதும் கலகலவெனச் சிரித்துத் துள்ளலுடன் எழுந்து சென்றான்.

அடுத்த சில மணி நேரங்களில் சமையலை முடித்து, சிறு சிறு பாத்திரங்களில் அனைத்தையும் எடுத்துக் கொண்டு திவாகரனின் அறைக்குச் சென்றாள். "கை, கால் கழுவி வா மாமா. சாமி கும்பிடலாம்," என்று கூற,



அவனும் விரைந்து சென்று கை, கால் அலம்பி வந்தான்.

அவள் சமைத்திருந்த பதார்த்தங்கள் அனைத்தும் அன்னைக்குப் பிடித்தவை. சிரிப்பும், மகிழ்ச்சியுமாய் அன்னையின் முகத்தைப் பார்த்தவன், "பார்த்தாயாம்மா, உன் மருமகள் உனக்காக என்னவெல்லாம் சமைத்திருக் கிறாளென்று!" என்று வினவியபடி சிரிப்புடன் நின்றிருந் தான்.

விளக்கேற்றி, ஊதுபத்தி கொளுத்தி, வாழை இலை விரித்துத், தண்ணீர் தெளித்து, சமைத்த அத்தனை பதார்த்தங்களையும் பரிமாறி, சிறிய செம்பில் தண்ணீர் வைத்து, சூடம் ஏற்றி வணங்கியவள், அத்தையின் படத்தின் அருகே மண்டியிட்டுக் குனிந்து பணிந்து எழுந்தாள்.

அவள் செய்கையைப் பார்த்தபடியே நின்று கொண் டிருந்தவனை, "மாமா!" என்று அவள் உலுக்கியதும், தானும் இலையைச் சுற்றி மூன்று முறை தண்ணீர் தெளித்து, சூடம் சுற்றி, வணங்கி எழுந்தான்.

அதன் பின்பு, "சாப்பிடலாமா மாமா?" என்றழைத்த படியே முன்னே நடந்தவளை... "இரு பரி!" என்று நிறுத்தியவன்,

"விறுவிறுவென இவ்வளவு நேரமாக இத்தனை பதார்த்தங்களையும் சமைத்து இப்போதுதான் அமர்ந் திருக்கிறாய். கொஞ்ச நேரம் இளைப்பாறு. பின் சென்று சாப்பிடலாம்..." என்று கூற, "எனக்குக் களைப்பெல்லாம்

ஒன்றுமில்லை. உனக்குப் பசியில்லையா?" என்று வினவினாள் அவள்.

"பசியில்லை பரி! என்னவோ தெரியவில்லை. மனது மிகவும் நிறைவாக இருக்கிறது," என்றவன், திரும்பி அன்னையின் படத்தைப் பார்த்து விட்டு, "இந்த வருடம் தான் மனதுக்குத் திருப்தியாக, நிம்மதியாக அம்மாவைக் கும்பிட்டதைப் போலிருக்கிறது பரி. எவ்வித வருத்தமும், சஞ்சலமுமில்லை!" என்றவனிடம் முறுவலித்து, "எனக்கும் தான் மாமா..." என்றவள், தொடர்ந்து, "இதற்கான காரணம் எனக்குத் தெரியுமே!" என்றாள்.

"என்னவாம்?" என்று சிரிப்புடன் வினவியவனிடம், "முதல் காரணம், நான் அத்தைக்காக, இன்று வகை, வகையாகச் சமைத்திருக்கிறேனே அது. அடுத்த காரணம் அம்மா இன்று வீட்டில் இல்லை..." என்று கூறி விட்டுச் சிரித்தவளிடம்,

"அத்தை மட்டும் இதைக் கேட்க வேண்டும், உனக்கு விளக்குமாற்று அடிதான் பரி!" எனக் கூறித் தானும் சிரித்தான். இருவரது சிரிப்பொலியும் வீட்டை நிறைத்து நிம்மதியைப் பரப்பியது.

அதன் பின் சாப்பிட அமர்ந்தவனிடம் தான் சமைத்த பதார்த்தங்களின் பெயரைச் சொல்லிப் பரிமாறிக் கொண்டிருந்தாள் பரி. அவள் இலையில் வைத்த கம்பு அடையைக் கண்டவனுக்கு அன்னையின் நினைவுதான் வந்தது. வேக வேகமாக எடுத்து எடுத்து ஆர்வத்துடன் உண்பவனை நெகிழ்ச்சியுடன் பார்த்துக் கொண்டிருந்தாள்



அம்பரி. "நீயும் சாப்பிடு பரி!" எனத் தன் இலையில் ஒரு பகுதியை அவன் ஒதுக்கித் தர, ஒரு வாய் எடுத்து உண்டு விட்டு, "ம்ஹூம். நீ சாப்பிடு மாமா. நான் பிறகு சாப்பிட்டுக் கொள்கிறேன். பசியில்லை!" எனச் சமாளித்து அவனை உண்ண வைத்தாள்.

தன் இலையிலிருந்ததையெல்லாம் அவன் காலி செய்து விட்டு மறு சோறு வாங்குகையில் வந்து சேர்ந்தாள் சுப்புலட்சுமி.

சிலமரத்துப்பட்டியில் உறவினர் ஒருவரது வீட்டு விசேஷத்திற்குச் சென்று விட்டுத் திரும்பியவளுக்கு வீட்டு வாசலில் நுழைகையிலேயே ஒலித்த வள்ளியம்மை, அம்பரி மற்றும் திவாகரனின் குரல் எரிச்சலைக் கிளப்பி யிருந்தது.

கோபத்துடன் உள்ளே நுழைந்தவள், தலை வாழை இலையில் உணவு உண்டு கொண்டிருந்த திவாகரனைப் பார்வையாலே சுட்டெரித்தாள்.

"என்னடி கூத்து இது? தலை வாழை இலை போட்டு விருந்து போடுகிற அளவிற்கு என்னடி விசேஷம் இன்று? இந்த அநாதைப் பயலுக்குச் சோறு போடுவதற்கு, தெருவில் நான்கு பிச்சைக்காரங்களைக் கூப்பிட்டுச் சோறு போடுவது தானே? புண்ணியமேனும் மிஞ்சும்..." என்று குதித்தவளிடம்,

"அம்மா, வாயை மூடு. இன்று அத்தையின் நினைவு நாள். அதனால்தான் சமைத்தேன். இங்கே எந்தக் கூத்தும் நடக்கவில்லை. அதோடு மாமா ஒன்றும்

அநாதையல்ல. வாயை அடக்கிப் பேசு!" என்று சண்டைக்கு நின்றாள் அம்பரி.

பாதிச் சாப்பாட்டிலிருந்து எழுந்து நின்றவனின் சிவந்த முகத்தைக் கண்டவளுக்கு அன்னையின் மீது ஆத்திரமாக வந்தது.

"ஓஹோ! அந்தத் தரித்திரம் பிடித்தவளின் நினைவு நாளுக்கா இவ்வளவு ஆர்ப்பாட்டம்? அவள் செத்து ஒழிந்து நம் வீட்டிற்கு ஒரு தரித்திரத்தை அனுப்பி விட்டுப் போய்ச் சேர்ந்து விட்டாள் மகராசி. இவன் வந்து சேர்ந்த நாளிலிருந்து அவன் குடும்பத்திற்கே உரிய தரித்திரம் நம் குடும்பத்தையும் ஆட்கொண்டு விட்டது. தான் ஒழிந்த போதே இந்தப் பீடையையும் இழுத்துக் கொண்டு விடாத அந்தத் தரித்திரம் பிடித்தவளுக்கு என் வீட்டில் நினைவு நாள் கொண்டாடுகிறாயா?" என்று மனச்சாட்சி யின்றி அவள் விஷத்தைக் கக்கத் துவங்கினாள்.

கை முஷ்டி இறுகக் கோபத்தை அடக்கியவன், தன் இயலாமையை எண்ணி நொந்து விடுவிடுவென நடந்து சென்று விட்டான். அவன் பாதிச் சாப்பாட்டில் எழுந்து சென்றது, அம்பரிக்கு வருத்தத்தைத் தர, கோபமாக அன்னையின் புறம் திரும்பினாள்.

"ஒரு நாளேனும் மாமாவை நிம்மதியாகச் சோறு தின்ன அனுமதித்திருக்கிறாயாம்மா? அக்கிரமமாகப் பேசி மாமாவின் மனதை நோகடித்துத் தினம் தினம் பாவம் புரிகிறாயே! உன் வீட்டில் சோறு தின்பதைத் தவிர மாமா



உன்னிடம் வேறு எதையேனும் எதிர்பார்த்திருக்கிறதா? நீ என் அம்மாவாக இருந்தாலும் சரி, உனக்கெல்லாம் கடைசி காலத்தில் குடிக்கத் தண்ணீர் கூடக் கிடைக் காதும்மா!" என்று சாபம் விட்டுச் சென்றாள்.

"போடி போ. அந்தத் தரித்திரம் பிடித்தவனுக்கு ஆதரவாகப் பேசி எனக்குச் சாபம் விட்டுச் செல்கிறாயா...?" என்று கத்தியபடி அறைக்குச் சென்று விட்டாள்.

மாமனைத் தேடி ஓடிய அம்பரி, அவன் வள்ளி யம்மையின் மடியில் சாய்ந்திருப்பதைக் கண்டு, கண்ணீருடன் ஒதுங்கி நின்றாள்.

"அவர்களுக்கு என்ன கோபமென்றாலும் என்னை மட்டும் திட்டச் சொல் அம்மத்தா. உயிரோடில்லாத என் அம்மாவை ஏன் திட்ட வேண்டும்...? அம்மா இருந்த வரையில் யாரிடமேனும் எந்த உதவியையும் நாடியிருக் கிறார்களா? இல்லையே அம்மத்தா! யாருக்கும் பாரமாக இருக்கக் கூடாதென்று அத்தனை கஷ்டத்தையும் ஒற்றை யாளாகத்தானே சமாளித்தாள்.

"அத்தை ஏன் இப்படித் திட்டி அவமானப்படுத்து கிறார்கள்? அம்மாவைப் பற்றிப் பேசினால் எனக்கு மிகவும் கோபமாக வருகிறது அம்மத்தா. மனச்சாட்சியோ, மனிதாபிமானமோ இல்லாமல் உயிரோடு இல்லாத ஒருவரைப் பழித்துப் பேசுகிறார்களே அம்மத்தா!" என்று கோபத்தில் சிவந்த விழிகளுடனும், கண்ணீருடனும் பேசுபவனைக் காண்கையில், அவளுக்கும் கண்ணீர் வழிந்தது. அன்னையின் மீது கோபமாக வந்தது.

அதன்பின் சைக்கிளை எடுத்துக் கொண்டு வெளியே சென்றவன் வெகு நேரமாகியும் வீடு திரும்பவேயில்லை. அன்று முழுதும் உண்ணாமல், தண்ணீர் கூடக் குடிக் காமல் தென்னந்தோப்பில் படுத்துக் கிடந்தவனை அங்கு வேலை செய்யும் மாரி வீட்டிற்கு அனுப்பி வைத்தார்.

பாதி இரவில் வீட்டிற்குள் நுழைந்தவன் நேராகத் தன் அறைக்குச் சென்று படுத்துக் கொண்டான்.

தன் அறையில் தூக்கம் வராமல் மாமனின் நினை வில் விட்டத்தை வெறித்துக் கொண்டிருந்த அம்பரி அரவம் உணர்ந்து ஜன்னல் வழி எட்டிப் பார்க்க, திவாகரன் தன் அறையை நோக்கிச் செல்வது தெரிந்தது.

அவன் சென்ற சில நிமிடங்களில் மெல்ல எழுந்து, தன் அறையை விட்டு வெளியே வந்தாள்.

வேப்ப மரத்தடியில் போடப்பட்டிருந்த கயிற்றுக் கட்டிலில் வள்ளியம்மை உறங்கிக் கொண்டிருக்க, பக்கத்து அறையில் அன்னையின் குறட்டைச் சத்தம் ஒலித்தது. தந்தை வெளியூர் சென்றிருப்பதால் அவர் வீட்டில் இல்லை.

மெல்ல நடந்து அன்னை அறையின் கதவை அடைத்து, தாழ்ப்பாள் போட்டு விட்டு, சமையலறையை நோக்கிச் சென்றாள். அங்கே கிண்ணத்தில் வைக்கப் பட்டிருந்த பாலைக் காய்ச்சி எடுத்துக் கொண்டு, இரண்டு வாழைப் பழங்களையும் ஏந்திக் கொண்டு, அவன் அறைக்குச் செல்ல மாடியேறினாள்.



திறந்தேயிருந்த அவன் அறைக்குள் நுழைந்து, இடது கையைத் தலைக்கடியில் வைத்துப் பாயில் சாய்ந் திருந்தவனின் அருகே சென்று பாலையும், பழத்தையும் கீழே வைத்து விட்டு, "மாமா!" என்று அவன் தோளில் கை வைத்து மெல்ல அழைத்தாள்.

திடுக்கிட்டுக் கண் விழித்த திவாகரன் சட்டென எழுந்து, "பரி, நீயா? இந்நேரத்தில் இங்கே ஏன்டி வந்தாய்?" என்று சத்தமிட்டபடி எழுந்து விளக்கைப் போடச் சென்றவனின் கையைப் பற்றியவள் அவன் வாயைப் பொத்திப் பலகணி யருகே சென்று நின்றாள்.

"என்னடி செய்கிறாய்?" என்று புருவம் நெரித்தபடி கோபத்துடன் வினவியவனிடம், "மக்கு மாமா, சத்தம் போடாதே. நான் உன்னைக் காணத்தான் வந்தேன்," என்றவள்,

தொடர்ந்து, "நீ சாப்பிட்டிருக்க மாட்டாயென்று தான் நான் பாலும், பழமும் எடுத்து வந்தேன். இரு!" என்றவள் ஓடிச் சென்று கொண்டு வந்த பாலையும், பழங்களையும் எடுத்து வந்தாள்.

"இந்தா மாமா, சாப்பிடு. மதியமும் சரியாகச் சாப்பிடவில்லையே. அம்மா வந்து அனைத்தையும் கெடுத்து விட்டாளே. நீ அம்மா பேசியதை மனதில் வைத்துக் கொண்டு பட்டினியாக இருப்பாயென்று எனக்குத் தெரியும். அதனால்தான் நீ வரும்வரை காத்திருந்து எடுத்து வந்தேன். சாப்பிடு மாமா!" என்று கூற, கண்களில் கண்ணீர் தேங்கியது அவனுக்கு.

"எனக்காகத்தான் விழித்திருந்தாயா?" என்றவனிடம், பதில் சொல்லாமல் அவள் நிற்க, அவள் முகத்தைக் கண்டபடியே பாலையும், பழத்தையும் உண்டு முடித்தான்.

அவன் கைகளிலிருந்து டம்ளரை வாங்கிக் கொண்டவள், தயக்கத்துடன் தலை குனிந்து, "அ...அம்மா பேசியது உன்னை மிகவும் நோகடித்து விட்டதல்லவா மாமா? எனக்கு மிகவும் கோபமாக வந்தது. நீ... நீ வருத்தப்படாதே மாமா. எனக்காக..." என்று பேசத் தெரியாமல் தேடித் தேடி வார்த்தைகளைப் பிடித்துப் பேசியவளைக் கண்டதும், அவள் அன்னை பேசிய வார்த்தைகள் கொடுத்த வலி நொடியில் குணமாகிப் போனது.

"தாங்க்ஸ் குள்ளச்சி..." என்றபடியே அவள் கைப் பற்றியவன் தன் கையோடு இணைத்துக் கொண்டு, "பரி..." என்றழைத்தான்.

அவனது கரம், தன் விரல்களை வருடத் தொடங்கியதும், சற்றுச் சிவந்து போன அம்பரி, "ம்..." என்று கூற, "அத்தையைப் போல் நீ... நீயும் என்னை இந்த வீட்டின் சுமையாகக் கருதுகிறாயா? இல்லைதானே கண்ணம்மா?" என்று வினவினான்.

அவனது கேள்வியைக் கேட்டுப் பதறி, அவன் வாயைப் பொத்தியவள், "என்ன வார்த்தை பேசுகிறாய் மாமா? நா...நான் உன்னைப் போய் அப்படி நினைப்பேனா? எனக்கு, எனக்கு நீதானே மாமா எல்லாம்? நான் எப்படி உன்னைச் சுமையாக நினைப்பேன்?" என்றவளின் கைகளைப் பற்றித் தன் கன்னத்தில் அழுத்திக் கொண்



டவன், "எனக்கும் நீதான் கண்ணம்மா எல்லாம்!" என்று கூறினான்.

அவனது குரலும், பார்வையும் மாறத் துவங்கியதும், தயக்கத்துடன் தன் கையை விடுவித்துக் கொண்டவள், "நா...நான் போகிறேன்..." என்று திரும்பி நடந்தாள்.

அவளோடே தானும் படியிலிறங்கியவன், "நீ இங்கே வந்தது மட்டும் அத்தைக்குத் தெரிந்தது, உன்னைப் பொலி போட்டு விடுவார்கள்!" என்று கூற, "அம்மாவிற்குத் தெரிய வாய்ப்பேயில்லை மாமா. நான் அம்மா அறையைப் பூட்டி வெளியே தாழ் போட்டு விட்டேன்." என்று சிரித்துக் கொண்டே கூற,

அந்தக் காரிருளில் லேசான வெளிச்சத்தில் கலைந்த கூந்தலுடனும் காதில் பளபளக்கும் சின்ன ஜிமிக்கியுடனும் வைரக்கற்கள் ஜொலிக்கப் புன்னகை சிந்தியவளைக் கண்டவனுக்கு மனம் மயங்கியது.

கடைசிப் படியை எட்டியதும், "நிம்மதியாகத் தூங்கு மாமா!" என்று விலகப் பார்த்தவளின் கையைப் பற்றி, "பரி..." என்றழைத்தவன், அவளை அருகிழுத்து அவள் முகம் பற்றி ஆசையுடன் நோக்கி, தன்னோடு சேர்த்து இறுக அணைத்தான். பின் அவள் முகத்தை நிமிர்த்திக் கன்னத்தில் அழுந்த முத்தமிட்டான்.

திடீரென்று அவன் அணைத்ததில் விதிர்விதிர்த்துப் போன அம்பரியின் உடல் முழுதும் கிடுகிடுவென நடுங்கத் துவங்கி விட்டது. கை, கால்கள் விரைத்துப் போய் இதயம் படபடவென அடித்துக் கொள்ள, சட்டென விலகியவள்,

ஜல் ஜல் எனக் கொலுசுச் சத்தம் பலமாக ஒலிக்கத் தன் அறையை நோக்கி ஓடி விட்டாள்.

அவள் விலகி ஓடியதும், 'என்ன செய்து விட்டாயடா முட்டாள்?' என்று மனச்சாட்சி அவனைக் கேள்வி கேட்க, கண் மூடித் தலையை அழுந்தக் கோதிச் சுவரில் சாய்ந்தான் திவாகரன்.

# 8

இது என்ன மண்ணில் கூட
நிலவும் வருமா?
சரசம் பயிலும் விழியில் வருமே...
இது என்ன தென்றல் கூட
அனலாய்ச் சுடுமா?
தனிமை நினைவில் அனலாய்ச் சுடுதே!
பார்க்காமல் மெல்லப் பார்த்தாளே...
அதுதானா காதல் கலை...?
தோளோடு அள்ளிச் சேர்த்தானே...
அதுதானா மோன நிலை...?
இதுதான் சொர்க்கமா?
இது காமதேவனின் யாகசாலையா?

இரவு தான் செய்த முட்டாள்தனத்தை எண்ணி மறுகியபடி எழுந்திருக்க மனமில்லாமல் விழி மூடிக் கிடந்தான் திவாகரன். தன்னுள் எழுந்த மாற்றங்கள்



அவளுக்குள்ளும் நிகழ்ந்திருக்கிறதா என்பதை அறிந்து கொள்ளாமல், அவளிடம் தன் மனதை எடுத்துக் கூறாமல், அவசரப்பட்டு அறிவிழந்து, அப்படி நடந்து கொண்டு விட்டானே... இதை அவள் எப்படி ஏற்பாள்?

அவன் அணைத்ததும் நடுங்கிப் போனாளே! பயந்து விட்டாளோ? அவள் மனதில் உள்ளதை அறிந்து கொள்ள முயலாமல் இப்படி முட்டாள்தனம் புரிந்து விட்டேனே...! இனி எப்படி அவள் முகத்தில் விழிப்பது?

அறியாமல் அவளது கைப்பற்ற நேர்ந்தால் கூடத் தலை குனிந்தபடி ஓடிச் சென்று விடுவாளே!

அவளை அணைத்து, முத்தமிட்டு... கடவுளே! அவளை அணைக்கையில் அவள் மேனியில் ஏற்பட்ட நடுக்கத்தை அப்போதும் அவனால் உணர முடிந்தது.

அவளுக்கு இஷ்டமில்லையோ? அவனைப் போன்ற உணர்வுகள் அவளுக்கு இல்லையோ? அவள் தன்னை நேசிக்கவே இல்லையோ? தாய்-தந்தை இல்லாத அநாதை தன் மாமன் என்கிற இயல்பான மனிதாபிமானமும், அத்தை மகன் என்கிற பாசமும் மட்டும்தான் அவளுக்குள் உள்ளதோ!

அவள் மனதில் அவனைப் பற்றி என்ன நினைப்பு வைத்திருக்கிறாள் என்பதை அறியாமல் தொட நேர்ந்தது தவறென்றே பட்டது அவனுக்கு. எப்படியேனும் அவளைச் சந்தித்துத் தான் செய்த தவறுக்காக மன்னிப்புக் கேட்க வேண்டுமென்று தீர்மானித்து விட்டான்.

விரைவிலேயே விழிப்புத் தட்டி விட்டதால் கீழே எழுந்து வந்தவனின் கண்களில் பட்டது... ஏதோ ஒரு பாட்டை முணுமுணுத்தபடி ஈரத்தலையுடன் முன்வாசலில் அமர்ந்து கோலமிட்டுக் கொண்டிருந்த அம்பரிதான்.

பச்சையும், நீலமும் கலந்த தாவணியில் விரிந்த தலை முடியுடன், காலை வெயில் முகத்தில் பட்டுப் பளபளப்புடன் ஜொலித்துக் கொண்டிருந்த அந்தக் கன்னங்கள் இந்த ஆண்மகனை முத்தமிடத் தூண்டி விடுவதில் ஆச்சரியப்பட ஒன்றுமில்லை.

சாந்தமும், தெய்விகமும் நிறைந்திருந்த அந்தத் திருமுகத்தைப் பார்க்கப் பார்க்கத் தெவிட்டவில்லை அவனுக்கு.

வாசலை ஒட்டியிருந்த தூணின் அருகே மறைந்து நின்று அவளையே பார்த்துக் கொண்டிருந்தவன் அவள் கோலத்தை முடித்துக் கொண்டு உள்ளே வருவதைக் கண்டு தூணின் பின்னே நன்றாக மறைந்து கொண்டான்.

பின்புற வாசலையும் சாணித் தண்ணீர் கொண்டு கழுவிக் கோலமிட்டாள்.

அங்கு பால் கறந்து கொண்டிருந்த கேசவனிடம் முறுவலித்து விட்டு உள்ளே வந்தாள். புன்னகை மாறாமல் இழுத்துச் செருகியிருந்த பாவாடையுடன் நுழைபவளை மாடிப்படியின் வாசலில் நின்று கொண் டிருந்தவன் இமைக்காமல் நோக்க, அவனையும், அவனது பார்வையும் கண்டு கொண்டவளுக்குக் கை, கால்களில் நடுக்கம் பிறந்தது.



சட்டெனத் திரும்பியவள் விறுவிறுவென ஓடிச் சென்று விட, "பரி..." என்கிற திவாகரனின் அழைப்பு காற்றில் கலந்து போனது.

எப்போதும் புன்னகைத்து, "வெந்நீர் காய வைத் திருக்கிறேன் மாமா! குளிக்கும் போது அதை உபயோ கித்துக் கொள்..." என்று கூறிச் செல்பவள், இன்று பதிலேதும் கூறாமல் ஓடி விட்டது கண்டு அவனுக்கு வருத்தம் பிறந்தது.

அவளிடம் தனது மன்னிப்பைக் கோரி விட வேண்டுமென்று அவன் செய்த முயற்சிகள் அனைத்தும் வீணாகிப் போயின. சாப்பாடு அளிக்க வருவாளே... அப்போதேனும் அவளிடம் பேசி விட வேண்டும் என்று அவன் எண்ணியிருக்க, அன்று அவனுக்கு அன்னமிட்ட தென்னவோ வள்ளியம்மைதான்.

வழக்கம் போல், "நீ சாப்பிட்ட பின் சாப்பிடுகிறேன்னு சொல்லிட்டா கண்ணு!" என்று அவர் கூறி விட, தலை யாட்டி விட்டு எழுந்து செல்லத்தான் முடிந்தது அவனால்.

அன்று முழுதும் அவன் கண்ணில் படாமல் கண்ணா மூச்சி ஆடியவளை எண்ணியபடி அவன் கல்லூரியில் அமர்ந்திருக்க... இங்கே அம்பரியோ பள்ளிக்குச் செல்லாமல் செல்வம் மாமாவின் மாந்தோப்பில் தனது ஒற்றைப் பின்னலைத் திருகியபடி கண் மூடிச் சாய்ந் திருந்தாள். என்றும் போலல்லாது சற்று அதிகமாகவே சிவந்து கிடந்த கன்னங்கள் அவளது மனதின் உணர்ச்சி களைப் படம் பிடித்துக் காட்டின.

வெட்கப் புன்னகையைத் தாங்கிக் கொண்டிருந்த இதழ்கள் அவளது மாமனின் நினைவு அவளைக் கனவுல கிற்கு அழைத்துச் சென்று விட்டதை நிரூபித்தன.

காலையில் திவாகரனைக் கண்டதும் நடுங்கி ஓடி விட்டவள். அதன் பின்பு அவன் கல்லூரிக்குக் கிளம்பும் வரை அறையை விட்டு வெளியே வரவேயில்லை.

ஏனோ அவன் முன்பு வருவதற்கே வெட்கமாக இருந்தது. இரவு முழுதும் தூங்க விடாமல் அலைக்கழித்த அந்த நிகழ்வை அந்த நாளில் ஆயிரமாவது முறையாக நினைத்துப் பார்த்தாள்.

அவனது வலிய கரங்களில், திடகாத்திரமான தோள் களில் சாய நேர்ந்தபோது உடலில் ஏற்பட்ட மாற்றங்கள் புதுமையான சுகத்தைத் தந்து, அவளை இன்பத்தில் ஆழ்த்தின.

பூப்பெய்திய பின் அவனைக் கண்ட போதெல்லாம் சிவந்தாளே! அவன் ஒரு நிமிடம் உற்று நோக்கினால் கரைந்து போனாளே.... அவன் கைப் பற்றினால் நெகிழ்ந்து போனாளே... புரியாத வயதில் தோன்றிய இந்த அன்பு, வளர்ந்த பின் காதலாக மாறிப் போனதை அவள் ஏன் அறிந்து கொள்ளவில்லை?

அறியாத வயதிலேயே அவன் அழுதாலும், வருத்த முற்றாலும் பதறிப் போய் விடுபவளுக்கு, அத்தை இறந்து போன பின் அன்னையாக இருந்து அவனைக் காக்க வேண்டுமென்கிற பாசமும், பொறுப்பும் தானாகத் தோன்றி யதே! அவனை வாழ வைப்பதற்காகவே தான் பிறவி



யெடுத்ததாக அடிக்கடி எண்ணிக் கொள்வாளே! நீதானே மாமா எனக்கு எல்லாம் என்ற போது தோன்ற வில்லையே... அவள் அவனை உயிரினும் மேலாக நேசிக்கிறாள் என்கிற உண்மை!

வாழும் காலம் முழுதும் அவனது அன்பிலும், பாதுகாப்பிலும் இருக்க வேண்டும் என்பதுதான் அம்பரி யின் ஆசை.

அவனைத் தவிர வேறு ஒருவரையும் காதல னாகவும், கணவனாகவும் அவளால் நினைத்துக் கூடப் பார்க்க முடியாது. இத்தனை நாட்களாகப் புரிந்திராத பல விசயங்கள் அவனது ஒரு செய்கையில் அவளுக்குத் தெளிவாகப் புரிந்து போயின.

ஒரு நாளேனும் அவன் உண்ணாமல் அவள் உண்டிருக்கிறாளா? அவன் முகம் பாராமல் ஒரு நாளைக் கடத்தியிருக்கிறாளா? அவன் அருகாமையை நாடாமல் ஒரு நிமிடத்தைக் கழித்திருக்கிறாளா?

எப்போதும் அவளது சிந்தனை முழுதிலும் நிறைந் திருப்பவனை... தனது எல்லையற்ற அன்பால் அவளை ஈர்த்து விடுபவனை, கொள்ளை கொள்ளையாக அவள் காதலிப்பதில் வியப்புற ஏதுமில்லை.

தனது மனதின் ஆசைகளையும், எண்ணங்களையும் அறிந்து கொண்ட அம்பரிக்கு முந்தைய நாள் அவன் தன்னை அணைத்தது நினைவிற்கு வந்து அவளது உடலின் ஒவ்வொரு அணுவிலும் புது ரத்தத்தைப் பாய்ச்சிக்

கொண்டிருந்தது. கண்மூடி மரத்தில் சாய்ந்திருந்தவளுக்கு, விழி திறக்கவே மனமில்லை. தன்னைச் சுற்றியிருப்பவர்களோ, இந்தப் பூமியோ, வானமோ, எதுவுமே நினைவில்லை. யாருமற்ற தனிமையில், வேறு ஒரு உலகத்தில், அவனது நினைவுகளைச் சுமந்து கொண்டு தான் மட்டுமே உலவுவதாகத் தோன்றியது.

சிலுசிலுவென வீசிச் சென்ற காற்று கூட அவனது தீண்டல் போலவே அவளைச் சிலிர்க்க வைத்துச் சென்று கொண்டிருந்தது.

குயில்களின் குரலும், காற்றிலாடிய கிளைகள் எழுப்பிய ஓசையும், சங்கீதமாய்த் தோன்ற, நேற்றுவரை தன்னைச் சுற்றியிருந்த சாதாரண உலகம் இன்று சொர்க்கமாக மாறி விட்டதை எண்ணிப் பூரித்து அனுபவித்துக் கொண்டிருந்தாள்.

விழி மூடினால் கனவிலும், விழி திறந்தால் எதிரிலும் அவனது பிம்பம் தோன்றி அவளை வெட்கமுறச் செய்து கொண்டிருந்தது.

தோப்பினுள் போடப்பட்டிருந்த பம்பு செட்டுக்குள் இருந்த நீரை அளைந்து கொண்டிருந்தவளின் கை தன்னாலேயே மாமனின் பெயரை எழுதிப் பார்த்துக் கொண்டிருந்தது.

கண்களில் புதுப் பளபளப்பும், கன்னங்களில் சிவப்பும், இதழில் புன்னகையுமாக மையலேறி யிருந்த அவளது முகத்தைத் திவாகரன் கண்டிருந்தால் நிச்சயம் திக்குமுக்காடிப் போயிருப்பான்.



சிரிப்பும், வெட்கமுமாய்ச் சுற்றித் திரிந்தவள்... மாலையானதும் வீடு வந்து சேர்ந்தாள்.

"கழுதை, பள்ளிக்கூடத்துக்குப் போகாம எங்கடி தொலஞ்ச?" என்று வைத அப்பத்தாவைப் பற்றி, "கிழவி..." எனக் குதித்தவள்... அவர் கன்னத்தில் அழுந்த முத்தமிட, "அடக் கழுத, ச்சி...ச்சி... கன்னத்த விடு!" என்று கோபப்பட, அவர் தண்டட்டியைப் பிடித்து ஆட்டி விட்டுத் துள்ளலுடன் உள்ளே சென்றாள்.

கல்லூரியிலிருந்து திவாகரன் திரும்பி வரும் நேரம் என்பதால் வேகமாக ஓடிச் சென்று மொட்டை மாடியில் நின்று கொண்டாள். அவளது மனமாற்றங்கள் குறித்து அறிந்திராத திவாகரனோ சோர்வுடன் சைக்கிளைச் செலுத்திக் கொண்டு வீட்டிற்குள் நுழைந்தான்.

"வா கண்ணு, என்ன இன்னிக்கு விரசா வந்துட்ட?" என்று வினவிய அம்மத்தாவிடம், "சீக்கிரம் பஸ் கிடைத்து விட்டது அம்மத்தா, அதனால்தான்!" என்று பதிலளித்துக் கொண்டிருந்தவனை மாடியின் ஓரத்திலிருந்து புன்னகையுடன் பார்த்துக் கொண்டிருந்தாள் அம்பரி.

திராவிடர்களுக்கே உரித்தான கருப்பு நிறத்தைத் தான் அவன் கொண்டிருந்தான். நெடுநெடுவெனப் பனை மரத்தில் பாதியாக வளர்ந்திருந்தவனது உயரமே பெண்களை நிச்சயம் ஈர்த்து விடும். மண்வெட்டியும், கையுமாக வயலில் அலைவதாலும், தேங்காய் மூட்டைகளை அசாத்தியமாகத் தூக்குவதாலும் கைகளும், அகன்ற தோள்களும் வலுப்பெற்று இறுகியிருந்தன. அடர்ந்து

கருத்திருந்த சிகை நெற்றியை மறைக்க, அழுத்தமான கண்களின் மேலே அரை வட்டமாகப் படர்ந்திருந்த புருவங்களுக்கு மத்தியில் குங்குமமிட்டிருந்தான்.

அவனது பெரிய விழிகள் அவளைக் காதலுடன் நோக்குகையில் அம்பரி சிலிர்த்துப் போய் விடுவதில் ஆச்சரியப்பட எதுவு மில்லை. கூரான மூக்கைத் தொடர்ந்து அளவாகக் கத்தரிக்கப்பட்டிருந்த மீசை அவனது கம்பீரத்தை மென் மேலும் கூட்டியது.

வடிவான இதழ்கள் விரிந்து வெண் பற்களை வெளிக்காட்டி விட்டால் நிச்சயம் அவள் சொக்கிப் போய் விடுவாள். மொத்தத்தில் ஆண்மையின் திரு வுருவாய்க் கண் முன்னே நின்று கொண்டிருந்தவனை மறைந்து நின்று பார்த்துக் கொண்டிருந்த அம்பரிக்கு, இவன் என்னவன் என்கிற கர்வம் பொங்கியது.

அம்மத்தாவுடன் பேசியபடியே அவளது சைக்கிளைக் கண்டவனுக்கு அவள் வீட்டிலிருப்பது உறுதியாகி விட, அவனது பார்வை அவளை வீட்டினுள் தேடியது.

வீட்டிற்குள் அமைதியாக அமர்ந்திருக்க மாட்டாளே... கொலுசுச் சத்தம் கேட்கவில்லையே... என்றபடி யோசனை யுடன் நின்றிருந்தவன் சட்டென நிமிர்ந்து மாடியைப் பார்க்க, அவன் தன்னைக் கண்டு விட்டதைக் கண்டு உதட்டைக் கடித்தபடி சட்டென விலகிச் சென்று விட்டாள் அவள்.

அவனைக் கண்டதும் விலகி ஓடுபவளைக் கண்டு வருத்தமுற்றான் திவாகரன்.



சோர்வுடன் வீட்டினுள் நுழைந்தவன், தனது அறையை நோக்கி நடக்க, தடதடவென மாடிப்படிகளில் இறங்கி வந்து கொண்டிருந்த அம்பரி, அவனது அறைக்குப் படியேறிக் கொண்டிருந்த திவாகரனைக் கண்டு, மீண்டும் மாடியை நோக்கியே ஓடினாள். "பரி... பரி... நில்!" என்றபடியே அவள் பின்னே ஓடினான் திவாகரன்.

திடுதிடுவென ஓடியதிலும், அவன் தன்னைத் தொடர்ந்து வருகிறான் என்கிற படபடப்பிலும், சற்று அதிக மாகவே மூச்சு வாங்க, கழுத்தில் அணிந்திருந்த சங்கிலியை இறுகப் பற்றியபடி மறுபுறம் திரும்பி நின்று கொண்டாள். அவளைத் தொடர்ந்து படியேறிய திவாகரன் அவளருகே வந்து நிற்க, கண்களை இறுக மூடிக் கொண்டாள் அவள்.

அவளது எண்ண ஓட்டங்களை அறிந்திராத திவாகரன் கைகளைப் பிசைந்து கொண்டு என்ன சொல்லி மன்னிப்புக் கேட்பது என்று யோசனையில் ஆழ்ந்தான். பின் மெல்லத் தொண்டையைச் செருமிக் கொண்டு, "பரி..." என்றழைக்க, அவள் பதிலேதும் சொல்லாமல் அமைதியாக நின்றிருந்தாள்.

"வ...வந்து... பரி... நா...நான்..." என்று தொடங் கியவன், சிறிது இடைவெளி விட்டு ஒரு பெருமூச்சுடன், "என்னை மன்னித்து விடு பரி. நா...நான் செய்தது மிகப் பெரிய தவறுதான். உன் அனுமதியில்லாமல் நான் உன்னை முத்தமிட்டிருக்கக் கூடாது!" என்று மெல்லிய குரலில் கூற, அம்பரிக்கு நேற்றைய நினைவில் காது

மடலில் தொடங்கி உடல் முழுதும் சூடாகிப் போனது. அதன் பின் அவன் கூறிய எதுவும் அவள் காதில் விழாமல் போய் விட, அவனோ தன் போக்கில் தான் செய்த தவறை எண்ணி நொந்து வருத்தமுற்றுப் பேசிக் கொண்டிருந்தான். அவன் எதற்காக மன்னிப்புக் கேட்கிறான் என்பது கூட அவளது மூளைக்கு எட்டவேயில்லை.

அவளிடமிருந்து பதிலே இல்லாததைக் கண்டு தயக்கத்துடன் அவள் அருகே சென்றவன், திட்டின் மீது பதிந்திருந்த அவள் விரல்களைப் பற்ற, சிலிர்த்துத் தன் கைகளை உருவிக் கொண்டாள் அவள். மறுபுறம் திரும்பியிருந்ததால் அவனால் அவளது முகத்தைக் காண முடியவில்லை. ஆனால் சில்லிட்டுப் போயிருந்த அவளது விரல்களின் நடுக்கத்தை அவனால் உணர முடிந்தது. அவனது சாதாரணத் தொடுகை கூட அவளுள் நடுக் கத்தை விளைவிக்கிறதென்றால், எந்த அளவிற்குப் பயமுற்றிருக்கிறாள்...! வலி நிறைந்த முகத்துடன் அவளை நோக்கி விட்டு, விறுவிறுவெனப் படிகளில் இறங்கிச் சென்று விட்டான் அவன்.

அவன் சென்ற பின்பு மெல்லத் திரும்பிய அம்பரி யின் முகம் முழுதும் செவ்வானமாகி விட்டிருந்தது. அவன் பற்றிய விரல்களை இறுகப் பற்றியவள், அங்கிருந்த கம்பியின் மீது சாய்ந்து கண் மூடிக் கொண்டாள். அதன் பின்பு இரவு உணவின் போது தந்தையுடன் அமர்ந்து பேசிக் கொண்டிருந்தவனை... ஓரக் கண்ணால் நோக்கிய படியே பரிமாறியவள்... அவன் மறந்தும் கூடத் தன் மீது பார்வையைச் செலுத்தாததை எண்ணி வருத்தமுற்றாள்.



பரிமாறிய பின்பும் கூட இலையிலிருந்த சாப்பாட்டை வாயில் வைக்காமல் பிசைந்தபடி அமர்ந்திருந்தவனிடம், "என்னடா சிந்தித்துக் கொண்டிருக்கிறாய்? எடுத்துச் சாப்பிடு!" என்று மாணிக்கம் அதட்ட, அவன் தயக்கத் துடன் நிமிர்ந்து அம்மத்தாவைப் பார்த்தான்.

அவன் பார்வையைப் புரிந்து கொண்ட அம்பரி, "நான் பிறகு சாப்பிட்டுக் கொள்கிறேன் அப்பத்தா!" என்று பதில் அளித்ததும் எதுவும் கூறாமல் சாப்பாட்டை அள்ளித் தன் வாயில் திணித்தான். உண்டு முடித்து முற்றத்தில் கை கழுவிய மாணிக்கம், அம்பரியிடம், "துண்டு கொண்டு வா கண்ணு. கை துடைக்க..." என்றதும், வேகமாகத் துண்டை எடுத்துக் கொண்டு அருகே சென்றாள். அவர் சென்றதும் தானும் கை கழுவிய திவாகரனிடம் அவள் துண்டை நீட்ட, அவனோ அவள் முகத்தைக் கூடப் பாராமல் தனது கைலியிலேயே கையைத் துடைத்துக் கொண்டு நகர்ந்து விட்டான். என்னவாயிற்று இவனுக்கு என்று புருவத்தைச் சுருக்கிய அம்பரியைச் சுப்புலட்சுமி அழைக்க... "இதோ வருகிறேன்!" என்றபடி சென்று விட்டாள்.

மறுநாள் காலையில் அம்பரி எழுந்து வருகை யிலேயே வாசலில் தனது சைக்கிளைத் திருப்பிக் கொண்டு திவாகரன் கல்லூரிக்குச் செல்வதைக் கண்டாள். மணி ஆறரையைக் கூட எட்டவில்லை. அதற்குள் கிளம்பி விட்டானா? அவளிடம் சொல்லிக் கொள்ளாமல் எப்போதும் செல்ல மாட்டானே... என்றெண்ணியபடி வாசலை நோக்கி அவள் விரையும் முன் அவன் தெரு முனையைத் தொட்டிருந்தான்.

ஏன் இப்படி நடந்து கொள்கிறான்? நேற்றுச் சாப்பாடு பரிமாறும் போதும் துண்டை நீட்டும் போதும் அவன் அவளது முகத்தைப் பார்க்கக் கூட இல்லை. இன்று சொல்லாமல் கொள்ளாமல் கல்லூரிக்குக் கிளம்பி விட்டான். என்னவென்று காரணம் புரியாத அம்பரிக்குக் காலை நேரத்துப் புத்துணர்ச்சி மறைந்து போனது. எரிச்சலுடன் வேலைகளை முடித்தவள்... காலை உணவைத் தவிர்த்து விட்டுப் பள்ளிக்குப் புறப்பட்டாள்.

அன்று மாலை வீடு திரும்பிய திவாகரனிடம் வாசலிலேயே வள்ளியம்மை விசயத்தைக் கூறி விட்டார். "நீ சாப்பிடாம போனதால... அவளும் சாப்பிடாமலே போயிட்டா ராசா. மதியச் சாப்பாடு கூட எடுத்துக்கல..." என்று அவர் கூறிக் கொண்டிருக்கையிலேயே சோர்வுடன் சைக்கிளைத் தள்ளியபடி உள்ளே நுழைந்தாள் அம்பரி. அவனைக் கண்டதும் கோபத்தில் கண்கள் சிவந்து அழுகை வர, அவனை முறைத்தவள்... வேகத்துடன் சைக்கிளை நிறுத்தி விட்டு விறுவிறுவென வீட்டினுள் நுழைந்தாள்.

அவளது நடையிலேயே அவள் உண்ணாமல் இருப்பதைக் கண்டு கொண்டவன், "நாள் முழுதும் சாப்பிடாமலேயே இருந்திருக்கிறாள் போலும் அம்மத்தா!" என்றவன், தலையை அழுந்தக் கோதியபடி, உள்ளே சென்றான். முற்றத்தில் கை, கால் கழுவிக் கொண் டிருந்தவளைக் கண்டபடியே அடுக்களைக்குச் சென்றவன் ஒரு தட்டில் சாதமிட்டு எடுத்து வந்தான்.



அவனைக் கண்டு கொள்ளாது நடந்தவளை, "நில்லுடி!" என்று அவன் தடுக்க, அவன் குரல் தன் காதுகளுக்கு எட்டாதவள் போன்று, தன் அறையை நோக்கி நடந்தாள். "நில் என்கிறேனல்லவா பரி...?" என்றபடி அவள் கைகளைப் பற்றியவன் அங்கே போடப் பட்டிருந்த நாற்காலியில் அவளை இழுத்து அமரச் செய்தான். எதுவும் கூறாமல் கோபத்துடன் அமர்ந் திருந்தவளின் வாயில் சாதத்தைத் திணிக்க எத்தனிக்க, அவள் வேறு புறம் திரும்பிக் கொண்டு, தன் மறுப்பைக் காட்டினாள். "இப்போது நீ சாப்பிடா விட்டால் நானும் சாப்பிட மாட்டேன்டி. உன்னை விட்டு நான் மட்டும் நாள் முழுதும் மூக்குப் பிடிக்கத் தின்று விட்டு வந்தேன் என்று நினைத்துக் கொண்டிருக்கிறாயா?" என்று வினவ, பதில் கூறாமல் அமைதியானாள்.

அதன் பின்பு அவன் ஊட்டியதை அவள் மறுக் காமல் வாங்கிக் கொள்ள, அவனும் எதுவும் கூறாமல் ஊட்டி முடித்தான். "போதும்!" என்ற ஒற்றைச் சொல்லோடு எழுந்து கொண்டவள், அவனிடமிருந்து தட்டை வாங்கிக் கொண்டு சென்று அவனுக்குச் சாதமிட்டு எடுத்து வந்தாள். மறுக்காமல் வாங்கிக் கொண்டவன் தானும் உண்டு முடித்தான்.

அதன் பின்பும் கூடச் சாப்பிடும் நேரம் தவிர மற்ற நேரங்களில் அவன் அவளது முகத்தைக் கூடப் பாராமல் இருப்பதைக் கண்டு வேதனையானது அம்பரிக்கு. ஏன் இப்படி நடந்து கொள்கிறான் என்று காரணம் புரியாமல்

தூக்கமின்றித் தவித்தாள். முன்பொரு முறை அவன் அணைத்த அன்று இரவு மகிழ்ச்சியில் தூக்கமின்றித் திரிந்தது நினைவிற்கு வந்து அழுகை வரச் செய்தது.

மறுநாள் மாலை தேன்மொழி, அம்பரி, குமரன் மூவரும் அவனிடம் படிக்க அமர்ந்தனர். குமரனுக்குச் சொல்லிக் கொடுத்து முடித்ததும் இவர்களிருவரிடமும் திரும்பியவன் அம்பரியின் முகத்தைப் பார்க்காமல் தேன்மொழியின் மீது மட்டுமே பார்வையைச் செலுத்தி யிருந்தான். கோபத்திலும், இயலாமையிலும் அவன் முகத்தைப் பார்த்த வண்ணமே அவள் சிலையென அமர்ந்து விட, அவளது உறுத்தும் பார்வையை உணர்ந்தும் அவன் கண்டு கொள்ளாமல் அமர்ந்திருந்தான்.

"இந்தக் கணக்குகளைச் செய்து முடியுங்கள்..." என்றதோடு அவன் தனது புத்தகத்தை எடுத்துக் கொண்டு அமர்ந்து விட்டான். அவனையே வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்த அம்பரிக்குக் கோபம் தலைக்கேற நோட் டிலிருந்த கணக்கைப் பார்த்து விட்டு, தன் பேனாவினால் அந்தப் பக்கம் முழுதையும் கிறுக்கி வைத்தாள். பின் எழுந்து அவனருகே சென்று நோட்டை நீட்ட, அதற்குள் முடித்து விட்டாளா என்றெண்ணியபடி அவள் முகத்தைப் பாராமல் நோட்டை வாங்கிய திவாகரன், அவள் கிறுக்கி வைத்திருந்ததை நிதானமாகப் பார்வையிட்டான். பின், "எல்லா கணக்குகளும் சரியாக இருக்கிறது!" என்று முடித்துக் கொண்டு, நோட்டைக் கீழே வைத்து விட்டு, அவள் திகைத்துத் தன்னை நோக்குவதைப் பொருட் படுத்தாமல் எழுந்து சென்று விட்டான்.



கீழே கிடந்த நோட்டைத் தன் கையில் எடுத்த அம்பரிக்கு அழுகை வந்தது. தங்களது பாடங்களை முடித்துக் கொண்டு மற்ற இருவரும் சென்று விட, திவாகரனின் முகத்தைத் திரும்பித் திரும்பிப் பார்த்தபடி தானும் வெளியேறினாள். அதன் பின் பக்கத்து வீட்டுப் பொன்னுத்தாயி பாட்டி தைலம் தேய்த்துவிட அவளை அழைக்க அவள் சென்று விட்டாள்.

அவள் சென்ற பின்பு கொல்லையிலிருந்த திண்ணையில் அமர்ந்திருந்து இருள் நிறைந்த வானத்தில் வலம் வந்து கொண்டிருந்த வெண்ணிலவை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தான் திவாகரன். அம்பரியின் கோபத்தை அவன் உணர்ந்தேயிருந்தான். அவ்வப்போது அவள் அவனை வெறித்து நோக்குவதும், இன்று நோட்டில் கிறுக்கித் தந்ததும் கோபத்தில்தான் என்று அறிந்திருந்தான். ஆனால், அவன் அவளிடமிருந்து விலகியிருப்பதுதான் நல்லது என்று பட்டது அவனுக்கு.

இனி பழையபடி அம்பரியின் அத்தை மகனாக மட்டும் அவனால் அவளுடன் பழக முடியுமென்று தோன்ற வில்லை. மாமன் மகள் என்கிற சொந்தத்தை மீறி, அவனது அன்பு காதலாக மாறி அவளைச் சுற்றிப் படர்ந்திருந்தது. அதை மறைத்துக் கொண்டு அவளிடம் அவ்வளவு எளிதாகப் பழகி விட முடியுமென்று அவனுக்குத் தோன்றவில்லை. தன் எண்ணப் போக்கில் அமர்ந்திருந்த வனுக்கு அம்மத்தாவின், "கண்ணு... கொல்லையில போட்டிருக்கிற அந்த நாற்காலியைத் தூக்கி வா. வாசல்

விளக்கு எரியல. புது விளக்கு மாட்டணும்!" என்கிற குரலும், அதைத் தொடர்ந்து அம்பரி உள்ளே வரும் அரவமும் கேட்டது.

தானே எடுத்துக் கொண்டு செல்லலாம் என்ற முடிவுடன் பெருமூச்சுடன் அவன் எழுந்து நாற்காலியின் அருகே செல்ல, ஜல் ஜல் எனக் கொலுசொலி ஒலிக்க ஓடி வந்த அம்பரிக்கு... இருளில் நின்றிருந்த அவனது உருவம் கண்ணில் படாமல் போய் விட, தானும் சென்று நாற்காலியின் மீது கை வைத்தாள்.

அவள் கை வைத்த நேரம் திவாகரனும் அதைப் பற்ற... பயந்து பதறிப் போனவள் தடுமாற, "பரி... நான்தான்!" என்றவன், அவள் தோளை அழுந்தப் பற்றி நிறுத்தினான். தோளில் பதிந்த அவனது கரங்களை அழுந்தப் பற்றியிருந்த அம்பரி நிமிர்ந்து அவன் முகம் பார்க்க, அந்தக் காரிருளிலும் பளபளத்த அவளது கண்களைக் கண்டு மூச்சடைத்தது அவனுக்கு.

அவளது கைகளிலிருந்து தன் கைகளை விடுவித்துக் கொண்டவன், நாற்காலியைத் தூக்கிக் கொண்டு நகர்ந்து விட்டான்.

கண்களை அழுந்த மூடி அம்பரியின் துளைக்கும் பார்வையைத் தவிர்த்து நடந்தவனுக்குத் தன் மீதே கோபம் வந்தது. இதற்காக... இதற்காகத்தான் அவன் அவளை விட்டு விலகியிருக்க நினைப்பது.

தினமும் இரவு அவளது மென்மையையும், வாசனையையும் எண்ணியபடி உறங்குபவனுக்கு அவளது



அருகாமை தந்த தவிப்பு நரகமாக இருந்தது. அவள் அருகில் நிற்க நேர்ந்தால் அவனை உரசிச் செல்லும் அவளது கூந்தலும், அவளது தாவணியும் மயக்கத்துடன் கூடிய கிறக்கத்தை அளித்தது.

அவளது கை விரல் பற்ற நேர்ந்தாலோ என்னென்னவோ எண்ணங்கள் எழுந்து மனதில் தீ மூட்டி விட்டுச் சென்றன. அவளது இளமையும், அழகும், செழுமையும் அவனை அசரடிப்பதைத் தவிர்க்க இயலாமல் அரும்பாடு பட்டான் அவன்.

அதனாலேயே அவள் முகத்தை நிமிர்ந்து பார்ப்பதில்லை. அவள் அருகே வந்தால் கூட முகத்தை வேறு புறம் திருப்பிக் கொள்கிறான்.

கிறங்கச் செய்து விடும் அந்தக் கண்களைச் சந்திக்கவே அவனுக்குப் பயமாக இருந்தது.

வெட்கத்தில் சிவந்து அவள் தலை குனிந்து கொள்ளும் நேரங்களில் எல்லாம் தன்னைக் கட்டுப் படுத்திக் கொள்ள முடியாமல் திணறிப் போனான்.

அறியாமல் அவளைத் தொட நேர்ந்தாலோ மூச்சடைக்க நின்று மெய்மறந்து போனான். இப்படியெல்லாம் அவனை ஆட்டிப் படைத்துக் கொண்டிருந்த அம்பரியோ இவையனைத்தையும் அறியாமல் அவன் மீது கோபம் கொண்டு தீப்பார்வையுடன் நின்று கொண்டிருந்தாள்.

மழை வரும் போலிருந்த அந்த இரவு... மரங்களும், வயல் வெளிகளும் பேய்க் காற்றில் அங்குமிங்கும் அசைந்து ஓசையைப் பரப்பிக் கொண்டிருந்தன. உணவு முடிந்து அனைவரும் சாய்ந்து விட, திவாகரன் மட்டும் மாடியில் குளிர்காற்றில்... எப்படியேனும் என் மனதில் பேயாட்டம் போட்டுக் கொண்டிருக்கும் இந்தக் காதல் தீயை அணைத்து விடேன் காற்றே... என்பது போல் கண் மூடி அசையாது நின்றிருந்தான்.

தூக்கம் வராமல் புரண்டு கொண்டிருந்த அம்பரி ஒரு முடிவுடன் எழுந்து அவனைத் தேடிச் சென்றாள். அவளது வரவை அவளது கொலுசொலியே அவனுக்கு உணர்த்த... ஆனாலும் அசையாமல் நின்றிருந்தான். "நான் உன்னிடம் பேச வேண்டும் மாமா!" என்று தீர்க்கமாக ஒலித்த அவளது குரலுக்கும், அவனிடம் பதிலற்றுப் போக,

"நீ... நீ ஏன் இப்படி நடந்து கொள்கிறாய் மாமா? என்னிடம் சரியாகப் பேசுவதில்லை. என் முகத்தைக் கூடப் பார்ப்பதில்லை. உண்ணும் நேரம் தவிர இந்த வீட்டில் நான் இருக்கிறேனா இல்லையா என்பதைக் கூட நீ அறிந்து கொள்ள முயல்வதில்லை. ஏன் இப்படி மாறிப் போனாய்?

"நான் என்ன தவறு செய்தேன்? உன் பாராமுகம் எனக்குள் எப்பேர்ப்பட்ட வலியையும், வேதனையையும் ஏற்படுத்துகிறது என்பதை நீ அறிவாயா? என்ன நடந்தது? யார் உன்னிடம் என்ன கூறினார்கள்? காரண மில்லாமல்



நீ என்னைத் தவிர்ப்பதை என்னால் ஏற்றுக் கொள்ள முடியாது மாமா. அம்மா ஏதும் கூறினார்களா? ம்? பின்னே? பின்னே ஏன் இப்படி நடந்து கொண்டு என் உயிரைப் பறிக்க எண்ணுகிறாய்? சொல் மாமா!" என்று அவனைத் தன் புறம் திருப்பிக் கண்ணீருடன் கதறினாள்.

அவள் கண்ணீரைக் கண்டதும், அவன் பதறிப் போய், அதைத் துடைத்து, "பரி... பரி என்ன இது? எதற்காக அழுகிறாய்? யார் சொன்னது நான் உன்னைத் தவிர்ப்பதாக? அப்படியெல்லாம் எதுவுமில்லை. நா... நான் நன்றாகத் தானிருக்கிறேன்," என்று வேறு புறம் பார்த்துக் கொண்டே கூறியவனைக் கண்டு மேலும் கோப முற்றவள்,

"என் முகத்தைப் பார்த்துக் கூறு. நீ என்னைத் தவிர்க்கவில்லையென்று? இந்தப் பத்து நாட்களில் ஒரு முறை கூட நீ என் முகத்தை நிமிர்ந்தே பார்க்கவில்லை. எதேச்சையாகப் பார்க்க நேர்ந்தாலும் தலையைக் குனிந்து கொண்டு விலகிப் போனாய். என் மாமாவைப் பற்றி எனக்குத் தெரியாதா? உன் ஒவ்வொரு அசைவிற்கும் அர்த்தம் தெரிந்தவள் இந்த உலகத்தில் நான் மட்டுமே. என்னிடம் பொய் கூற முயல்கிறாயா மாமா?" என்று வினவியவளிடம், அதற்கு மேலும் இல்லையென்று போராட முடியாமல் போக, "எ...என்னால் முடியவில்லை பரி..." என்று சோர்ந்த குரலில் கூறினான் அவன்.

"என்ன முடியவில்லை? என்று வினவியவளிடம், அவன், "முன் போல் உன்னிடம் சாதாரணமாகச் சிரித்துப்

பேச, சண்டை போட, வம்பு செய்ய என்னால் முடிய வில்லை..." என்று கூற, "ஏன்?" என்று புருவம் சுருக்கி வினவினாள். அதற்குப் பதில் கூறாமல் நின்றவனிடம், "ஏன் என்று கேட்கிறேன் மாமா?" என்று அவள் அழுத்திக் கூற, இரண்டு கைகளால் மாடியின் திட்டைப் பற்றி யிருந்தவன் வேகத்துடன் திரும்பி,

"ஏனென்றால்... ஏனென்றால் நான் உன்னை விரும்புகிறேன் பரி. உன்னை உயிராக நேசிக்கிறேன். பைத்தியமாகக் காதலிக்கிறேன். போதுமா?" என்று அவன் உரத்த குரலில் கூறி முடித்ததும்...

சடசடவெனப் பெரிய பெரிய துளிகளுடன் மழை பெய்ய ஆரம்பித்தது.

நின்ற இடத்தில் அசையாமல் மூச்சு விட மறந்து அம்பரி இருக்க... தன் மனதிலிருப்பதை வெளிப்படுத்தி விட்ட திவாகரனோ வேக வேக மூச்சுகளுடன் கைகளை இறுக்கியபடி அவள் முகம் பாராமல் நின்றிருந்தான்.

பின் நிமிர்ந்து, "என்னால் முன்னைப் போல் உனது அத்தை மகனாக, திவாகரனாக... உன்னுடன் வலம் வர முடியாது. நீ அருகில் நின்றால் ஏதேதோ தோன்றுகிறது அம்பரி. என்று ஓலைக் குடிசைக்குள் மஞ்சள் வாசத்தில் உன்னைக் கண்டேனோ அன்றிலிருந்து இந்த உணர்வை என் மனதில் சுமந்து கொண்டிருக்கிறேன்.

"ஏன் எப்படியென்றோ, சரியா தவறா என்றோ எனக்குத் தெரியவில்லை. ஆனால், ஆனால் நான் உன்னை நேசிக்கிறேன் அம்பரி.



"என் மனதில் இருப்பதை மறைத்துக் கொண்டு உன்னுடன் சாதாரணமாகப் பழக என்னால் முடிய வில்லை. உன்னைக் கண்டாலே என் உடலிலும், மன திலும் பொங்கி எழும் உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்திக் கொண்டு சிரித்தபடி பத்தடி தள்ளி நின்று கொண்டு என்னால் பேச முடியுமென்று எனக்குத் தோன்றவில்லை.

"எனக்கு நீ வேண்டும் அம்பரி. என் வாழ்நாள் முழுமைக்கும் நீ வேண்டும். என் அன்னையாக, என் தோழியாக, காதலியாக, மனைவியாக நீ வேண்டும். சிறு பிள்ளையாக உன்னைத் தூக்கிக் கொண்டு திரிந்தவன் தான் நான்.

"ஆனால் இப்போது எழும் இந்த உணர்வுகள் எதனால் என்று எனக்குத் தெரியவில்லை. என் ஆசை களை, கோபங்களை, சந்தோசங்களை, துயரங்களை உன்னையன்றி யாராலும் புரிந்து கொள்ள முடியாது. நீ என் தேவதை. என் வாழ்வை எனக்குத் திருப்பி யளித்தவள். வாழும் ஆசையை எனக்குள் தூண்டி எனது தேவைகளை நிறைவேற்றி, எனக்குத் தெய்வமாக மாறி இன்றுவரை என்னைக் காத்து வருபவள்.

"உன்னைத் தவிர வேறு யாரையும் என்னால் மனதால் கூட நினைத்துப் பார்க்க முடியாது அம்பரி. நான் உன்னைக் காதலிக்கிறேன்..." என்று கொட்டும் மழையைப் பொருட் படுத்தாது தன் மனதில் உள்ளதை அவளிடம் கொட்டினான் அவன்.

"உன் பார்வை என் மீது பட்டால் என் உள்ளம் குளிர்ந்து போய் விடுகிறது அம்பரி. உன் வெட்கப்

புன்னகையைக் கண்டு விட்டால் நாள் முழுதும் சந்தோச மாகி விடுகிறது. உன்னைத் தொட நேர்ந்தால் என் உள்ளங்கையில் உண்டாகும் வெப்பம் உடல் முழுதிலும் அனலேற்றி, ஒரு விதமான பரவசத்தை, சுகத்தை ஏற்படுத்தி விடுகிறது.

"உன்னைக் காணும் போதெல்லாம், மனதினுள் ஏதேதோ கற்பனைகள் எழுகிறது. ஒவ்வொரு முறையும், உன்னை அணைக்காமல், முத்தமிடாமல் விலகிச் செல்வது பெரும் வலியை ஏற்படுத்துகிறது. ஆனால், இவையெல்லாம் உனக்குப் பிடிக்கவில்லை என்பது... அன்று நீ நடுங்கி, பயந்து விலகியதிலேயே எனக்குப் புரிந்து விட்டது அம்பரி!" என்று தொடர்ந்தவனை நிமிர்ந்து நோக்கிய அம்பரி, "எனக்குப் பிடிக்கவில்லையென்று நான் கூறினேனா?" என்று சின்னக் குரலில் வினவினாள்.

தன் போக்கில் பேசிக் கொண்டே சென்றவனை அவள் இடையில் தடுத்ததும், புரியாமல் நோக்கியவன், "ம்?" என்று வினவ,

"எனக்குப் பிடிக்காமல் நான் நடுங்கி, விலகியதாகச் சொன்னீர்களே? எனக்குப் பிடிக்கவில்லையென்று நான் உங்களிடம் கூறினேனா என்று கேட்டேன்..." என்று விவரித்தவளை விழி விரித்துத் திகைப்புடன் நோக்கி னான்.

அவன் விழிகளிலிருந்து தன் விழிகளைப் பிரிக் காமல் அவனருகே சென்று நின்றவள், "நீ என்னைக் கட்டிக் கொள்வதும், முத்தமிடுவதும் எனக்குப் பிடிக்க



வில்லையென்று நான் உன்னிடம் எப்போது கூறினேன் மாமா? நீ...நீ முதன்முறையாக என்னை அணைத்ததும் எ...எனக்கு வெட்கத்திலும், கூச்சத்திலும் நடுக்கம் வந்து விட்டது.

"அதைத் தவறாக எண்ணிக் கொண்டு விலகிச் சென்றது உன் தவறுதான். உன் மனதைப் போலவே தான் என் மனதிலும் ஆசையிருக்கும் என்பது என் மாமாவிற்குப் புரியவில்லையா? உன் ஒருவனை மட்டுமே உலகமாக எண்ணி, அன்றிலிருந்து இன்றுவரை உன் நன்மையை மட்டுமே நாடி வருகிறேனே.

"நான்... நான் உன்னை விரும்பாமல் போவேனா மாமா? அறியாத வயதிலேயே... உன் துயரத்தை எண்ணி நான் வருந்தியிருக்கிறேனே. நீ மகிழ்ச்சியுறுகையில் நான் சிரித்திருக்கிறேனே. உனையன்றி நான் வேறு யாரை என் மனதில் காதலனாகவும், கணவனாகவும் நினைப்பேன்? நீ முத்தமிடவும், அணைக்கவும்தான் நான் பெண் பிறவி யெடுத்திருக்கிறேன் என்பது தெரியாதா மாமா உனக்கு? உன் மனதில் தோன்றும் ஆசைகளையும், உணர்ச்சி களையும் விடப் பல மடங்கு ஆசைகளை நான் பெற் றிருக்கிறேன். என்னிடம் விலகிச் சென்று இத்தனை நாட்களாக என்னைத் துன்பத்தில் ஆழ்த்தி விட்டாயே!" என்று வினவியவளைக் கண்டு... திவாகரனுக்குக் கண்ணீர் பெருகியது.

அழுகையும், சிரிப்புமாய் அவள் இடையைப் பற்றி அருகிலிழுத்தான் அவன். இடையில் அழுந்திய அவன்

கரங்கள் வழக்கம் போல் அவளுக்கு நடுக்கத்தைக் கொடுக்க, மையலேறிய விழிகளுடன் அவனையே நோக்கியவளை இறுக அணைத்து அவள் நெற்றியில் அழுந்த முத்தமிட்டான் அவன்.

மழைத் துளி பட்டுத் தெறித்த கன்னங்களைத் தன் கைகளால் வருடியவன் கண் மூடிக் கிறங்கிப் போனவளின் முகம் முழுதும் முத்தமிட்டான். "என் கண்ணே... என் கண்ணே..." என்றபடி தனக்குள்ளேயே அவளைப் புதைத்து விடுபவன் போன்று அவளை இறுக அணைத்தவனின் கழுத்தைக் கட்டிக் கொண்டு அவன் மார்பில் தன் முகத்தைப் புதைத்துக் கொண்டாள் அம்பரி.

கொட்டும் மழையையும், விர்ரென்று வீசிச் சென்ற காற்றையும் பொருட்படுத்தாமல் மேகங்களுக்கிடையில் மறைந்து கொண்டு மெல்லிய வெளிச்சத்தைப் பரப்பிக் கொண்டிருந்த நிலவொளியில் தங்களை மறந்து சாய்ந்திருந்தனர் அந்த இளம் காதலர்கள்.

## 9

கள்ளூரப் பார்க்கும் பார்வை
உள்ளூரப் பாயுமே...
துள்ளாமல் துள்ளும் உள்ளம் தள்ளாடுமே...
வில்லோடு அம்பு ரெண்டு
கொல்லாமல் கொல்லுதே...!
பெண் பாவை கண்கள் என்று
பொய் சொல்லுதே...!



முந்தானை மூடும் ராணி செல்வாக்கிலே...
என் காதல் கண்கள் போதும்
பல்லக்கிலே...
தேனோடை ஓரமே! நீராடும் நேரமே...!
புல்லாங்குழல் தள்ளாடுமே...
பொன் மேனி கேளாய் ராணி!

**கா**தல் கை கூடி விட்ட மகிழ்ச்சியில் தரையில் கால் பதியாமல் வானத்தில் பறந்தனர் அம்பரியும் திவாகரனும். ஒவ்வொரு முறையும் அவள் கடந்து செல்கையில் தன்னை நோக்கி வீசும் அந்த ஒற்றைப் பார்வையில் முழுவதுமாகக் கரைந்து போனான் திவாகரன். அவனது தேவதை இன்று அவனது காதலியாக வலம் வந்து கொண்டிருக்கிறாள். கவலையும், வேதனையும் மறந்து முகத்தில் புன்னகையுடன் இருப்பவனைக் காண்கையில் அம்பரிக்கு மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது. இதற்காகத்தான் இந்தப் பிறவி எடுத்ததாகவே தோன்றியது அவளுக்கு.

அந்த மாதம் வீரபாண்டி கௌமாரியம்மன் கோவில் திருவிழா ஆரம்பமானது. தேனி மாவட்டத்தில் பிரசித்தி பெற்ற இந்தக் கோவிலில் ஒவ்வொரு வருடமும் சித்திரை மாதத்தில் திருவிழா ஆரம்பித்து விடும். இந்தக் கோவிலைப் பற்றிய கதைகள் உண்டு. மதுரையைத் தலைநகராகக் கொண்டு பாண்டியர்கள் தமிழகத்தை ஆண்டு வந்த காலத்தில் பாண்டிய மன்னன் வீர

பாண்டியன் என்பவன், தான் செய்த பூர்வ ஜென்ம பாவங்களால் தனது கண்களை இழந்து தவித்தானாம்.

தான் செய்த பாவத்தை மன்னித்து அருளுமாறு கடவுளிடம் பிரார்த்தித்த போது அம்மன் அவன் கண் முன் தோன்றி முல்லை ஆற்றங்கரையில் அமைந்திருக்கும் கௌமாரி அம்மனுக்குக் கோவில் கட்டிப் பூஜிக்குமாறு கூறிச் சென்றதால், வீரபாண்டிய மன்னன் இந்தக் கோவிலை அமைத்தான்.

அவனது பிரார்த்தனை நிறைவேறிய போதும் அவனுக்கு ஒரு கண்ணில் மட்டுமே பார்வை கிடைத்தது. மறு கண் பார்வை கிடைக்க கௌமாரியம்மன் கோவில் அருகில் சிவலிங்கம் வைத்துப் பூஜிக்குமாறு அம்மன் கூற, அவனும் அதன்படியே செய்து இரு கண் பார்வையையும் பெற்றான்.

முல்லை ஆற்றங்கரையில் அமர்ந்திருக்கும் கௌமாரியம்மன் கோவிலும் அதன் அருகே அமைந்திருக்கும் கன்னீஸ்வரம் உடையார் கோவிலும் அந்த ஊர் மக்களிடையே பிரசித்தி பெற்ற ஒன்றாக விளங்கி வருகிறது.

கௌமாரியம்மனிடம் வேண்டிக் கொண்டால் நினைத்த காரியங்கள் நிச்சயம் நடந்து விடும் என்கிற நம்பிக்கை மக்கள் மனதில் ஆழப் பதிந்திருந்ததால் தேனி, மதுரை, திண்டுக்கல் மாவட்டத்தைச் சேர்ந்த பலர் அங்கே கூடுவதுண்டு.



ஆயிரம் கண் பானை, தீச்சட்டி, அலகு குத்திக் கொள்ளுதல், திருத்தேரோட்டம் என நாற்பது நாட்களுக்குக் கோவில் களை கட்டும். மேற்குத் தொடர்ச்சி மலையும், வயல்வெளிகளும், முல்லை ஆற்றுத் தண்ணீருமாக அமைந்திருக்கும் அந்தச் சிற்றூருக்கு வருகை தருவது அம்பரிக்கு மிகவும் பிடித்த ஒன்று.

ஒவ்வொரு வருடமும் சுப்புலட்சுமி தீச்சட்டி எடுப்பதால் திருவிழா தொடங்கியதும் காப்புக் கட்டிக் கொள்வாள். அம்பரியும், திவாகரனும் ஆயிரம் கண் பானை எடுப்பார்கள்.

செல்வமும், மாணிக்கமும் அந்த வருடம் அன்ன தானத்திற்கும் ஏற்பாடு செய்திருந்ததால் அன்று அதிகாலையிலேயே சொந்தங்கள் அனைவரையும் வேனில் அழைத்துக் கொண்டு புறப்பட்டு விட்டார் மாணிக்கம்.

அன்னதானத்திற்குத் தேவையான பொருட்கள் அனைத்தையும் தனியே ஒரு வண்டியில் செல்வத்துடன் சேர்ந்து கொண்டு திவாகரனும், குமரனும் ஏற்றிக் கொண்டிருந்தனர்.

ஜல் ஜல் எனக் கொலுசுச் சத்தம் ஒலித்ததும் வாழை இலையை ஏற்றிக் கொண்டிருந்த திவாகரன் திரும்பி வீட்டு வாசலை நோக்கினான்.

நீல நிறப் பட்டுத் தாவணியில் விரிந்த கூந்தலுடன் அதிகாலைப் பனியில் தேவதையாக நின்று கொண்டிருந்தாள் அம்பரி. மையலேறிய விழிகளுடன் அவளை நோக்கியபடியே வண்டியைப் பூட்டிய திவாகரன், "இவள்

என்ன மாமா இவ்வளவு அழகாக இருக்கிறாள்?" என்ற குமரனின் வார்த்தையைக் கேட்டுத் திடுக்கிட்டு அவனை நோக்கினான்.

"யாரைடா சொல்கிறாய்?" என்று வினவியவனிடம் நெற்றியில் வழிந்த வியர்வையைக் கைக்குட்டையால் துடைத்தபடி, "உங்கள் தங்கைதான்!" என்றபடியே அவளையே குறுகுறுவென நோக்கினான்.

அப்போதும் புரியாமல் புருவம் சுருக்கிய திவாகரன், "தேனையா சொல்கிறாய்?" என்றதும், "ம்...ம்..." என்று தலையாட்டினான் அவன். "டேய்..." என்று திகைப்புடன் கூறிய திவாகரன் மறுநொடி சிரிக்கத் துவங்கினான்.

மஞ்சளும், சிவப்பும் கலந்த தாவணியில் நீண்ட கூந்தல் முதுகில் புரள, "இப்படிக் குளிர்கிறதே அம்பரி. விடிந்த பின் செல்லலாம் அல்லவா? காலங்கார்த் தாலேயே எழுப்பி விட்டு உயிரை வாங்குகிறார்கள்!" என்று புலம்பியபடி திரும்பிய தேன்மொழி வண்டியின் அருகே நின்றிருந்த குமரன் தன்னையே உற்று நோக்குவதைக் கண்டு,

"இந்தக் களவாணிப் பய ஏன் என்னையே இப்படிப் பார்க்கிறான்?" என்று முணுமுணுத்தபடி அவன் அருகே சென்றாள்.

அவள் தன்னருகே வருவதைக் கண்டு வேகமாக வண்டியின் புறம் திரும்பியவனை, "டேய் குமரா..." என்று விளித்தாள் அவள். அவள் டா... என்றதும், திரும்பியவன், "ஏய் என்னடி, டா என்கிறாய்? பல்லைக் கழட்டி விடுவேன்.



ஜாக்கிரதை!" என்றதும், "நீ மட்டும் என்னை டி எனலாமா? சரி, அதை விடு. கொஞ்ச நேரத்திற்கு முன் என்னை ஏன் அப்படிக் குறுகுறுவெனப் பார்த்துக் கொண்டிருந்தாய்?" என்று இடுப்பில் கை வைத்துக் கொண்டு கோபமாக வினவினாள் அவள்.

"அது ஒன்றுமில்லை அரிசி மூட்டை! இன்று நீ கொஞ்சமே கொஞ்சம் அழகாக இருப்பதால்தான் அப்படிப் பார்த்தேன்..." என்று அவளது ஜிமிக்கியைத் தனது ஒற்றை விரலால் ஆட்டி விட்டபடி கூற,

"டேய் அரிசி மூட்டை என்று சொல்லாதேடா. நான் ஒன்றும் குண்டாக இல்லை. நீ வாழை மட்டைக்கு டிரஸ் போட்டது போல் தேய்ந்து போயிருப்பதற்காக என்னை அரிசி மூட்டை என்பாயா? களவாணிப் பயலே!" என்று கத்தத் துவங்க, "ஹா ஹா..." என்று சிரித்தவன்,

"பார்த்தாயா அரிசி மூட்டை! உன்னை நம்பித்தான் இத்தனை ஆடுகளை வண்டியில் ஏற்றிக் கொண்டிருக் கிறோம். எப்போதும் போல் பாரபட்சம் பாராமல் உண்டு விடு. என்ன?" என்று கேலி செய்ய, "டேய், உன்னை..." என்றவள் வண்டியில் வைத்திருந்த தாம்பாளத்தை எடுத்து அடிக்கத் துவங்க,

"மாமா... காப்பாற்றுங்கள்!" என்று திவாகரனின் பின்னே சென்று ஒளிந்தான்.

அதுவரை அவன் வாயடித்ததைச் சிரிப்புடன் பார்த்துக் கொண்டிருந்தவன், "தேனு, என்ன இது? அவன் உன்னை விடப் பெரியவன். அவனை நீ வா, போ

என்பதா! மாமா என்று அழைத்துப் பழகு..." என்று கூறிக் குமரன் மனதைக் குளிர்விக்க, அவன் "மாமா... ரொம்ப நன்றி மாமா..." என்று காதைக் கடித்தான்.

அவன் அதட்டியதும் சற்று மிரண்டவள், பின் சிலிர்த்துக் கொண்டு, "இவனைப் போய் மாமா என்பதா? போங்கண்ணா..." எனக் கூறி விட்டு, "மவனே! உனக்கு இருக்கிறதடா!" என்று குமரனை மிரட்டி விட்டுச் சென்று விட்டாள்.

அவள் செல்வதை விரிந்த புன்னகையுடன் நோக்கி யவனின் தோளைத் தட்டிய திவாகரன், "டேய், என்ன நடக்கிறது இங்கே?" என்று கேட்க, "என் அத்தை மகளை நான் நேசிக்கக் கூடாதா? மாமா, நான் கல்லூரி முதலாமாண்டு வந்து விட்டேன். இப்போது பெரிய பையனாகி விட்டேன்... தெரியுமா?" என்றான்.

நன்றாக முறுவலித்து, "சரிதான்டா. அவள் உன் மண்டையை உடைப்பது உறுதியாகி விட்டது!" என்று கூறிக் கொண்டிருந்தவனை நோக்கி, "என்ன அப்படி ஒரு சிரிப்பு இருவருக்கும்?" என்றபடி அம்பரி அருகே வந்தாள்.

"டேய் குமரா, உன்னைச் செல்வம் மாமா கூப்பிடு கிறார் பார்!" என்று கூறியவளிடம், "ஏய்... என்னடி ஆளாளுக்கு என்னை வாடா, போடா என்கிறீர்கள்? உங்கள் இருவருக்கும் ஒன்று போட்டால்தான் சரி வரும்..." என்று சீறியவன், அவள் தலையில் ஙங்கென்று குட்டு வைத்து விட்டுச் சென்றான்.



"ஆ! அம்மா... நான் என்ன செய்தேன் என்று என்னைக் குட்டு வைக்கிறாயடா எருமை மாடு..." என்று கத்தியவளைப் பொருட்படுத்தாது, அவன் ஓடிச் சென்று விட, "பார் மாமா. எப்படி அடிக்கிறான் என்று! பரதேசி...." என்று தலையைத் தேய்த்தபடி சிணுங்கியவளிடம், "நீங்கள் மூன்று பேரும் வளர்ந்து விட்டதாகக் கூறினால் யார் நம்புவார்கள்? இன்னும் ஒருவரை யொருவர் அடித்துக் கொண்டு திரிகிறீர்கள்?" என்று கூறிச் சிரித்தான் அவன்.

"அவனுக்கு இருக்கிறது பாருங்கள்..." என்று கறுவிக் கொண்டே நின்றிருந்தவளை, வண்டிக்குப் பின்னே இழுத்தவன் அவள் கன்னம் வருடி, "நீ இன்று மிகவும் அழகாய் இருக்கிறாய் கண்ணம்மா!" என்று கூற, முகம் சிவந்து தலை குனிந்தாள் அவள்.

"அம்பரி!" என்று குமரனின் குரல் கேட்கவும், வேகமாக அவள் முகம் பற்றி அழுந்த முத்தமிட்டவன், "போ..." எனக் கூற, அவனைத் திரும்பித் திரும்பிப் பார்த்தபடி நடந்து சென்றாள் அவள்.

அதன் பின் ஒவ்வொருவராக வேனில் ஏற, இளசுகள் நான்கும் கடைசி இருக்கையைப் பிடித்துக் கொண்டனர்.

அப்பத்தாவை அருகில் உட்கார வைத்துக் கொண்டு அரட்டை அடித்தபடி பயணத்தைத் தொடர்ந்தனர். கோவிலில் இறங்கியதும் வேனிலிருந்து பொருட்களைக் குமரனும், திவாகரனும் இறக்க ஆரம்பித்து விட,

தேன்மொழியை இழுத்துக் கொண்டு கோவிலுக்குள் நடந்தாள் அம்பரி. கொடிக் கம்பம் நடப்பட்டு விட்டதால் அதிகாலையிலேயே கூட்டம் தள்ளியது கோவிலுக்குள்.

"அம்பரி, அம்மா தீச்சட்டி தூக்கப் போறா. அங்க போகாம இங்க என்ன புள்ள நின்னுக்கிட்டு இருக்கிற?" என்று பக்கத்து வீட்டுத் தங்கம் அக்கா குரல் கொடுக்க... அன்னையிடம் விரைந்தாள் அவள்.

முல்லையாற்றை நோக்கி அனைவரும் நகர, அவர்களுடன் சேர்ந்து கொண்டனர். மஞ்சள் புடவையில் ஆற்றில் மூன்று முறை முங்கி எழுந்து ஈரத்துணியுடன் வெளியே வந்தவர்களிடம் தகதகவெனத் தீ எரிந்து கொண்டிருந்த மண் சட்டியைக் கையில் கொடுத்தனர்.

கையில் சூடு தெரியாமல் இருக்க நிறைய வேப்பிலைகளைக் கொடுத்து அதன் மீது தீச் சட்டியை வைக்க, பெண்களின் குலவைச் சத்தத்துடன் சாமி சன்னதியை நோக்கி மற்றப் பெண்களுடன் ஓடத் துவங்கினார் சுப்புலட்சுமி.

மண் பானைச் சட்டி முழுதும் சிறு சிறு ஓட்டை களாகக் கொத்தப்பட்டிருந்த ஆயிரம் கண் பானையை வாங்கிக் கொண்டு அவர்களைத் தொடர்ந்து நடந்தனர் அம்பரியும், தேன் மொழியும்.

மூன்று பெரிய பெரிய கட்டைகள் முக்கோண வடிவில் நட்டு வைக்கப்பட்டிருக்க, அதைக் கும்பிட்ட படியே சன்னதியைச் சுற்றி வலம் வந்தனர். அதன் பின்பு



கூட்டத்தில் மிதந்து சாமி தரிசனத்தை முடித்துக் கொண்டு அன்னதானத்திற்காகப் போடப்பட்டிருந்த கூடாரத்திற்கு வந்தனர்.

முல்லை ஆற்றின் கரையில் ஏராளமான மக்கள் முங்கி எழுந்து வேண்டிக் கொண்டிருக்க, சிறுவர்களுக்குச் சேற்றாண்டி வேசம் என்கிற பெயரில் உடல் முழுதிலும் சேற்றை வாரிப் பூசி மாலையிட்டு, குங்குமமிட்டுச் சாமியை நோக்கி அழைத்துச் சென்று கொண்டிருந்தனர்.

ஆற்றைக் கடந்து உடையாரின் ஆலயத்துக்குச் சென்றார்கள். வழி நெடுகிலும் தின்பண்டங்கள் விற்பனை யாகிக் கொண்டிருக்க... சிறுவர்களும், சிறுமிகளும் மொய்த்துக் கொண்டிருந்தனர்.

ஒரு புறம் ஆறும், மறு புறம் மரங்களுமாய் இருந்த அந்தக் கோவிலை நோக்கி நடப்பது எப்போதும் அம்பரிக்குப் பிடித்தமான ஒன்று.

உடையாரைத் தரிசித்து விட்டு அங்கேயே ஆற்றின் அருகிலேயே அமர்ந்தனர். கோவிலுக்கு வந்து இறங்கிய பின்பு ஒரு முறை கூட அவள் திவாகரனைப் பார்க்கவே யில்லை. சுற்றும் முற்றும் தேடிக் கொண்டிருந்தவள் குமரனும், அவனும் உடையாரைத் தரிசித்து விட்டு நெற்றியில் திருநீற்றுக் கீற்றுடன் வெளிவருவதைக் கண்டு, "மாமா!" என்று கூவி அழைத்தாள்.

அதன் பின்பு நால்வரும் கதையடித்து விட்டு அன்னதானம் நடக்கும் இடத்திற்குச் சென்றனர்.

ஆளுக்கொரு சட்டியைத் தூக்கிக் கொண்டு பரிமாறு கிறேன் என்கிற பெயரில் சேட்டை செய்து கொண்டிருந் தனர். மாறி மாறி ஒருவரையொருவர் கேலி செய்து கொண்டும், சிரித்துக் கொண்டும் அலைந்தவர்கள் கடைசியில் உண்ண அமர்ந்தனர். எப்போதும் போல் செல்வம் அவர்களுக்குப் பரிமாற... சிரிப்பும் சந்தோச முமாய் அன்றைய நாள் மகிழ்ச்சியுடன் நிறைவு பெற்றது.

திருவிழா முடிந்த மறு மாதத்தில் அம்பரி, தேன் மொழியின் பன்னிரண்டாம் வகுப்புத் தேர்வு முடிவுகள் வெளி வந்தன. பதினோராம் வகுப்புவரை திவாகரனின் கட்டாயத்தால் திக்கித் திணறித் தேர்ச்சி பெற்று வந்த அம்பரிக்குப் பன்னிரண்டாம் வகுப்பிற்கு வந்ததும் சுத்த மாகப் படிப்பில் ஈடுபாடற்றுப் போனது.

பாதி நாட்கள் வகுப்பிற்குச் செல்லாமல் தோப்பிற்கு ஓடி விடுவாள். தேன்மொழியும் கூட்டுதான் என்பதால் பகலில் இருவரையும் ஏதேனும் தோப்பு, தோட்டத்தில் காணலாம்.

அன்று தேர்வு முடிவுகள் வெளி வரப் போகிற தென்கிற அக்கறை சிறிது கூட இல்லாமல் வயலை வேடிக்கை பார்த்தபடி பல் துலக்கிக் கொண்டிருந்த வளைக் கண்டு, "குள்ளச்சி! பாஸாகி விடுவாய்தானே?" என்று கலக்கத்துடன் வினவினான் திவாகரன். "மாமா, பாஸாகாவிட்டாலும் என்ன கஷ்டம் வந்து விடப் போகிறது? ஒரு வாரமாக ஒரே கேள்வியைக் கேட்டுத் தொல்லை கொடுக்கிறாய். ச்சே!" என்று சலித்துக் கொண்டவளிடம்,



"அடக் கழுதை!" என்று தலையில் அடித்துக் கொண்டான் திவாகரன்.

பேப்பர் விற்கும் கடையில் வெகு நேரம் காத்திருந்து தேர்வு முடிவுகள் வெளியிடப்பட்டிருந்த பேப்பரை வாங்கிப் பரபரப்புடன் அம்பரியின் தேர்வு எண்ணைத் தேடினான். எத்தனை முறை தேடியும் அவளது தேர்வு எண் மட்டும் கிட்டவேயில்லை.

'மக்குக் கழுதை. ஃபெயிலில் ஆகித் தொலைத்து விட்டாள்.' சைக்கிளைத் தள்ளிக் கொண்டு வேகமாக வீட்டிற்குள் நுழைந்தவனைக் கண்டு அம்மத்தா, "என்ன கண்ணு, அந்த கழுத பாஸாகலையா? அவளுக்குப் படிப்பெல்லாம் வராது கண்ணு. வீட்டு வேலையைப் பார்த்துக்கிட்டு மூலையில கிடக்கத்தான் லாயக்கு!" என்று எட்டு வீட்டிற்குக் கேட்கும்படி தன் குரலை உயர்த்தத் துவங்கினார்.

அவர் கத்தியதில் மேலும் கோபமுற்று உள்ளே நுழைந்தவனின் கண்களில் பட்டது, கிண்ணத்திலிருந்த திராட்சையை ரசித்து உண்டபடி தொலைக்காட்சியில் ஈடுபாட்டுடன் இணைந்து போயிருந்த அம்பரிதான். விறுவிறுவென நடந்து சென்று டிவியை அணைத்த வனைக் கண்டு, "ப்ச்... என்ன மாமா இது? நல்ல காட்சியில் அணைத்து விட்டாயே!" என்றவளிடம், "தடிக் கழுதை. பரிட்சையில் ஃபெயில் ஆகி விட்டு ஜாலியாக அமர்ந்து டிவி பார்த்துக் கொண்டிருக்கிறாய். படிக்காமல் வகுப்பைக் கட் அடித்து விட்டு ஊர் சுற்றிக் கொண்டு

திரிந்ததால்தானே பாஸாக முடியாமல் போனது. ம்? உன்னை..." என்றவன் அருகேயிருந்த பிரம்பை எடுத்து அவளை அடிக்கத் துவங்க... என்னவென்று சமையலறையிலிருந்து வெளியே வந்த சுப்புலட்சுமியும்... அவள் ஃபெயில் ஆகி விட்டாள் என்பது தெரிந்து தானும் திட்டத் துவங்கினார்.

"மாமா... மாமா... வேண்டாம் மாமா. நான்தான் எனக்குப் படிக்கப் பிடிக்கவில்லை என்றேனே. எனக்கும் சேர்த்துத்தான் நீ படிக்கிறாயே. அது போதாதா?" என்று கத்தியவளிடம், "கழுதை! எதிர்த்தா பேசுகிறாய்?" என்று மேலும் அடிகளை வழங்கியவனை அப்போது வீட்டினுள் நுழைந்த செல்வம் தடுத்து நிறுத்தினார்.

"விடு... விடு கண்ணு..." என்றவரின் பின்னே ஒளிந்து கொண்டு, "மாமா... காப்பாற்றுங்கள் மாமா!" என்று கத்தினாள் அவள்.

"பெண் பிள்ளைதானே. படித்துப் பட்டணத்திற்கா வேலைக்குப் போகப் போகிறாள்? விடுடா!" என்றவரிடம், "நீங்கள் அனைவரும் செல்லம் கொடுப்பதால்தான் இவள் இப்படித் திரிகிறாள். ஒழுங்காகப் படிக்கும்படி நீங்கள் யாரேனும் கண்டித்திருந்தால் இப்படியாகி இருப்பாளா?" என்று திட்டியவன், சிறிது யோசித்து, மீண்டும் பேப்பரைத் திறந்து தேன்மொழியின் தேர்வு எண்ணைத் தேடினான்.

பின், "திருட்டுக்கழுதைகள். இரண்டு பேரும் ஃபெயில் சித்தப்பா. எங்கே அவள்? தேன் எங்கே?" என்றவனுக்குப் பதிலாக வாசலில் நின்றிருந்த தேன்மொழியின் அழுகைக்



குரல்தான் கேட்டது. "உனக்குப் பயந்து கொண்டுதான் வாசலிலேயே நிற்கிறாள். நீ திட்டி அடிப்பாய் என்று பயந்து என்னைத் துணைக்கு அழைத்துக் கொண்டு வந்தாள்!" என்று செல்வம் சிரிக்க... தேம்பித் தேம்பி அழுதபடி மெல்ல உள்ளே நுழைந்தாள் தேன்மொழி.

"அ... அண்ணா!" என்று தொடங்கியவளிடம், "கழுதை! இவளுடன் சேர்ந்து கொண்டு நீயும் தோப்பில் சுற்றித் திரிந்து கொண்டு இருந்தாயல்லவா? அப்போதே மரத்தில் கட்டி வைத்துத் தோலை உரித்திருக்க வேண்டும். திருட்டுக் கழுதைகள்!" என்றவன், அவள் தலையில் குட்டு வைக்க, ஓவென அழுகத் தொடங்கி விட்டாள் தேன்மொழி.

இருவரும் ஒவ்வொரு புறம் முகத்தைத் தூக்கி வைத்தபடி நின்று கொண்டிருக்க... கோபத்துடன் கத்திக் கொண்டிருந்த திவாகரனைச் செல்வம் சமாதானம் செய்து கொண்டிருந்த வேளை...

"மாமா! இதுகள் இரண்டும் பரிட்சையில் ஃபெயிலாமே. ஹா... ஹா... மக்கு முண்டங்கள். இதுகளை இத்தனை வருடமாகப் படிக்க வைத்துக் காசை வீணாக்கியதுதான் மிச்சம். சாணி அள்ளச் சொல்லி வீட்டோடே வைத்திருக்க வேண்டும். தெண்டங்கள்!" என்று பயங்கரப் புன்னகையோடு குமரன் நுழைய, ஒரு நொடி ஒருவரையொருவர் பார்வையைப் பரிமாறிக் கொண்ட அம்பரியும், தேன்மொழியும் மறு நொடி, தேன்மொழி திவாகரனின் கையிலிருந்த பிரம்பைப் பிடுங்கிக் கொண்டு அவனை

நோக்கி ஓட... அம்பரியோ தன்னருகிலிருந்த தலையணையைத் தூக்கிக் கொண்டு அவனிடம் ஓடினாள். இருவரும் சேர்ந்து அவனை அடித்து நொறுக்க...

"அய்யோ, அம்மா ராட்சசிகளா! விடுங்கடி. ஏய் அரிசி மூட்டை உன்னைப் பொங்க வைக்காமல் விட மாட்டேன்டி..." என்று கத்திய குமரனைப் பார்த்து அவ்வளவு நேரமாகக் கோபத்துடன் நின்று கொண்டிருந்த திவாகரனும் கலகலவெனச் சிரிக்கத் துவங்கினான்.

## 10

ஒரு காதல் கடிதம் விழி போடும்...
உன்னைக் காணும் சபதம் வரக் கூடும்...
நீ பார்க்கும் பார்வைகள் பூவாகும்...
நெஞ்சுக்குள் தைக்கின்ற முள்ளாகும்...
கண்ணே... என் கண் பட்ட காயம்...
கை வைக்கத் தானாக ஆறும்...
முன்னாலும் பின்னாலும் தள்ளாடும்...
செம்மேனி என் மேனி
உன் தோளில் ஆடும் நாள்...!

பரிட்சையில் தோல்வியுற்றவர்களுக்கென அடுத்த இரண்டு மாதத்தில் நடந்த மறுதேர்விலும் அம்பரியும், தேன்மொழியும் தோல்வியடைந்து விட்டதால் இருவரையும் போடியில் ஒரு டுடோரியல் கல்லூரியில் சேர்ந்து விட்டான் திவாகரன். மாணிக்கத்திற்கும், சுப்புலட்சுமிக்கும் மகளைப்



படிக்க வைப்பதில் அப்படி ஒன்றும் ஈடுபாடு இல்லாவிடினும் அம்பரியை வீட்டில் வைத்து அவள் செய்யும் அட்டகாசங்களைப் பொறுத்துக் கொள்வதற்குப் படிக்க அனுப்புவதே மேல் என்று திவாகரனிடம் சரியெனத் தலையாட்டி விட்டனர்.

தனது மூன்றாமாண்டு கல்லூரிப் படிப்பை முடித்து விட்ட திவாகரனும், மேல் படிப்பைத் தொடர மிகவும் ஆசைப்பட்டான். அதே கல்லூரியிலேயே முதுகலைப் படிப்பைத் தொடர எண்ணி விசாரித்தான்.

இளங்கலைப் படிப்பைப் போலல்லாது முதுகலைப் படிப்பிற்கான கட்டணங்கள் பல ஆயிரங்களில் இருந்ததில் கொஞ்சம் கலங்கிப் போனான். இந்த முறை அம்மத்தாவின் உதவியை அவனால் மறுக்க இயலாமல் போனது.

இப்போதும் தனது விருப்பத்தை வெளிப்படுத்தாமல் மாணிக்கத்துடன் தோப்பிற்குச் சென்று கொண்டிருந்தவனை அம்பரிதான் பிடித்து வைத்து விசாரித்தாள்.

"மாமா, நேற்று உன் தோழன் அந்த முட்டை போண்டா சேகரைப் பார்த்தேன். நீ மேல் படிப்பு படிக்க விருப்பப் படுவதாகக் கூறினானே? நீ ஏன் மாமா இதைப் பற்றி என்னிடமும், அப்பத்தாவிடமும் ஒரு வார்த்தை கூடச் சொல்லவில்லை?" என்றவள், சற்றுத் தயங்கி, "கட்டணம் அதிகமாக இருக்கிறதா மாமா?" என்று வினவினாள்.

திராட்சைத் தோட்டத்தில் கொத்துக் கொத்தாகத் தொங்கிக் கொண்டிருந்த திராட்சைகளுக்கு மத்தியில் சிலுசிலு காற்றில் அமர்ந்திருந்தனர் இருவரும்.

அவளது கேள்வியைக் கேட்டுத் தலை குனிந்தபடி அமர்ந்திருந்த திவாகரன், சற்று நிமிர்ந்து அருகே கிடந்த குச்சியால் மண்ணைக் கிளறியபடி, "ம்... ம்..." என்றான்.

அவன் ஆம்... எனத் தலையாட்டியதும் அவனருகே வந்து "ப்ச்..." என்றபடி அவனது கையிலிருந்த குச்சியைப் பறித்தவள், "இதை முன்னமே சொல்வதற்கென்ன மாமா? என் அன்னை அறியாமல் என் தந்தையின் சொத்தை ஒன்றும் நான் உனக்குத் திருடித் தந்து விடப் போவதில்லை. அப்பத்தாவிடம் தானே உதவி கேட்கலாம் என்கிறேன்..." என்று கூறினாள் அவள்.

"எனக்கு மிகவும் கஷ்டமாக இருக்கறது பரி. நான்... நான் யாருக்கும் பாரமாக இருக்க விரும்பவில்லை. நான் படித்த படிப்பிற்குக் கிடைக்கும் வேலையைப் பார்க்கிறேனே..." என்றவனிடம்,

"மாமா, முட்டாள் தனமாகப் பேசாதே. மேற்படிப்பு படித்தால்தான் நல்ல வேலைக்குப் போக முடியுமென்றால் நீ அதையே தொடரலாமே! எதற்காக வேண்டாம் என்கிறாய்? மாமா, நீ யாருக்கும் இங்கே பாரமாக இல்லை. உதவியாகத் தானிருக்கிறாய். மூன்று வேளை என் வீட்டில் உண்பதற்காக நீ ஓடாகத் தேய்ந்து உழைப்பதை நானும் பார்த்துக் கொண்டுதானே இருக்கிறேன். இந்தக் கஷ்டம் தீர வேண்டாமா? நீ படி மாமா. எனக்காக..." என்று கண்ணீர் ததும்பக் கேட்டவளை இழுத்துத் தன்னோடு அணைத்துக் கொண்டான் திவாகரன்.



"நிச்சயம் படிக்கிறேன் கண்ணம்மா. அம்மத்தாவிடம் இன்றே பேசுவோம்..." என்றவன் அவளை விலக்கி, "ந...நன்றி பரி!" என்று கூற, அவன் நெற்றி முடியைத் தன் கைகளால் ஒதுக்கி அழுந்த முத்தமிட்டு எழுந்து சென்றாள்.

அவள் செல்வதையே இமைக்க மறந்து நோக்கியவனுக்கு ஏழேழு ஜென்மத்திற்கும் அவளே தன் மனைவியாக வந்து வாழ்வின் ஒவ்வொரு நொடியையும் அவளது அருகாமையின் நிம்மதியை, மகிழ்ச்சியை, கொள்ளை கொள்ளையான அவளது காதலை அனுபவித்து வாழ வேண்டும் என்று தோன்றியது.

வீட்டிற்குத் திரும்பிய அம்பரி நேராக அப்பத்தாவிடம் சென்று விசயத்தைக் கூறி விட்டாள். "உன் தாத்தன் போட்ட நகை எல்லாம் இரும்புப் பெட்டிக்குள்ளதானே கிடக்கு. அதுல ஒன்ன எடுத்து உன் மாமன் படிப்புக்குக் கொடுக்க வேண்டியதுதான். காலம் போன காலத்துல நானா நகை போட்டுக்கிட்டுத் திரியுறேன்? எல்லாம் உனக்குன்னு உங்காத்தா கண்ணுல படாம காத்து வச்சிருந்தேன்.

"இப்ப அதை உன் மாமனுக்குக் கொடுத்துடப் போறேன். உனக்குக் கொடுக்கிறதும், அவனுக்குக் கொடுக்கிறதும் ஒண்ணுதான கண்ணு? நீ கவலைப்படாம இரு. மாமன் படிப்பை நான் பார்த்துக்கிறேன்..." என்று வள்ளியம்மை உறுதிப்படுத்தியதும் சந்தோசம் பீறிட்டது அம்பரிக்கு.

சிறிது நேரத்தில் வீடு திரும்பிய திவாகரனை வாசலிலேயே நிறுத்தி, அப்பத்தா படுத்திருக்கும் கயிற்றுக் கட்டிலின் அருகே கூட்டிச் சென்றாள். "அதற்குள்ளாகவா பேசி விட்டாய் பரி?" என்று கேள்வி கேட்டவனிடம், "நீ வா மாமா!" என்றழைத்துக் கொண்டு சென்றாள்.

"வா கண்ணு. உட்காரு..." என்று தன்னருகே அமர்த்திக் கொண்ட வள்ளியம்மை அவனது படிப்பிற்கான கட்டணங்களைப் பற்றி விசாரித்தார்.

"இதைச் சொல்ல ஏன் கண்ணு தயங்குற? அம்மத்தாளை ஏன் நீ அந்நியமா பார்க்குற...? நான் உன்னைப் படிக்க வைக்க மாட்டேனா? நீ கவலையே பட வேணாம். அம்மத்தா நகையைக் கொடுக்கிறேன். நீ உன் படிப்பை முடி. சரியா ராசா?" என்றவரிடம், "அம்மத்தா நகையை விற்றுத்தான் படிக்க வேண்டுமென்று என்ன இருக்கிறது? மாமா கேட்டால் நிச்சயம் கோபப்படுவார். அதை விட அத்தைக்குத் தெரிந்தால் மிகவும் கேவலமாகப் பேசுவார்கள். நான் இதுவரை படித்த படிப்பிற்கு ஏற்ற ஏதேனும் வேலையைத் தேடிக் கொள்கிறேன். இது வேண்டாம் அம்மத்தா!" என்று பதறியபடி கூறினான் திவாகரன்.

"உன் மாமனும், அத்தையும் என்னத்துக்குப் பேசணும்? அது உன் தாத்தா எனக்காகச் செய்து கொடுத்த நகை. அதை என்ன வேணாலும் செய்யுற உரிமை எனக்கு இருக்கு. நியாயமாப் பார்த்தா அந்த நகையெல்லாம் உன் அம்மாவிற்குச் சேர வேண்டியது



தான் ராசா. மறுப்புச் சொல்லாம வாங்கிப் படிப்பை முடி. மற்றதை அப்புறம் பார்க்கலாம். என்ன?" என்றவரிடம், அவன் பதிலேதும் கூறாமல் இருக்க... "மாமா, அப்பத்தா தான் இவ்வளவு வற்புறுத்துகிறார்களே... இன்னும் என்ன யோசிக்கிறாய்? அப்பத்தாவின் நகையைப் பங்கு கேட்கும் உரிமை அம்மாவிற்குக் கிடையாது மாமா. அது அத்தைக்குச் சேர வேண்டிய நகையென்றுதான் அப்பத்தா சொல்கிறதே. தயவு செய்து வாங்கிக் கொள் மாமா!" என்று அம்பரியும் கெஞ்ச, அரை மனதுடன் ஒரு வழியாகச் சம்மதித்தான் திவாகரன்.

அன்று விடுமுறை நாள் என்பதால் அம்பரியின் வீட்டிற்கு வருகை தந்திருந்தான் குமரன். கையில் பெரிய பையுடன் வந்தவன், "அம்பரி!" என்றழைத்துக் கொண்டே உள்ளே நுழைந்தான்.

"இந்தா காரப் பொரியும், கடலை உருண்டையும். அம்மா கொடுக்கச் சொன்னார்கள்..." என்று அவளிடம் நீட்டினான். "பெரியம்மா செய்த உருண்டையா?" என்று ஆசையாக வாங்கிக் கொண்டவள், "கிளம்புகிறேன்..." என்றவனிடம், "குமரா, என்னைச் செல்வம் மாமாவின் தோப்பில் இறக்கி விட்டுச் செல்லடா. தேன் அங்கேதான் இருக்கிறாள்..." என்று கெஞ்சி அவனுடைய சைக்கிளிலேயே ஏறித் தேன்மொழியின் தோப்பிற்குச் சென்றாள்.

தேன்மொழி இருக்கிறாள் என்றதுமே குஷியாகிப் போன குமரன், "அதை விட எனக்கு என்ன வேலை தங்கச்சி? வா வா... அண்ணன் உன்னை இறக்கி விடு

கிறேன்..." எனக் கூறி ஏற்றிக் கொண்டான். மாந்தோப்பின் உள்ளே சென்ற இருவரையும் வரவேற்ற செல்வம், "தேனு!" என்று குரல் கொடுக்க, மஞ்சள் தாவணியில் ஓடோடி வந்தாள் தேன்மொழி.

அவளைக் கண்டதும் குமரனின் மனம் ஜில்லென்று ஆகி விட... அவனது பார்வையைக் கண்ட அவளும், "இவன் எதற்காக இப்போதெல்லாம் இப்படிப் பார்த்து வைக்கிறான்..." என்று அவனை முறைத்தபடி அருகே வந்தாள்.

"அவனை ஏன்டி முறைத்துக் கொண்டே வருகிறாய்?" என்று அதட்டிய அம்பரியிடம், "நீ என்னடி அவனுக்கு வக்காலத்தா? மாங்காய் திருடும் களவாணியைப் போல் பார்த்துத் தொலைத்தால் நான் முறைக்காமல் என்னடி செய்வேன்?" என்று அவள் கேட்க... 'திருட்டு முழியாகவா இருக்கிறது நம் பார்வை... ம்...' என்றபடி யோசனையில் ஆழ்ந்து விட்டான் குமரன்.

கூடை, கூடையாக மாம்பழங்கள் லாரியில் குவிக்கப் பட்டுக் கொண்டிருப்பதைக் கண்ட அம்பரி ஒரு மாங்கனியை எடுத்துச் சுவைத்தபடி தேன்மொழியிடம் அரட்டையில் இறங்க, செல்வத்துடன் சேர்ந்து தானும் மாம்பழங்களை வண்டியில் குவித்தான் குமரன்.

"குமரா, அத்தை கடலை உருண்டையும், காரப் பொரியும் கொடுத்தார்களாமே. நீ எனக்குக் கொண்டு வரவேயில்லை? எங்கேடா என் பங்கு?" என்று குரல் கொடுத்தாள் தேன்மொழி.



"அரிசி மூட்டை! தின்கிற விசயத்தில் மட்டும் சரியாகப் பங்கு கேட்டு விடு. உன் வீட்டில் அத்தையிடம் கொடுத்து விட்டுத்தான்டி நான் அம்பரியின் வீட்டிற்குச் சென்றேன்," என்றான் அவன். "கொடுத்து விட்டாயா? சரி சரி..." என்று மண்டையை உருட்டியவளைக் கண்டு தலையில் அடித்துக் கொண்டான் குமரன்.

அதன் பின்பு அங்கேயும், இங்கேயும் திரிந்து கொண்டிருந்த அம்பரி கடைசியில் செல்வம் மாமாவுடன் வண்டியில் ஏறிச் சென்று விட, தேன்மொழியுடன் தோப்பிற்குள் தனியாக நடந்தான் குமரன். பேண்ட் பாக்கெட்டுக்குள் கை விட்டுக் கொண்டு பலத்த யோசனையுடன் நடந்து கொண்டிருந்தவனைத் திரும்பிப் பார்த்த தேன்மொழி,

"டேய்... இல்லாத மூளையை வைத்து அப்படி என்னதான்டா யோசித்துக் கொண்டிருக்கிறாய்?" என்றபடி கையில் வைத்திருந்த குச்சியால் மரத்திலிருந்த மாங்காயைப் பறிக்க முயன்று கொண்டிருந்தாள்.

எட்டி எட்டி அவள் குதித்துக் கொண்டிருந்த அழகைக் கண்டவனுக்கு, முகம் மென்மையாக... அவள் கையைப் பற்றிக் குச்சியைச் சற்று ஓங்கி அடித்தான். மாங்காய் கீழே விழுந்து விட்டதில் மகிழ்ச்சியானவள்... நிமிர்ந்து அவன் முகத்தைப் பார்க்க... அவனது பார்வையும், முகமும், மாங்காய் கீழே விழுந்த பின்பும் தன் கையை விடாமல் பற்றியிருந்த விதமும் கிலியூட்ட... "கையை விடுடா!" என்று உதறினாள்.

"மாட்டேன்..." என்றபடி மேலும் இறுகப் பற்றிய வனைக் கண்டு பதறி, "குமரா, என்னடா ஆகி விட்டது உனக்கு? ஏன் இப்படியெல்லாம் செய்கிறாய்...? கையை விடுடா!" என்று கெஞ்சியவளைக் கண்டு... பற்றியிருந்த கையால் அவளை அருகே இழுத்து, மறு கையால் அவள் ஜிமிக்கையை ஆட்டி,

"தேனு, உன்னை எனக்கு மிகவும் பிடித்திருக்கிறதடி. நாம் இருவரும் கல்யாணம் செய்து கொள்வோமா?" என்று வினவ... திகைத்த விழிகளுடன் வாயைப் பிளந்தபடி நின்று விட்டாள் தேன்மொழி.

அவளைக் கண்டு நகைத்தவன், "என்னடி... அப்படிப் பார்க்கிறாய்?" என்று அவள் மோவாயைப் பிடித்து ஆட்ட... சட்டென அவன் கையைத் தட்டி விட்டவளுக்கு வழக்கம் போல் அழுகை வந்து விட்டது.

கையிலிருந்த குச்சியைக் கீழே எறிந்து விட்டு மரத்தடியில் அமர்ந்து ஓவென அழுதவளைச் சமாதானப் படுத்தத் தெரியாமல் திண்டாடிப் போனான் அவன்.

"ஏய்... அழாதேடி. எருமை, எருமை... உன்னை நம்பி நான் என் காதலைச் சொன்னேன் பார். என்னை உதைக்க வேண்டும். நீ இன்னமும் வளராமலேயே இருக்கிறாயேடி? ஏய்... என்னைப் பாருடி. கிறுக்கி..." என்று அவன் ஏதேதோ சொல்லிச் சமாதானப் படுத்தப் பார்க்க...

எதற்கும் அசையாமல் தேம்பித் தேம்பி அழுது கொண்டிருந்தாள் அவள்.



"உன்னை ஒன்றும் செய்ய மாட்டேன்டி. உனக்கும் என்னைப் பிடித்திருக்கிறதா இல்லையா என்றுதான் கேட்கிறேன். ஏன்டி... பதிலே சொல்லாமல் ஒப்பாரி வைத்து என் உயிரை வாங்குகிறாய்? மடக்கழுதை!" என்று அவன் திட்டித் தீர்த்துக் கொண்டிருந்த வேளை... "என்ன சண்டை இருவருக்கும்? ஏன் அவள் அழுகிறாள்?" என்றபடியே அருகே வந்தார் செல்வம்.

தந்தையைக் கண்டதும், "அப்பா..." என ஓடிச் சென்று கட்டிக் கொண்டவள்... பின் தேம்பியபடியே, "அப்பா... அப்பா... இவன்... இவன்... என்னை..." என்றபடி அவன் முகத்தை நோக்கினாள்.

"அய்யோ! இவள் பேபி ஹார்லிக்ஸ் குடிக்கும் பச்சைக் குழந்தை என்றறியாமல் மனதை வெளிப்படுத்தியாயிற்றே? இப்போது ஊரெல்லாம் சொல்லி என் மானத்தை வாங்கப் போகிறாள்..." என்று தலையில் கை வைத்துக் கொண்ட குமரன், வேறு புறம் திரும்பிக் கொள்ள...

"சொல்லும்மா. அவன் என்ன செய்தான்?" என்று வினவிய தந்தையிடம், அவள், "எ...என்னைக் குட்டி வைத்து விட்டானப்பா!" எனக் கூற, அவள் புறம் திரும்பிய குமரன் அவளை ஆச்சரியத்துடன் நோக்கினான்.

"சரி கண்ணு. இவனை நான் பார்த்துக் கொள்கிறேன். நீ வீட்டிற்குக் கிளம்பு. திவாகரன் உன்னை அழைத்துச் செல்ல வந்திருக்கிறான் பார். செல்!" என்று அனுப்பி வைத்தார். அவள் சென்றதும் அவன் புறம்

திரும்பியவர், "டேய், வளர்ந்த பெண்ணை அடிக்காதே என்று நான் எத்தனை முறை சொல்லியிருக்கிறேன்? உன்னை..." என்றவர் அருகேயிருந்த மாங்காய்களை எடுத்து அவன் மீது எறிய... "அய்யோ! மாமா... வலிக் கிறது. வேண்டாம்," என்று துள்ளியவன்...

"யோவ்! அப்பனும், மகளும் இன்னமும் வளராம லேயே இருக்கிறீர்கள்? அவள் என்னடாவென்றால் காதலிக்கிறேன் என்று சொன்னால் ஒப்பாரி பாடுகிறாள். நீ என்னடா வென்றால் மாங்காயை வைத்து அடிக் கிறாய்? என்ன தான்யா பிரச்னை உங்களுக்கு?" என்று கத்தியவன்... அடிப்பதை நிறுத்தி, நின்று அவனை முறைப்பவரைக் கண்டு, தான் உளறி விட்டதைக் கண்டு கொண்டான்.

"அ... அது வந்து மாமா..." என்றவனிடம், "காதலிக் கிறேன் என்று சொன்னாயா? அடேய்..." என்று பாய்ந்த வரிடம், "ஆமாம், காதலிக்கிறேன். என்ன இப்போது? சொந்த அத்தை மகளை நான் காதலிப்பது தவறா? என்னை விட உம் மகளுக்கு ஏற்றவனை எந்தச் சீமை யிலிருந்து கூட்டி வருவீர்கள்?" என்று திமிராக வினவி னான். "டேய்... என் மகளின் அழகிற்கும், அறிவிற்கும் நான் பட்டணத்திலிருந்து மாப்பிள்ளையைக் கூட்டி வருவேன்டா." என்று அவர் மீண்டும் சீற... "அடேங்கப்பா! நீங்கள் கூட்டி வரும்வரை நான் வேடிக்கை பார்த்துக் கொண்டிருப்பேனா? தூக்கிக் கொண்டு போய்த் தாலி கட்டி விட மாட்டேன்?" என்று அவனும் பதிலுக்குச் சீறினான்.



"டேய்... உன்னை உன் ஆத்தா - அப்பனிடம் சொன்னால்தான்டா சரிப்பட்டு வருவாய். உன் தந்தையிடம் பேசிக் கொள்கிறேன். நடடா வீட்டிற்கு..." என்றவரிடம், "ஓ, தாராளமாக வருகிறேன். எனக்கு என்ன பயம்? என் அத்தை மகளைக் கல்யாணம் முடிக்கும் உரிமை என்னைத் தவிர யாருக்கு இருக்கிறதென்றுதான் பார்ப் போமே. வாருங்கள் என் தந்தையிடம் பேசலாம்!" என்று அவரது கையைப் பற்றியவனை, "அடேய் அடேய்... உங்கப்பன் என்ன பதில் கூறுவான் என்று எனக்குத் தெரியாதா? என் மகனுக்கா டா பெண் கொடுக்க மாட்டேன் என்கிறாய் என என் மானத்தை வாங்கிச் சந்தி சிரிக்க வைத்து விடுவான். சின்னப் பெண்ணடா அவள். கொஞ்ச காலமேனும் பொறுக்கக் கூடாதா?" என்றவரிடம்,

"ம்ம்..." என்று யோசிப்பது போல் பாவனை செய்தவன், "சரி மாமா. நானும் படிப்பு முடித்து வேலைக்குச் செல்ல வேண்டுமே. இதைப் பற்றி நாம் பிறகு பேசிக் கொள்ளலாம். சரிதானே?" என்று கேட்க, எல்லாம் என் தலையெழுத்து என்று தலையிலடித்துக் கொண்டார் செல்வம்.

"விடு மாமா. இதெல்லாம் நமக்குள் சகஜம்தானே?" எனக் கூறி அவருடன் ஜோடி போட்டுக் கொண்டு அவர் வீட்டிற்கே சென்று, அத்தையின், "குமரன் கண்ணு... உனக்காகத்தான் தலைக் கறி சமைத்து வைத்திருக் கிறேன்," என்கிற கொஞ்சல் மொழியைக் கேட்டுக் கொண்டு மூக்குப் பிடிக்கத் தின்று விட்டுத் தேன்மொழி

யிடம் வம்பு செய்து விட்டுத்தான் புறப்பட்டான். வெளியே முறைப்பது போல் காட்டிக் கொண்டாலும் செல்வத்திற்கும் உள்ளூரச் சிரிப்புதான்.

அதன் பின்பு குமரனைக் கண்டாலே ஓடி ஒளியத் துவங்கினாள் தேன்மொழி. அவன் வீட்டிற்கு வந்தால் அறையை விட்டு வெளியே வராமல் படிக்கிறேன் என்கிற பெயரில் அமர்ந்து கொள்வது. அவன் தோப்பிற்கு வந்தால் தந்தையின் அருகிலேயே அமர்ந்து கொள்வதெனக் கண்ணாமூச்சி ஆடிக் கொண்டிருந்தாள்.

அம்பரி கூட இரண்டொரு முறை, "என்னடி, ஏன் குமரனைக் கண்டால் ஓடுகிறாய்?" என்று வினவ, "அவனுக்கும் எனக்கும்தான் ஆகவேயில்லையே. அதனால் தான்!" எனப் பதிலளித்து விட்டுத் தனது பணியைத் தொடர்ந்தாள்.

அவள் இப்படி நடந்து கொள்வதைக் கண்ட குமரனுக்குத்தான் வேதனையாகிப் போனது. உம்மென்ற முகத்துடன் வேறு பக்கம் பார்ப்பவனைக் கண்டு செல்வம் நமுட்டுச் சிரிப்பு சிரிக்க... "யோவ், அப்பனுக்கும், மகளுக்கும் என்னைப் பார்த்தால் கேனையனாகத் தெரிகிறது. எப்படியும் அவள் கழுத்தில் தாலி கட்டப் போவது நான்தானே? அன்று வைத்துக் கொள்கிறேன் இருவரையும்..." என்று கறுவிக் கொண்டான்.

அவளது நாடகத்தைக் கண்டு கொண்டவனும் அவள் எதிர்பாராத போது அவள் முன்னே தோன்றி அவளை அதிர்ச்சிக்குள்ளாக்குவதை வழக்கமாக்கிக் கொண்டிருந்தான். அன்றும் அப்படித்தான் வகுப்பிற்குச் சென்று விட்டு அம்பரியுடன் சைக்கிளில் இறங்கியவள் அவளுக்கு டாட்டா காட்டி விட்டுத் தன் வீட்டை நோக்கி நடந்தாள். சிறிது தூரம் சென்றிருக்கையில் அவள் முன்னே சர்ரென சைக்கிளை நிறுத்திச் சிரிப்புடன் இறங்கினான் குமரன். "அரிசி மூட்டை, வீட்டிற்குத்தானே செல்கிறாய்? நான் இறக்கி விடுகிறேன், வா..." என்று அழைத்தான்.



எதிர்பாராமல் அவனைக் கண்டதிலேயே அதிர்ந்து போன தேன்மொழி, "ம்ஹூம். நான் வர மாட்டேன்..." என்று தலையாட்டி மறுக்க, "இப்போது நீ வரவில்லையென்றால் உன்னைத் தூக்கித் தோள் மீது சுமந்து கொண்டு வீடுவரை நடந்து செல்வேன். பரவாயில்லையா?" என்றவன் சைக்கிளை ஸ்டாண்ட் போட்டு விட்டு அவளருகே வர, "ரௌடிப் பயலே! எங்கய்யன் கிட்ட சொல்கிறேன் பார்..." என்றபடியே நடந்து சென்று சைக்கிளில் அமர்ந்தாள்.

மனம் முழுதும் நிம்மதி பரவ, விசிலடித்தபடி சைக்கிளை ஓட்டிச் சென்றவன் வழியில் ஆள் அரவமற்ற இடத்திலிருந்த பெரிய அரசமரத்தின் அருகே வண்டியை நிறுத்தினான்.

"இங்கே ஏன்டா நிறுத்தினாய்? நான் வீட்டிற்குப் போக வேண்டும். அம்மா தேடுவார்கள்!" என்று பதறியவளிடம், "அதெல்லாம் தேட மாட்டார்கள். கேட்டால் குமரன் மாமாவுடன்தான் இருந்தேன் என்று சொல்... என்ன?" என்று அதட்ட,

"மாமாவா?" என்றவள்... "நீ எப்படியோ போ. நான் வீட்டிற்குப் போகிறேன்," என்று முன்னே நடக்கத் தொடங்க... "ஏய்... நில்லுடி. நில் என்கிறேனல்லவா!" என்றபடியே அவள் அணிந்திருந்த தாவணியைப் பற்றினான்.

அவன் தாவணியைப் பற்றியதும் விதிர்விதிர்த்துப் போனவளுக்கு அழுகை கண்களில் நிறைய... "டேய், என்னை விட்டு விடடா. இப்படியெல்லாம் செய்யாதேடா. எனக்குப் பயமாக இருக்கிறது. நன்றாகத்தானேடா இருந்தாய்! திடீரென ஏன் இப்படி மாறிப் போனாய்? ரௌடி, கையை எடுடா. நான் வீட்டிற்குப் போகணும்..." என்று அழத் துவங்க, "ஏய், வாயை மூடு. வாயை மூடுடி. அழுதாயானால் தாவணியைக் கழட்டி விடுவேன். அழுகையை நிறுத்து!" என்று மிரட்ட, ஒரு கையால் வாயை அழுந்த மூடி அழுகையை அடக்கினாள்.

பற்றியிருந்த தாவணியைக் கையில் சுருட்டி அவளை அருகே வரச் செய்தவன், "ஏன்டி? உனக்கு என்னைப் போல் எந்த உணர்வும் தோன்றவில்லையா? என்னால் சாப்பிட முடியவில்லை. தூங்க முடியவில்லை. சதா உன் நினைவாக இருக்கிறது. நீ என்னடாவென்றால் என்னைக் கண்டு ஓடி ஒளிந்து என் கண் முன்னால் கூட வராமல் என்னை மேலும் சோதித்துக் கொண்டிருக்கிறாய். ம்... சொல்லுடி!" என்று மிரட்ட,

வாயிலிருந்து கையை விலக்கியவள், மறுத்துத் தலையசைத்து, "நான் காலையில் சாப்பிடவில்லை.



எனக்கு மி...மிகவும் பசிக்கிறது. அம்மா வேறு கோழிக் குழம்பும், வறுவலும் செய்து வைக்கிறேன் என்று சொல்லியிருக்கிறார்கள். என்னை விட்டு விடுடா..." என்று அவள் மீண்டும் கெஞ்ச, அவளை முறைத்தான் அவன்.

"ஏன்டி? உயிர் போகுமளவிற்கு எனக்கு வலிக்கிறது. உனக்குக் கோழி வறுவல்தான் முக்கியமா? போடி போ!" என்று அவளைப் பிடித்துத் தள்ள,

"போடா... ரௌடி. லூசு. ம்...ம்..." என்று அழுதபடி திட்டிக் கொண்டே அவள் சென்று விட, "சரியான அரிசி மூட்டை!" என்று தலையிலடித்துக் கொண்டான் குமரன்.

## 11

அங்கம் முழுதும் பொங்கும் இளமை...
இதம் பதமாய்த் தோன்ற
அள்ளி அணைத்த கைகள்...
கேட்க நினைத்தாள்... மறந்தாள்...
கேள்வி எழும் முன் விழுந்தாள்...
எந்த உடலோ... எந்த உறவோ...!

**நா**ட்கள் அதன் போக்கில் எவ்விதத் தடையுமின்றிப் பயணித்துக் கொண்டிருக்க... அம்பரி - திவாகரனின் வாழ்க்கையும் அதனோடு சேர்ந்து சென்று கொண்டிருந்தது.

திவாகரன் மேற்படிப்பைத் தொடரப் போகும் சேதி கேட்டதும், சுப்புலட்சுமி வீட்டை ரெண்டு பண்ணுமளவிற்கு

உச்சஸ்தாயியில் சத்தமிட்டுத் தனது மறுப்பைத் தெரிவித்தாள். "ஓசிக் கஞ்சி குடித்துக் கொண்டு இன்னும் எத்தனை நாட்களுக்கு உடம்பை வளர்க்கத் திட்டமிட்டிருக்கிறான்? அவன் அன்னை இறந்து, இந்த வீட்டில் அவன் அடி எடுத்து வைத்த போதே அவன் காலை ஒடித்து வயலுக்கு அனுப்பியிருந்தால்... இந்த நிலைக்கு வந்திருப்பானா? காலேஜ் வரைக்கும் சென்று படித்தது போதாதென்று இன்னும் ஆயிரங்களைச் செலவழித்து மேற்படிப்பு வேறு படிக்க வேண்டுமா இந்த அநாதை நாய்க்கு? இவனுக்கு ஒத்து ஊதிக் கொண்டு இந்த இரண்டு கழிசடைகளும் திரியுதுகள். நீங்களேனும் இதைத் தட்டிக் கேட்கக் கூடாதா?" என்று மாணிக்கத்தைத் துணைக்கு அழைத்தாள்.

அத்தையின் சுடுசொற்களில் தலை குனிந்து சமையலறைக்குள் அம்மத்தா மற்றும் அம்பரியுடன் நின்றிருந்தான் திவாகரன்.

வள்ளியம்மையின் கைகளை இறுகப் பற்றிக் கொண்டு, அவன் நிற்பதிலேயே அவனது எண்ணங்களைத் தெளிவாகப் புரிந்து கொண்டாள் அம்பரி.

பத்தாம் வகுப்பிலிருந்து போராடி வருகிறான் படிப்பிற்காக! 'தெய்வமே! மாமனின் இந்த நிலைமை என்று மாறும்? ஒவ்வொரு முறையும் தலை குனிந்து நிற்கிறானே? தன்மானத்தையும், ரோஷத்தையும் அடக்கிக் கொண்டு இந்த வீட்டில் சோறு தின்னும் ஒரே பாவத்திற்காக இத்தனை கேவலமான சொற்களையும் கேட்டுக் கொண்



டிருக்கிறான். இந்தக் கஷ்டம் என்று தீரும்? கம்பீரமாக என்று அவன் வலம் வருவான்?' மூச்சை உள்ளிழுத்துக் கண்ணீரை அடக்கினாள் அம்பரி.

"திவாகரா, இங்கே வாடா. உன் அத்தை சொல்வதெல்லாம் உண்மைதானா? ம்?" என்று மாணிக்கம் வினவ... மெல்ல நடந்து வெளியே வந்தான் அவன்.

பின் தொண்டையைச் செருமிக் கொண்டு, "ஆ... ஆமாம் மாமா. மேற்படிப்பு படித்தால் ந...நல்ல வேலை கிடைக்கும். அதனால்தான் படிப்பைத் தொடரலாமென்று ஆசைப் படுகிறேன்," என்று கூற...

"நல்ல வேலையென்றால் கலெக்டர் ஆகப் போகிறாரோ துரை?" என்று மீண்டும் தன் திருவாயைத் திறந்தாள் சுப்புலட்சுமி.

அவமானம் தாங்க முடியாமல் தலை குனிந்த படி நின்றிருந்தவனைக் காணச் சகிக்காமல் வேகமாக வெளியே வந்தாள் அம்பரி. "அம்மா, வாயை அடக்கிப் பேசப் பழகு. எவ்வளவு கேவலமாகப் பேசி அவமானப் படுத்துகிறாய்? தன்மானமுள்ள எந்த மனிதனேனும் உன் வார்த்தைகளைக் கேட்டுக் கொண்டு அமைதியாக நிற்பானா? உன் வயதிற்கு மரியாதை அளித்து மாமா அமைதியாக இருப்பதை உனக்குச் சாதகமாக எடுத்துக் கொண்டு மேலும் மேலும் பேசி அவரை வதைக்காதேம்மா..." என்று அவள் கோபமாகக் கூறினாள்.

"நீ என்னடி அவனுக்கு வக்காலத்து வாங்கிக் கொண்டு என்னையே எதிர்த்துப் பேசுகிறாய்? இன்னொரு

முறை அவனோடு கூட்டுச் சேர்ந்தாயென்று தெரிந்தால் உன் காலை வெட்டி விடுவேன். அவன் கையை விட்டுத் தள்ளி நில்லடி. என்ன நினைத்துக் கொண்டிருக்கிறாய் உன் மனதில்? அறியாத வயதில் விளையாட்டுத் தனமாக அவன் புறம் சேர்ந்து கொண்டு பேசுகிறாய் என்று சும்மா விட்டால்... வளர்ந்து குமரியான பின்பும் இந்த அநாதைப் பயலின் பின்னே திரிந்து கொண்டிருக்கிறாய். உள்ளே செல்லடி..." என்று மிரட்ட,

அவன் கையை மேலும் அழுந்தப் பற்றியவள், "நான் உள்ளே சென்று நீ மாமாவைக் கூறு போடுவதைப் பார்த்துக் கொண்டு சும்மா உட்கார வேண்டுமா? நான் மாமாவை விட்டு ஒரு நொடி கூடப் பிரிய மாட்டேன். நீ அவரது வளர்ச்சிக்குத் தடையாக இருக்கிறாய் என்று தெரிந்தால் நா...நான் என்னையே எரித்துக் கொண்டு செத்து விடுவேன். ஒரே மகளைப் பெற்றுச் சீராட்டி வளர்த்த உன்னை வாழ்நாள் முழுமைக்கும் அழச் செய்து விடுவேன்..." என்று கண்கள் சிவக்க ரௌத் திரத்துடன் கூறியவளைக் கண்டு, "என்ன பேசுகிறாய் பரி..." என்று பதறிப் போனான் திவாகரன்.

அதிர்ந்து எழுந்த மாணிக்கமும், திகைத்துப் போன சுப்புலட்சுமியும் கூட வேகமாக அவளருகே வந்தனர். "என்ன பேசி விட்டாய் கண்ணு? அப்படி உன்னைத் தூக்கிக் கொடுப்பதற்கா நான் பாசமாக வளர்த்தேன்? இனியொரு முறை இப்படிச் சொல்லாதே. இப்போது என்ன? உன் மாமன் படிக்க வேண்டும். அவ்வளவு தானே? அவன் படிப்பிற்கு எவ்வளவு செலவானாலும்



நான் பார்த்துக் கொள்கிறேன். நீ இப்படியெல்லாம் பேசாதேடா. அப்பாவினால் தாங்கிக் கொள்ள முடியாது." என்று மாணிக்கம் பதறியபடி கூற, சுப்புலட்சுமி கோபத் துடன் அவளை உறுத்து விழித்துக் கொண்டிருந்தாள்.

"அதற்கு அவசியமே இல்லையப்பா. அப்பத்தா நகையைக் கொடுத்து மாமாவின் கட்டணத்திற்கு உதவி செய்து விட்டது. அதனால் நான் உங்களிடமிருந்து எந்தப் பண உதவியையும் எதிர்பார்க்கவில்லை.

"நீங்களும் உங்கள் மனைவியும் அவரது மனதை நோகடிக்காமல் அவரை நன்றாகப் படிக்க விட்டாலே போதும்." என்று கூற... மாணிக்கத்திற்கும், ஏன் சுப்பு லட்சுமிக்குமே திவாகரனின் மீதான அவளது அன்பைக் கண்டு பிரமிப்பாக இருந்தது.

"உன் விருப்பப்படியே எல்லாம் நடக்கும் கண்ணு. நீயும் உன் மாமனும் கவலையே பட வேண்டாம்," என்றவர், அன்னையின் முகத்தைப் பார்த்தார். சுப்பு லட்சுமி தலையில் அடித்துக் கொண்டு விலகிச் சென்று விட... திவாகரன் குனிந்த தலையுடனே வெளியேறி விட்டான்.

"நன்றிப்பா!" என்ற அம்பரியும், "மா... மாமா!" என்றபடியே திவாகரனின் பின்னேயே ஓடிச் சென்று விட... மாணிக்கம் வள்ளியம்மையிடம், "ஏன் ஆத்தா, உன்னிடம் இருக்கும் நகையை விற்றுத்தான் அவனைப் படிக்க வைக்க வேண்டுமா? நான் காசு கொடுத்திருக்க மாட் டேனா?" என்றவரை ஏளனமாக நோக்கிய வள்ளியம்மை,

"நீ காசு கொடுத்து உதவுவாய் என்று நம்பித்தான் என் மகளைக் கண்டு கொள்ளாமல் விட்டு எமலோகம் அனுப்பினேன். இப்போது என் பேரனைத் தவிக்க விட எனக்கு மனமில்லை ராசா. அந்த நகை என் புருசன் எனக்குப் போட்ட நகை. என் மகளைச் சேர வேண்டிய நகை. அதனால்தான் என் பேரனின் படிப்பிற்கு அதைச் செலவழித்தேன். அந்த நகையைப் பற்றிய சகல உரிமையும் எனக்கு மட்டும்தானிருக்கிறது. உன் பெண்டாட்டியிடம் இதைத் தெளிவாகச் சொல்லி விடு!" என்று கூறி விட்டு அவர் விறுவிறுவென வெளியேறி விட்டார்.

அவர் கூறியதைக் கேட்டுக் கொண்டிருந்த சுப்புலட்சுமிக்குப் பற்றி எரிந்தது உள்ளுக்குள். நகையை விற்றுப் படிக்க வைக்குமளவிற்கு வந்து விட்டது! இந்தக் கொடுமையை எங்கே போய்ச் சொல்வது? இவன் படித்துச் சம்பாதித்து இந்த வீட்டிற்கா கொட்டப் போகிறான்? அநாதைப் பயல்... எனப் பொருமியபடியே அமர்ந்திருந்தவள்... தனது கோபம் அனைத்தையும் கணவனிடம் காட்டினாள்.

ஏற்கெனவே அன்னை பேசிய பேச்சில் சற்று உறுத்தத் தொடங்கியிருந்தது அவருக்கு. இதில் மனைவி வேறு தன் பங்கிற்குக் கத்தவும் செய்வதறியாது விழித்தார்.

"மாமா... மாமா..." எனப் பின்னாடியே ஓடிய அம்பரியைக் கண்டு கொள்ளாது அவன் விறுவிறுவெனத் தன் சைக்கிளை எடுத்துக் கொண்டு வெளியே சென்று விட... ஏன் இப்படிக் கோபப்படுகிறான் என்று குழம்பிய அம்பரி இரவு அவனது வருகைக்காகக் காத்திருந்தாள்.



வெகு நேரம் கழித்து வீடு திரும்பியவன் பின் வாசல் வழியாகத் தன் அறைக்குச் சென்றான். அவன் இப்படியேதும் செய்து வைப்பான் என்று தெரிந்திருந்ததால் அம்பரி பின் வாசலில் அமர்ந்திருந்தாள்.

அவளைக் கண்டு கொள்ளாது அவன் மேலே தன் அறைக்குச் சென்று விடத் தானும் பின்னேயே சென்றாள்.

அவள் வருகையைக் கண்டு கொள்ளாமல் அவன் தன் போக்கில் பாயை விரித்துத் தலையணையைப் போட, "சாப்பிட்டாயா மாமா?" என்று ஆரம்பித்தாள்.

அவன் "ம்...ம்..." என்றதோடு நிறுத்திக் கொள்ள... எரிச்சலுற்றவள், "இப்போது ஏன் என் மீது கோபப் படுகிறாய் மாமா? நான் என்ன தவறு செய்து விட்டேன்?" என்று வினவ... நின்று அவளை முறைத்தான் அவன்.

"உன் மீது கோபப்பட எனக்கு என்ன உரிமையிருக்கிறது? நீதான் எரித்துக் கொண்டு சாகப் போகிறவளாயிற்றே!" என்று அவன் குரல் கோபத்துடனும் வேதனையுடனும் ஒலிக்க... தலையைக் குனிந்து கொண்டு அமைதியாக நின்றாள் அவள்.

"என்ன வார்த்தை பேசுகிறாயடி? நீ போய்ச் சேர்ந்து விட்டால் என் காதலி சென்று விட்டாலும் அவள் விரும்பிய என் படிப்பையேனும் நான் தொடர வேண்டுமென வாழ்ந்து கொண்டிருப்பேன் என்று நினைக்கிறாயா? நீ இல்லாத அடுத்த நொடி உலகத்திலேயே வேதனை கொடுக்கும் சாவு எதுவோ அதைச் செய்து கொண்டு என்னை நானே தண்டித்துக் கொண்டு செத்து விடுவேன்.

நினைவில் வைத்துக் கொள். எனக்கு உயிர் அளித்து நான் உயிராய் எண்ணிய அன்னையின் பிரிவைத் தாங்கிக் கொள்ள இயலாமல் நான் துடித்த போதெல்லாம் உடனிருந்து என்னைத் தாங்கியவள் நீ... நீயும் என்னை விட்டுச் சென்றால் நான் வாழ்வதில் என்ன அர்த்தம் இருந்து விடப் போகிறது, சொல். இத்தனை அவமானங் களையும், கஷ்டங்களையும் மீறி நான் உன் ஒருத்திக் காகத் தானேடி உயிர் வாழ்கிறேன்? நீயும் என்னை விட்டுச் சென்றால் நான் என்ன செய்வேன்? இன்னொரு முறை என்னை விட்டு விலகுவதாகவோ... என்னை விட்டுச் செல்வதாகவோ சொல்லாதே அம்பரி. அதைத் தாங்கக் கூடிய சக்தி எனக்கு இல்லை..." என்று அவன் கண்கள் சிவக்க, உதடுகள் துடிக்கக் கூறி முடிக்கையில்... குற்ற உணர்வுடன் தலை குனிந்து நின்றிருந்தாள் அம்பரி.

பெரிய பெரிய மூச்சுகளை வெளியிட்டு அவன் அழுகையை அடக்க முயல்வதைக் கண்ட அம்பரிக்குக் கஷ்டமாகிப் போனது.

ஓடிச் சென்று அவனைக் கட்டிக் கொண்டவள், "மன்னித்து விடு மாமா. இனி அப்படிப் பேச மாட்டேன். சாரி மாமா!" என்று கூற... வேகத்துடன் அவள் முகத்தைப் பற்றித் தூக்கியவன், "போதும்டி. இந்தக் கஷ்டமெல்லாம் விரைவிலேயே தீர்ந்து நீயும் நானும் சந்தோசமாக வாழப் போகும் நாட்கள் தூரத்தில் இல்லை கண்ணம்மா... வருந்தியதெல்லாம் போதும்!" என்றவன், அவள் கைகளை இறுகப் பற்றிக் கொள்ள... அவன் கண்களைத் துடைத்து முறுவலித்தாள் அம்பரி.



ஒரு வழியாக முக்கலும், முனகலுமாக அவன் மேற்படிப்புப் படிப்பதை ஏற்றுக் கொண்டாள் சுப்புலட்சுமி. அவளது வார்த்தைகள் ஏதும் அவனைப் பாதித்து விடாது அவனைச் சுற்றி அரணைப் போல் அம்மத்தாவும், அம்பரியும் அவனைக் காத்துக் கொண்டிருப்பதால், கவலையின்றிப் படிப்பைக் கவனித்துக் கொண்டிருந்தான்.

அவனது திறமையையும், சூழ்நிலையையும் கண்டு அவனது ஆசிரியர்கள் அந்தக் கல்லூரியிலேயே அவனைப் பகுதி நேர விரிவுரையாளராக நியமிக்க, பகல் நேரம் தனது வகுப்பு முடிந்ததும்... மாலை நேர வகுப்பு களில் விரிவுரையாளராகச் சேர்ந்து விட்டான்.

கணிசமான தொகையும் சம்பளமாகக் கிடைக்க மகிழ்ந்து போனான். வாரக் கடைசியிலும், விடுமுறையிலும் மாணிக்கத்துடன் விவசாயத்தில் ஈடுபடவும் அவன் மறக்க வில்லை. தேன் மொழியும், அம்பரியும் டுடோரியல் வகுப் பையும் ஓ.பி. அடித்து விட்டுச் சுற்றிக் கொண்டிருக்க... அவர்களைப் பின் தொடர்ந்து அம்பரியைக் கழட்டி விட்டுத் தேன் மொழியுடன் வம்பு செய்வதை வழக்கமாக்கிக் கொண்டிருந்தான் குமரன். அப்படி வம்பு செய்து ஒரு நாள் திவாகரனிடம் வசமாக மாட்டிக் கொண்டான்.

அன்று அம்பரி உடம்பு சரியில்லை யென்று கூறி வகுப்பைக் கட் அடித்து விட்டதால், தானும் செல்ல வேண்டாமென்று முடிவு செய்து குதித்துக் கொண்டே அம்பரியின் வீட்டிலிருந்து வெளியே வந்தவளை எதிர் கொண்டான் திவாகரன். "என்ன கண்ணு காலேஜிற்குப்

போகவில்லையா?" என்றவனிடம், "அ...அது வந்து அண்ணா, அம்பரிக்கு உடம்பு சரியில்லை. அவள் வரவில்லை. அதனால் நா...நானும் போகவில்லை..." என்று தயங்கியபடி கூறியவளை முறைத்து,

"எனக்குத் தெரியும். இன்று குமரன் அப்பா கதிரறுக் கிறார்கள். அங்கே சென்று இருப்பாளென்று. உடம்பு சரியில்லை யென்று பொய் வேறு. கழுதை!" என்றவன், தொடர்ந்து, "அவள் வரவில்லையென்றால் நீ ஏன் கண்ணு போகாமல் இருக்க வேண்டும்? நீ செல்ல வேண்டியதுதானே!" என்றான்.

தலையைச் சொறிந்தபடி, "அ...அண்ணா, நாளைக்கு அம்பரியுடன் சேர்ந்தே போய்க் கொள்கிறேனே. இப்போது வீட்டிற்குச் செல்கிறேன். ப்ளீஸ் அண்ணா!" என்றவளைக் கண்டு சிரித்து,

"படிப்பென்றால் உங்களுக்கு அப்படிக் கசக்கிறது. சரி, வா. நானே கூப்பிட்டுச் செல்கிறேன்," என்றவன் அவளை அழைத்துக் கொண்டு அவளது வீட்டிற்குச் சென்றான்.

வாசலின் மறுபுறம் அமர்ந்து பாத்திரம் கழுவிக் கொண்டிருந்த தேன்மொழியின் தாய் பரமேஸ்வரி, "திவாகரா... வா கண்ணு!" என்றவர் தேனிடம்,

"என்னடி பள்ளிக்கூடத்துக்குப் போகவில்லையா...?" என்று வினவ, "சித்தி, அது பள்ளிக்கூடமல்ல. காலேஜ் என்று சொல்லுங்கள்..." என்று சிரித்தபடி பதிலளித்தான் திவாகரன்.



"ஃபெயிலாப் போன கழுதைகள் படிக்கும் இடம் தானே கண்ணு. அதை எப்படிச் சொன்னால் என்ன?" என்றவரை முறைத்தபடி, "அம்மா, ரொம்பப் பேசினா யானால் கண்ணில் மிளகாயை எடுத்துப் பூசி விடுவேன்," என்று மிரட்டினாள் தேன்மொழி.

"தேனு!" என்று அதட்டிய திவாகரனைக் கண்டு அடங்கியவள், அன்னையை முறைத்தபடியே உள்ளே சென்று விட... "பார்த்தியா கண்ணு. எப்படிப் பேசுகிறாள் என்று. பெற்றவர்கள் என்கிற மரியாதை சிறிதேனும் இருக்கிறதா அவளுக்கு?" என்று சலித்துக் கொண்டவரிடம், "விடு சித்தி. சின்னப் பெண்தானே!" என்றான் அவன்.

இங்கே இருவரும் பேசிக் கொண்டிருக்க, அன்னையை முறைத்து விட்டு உள்ளே நுழைந்த தேன் மொழியோ, அங்கே அறைக்குள் நின்றிருந்த குமரனைப் பார்த்துக் கதி கலங்கிப் போனாள்.

அவளை அப்போது அங்கே எதிர்பாராததால் அவனும் சற்றுத் திகைத்து விட்டான். வேகமாகக் கதவைத் தாண்டி ஓடப் பார்த்தவளை விரைந்து வந்து கை நீட்டித் தடுத்தான்.

"எதுக்குடி ஓடுகிறாய்? என்னவோ பேயைப் பார்த்தது போல்..." என்று அதட்டியவனிடம்,

"நீ பேயை விட மேல். ராட்சசன்!" என்று கிறீச்சிட்ட வளிடம், "யார், நான் ராட்சசனா! என்னடி ரொம்பப் பேசிக் கொண்டே போகிறாய்? உன்னை..." என்றவன் மீண்டும் அன்று போல் தாவணியைப் பற்ற, "டேய் குமரா,

வேண்டாம்டா. அம்மா பார்த்தால் பிரச்னையாகி விடும். விட்டு விடடா. ரௌடி, விடுடா!" என்று மெல்லிய குரலில் கெஞ்சியவளிடம், "ம்ஹூம்..." என்று இருபுறமும் தலை யாட்டியவன் தாவணியைச் சுருட்டி அவளருகே சென்று நின்று, "தேனு, எனக்கு ஒரு சந்தேகம்டி!" என்றான்.

பதறியபடியே வாயிலை எட்டி எட்டிப் பார்த்துக் கொண்டிருந்தவள், அவன் முகத்தை நோக்க... "நான் செய்யும் இத்தனை சேட்டைகளையும், நான் காதலித்த தாகக் கூறியதையும் நீ அத்தையிடமும், மாமாவிடமும் சொல்லவில்லையே... ஏன்? அப்படியென்றால் உனக்கு என்னைப் பிடித்திருக்கிறது. நான் இப்படிச் செய்வதும் பிடித்திருக்கிறது. அப்படித்தானே?" என்று சிரித்தபடி வினவ,

"ச்சீ..." என்று முகத்தைச் சுழித்தவள், "உன் சந்தேகத்தையெல்லாம் பிறகு தீர்த்துக் கொள். இப்போது என்னை விட்டு விடடா. ப்ளீஸ்டா!" என்று கெஞ்சியவளிடம், "முடியாதுடி. இன்று நீ பதில் கூறாமல் உன்னை விடுவ தாக இல்லை. என்னைப் பிடித்திருக்கிறதா இல்லையா உனக்கு? பதில் சொல்லுடி!" என்று அவன் அதட்டிய வேளை... "தே..." என்றபடி உள்ளே அடியெடுத்து வைத் திருந்தான் திவாகரன்.

இருவரையும் கண்டவன் திகைத்து நிற்க... "அண்ணா..." என்றபடி தேனும், "மா...மா..." என்றபடி குமரனும் வாயைத் திறந்தபடி நின்றுவிட்டனர். அவனைக் கண்டும் கூடத் தேன்மொழியின் தாவணியைப் பற்றிய படியே நின்றிருந்தவனைக் கண்டவன், "டேய்... அவள்



தாவணியை விடுடா. விடு என்கிறேனல்லவா!" என்று அதட்ட... சட்டெனத் தாவணியை விட்டான். தலை குனிந்த படி நின்றிருந்த இருவரையும் கண்டு சிரிப்பு வந்தது திவாகரனுக்கு. ஆனாலும் மறைத்துக் கொண்டு, "குமரா! இந்த அளவிற்கு ஆகி விட்டதா? என்னடா இதெல்லாம்? நானல்லாமல் சித்தி இதைப் பார்த்திருந்தால் என்ன நினைத்திருப்பார்கள்? தேனு... நிமிர்ந்து என்னைப் பார். நிமிரப் போகிறாயா இல்லையா?" என்று அதட்டினான்.

அவள் நிமிர்ந்ததும், "எத்தனை நாட்களாக இது நடக்கிறது?" என்று தன் விசாரணையைத் தொடங்கி னான். "இப்ப கொஞ்ச நாளாகத்தான் மாமா!" என்று பதிலளித்த குமரனை முறைத்த தேன்மொழி, வேகமாக அண்ணன் அருகே சென்று, "அண்ணா, இதற்கும் எனக்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை. இந்தக் களவாணிப் பயல்தான் என்னிடம் வந்து நான் உன்னைக் காதலிக் கிறேன். கல்யாணம் செய்து கொள்கிறேன்... என்றெல்லாம் லூசு மாதிரிப் பேசினான். பி...பின் என் தாவணியைப் பிடித்திழுத்து வம்பு செய்தான். நான் ஒன்றுமே செய்ய வில்லையண்ணா! எல்லாம் இந்தக் கடன்காரன்தான்..." என்று பொருமியபடி அவள் தெரிவிக்க...

"ஆமாம் மாமா! எல்லாம் நான்தான். இந்தக் கிறுக்கியைக் கல்யாணம் செய்து கொள்ள வேண்டு மென்று ஆசைப்பட்டு இவளிடம் என் விருப்பத்தைக் கூறியது நான்தான்..." என்று தன் குற்றத்தை எப்போதும் போல் ஒப்புக் கொண்டான் குமரன்.

தொடர்ந்து, "அன்றிலிருந்து இன்றுவரை அவள் விருப்பம் என்னவென்பதைத் தெரிந்து கொள்ள நாயைப் போல் அவள் பின்னேயே அலைந்து நான் போராடி வருகிறேன் மாமா. ஆனால் இந்தச் சண்டாளி என்னைப் பார்த்தால் ஓடிக் கொண்டும் ஒளிந்து கொண்டும் எனக்குப் போக்குக் காட்டிக் கொண்டு பதில் கூறாமல் என்னை அலைய விடுகிறாள்..." என்று அவன் தன் பக்கத்து நியாயத்தை எடுத்துரைத்தான்.

அவன் கூறியதைக் கேட்ட திவாகரன், "ம்... அவன் கூறுவது சரிதானே தேனு! உனக்குப் பிடிக்கிறதென்றால் பிடித்திருக்கிறதென்று சொல். இல்லையென்றால் பிடிக்க வில்லை என்று சொல்..." என்று அவளிடம் கூற, "அய்யோ! என்ன அண்ணா இது? நீயும் அவனுடன் சேர்ந்து கொண்டு பேசுகிறாய்? எங்கய்யனுக்குத் தெரிந் தால் என்னை வெட்டிப் போட்டு விடுவார்..." என்று பதறியவளிடம்,

"ஏய்... உன்னிடம் என் மனதைக் கூறிய அன்றே நான் மாமாவிடமும் கூறி விட்டேன். எல்லாம் நம் விருப்பப்படிதான் நடக்கும் என்று கூறி விட்டார் அவர். நீ உன் பதிலை மட்டும் கூறு!" என்று எரிச்சலுடன் கூறினான் குமரன்.

அவள் தயங்கித் திவாகரனின் முகம் பார்க்க... அவன் சிரிப்பை அடக்கி, "சொல்லும்மா!" என்றான்.

"அ...அது வந்து... இவன் எப்போது பார்த்தாலும் என்னைக் குட்டி வைக்கிறான். கையைப் பிடித்துத் திருகி



வைக்கிறான். அடிக்கிறான்..." என்று தொடங்கியவளைக் கண்டு பொறுமையிழந்து போன குமரன், "நீ இப்போது பதிலைக் கூறவில்லையென்றால் கடித்துக் கூட வைப் பேன்டி..." என்று கூவ, பதறிக் கொண்டு அண்ணன் அருகே ஓடியவள்,

"இவன் இப்படி அடித்து அதட்டிக் கொண்டே இருக்கிறான் அண்ணா. எனக்கு இவனைப் பிடிக்கவே யில்லை. ராட்சசன். ரௌடி..." என்று கத்த, "உன்னை..." என்று பாய்ந்த குமரனை, பொங்கி வந்த சிரிப்பை அடக்கிக் கொண்டு தடுத்தான் திவாகரன்.

"நீ போ கண்ணு. நான் இவனைப் பார்த்துக் கொள் கிறேன்!" என்று அவளை அனுப்பியவன்... குமரனிடம், "டேய், நீ இப்படி அதட்டி மிரட்டினால் அவளுக்குப் பிடித்திருந்தால் கூடப் பிடிக்கவில்லையென்றுதான் கூறுவாள். அவள் இன்னும் சின்னப் பெண்தான்டா. கொஞ்சம் பொறுமையாகப் பேசு. அவள் மனதில் உள்ளதை அவளே கூறுவாள்..." என்று சிரித்தபடி கூற, "என்னமோ... சரியான தத்தி மாமா உங்கள் தங்கை!" என்று தலை யிலடித்துக் கொண்டு வெளியே சென்றான் அவன்.

**தி**வாகரன் பகுதி நேர விரிவுரையாளராகச் சேர்ந்து ஒரு மாதம் நிறைவுற்றிருந்தபடியால்... அந்த மாத இறுதியில் அவனது முதல் சம்பளம் கைக்கு வந்தது. முழுதாக ஐயாயிரம் ரூபாய் கைக்குக் கிடைத்த மகிழ்ச்சி யில் புன்னகை கொண்டவன், அதிலிருந்து நூறு ரூபாயை

எடுத்து அன்னையின் படத்தின் முன்பு வைத்து விட்டு அடுத்த நூறு ரூபாயை வீரபாண்டி கௌமாரியம்மனுக்கு முடிந்து வைத்து விட்டு மீதிப் பணத்தை எடுத்துக் கொண்டு கடைக்கு விரைந்தான்.

தன்னுடைய முதல் சம்பளத்தில் தன் மனதிற்கினிய வளுக்கு ஏதேனும் வாங்க வேண்டுமென்று தீர்மானித்துக் கொண்டவன்... தேனி கடை வீதியில் என்ன வாங்குவ தென்று யோசனை செய்தபடி நடந்தான். அவனது சிறு வயதில் அவன் அன்னை அணியும் சாதாரணச் சேலை களைக் காணும் போதெல்லாம்... "அம்மா, நான் படித்துப் பெரியவனாகிய பின்பு உனக்குப் பட்டுச் சீலை வாங்கித் தருவேன்." என்று அடிக்கடி கூறுவான். இப்போது அன்னை இருந்திருந்தால், நிச்சயம் அந்த ஆசையை நிறைவேற்றியிருப்பான்தான். ஆனால் அதனால் என்ன? அன்னையின் வடிவில் இப்போது அவனைக் காத்துக் கொண்டிருப்பது அவனது அம்பரி அல்லவா! அவளுக்குப் பட்டுச் சீலை வாங்கித் தர வேண்டியதுதான் என்று தீர்மானித்துக் கொண்டவன், ஜவுளிக் கடைக்குள் நுழைந் தான்.

வெகு நேரமாகத் தேடி அலசி, அடர் சிவப்பு நிற ஜரிகை வைத்த சேலையை எடுத்துக் கொண்டான். மறுநாள் காலை எப்படியேனும் யாருக்கும் தெரியாமல் அம்பரியிடம் சேலையைக் கொடுத்து விட வேண்டுமென்று முடிவு செய்து கொண்டு, காலை நேரப் பரபரப்பெல்லாம் அடங்கியபின்பு சற்றுத் தாமதமாகவே அறையிலிருந்து கீழே வந்தான். வீட்டில் ஒருவரும் இல்லாதத்தைக் கண்டவன்



வாசலுக்குச் சென்று பார்க்க... அம்மத்தாவையும் காண வில்லை. எங்கே சென்று விட்டார்கள் அனைவரும் என்று அவன் யோசித்த வேளை... பின்கட்டில் அம்பரியின் கொலுசுச் சத்தம் கேட்டது.

அன்று சுப்புலட்சுமியும், மாணிக்கமும் உறவுக்காரர் ஒருவரின் திருமணத்திற்காக இரண்டு நாட்களுக்குக் கம்பம் வரை செல்ல வேண்டியிருந்ததால், காலையிலிருந்து அவளை வேலை வாங்கிக் கொண்டிருந்தாள் சுப்புலட்சுமி. ஒரு வழியாக இருவரும் கிளம்பிச் சென்றதும், குளிக்கச் சென்றாள் அம்பரி. குளித்து முடித்தபின்புதான் தெரிந்தது பாவாடையையும், சட்டையையும் மட்டுமே எடுத்து வந்தது. 'தாவணியை மறந்து விட்டேன் போலவே! இப்போது யாரைக் கூப்பிடுவது? இந்தக் கிழவிக்கு வேறு காதே கேட்காதே!' என்று புலம்பியவள்... பின்பு துண்டினால் தன்னைப் போர்த்திக் கொண்டு, யாரும் பார்க்கும் முன் ஓடி விட வேண்டுமென்று நினைத்துக் கொண்டு விறுவிறு வென உள்ளே ஓடி வந்தாள்.

அம்பரியின் கொலுசுச் சத்தத்தைக் கேட்ட திவாகரனும் ஓடி வர... கீழே பார்த்தபடி ஓடி வந்து கொண்டிருந்த அம்பரி, அவன் மீதே மோதி நின்றாள். அந்தக் காலை வேளையில் அப்படி ஒரு சந்திப்பை எதிர்பார்த்திராத திவாகரன் மூச்சடைக்க நின்று விட... அவன் மார்பிலிருந்து தலை நிமிர்ந்த அம்பரி துண்டை இறுகப் பற்றியபடி சுவரோடு சுவராக ஒன்றிப் போய் நின்று விட்டாள்.

தலைக்குக் குளித்திருப்பாள் போலும்! சிகைக்காய் வாசனையுடன் போட்டி போட்டுக் கொண்டு அவள் பூசிய மஞ்சள் வாசனை அவன் நாசியைத் தீண்ட, மூச்சை உள்ளிழுத்துச் சுவாசித்தவன்... கிறங்கி அவள் மீதே சாய்ந்தான்.

குளிர் நீரில் குளித்ததிலும், விர்விர்ரென வீசிக் கொண்டிருந்த காற்றிலும், ஏற்கெனவே நடுங்கிக் கொண்டிருந்த அம்பரியின் ஈர உதடுகள் மேலும் நடுங்க ஆரம்பிக்க... தடதடக்கும் இதயத்துடன் நிமிர்ந்து அவனை நோக்கினாள்.

விரிந்து அவள் முதுகில் தோகை போல் படர்ந் திருந்த அவளது கூந்தல் பாதி முகத்தை மறைத்து இரு புறத்திலும் அசைந்தாடி அவளது வெள்ளைக் கன்னங் களை மேலும் அழகாக்கிக் காட்ட... அவள் கூந்தலை ஒதுக்கி அவள் அணிந்திருந்த ஜிமிக்கியின் மீது காதோடு சேர்த்து முத்தமிட்டான் அவன். கூசிச் சிலிர்த்துப் போன அம்பரி அவனை விலக்கித் தள்ளி விட்டு ஓடிச் சென்று விட, சுவரில் சாய்ந்த திவாகரனின் பார்வை அவளையே தொடர்ந்தது.

அதன் பின்பு அவன் கண் முன்னே வராமல் ஓடிக் கொண்டிருந்தவளைக் கண்டவன் அவள் அறை வாசலின் முன் நின்று கதவைத் தட்டினான். "ம்... வருகிறேன்," என்றவள் கதவைத் திறக்க... வெளியில் நின்றிருந்த திவாகரனைக் கண்டவள்... வேகமாகக் கதவின் பின்னே மறைந்து கொண்டாள். "பரி, ஒரு நிமிடம்



வெளியே வா. ப்ளீஸ், இதை உன்னிடம் கொடுக்க வேண்டும். என் முதல் சம்பளத்தில் உனக்காக வாங்கியது. வெளியே வாடி!" என்று அவன் கெஞ்ச, மெல்ல எட்டிப் பார்த்து, அவன் கையில் ஏதோ இருப்பதைக் கண்டு வெளியே வந்தாள்.

அவளைக் கண்டதும் புன்னகை புரிந்தவன் சிரிப்பும், கர்வமுமாய்த் தனது முதல் பரிசை அவளிடம் நீட்டினான். ஆர்வம் ததும்பிய விழிகளுடன் ஆச்சரிய மாய்ப் பார்த்தபடி அதை வாங்கிப் பிரித்த அம்பரி உள்ளே இருந்த சேலையைக் கண்டு பிரமித்துப் போனாள். விரிந்த விழிகளுமாய் அதில் தேங்கிய கண்ணீருமாய்க் கையிலிருந்த சேலையை மார்போடு இறுகக் கட்டிக் கொண்டவள்... "எ...எனக்காக வாங்கினாயா மாமா? நி... நிஜமாகவா?" என்று திக்கித் திணறி வினவ... நன்றாக முறுவலித்தவன், "உனக்காகத்தான்டி. முதன் முதலாகப் பெரிய தொகையைச் சம்பளமாக வாங்குகிறேன். உனக் காகத்தான் அதில் முதல் செலவைச் செய்ய வேண்டு மென்று தோன்றியது. வாங்கி விட்டேன்..." என்றவன், தொடர்ந்து, "பிடித்திருக்கிறதா?" என்று கம்மிய குரலில் வினவினான்.

அவனின் குரலில் முகம் சிவந்தவள், "ம்..." என்று குனிந்த தலையுடன் தலையாட்ட, "பரி..." என்று மீண்டும் அழைத்தவன், சற்றுத் தயங்கி, "இ...இதை... எனக்காக அணிந்து காண்பிப்பாயா?" என்று வினவ... சட்டென அவனை நிமிர்ந்து நோக்கி விட்டு அறைக்குள் ஓடி

மறைந்தாள் அவள். சிரிப்பும் சந்தோசமுமாய் அவளையே நோக்கியவன் வலது, இடமாகத் தலையை ஆட்டி விட்டு விரிந்த புன்னகையுடன் வெளியேறினான்.

அன்று மாலை அவன் வாங்கித் தந்த சேலைக்கு ஏற்ற சட்டையைத் தேடிக் கண்டுபிடித்துச் சேலையை அணிந்து கொண்டு தலை நிறைய மல்லிகைப் பூவையும் வைத்துக் கொண்டு விளக்கேற்றிச் சாமியை வணங்கி விட்டு அப்பத்தாவிடம் ஓடிச் சென்றாள். "கிழவி..." என்றழைத்தபடி ஓடி வருபவளைக் கண்ட வள்ளியம்மை, "சீலையாடி கட்டியிருக்க? உன் பிறந்த நாளா இன்னைக்கு?" என்று வினவினார்.

"அதெல்லாம் இல்லை கிழவி. இது மாமா எனக்கு வாங்கி வந்த சேலை. மாமா பகுதி நேரமாக அது படிக்கும் கல்லூரியிலேயே வேலை பார்க்கிறதல்லவா? அந்த வேலைக்குக் கிடைத்த முதல் சம்பளத்தில் எனக்கு இந்தச் சேலையை வாங்கி வந்திருக்கிறது அப்பத்தா. நன்றாக இருக்கிறதா?" என்று இந்தப் புறமும், அந்தப் புறமும் திருப்பிக் காட்ட கலகலவெனச் சிரித்தார் வள்ளியம்மை.

"சுந்தரியா இருக்கடி ஆத்தா. முதல் சம்பளத்துல உனக்குத்தான் வாங்கித் தரணும்னு சீலை எடுத்துட்டு வந்திருக்கான் பாரு, உன் மாமன். இந்தப் பாசம் மாறாம என்னைக்கும் நீங்க ரெண்டு பேரும் நல்லா இருக்கணும்டி..." என்று மனம் நிறைந்து பாராட்ட, அம்பரிக்கு மகிழ்ச்சி பொங்கியது. அந்தச் சேலையை வாங்கிக் கொடுத்து அதை அணியுமாறும் சொல்லி விட்டுச் சென்ற



மாமனின் வருகைக்காகக் காத்திருந்தாள்.

மாணிக்கமும் சுப்புலட்சுமியுடன் விசேஷத்திற்குச் சென்று விட்டதால் தோப்பில் வேலையை முடித்து விட்டு இரவு நெடுநேரம் கழித்தே வந்து சேர்ந்தான் திவாகரன். வாசலில் கொட்டாவி விட்டபடி அப்பத்தாவுடன் கதை பேசிக் கொண்டு வாசலிலேயே அமர்ந்திருந்த அம்பரி அவனைக் கண்டதும் குஷியாகித் தூணின் பின்னே மறைந்தாள்.

"என்ன கண்ணு, இவ்வளவு நேரமாயிருச்சா? சொல்லியிருந்தா கேசவன் கிட்ட சாப்பாடு கொடுத்து அனுப்பியிருப்பேன்ல? எம்புட்டு நேரம் பசியோட இருப்ப?" என்று அம்மத்தா கடிந்து கொள்ள... சைக்கிளை ஸ்டாண்ட் இட்டுக் கொண்டிருந்தவன், "இல்லை அம்மத்தா. நான் தோப்பிலிருப்பது தெரிந்து குமரன் சாப்பாடு கொண்டு வந்தான். அத்தை கொடுத்து விட்டார்களாம்..." என்றபடியே அருகே வந்தான்.

தூணின் மறைவிலிருந்த அம்பரி மெல்ல எட்டிப் பார்க்க... அம்மத்தாவுடன் பேசியபடியே நடந்து வந்தவன் தூணிலிருந்து வெளிப்பட்டவளைக் கண்டு இதயம் படபடக்க நின்று விட்டான். சூடாக ஏதோ ஒன்று நெஞ்சுக் கூட்டைக் கிழித்துக் கொண்டு போய் இதயத்தைப் பிளக்க, தலையை அழுந்தக் கோதியபடி அருகே வந்து நின்றான்.

"பார்த்தியா கண்ணு? நீ வாங்கித் தந்த சீலையைக் கட்டிக்கிட்டு ஒய்யாரமா நிக்கிற உன் மாமன் மவள? என் மாமன் வாங்கித் தந்ததுன்னு போறவ, வர்றவ கிட்டயெல்லாம் ஒரே பீத்தல்தான்..." என்று அம்மத்தா கூற,

சட்டெனச் சிரித்தான் அவன். இன்னமும் தூணிலிருந்து வெளியே வராதவளை அவன் எட்டி எட்டிப் பார்க்க, "அடக் கழுத! என்ன வெக்கம் உனக்கு? அவன் வாங்கிட்டு வந்ததை அவன் பார்க்க வேணாமா? கொஞ்சம் முன்னால வந்துதான் காட்டேன்..." என்று அப்பத்தா திட்டியதும், அவள் தயங்கி நிற்க... திவாகரனே முன்னால் வந்து, "ஒரு முறை வெளியே வாடி. எனக்குச் சரியாகவே தெரிய வில்லை!" என்று கூறினான்.

"ம்ஹூம். மாட்டேன்..." என்று மேலும் சிணுங்கிக் கொண்டவளை, "ஒரு முறை வாடி. நான் பார்க்க வேண்டாமா? ப்ளீஸ்டி!" என்று அவன் கெஞ்சியதும், தலையைக் குனிந்து கொண்டு மெல்ல அவன் முன்பு வந்து நின்றாள். விழிகளைப் பெரிதாக்கி அவளையே இமைக்காமல் நோக்குபவனைக் கண்டு முகம் சிவந்தது அவளுக்கு.

நான்கு வருடங்களுக்கு முன்பு வயதுக்கு வந்த போதுதான் அவள் புடவை அணிந்ததே... அதன் பின்பு இன்றுதான் புடவை அணிகிறாள். அன்றை விட இன்று சற்று வளர்ந்திருந்தாள். தடித்திருந்தாள். அன்றை விட இன்று அதிகமாகவே அழகாயிருந்தாள். எப்போதும் அணிந்திருக்கும் குடை ஜிமிக்கியுடனும், ஒற்றைச் சங்கிலி யுடனும் சாதாரணமாக இருந்தாலும் அவன் கண்களுக்கு அவள் பேரழகியாகத்தான் தோன்றினாள். தன்னையே இமைக்காமல் நோக்கிக் கொண்டிருந்தவனைக் கண்டவள், "போதும் பார்த்தது... போ மாமா!" என்று சிணுங்கியபடியே



அப்பத்தாவின் அருகே சென்று அமர்ந்து விட்டாள்.

திண்ணையில் படுத்திருந்த வள்ளியம்மையின் தலை மாட்டில் அம்பரியும், காலருகே திவாகரனும் எதிர் எதிர்ப் புறமாக அமர்ந்து கொண்டு ஒருவரையொருவர் பார்த்தும் பார்க்காததைப் போல் நடித்துக் கொண் டிருந்தனர். ஏதேதோ கதைகளை நள்ளிரவு வரை பேசிக் கொண்டிருந்த வள்ளியம்மை உறக்கத்திற்குச் சென்று விட... மெல்ல எழுந்து உள்ளே சென்றாள் அம்பரி. அவளைத் தொடர்ந்து தானும் உள்ளே நுழைந்தான் திவாகரன்.

அவன் தன்னைத் தொடர்ந்து வருவது புரிந்தும் படபடக்கும் இதயத்துடன் அவள் மெல்லத் தன் அறைக்குச் செல்ல எத்தனிக்க... "பரி..." என்று மெல்லிய குரலில் அழைத்தபடி, அவள் கையைப் பற்றினான் திவாகரன்.

மார்கழி மாதப் பனி ஊசியாக உடம்பைத் துளைத்துக் கொண்டிருக்க... பனிக் காற்றும், வீட்டில் பரவியிருந்த இருளும், அமைதியும் இருவரையும் கட்டிப் போட்டது. சில்லிட்டுப் போயிருந்த அவளது கைகளைப் பற்றியவனின் உள்ளங்கை வெகுவாகச் சூடேறிப் போயிருந்தது. அவன் கைப்பற்றியதில் இருதயம் பந்தயக் குதிரையாகத் தறி கெட்டு ஓடிக் கொண்டிருக்க, கண்களை இறுக மூடினாள் அம்பரி.

மெல்ல அவள் கையை இழுத்து அவள் வயிற் றோடு சேர்த்துத் தன்னுடன் அணைத்துக் கொண்டவன் மல்லிகையால் மணமேற்றிக் கொண்டிருந்த அவள்

கூந்தலில் முகம் புதைத்துக் கண்களை மூடினான். அவனது சூடான மூச்சுக் காற்று தோள்களில் உரசுவதை உணர்ந்த அம்பரி கண்களை மேலும் இறுக மூடிக் கொள்ள... அவளை முன்னே திருப்பி அவள் முகத்தை நோக்கினான் அவன். மூடிய விழிகளுடன் ஓவியமாய் நிற்பவளைப் பார்க்கப் பார்க்கத் தெவிட்டவில்லை அவனுக்கு.

மெல்ல அவள் கன்னம் வருடி மென்மையாக முத்தமிட்டான். காதலேறிச் சொக்கிப் போன விழிகளுடன் அவனையே நோக்கியவளின் விழிகளிலிருந்து, தன் விழிகளைப் பிரிக்காமல் இமைக்க மறந்து நோக்கியவன்... முன்னே குனிந்து அவள் நெற்றியை இடித்துப் பின் தலையைச் சாய்த்து இயல்பாகச் சிவந்து போயிருந்த அவளது அழகான அதரங்களில் அழுந்த முத்தமிட்டான். நெற்றியைச் சுருக்கி இறுகக் கண்களை மூடித் திகைத்த அம்பரியும் அவனது அழுத்தமான முத்தத்தில் லயித்துப் போனாள்.

இரவையும், பனியையும், சூழலையும் மறந்து அவள் இதழ்களில் தன்னைத் தொலைத்து விட்டவன், அதிலிருந்து வெளியே வரவே இயலாது என்பதைப் போல் அவள் இதழ்களுடன் ஒன்றிப் போய் விட... அவன் தோள்களைப் பற்றித் தள்ளி அவனிடமிருந்து தன்னைப் பிரித்துக் கொண்டவள்... சட்டென மறுபுறம் திரும்பி நிற்க... "பரி..." என்றபடி இறுக அணைத்துக் கொண்டான்.

முற்றத்தின் வழியாகத் தெரிந்த நீல வானத்தில் அழகாக ஊர்வலம் சென்று கொண்டிருந்த நிலவு ஒரு



நிமிடம் நின்று அவர்களது எல்லையில்லாக் காதலின் அழகான பதிவைப் படம் பிடித்துக் கொண்டு சிரிப்புடன் நகர்ந்து சென்று விட... வேப்பமரத்தின் கிளைகள் சிலுசிலுவென ஆடித் தங்களது மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொண்டு ஆர்ப்பரித்தன. இவையெதையும் அறியாத அந்தக் காதல் பறவைகள் தங்களது முதல் நெருக்கத்தை, மனப் பெட்டகத்தில் சேகரித்து வைக்கப்பட வேண்டிய அழகான நிகழ்வுகளைத் தேடி அடுத்தடுத்துப் பயணித்துக் கொண்டிருந்தனர்.

குளிரிலும் அவனது செய்கையிலும் நடுங்கிப் போய் நின்றிருந்தவளின் இடையைப் பற்றித் தூக்கி நடந்து சென்று, திண்ணையில் அமர்ந்தவன் அவளைத் தன் மடியிலேயே அமர்த்திக் கொண்டான். அவனது கழுத்தைக் கட்டிக் கொண்டு அவனது தோள்களில் முகம் புதைத்திருந்த அம்பரி கண்களை மூடித் தன் மாமனின் அருகாமையை ரசித்துக் கொண்டிருக்க, தன் மடி மீது சாய்ந்திருந்தவளின் இடையை இறுகப் பற்றித் தன்னோடு அணைத்துக் கொண்டான் திவாகரன்.

இருவரும் அந்த அணைப்பை அனுபவித்துக் கொண்டு அந்த ஏகாந்த வேளையைக் குலைக்க மனமின்றி அமைதியாக அமர்ந்திருந்தனர். பின் மெல்லக் குனிந்து அவள் காதினுள், "நன்றி பரி. எனக்காக இந்தச் சேலையை அணிந்து கொண்டதற்கு..." என்று கூற, சிவந்து அவனுள்ளே புதைந்து, அவள் தன் பதிலைத் தெரிவிக்க... பின், "பிடித்திருக்கிறதா... இந்தப் புடவை?" என்று வினவினான்.

மெல்லத் தலையாட்டியவளிடம் மேலும் குனிந்து, "இந்த முத்தம்?" என்றபடி அவள் கழுத்தில் இதழ் பதிக்க, சிலிர்த்துத் தோளைச் சுருக்கி அவள் கூச்சத்துடன் நெளிய... விரிந்த புன்னகையுடன் அவள் தலையில் முத்தமிட்டான் அவன்.

அவன் சட்டையை இறுகப் பற்றி அவனுடன் ஒன்றிப் போயிருந்தவளைத் தன்னுடன் இறுக அணைத்து, "என் கண்ணே... உன்னை மட்டுமே என் வாழ்வின் ஒரே ஆதாரமாக எண்ணி நான் வாழ்ந்து கொண்டிருக்கிறேன். என் உயிர் உள்ளவரை உன்னை நேசிப்பேன். நான் எந்த விதத்திலும் கஷ்டப்படக் கூடாதென்று என்னைச் சுற்றி அரண் போல் நின்று என்னைக் காத்துக் கொண் டிருக்கும் உன்னை நான் என் கண்ணுக்குள் வைத்துப் பார்த்துக் கொள்ளப் போகும் அந்த நாளுக்காக நான் காத்துக் கொண்டிருக்கிறேன், கண்ணம்மா. நீ வேண்டும். என் வாழ்நாள் முழுமைக்கும்..." என்று உணர்ச்சி மிகுந்த குரலில் கூறியவனை நிமிர்ந்து நோக்கியவள்... தன்னோடு சேர்த்து இறுக அணைத்துக் கொண்டாள்.

அவள் அணைத்ததில் மேலும் மையலேறிப் போனவன்... அவள் முகம் எங்கும் தன் முத்தங்களைப் பதிக்க... அம்பரியின் முகம் செம்பருத்தியாய்ச் சிவந்து போனது.

பின் அவளைத் தூக்கிக் கொண்டு எழுந்தவன், "இதற்கு மேல் உன்னுடன் நானிருப்பது சரி வராது, கண்மணி!" என்றபடி அவள் அறையில் அவள் படுக்



கையில் படுக்க வைத்து விட்டு அவள் நெற்றியில் அழுந்த முத்தமிட்டு மனமின்றி விலகிச் சென்றான் திவாகரன்.

இருளில் நடந்து செல்லும் அவனது வரி வடிவத்தைக் கண்ட அம்பரிக்கு இனியெடுக்கும் பிறவி யெல்லாம் திவாகரனின் அம்பரியாகவே பிறக்க வேண்டு மென்று தோன்றியது.

## 12

கண்ணுக்கொரு வண்ணக்கிளி...
காதுக்கொரு கானக் குயில்...
நெஞ்சுக்கொரு வஞ்சிக் கொடி நீதானம்மா...!
தத்தித் தவழும் தங்கச் சிமிழே...
பொங்கிப் பெருகும் சங்கத் தமிழே...!
முத்தம் தர நித்தம் வரும் நட்சத்திரம்...
யாரோடு இங்கு எனக்கென்ன பேச்சு?
நீதானே கண்ணே நான் வாங்கும் மூச்சு!
வாழ்ந்தாக வேண்டும். வா வா கண்ணே...!

**இன்று...**

அன்றைய இரவையும் அது தந்து சென்ற அழகான நிகழ்வையும் இன்று நினைத்தாலும் திவாகரனுக்குச் சிலிர்த்துப் போகும். அவளது மென்மையும், வெட்கமும், சிணுங்கலும், சந்தோசமும் அவன் தீண்டலில் கரைந்து போகும் அவள் பெண்மையும் அவனை என்றும் மயங்கச் செய்யும். நாட்கள் மாதங்களாகவும், வருடங்களாகவும்

கழிய, இரண்டு வருடமாக மறு தேர்வு எழுதியும் அம்பரியும், தேன்மொழியும் பன்னிரண்டாம் வகுப்பில் தேர்ச்சி பெறாமல் கடனே என்று டுடோரியல் கல்லூரிக்குச் சென்று கொண்டு நாட்களைக் கடத்திக் கொண்டிருந்தனர்.

இந்த வருடமும் எப்படியேனும் தோல்வியுற்று மொத்தமாகப் படிப்பிற்கு முழுக்குப் போட்டு விட வேண்டுமென்பது இருவரின் குறிக்கோளாக இருந்தது.

தனது பட்டப் படிப்பை முடித்து விட்ட குமரன் தந்தைக்குச் சொந்தமான விவசாயத்தையே கையில் எடுத்துக் கொண்டு தொழிலில் மும்முரமாக இறங்கி விட்டான். அவ்வப்போது தேன்மொழியிடம் வம்பு செய்து கொண்டு அவளை அழ வைப்பதையும் அவன் கைவிடவில்லை.

தனது முதுகலைப் படிப்பிலும் முதல் வகுப்பில் தேர்ச்சி பெற்ற திவாகரன் மாணிக்கத்துடன் விவசாயத்தில் ஈடுபட்டபடி வேலைக்கு முயற்சி செய்து கொண்டிருந்தான். அரசுப் பணியிடங்களுக்கும், கல்லூரிகளுக்கும் விண்ணப்பித்திருந்தான்.

நான்கு மணிக்கு மாமன் சொன்னபடி தேங்காய் குடவுனுக்கு வந்து சேர்ந்த திவாகரன், தனது வாழ்க்கையின் பழைய அத்தியாயங்களைப் புரட்டிப் பார்த்தபடி அங்கே நிறுத்தி வைக்கப்பட்டிருந்த டிராக்டரின் மீது சாய்ந்திருந்தான். விசித்திரமான வாழ்க்கை! வினோதமான உறவுகள்! தன் வாழ்வின் ஆணி வேராகத் திகழ்ந்த அன்னையை இழந்து உறவுகளுக்கு மத்தியில் அநாதை



யாக நின்று, போக்கிடமற்றுத் தவித்து, எதற்கு உயிருடன் இருக்கிறோம் என்று தெரியாமலே கதியற்றுத் திரிந்தவனைத் தன் மாசற்ற அன்பினால்.. அளவில்லாக் காதலினால் உயிர்ப்புறச் செய்தாளே அம்பரி!

அன்னைக்குப் பிறகு அவள்தானே அவனது வாழ்வின் ஆதாரம்? அறியாத வயதிலிருந்து கொள்ளை அன்பைக் காட்டி அவனுக்கு உந்து சக்தியாக இருந்து வருகிறாளே...!

அவனது உயிராகவும், சுவாசமாகவும் மாறிப் போனாளே...! அவளில்லாது ஒரு நிமிடத்தையேனும் அவனால் கடத்த முடியுமா? மாமன் மகளை எண்ணியதும் இதழில் வசீகரப் புன்னகையும், மனதில் நிம்மதியும் நிறைய... வீட்டை நோக்கிப் புறப்பட்டான்.

நேரம் இரவு பதினொன்றைக் கடந்திருந்தபடியால் ஊரே துயிலில் ஆழ்ந்திருந்தது. அதிகாலையிலேயே மக்கள் வயல் வேலைகளுக்கும், கூலி வேலைகளுக்கும் கிளம்பி விடுவதால் எட்டு மணியானதுமே சிறுசுகளும், பெருசுகளும் போஜனத்தை முடித்துக் கொண்டு திண்ணையில் சாய்ந்து விடுவர்.

சிலுசிலு குளிர் காற்றில் மெல்ல சைக்கிளைச் செலுத்திக் கொண்டு வீட்டிற்குள் நுழைந்தவன் திண்ணையில் கொட்டாவியை வெளியிட்டபடி தூக்கக் கலக்கத்தில் அமர்ந்திருந்த அம்பரியைக் கண்டு சிரிப்புடன் அருகே சென்றான்.

வேப்ப மரத்தடியில் கயிற்றுக் கட்டிலில் வள்ளியம்மை படுத்திருப்பதைக் கண்டு விட்டு, அம்பரியிடம் சென்றவன்... "குள்ளச்சி, இங்கே ஏன்டி உட்கார்ந்திருக்கிறாய்? குளிரவில்லையா?" என்று அவள் தோளைப் பற்ற, பதறி விலகியவள்...

"என்னைத் தொடாதே மாமா. நா...நான் வீட்டிற்கு தூரம்!" என்று தயங்கியபடி கூறினாள். அவன் அதைக் கண்டு கொள்ளாமல் அவள் தலையைப் பற்றித் தன் மீது சாய்த்து, "தூரம் என்றால் ஒரு அரை கிலோ மீட்டர் தூரம் இருப்பாயா?" என்று கேலி செய்ய... "ச்சீ... போ மாமா. கேலி செய்யாதே!" என்று சிணுங்கிக் கொண்டே அவன் வயிற்றில் முகத்தை அழுந்தப் புதைத்தாள்.

"சரி, அப்படியானால் நானும் இங்கே திண்ணையிலேயே படுத்துக் கொள்கிறேன். நீ படு!" எனக் கூறி அவள் நெற்றியில் முத்தமிட்டவனிடம், "எனக்காக நீயும் ஏன் மாமா சிரமப்படுகிறாய்? நீ அறையிலேயே படுத்துக் கொள். அப்பத்தாதான் படுத்திருக்கிறதே..." என்றாள் அம்பரி.

"என்று உன்னைத் திண்ணையில் விட்டு விட்டு நான் உள்ளே படுத்திருக்கிறேன்? நீ படுத்துக் கொள். நான் உள்ளே சென்று என் படுக்கையை எடுத்துக் கொண்டு வருகிறேன்..." எனக் கூறி, அவளைப் படுக்க வைத்துப் போர்த்தி விட்டுத் தலையை வருடி விட்டு நகர்ந்தான். பின் தன் படுக்கையை எடுத்து வந்து திண்ணையில் சாய்ந்தவன் அம்பரியைக் கண்டபடியே உறங்கிப் போனான்.



மறுநாள் காலை குளித்துக் கிளம்பி வந்தவனிடம் மாணிக்கம், "திவாகரா! தேங்காய் குடவுனுக்குச் சென்று மீதி வேலைகளைக் கவனிப்பா. நான் மீனாட்சிபுரம் வரை சென்று விட்டு வருகிறேன்," என்று கூற, அவரிடம் தலையசைத்து விட்டு வெளியே வந்தான்.

"அ... இப்படிப் போடக் கூடாதுடா. சிலேட்டைக் கொடு. அக்கா சொல்லித் தருகிறேன்," எனக் கூறிப் பக்கத்து வீட்டுச் சிறுவனுக்கு அ, ஆ கற்றுக் கொடுத்துக் கொண்டிருந்தாள் அம்பரி. அதைக் கண்டு நக்கலாகச் சிரித்த திவாகரன், "குட்டிப் பையா! இந்தக்காவிடம் படித்தால் நீயும் ஒவ்வொரு வகுப்பையும் ஒன்பது முறை படிக்க வேண்டியதுதான்..." என்று கேலி செய்ய, அவனை முறைத்தாள் அம்பரி.

"குள்ளச்சி, என்னை முறைப்பதையெல்லாம் பிறகு பார்த்துக் கொள்ளலாம். நீ என்ன வகுப்பிற்குக் கிளம்பாமல் இங்கே உட்கார்ந்து கதையளந்து கொண்டிருக்கிறாய்? கிளம்புடி!" என்று விரட்ட... அவ்வளவு நேரமாக இருந்த மலர்ச்சி மாற... முகத்தைப் பாவமாக வைத்துக் கொண்டவள், "மாமா! எனக்கு ஒரே வயிறு வலியாக இருக்கிறது. அதனால் இன்று விடுமுறை எடுத்துக் கொண்டேன்," என்று கூறினாள்.

"இது ஒரு சாக்கு உனக்கு. என்னடி? நான் போன பிறகு இவனுடன் சேர்ந்து கொண்டு நொண்டி ஆடுவாய். என்ன?" என்று அதட்டியவன், "கிளம்பு, கிளம்பு..." எனக் கூற, தலையைச் சொறிந்து கொண்டு, 'விட்டு விடேன்

ப்ளீஸ்...' என்கிற முகபாவத்துடன் நின்றாள் அம்பரி. அப்போது ஆபத்பாந்தவனாக அவள் முன்பு தோன்றிய அப்பத்தா, "விடு கண்ணு. அவதான் சௌரியமில்லைங் கிறாள்ல... படுத்துத் தூங்கட்டும்." என்று கூற, "ம்ம்..." என முறைத்து விட்டுச் சென்று விட்டான் திவாகரன்.

அவன் சைக்கிளைத் திருப்பிக் கொண்டு வாச லுக்குச் சென்ற வேளை... புதிதாக ஒருவருடன் தேன் மொழி வீட்டிற்குள் நுழைந்தாள். யார் இவர் என்கிற பார்வையோடு மூவரும் அவளைப் பார்க்க, "அம்மத்தா! இவர் நம் வீட்டு விலாசத்தைக் கூறிப் பக்கத்துத் தெருவில் விசாரித்துக் கொண்டிருந்தார். உன்னைப் பார்க்கத்தான் வந்திருக்கிறாராம். அதனால்தான் அழைத்து வந்தேன்." எனக் கூறினாள்.

"அப்படியா!" என்றபடி அருகே வந்த வள்ளியம்மை, "யார் தம்பி நீங்கள்?" என்று விசாரிக்க... அவரோ அருகே நின்றிருந்த திவாகரனின் முகத்தைக் கண்டு, "நீ நீ... திவாகரன்தானே தம்பி?" என்று விசாரிக்க...

சற்றுத் திகைத்த திவாகரன், ஆமாம்... என்று தலையசைத்தபடி அம்மத்தாவின் முகத்தைப் பார்த் தான். அனைவரும் கேள்வியைத் தாங்கிய முகத்துடன் நின்றிருப்பதைக் கண்ட அந்த மனிதர், "என்னை அடை யாளம் தெரியவில்லையா, திவாகரா? நான் உன் பெரியப்பா திருமலை..." என்று கூற, "ஓ!..." என்ற திவா கரனுக்கு அதற்கு மேல் என்ன கூறுவதென்று புரிய வில்லை.



தந்தையும், தாயும் உயிருடன் இருந்தபோது வந்து எட்டிப் பார்க்காதவர், இத்தனை வருடங்கள் கழிந்த பின்பு இப்போது எதற்காக வந்திருக்கிறார் என்ற யோசனை யுடன் நின்றவனைக் கண்ட அம்மத்தா, "என்ன கண்ணு அமைதியா நின்னுட்ட? உள்ள கூப்பிடு. வாப்பா தம்பி. உள்ள வா..." என்று நடத்திச் சென்றார். "யாரு?" என்றபடி வெளியே வந்த மாணிக்கத்திடமும், தன்னை அவர் அறிமுகப்படுத்திக் கொள்ள, உள்ளே சென்றமர்ந்தார்.

திவாகரனின் உறவுக்காரர் என்றறிந்ததுமே, கோதுமையைத் தூக்கிக் கொண்டு வெளியே வந்த லட்சுமி, "மாவு திரிக்க வேண்டும்..." என்று அறிவித்து விட்டு வந்தவரை வாவென்று கூட அழைக்காமல் வெளியேறி விட்டாள். அவள் சென்றதும் சங்கடமாக முறுவலித்த மாணிக்கம், "அம்மா, காபி கலக்கிக் கொண்டு வாம்மா!" என்று தாயை ஏவ, வள்ளியம்மை காபியோடு வந்தார். அவரிடம் மேலும் சிறிது நேரம் பேசி விட்டுப் பின், "நான் அவசரமாகப் பக்கத்து ஊர்வரை செல்ல வேண்டும். நீங்கள் இருந்து மதியச் சாப்பாட்டையும் சாப்பிட்டு விட்டுத் தான் செல்ல வேண்டும்..." என்று அன்புக் கட்டளையிட்டு விட்டு வெளியேறினார்.

அவர் சென்றதும், வள்ளியம்மையிடம், "திவாகரன் எங்கே அத்தை? என்ன செய்கிறான் அவன்? படிக் கிறானா? வேலை பார்க்கிறானா?" என்று விசாரித்தார் திருமலை. இந்த ஆள் உள்ளே நுழைந்ததும் எரிச்சலுற்ற திவாகரன், இவரிடம் பேச நமக்கென்ன இருந்து விடப்

போகிறது என்று நினைத்து அம்பரியிடம் விடைபெற்றுக் கிளம்பி விட்டான்.

மாமன் சென்றதும், தேனிடம் திரும்பிய அம்பரி, "தேனு, சித்தி வீட்டில் இன்று மீன் குழம்பும், நண்டு வறுவலும்... வா. சென்று ஒரு பிடி பிடித்து விட்டு வரலாம்," எனக் கூறித் தேன்மொழியை இழுத்துக் கொண்டு குமரன் வீட்டிற்குப் புறப்பட்டு விட்டாள் அம்பரி.

"இதோ பாரடி. அந்தக் களவாணிப் பயல் வீட்டிலிருந்தால் நான் வாசலோடு வந்து விடுவேன்," என்று பொருமியபடியே அவளுடன் நடந்தாள் தேன்மொழி.

அவர்கள் சென்று விட்டதைக் கண்டு வள்ளியம்மை திவாகரனைப் பற்றிய விவரங்களைத் திருமலையிடம் கூறினார். "காலேஜ் படிப்பையெல்லாம் முடிச்சுட்டான். இப்ப வேலைக்கு முயற்சி பண்ணிட்டு இருக்கான். அப்படியே ஒரு பக்கம் அவன் மாமன் கூடச் சேர்ந்து காடு, கழனியெல்லாம் பார்த்துக்கிட்டு இருக்கான் தம்பி. மரகதம் கல்யாணத்தப்ப உங்களைப் பார்த்தது. அதுக்கப்புறம் பார்க்குற சந்தர்ப்பம் அமையல. உங்களுக்கு எத்தனை பிள்ளைக? என்ன பண்ணுதுக?" என்று விசாரிக்க... அவர் முகமோ ஒரே நிமிடத்தில் சொல்லொணா வேதனையுடன் வாடிப் போனது.

"அந்தக் குடுப்பினை எனக்கும், என் மனைவிக்கும் இல்லாமல் போய் விட்டது அத்தை. புத்திர பாக்கியமில்லாத தரித்திரத் தம்பதி நாங்கள். மரகதத்திற்கும் என் தம்பிக்கும் நான் செய்த பாவம் ஏழேழு ஜென்மத்திற்கும்



என்னைப் பாதிக்கும் என்றே தோன்றுகிறது அத்தை. உங்களிடம் என் மனதிலிருப்பதைப் பகிர்ந்து கொண்டாலேனும் என் கவலை சற்றேனும் குறையும்..." என்றவர் தொடர்ந்து.

"செல்வச் செழிப்பு மிக்க என் தந்தைக்கு இரண்டு கண்களைப் போல் மகன்களாக நாங்கள் பிறந்தோம். என் தம்பி - திவாகரனின் தந்தை - சற்று வெகுளியானவன். எதற்கும் ஆசைப்படாதவன். எனக்காக உயிரையும் கூடக் கொடுப்பான். அப்பேர்ப்பட்டவனுக்கு என் மனைவியின் பேச்சைக் கேட்டுக் கொண்டு துரோகம் செய்து விட்டேன் அத்தை. என் தந்தையின் சொத்துக்கள் அனைத்தையும் நானும், என் வாரிசுகளும் மட்டுமே அனுபவிக்க வேண்டுமென்று எண்ணிய என் மனைவி, என் தம்பிக்குச் சேர வேண்டிய நியாயமான சொத்துக்களைக் கூட அவனுக்குத் தர விடாமல் தடுத்தாள். என் அன்னை, தந்தை இறந்த பின் அவனையும், மரகதத்தையும் வீட்டை விட்டுத் துரத்தினாள்.

"யாருடைய ஆதரவுமற்று இருவரும் கஷ்டப்பட்ட போதும், கடைசியில் மரகதம் தன் உயிரை விட்டு - திவாகரன் அநாதையாகிய பின்பும் கூட, என் மனைவி அவர்களுக்குச் சேர வேண்டிய சொத்தைத் திருப்பி அளிக்க முன்வரவில்லை.

"சொத்துக்களனைத்தையும் தானே அனுபவிக்க வேண்டுமென்ற கெட்ட எண்ணத்தில் திரிந்ததாலோ என்னவோ, எங்களுக்குப் பிள்ளையே இல்லாமல்

போனது. ஏறாத கோவிலில்லை. பார்க்காத மருத்துவர் இல்லை. கடைசியில் வேதனையில் நொந்து என் மனைவி சென்ற வருடம் இறந்தும் போனாள். எங்கய்யனிடம் இருந்த சொத்துக்களை நானும் பெரிதாக விரிவுபடுத்தினேன், அத்தை. என்ன வளர்த்து என்ன பிரயோஜனம்? அனுபவிக்கத்தான் வாரிசு ஏதுமில்லையே...?" என்று அவர் கவலை கொண்டார்.

அவர்களுக்குச் சேர வேண்டிய சொத்துக்களை அளித்திருந்தால், இந்நேரம் மகளும், மருமகனும் மகிழ்ச்சியாக இருந்திருப்பார்களே. குறைந்த பட்சம் மரகதம் இறந்த பின்னேனும் இந்த ஆள் உதவி செய்ய முன் வந்திருந்தால் திவாகரன் இத்தனை அவமானப் பேச்சுகளுக்கு ஆளாகியிருக்க மாட்டானே... என்று நினைத்து அப்பத்தாவிற்கு அந்த ஆள் மீது கோபமாக வந்தாலும், பாவம்! மனிதர் செய்த தப்பை உணர்ந்து, மனைவியையும் இழந்து தவித்துக் கொண்டிருக்க, இந்த நேரத்தில் சண்டையிடுவதிலும், சத்தம் போடுவதிலும் என்ன பயன் இருக்கப் போகிறது என்று தன் மனதைச் சாந்தப்படுத்திக் கொண்டு அவரைச் சமாதானப்படுத்தினார்.

பின் சிறிது இடைவெளி விட்டு, "இப்போது நான் தேடி வந்ததன் காரணத்தைச் சொல்லி விடுகிறேன், அத்தை. என் தம்பியும், அவன் மனைவியும் உயிரோடு இருந்தபோது செய்ய முடியாத விசயத்தை இப்போதேனும் செய்து முடிக்க வேண்டுமென்று விரும்புகிறேன். நான் செய்த பாவங்களெல்லாம் கரைய வேண்டுமானால் திவாகரனுக்கு அவனுக்குச் சேர வேண்டிய சொத்தை



ஒப்படைக்க வேண்டும். அவனுக்கு ஒப்படைத்தது போக என் பங்குச் சொத்துக்களை அநாதை ஆசிரமத்திற்கு எழுதி வைத்து விட்டு, நானும் ஏதேனும் ஆசிரமத்தில் சேர்ந்து விடலாமென்று இருக்கிறேன், அத்தை!" என்றார்.

அவர் இப்படிக் கூறியதும் மலைப்பாகவும், திகைப்பாகவும் இருந்தது, வள்ளியம்மைக்கு. யாருமற்ற அநாதைச் சிறுவனாக இந்த வீட்டினுள் நுழைந்தவனை நாதியற்றவன், போக்கிடம் இல்லாதவன் என்கிற ஒரே காரணத்திற்காகத்தான் இன்றுவரை எள்ளி நகையாடிக் கொண்டிருக்கிறாள், லட்சுமி.

இப்போது திடீர் வரவாக அவனது பாட்டன் வழிச் சொத்துக்கள் அவன் கைக்கு வந்து சேர்ந்தால் நிச்சயம் இதையும் தன் கைக்கு மாற்றிக் கொள்ளத்தான் பார்ப்பாள். அதனால் திவாகரனுக்கு ஒரு வேலை கிடைத்து அவன் சுயமாகச் சம்பாதித்துத் தன்னைக் காப்பாற்றிக் கொள்ளும் நிலை வந்தவுடன், இந்தச் சொத்துக்களைப் பற்றிய விவரங்களைக் கூறி விட வேண்டியதுதான் என்று தீர்மானித்துக் கொண்ட வள்ளி யம்மை, திருமலையிடம் தன் மனதிலிருப்பதைக் கூறினார்.

"நீங்களே பார்த்தீர்கள்தானே தம்பி? என் மருமகள் நடந்து கொண்ட முறையை! என்று திவாகரன் இந்த வீட்டிற்குள் ஆதரவு தேடி நுழைந்தானோ, அன்றிலிருந்து அவள் அவனுக்குச் செய்யாத கொடுமை இல்லை. ஒரு வேளை இந்த வீட்டில் அவன் நிம்மதியாகச் சோறு தின்றதில்லையப்பா. ஏகப்பட்ட நெருக்கடிக்கிடையில்தான் அவன்

படிப்பை முடித்தான். இப்போது இந்தச் சொத்து விசயம் அவளுக்குத் தெரிய வந்தால்... திவாகரனுக்கு எந்தப் பலனும் இல்லாமற் போய்விடும். அதனால் இப்போதைக்கு இந்த விசயத்தைப் பற்றி திவாகரன் உள்பட யாரிடமும் கூற வேண்டாம். அவன் வேலைக்குச் சென்று ஓரளவு தன்னை நிலைப்படுத்திக் கொண்ட பின்பு இதைப் பற்றிக் கூறினால் நாம் எதிர்பார்த்தபடி அவனுக்கு உபயோகமாக இருக்கும். என்ன சொல்கிறீர்கள்?" என்று வினவ, திருமலைக்கும் அது சரியென்று பட்டதால், அவரும் வள்ளியம்மையின் திட்டத்திற்கு ஒப்புதல் தெரிவித்தார்.

பேரனின் வாழ்வில் இத்தனை நாட்களாக மூடிக் கிடந்த கதவுகள் ஒரே நேரத்தில் சந்தோச ஆரவாரத்துடன் திறந்து விட்டதைக் கண்டு, வள்ளியம்மைக்கு நிம்மதியாக இருந்தது. இனி அவனை யாரும் சொத்து பத்தில்லாத பரதேசியென ஏச முடியாது. அவன் தாய் - தந்தை செய்த புண்ணியம் என்றோ கைவிட்டுப் போன சொத்து இன்று மீண்டும் அவனைச் சென்றடையப் போகிறது என மகிழ்ச்சியுற்றவர் திருமலையை வழியனுப்பி வைத்தார்.

அம்பரியின் நண்டு வறுவல் ஆசைக்காக அவளோடு குமரனின் வீட்டிற்குள் அடியெடுத்து வைத்த தேன்மொழிக்கு ஏகத்திற்கும் தயக்கம்தான். குமரன் இருக்கிறானா என்று சுற்றும் முற்றும் பார்த்தபடி அம்பரியின் கையைப் பிடித்துக் கொண்டு உள்ளே நுழைந்தாள். அவள் எதிர்பார்ப்பைப் பொய்யாக்காமல் முற்றத்தில் அமர்ந்து டி.வி. பார்த்தபடி தன் காலை உணவை வளைத்துக் கட்டிக் கொண்டிருந்தான் குமரன்.



"தேனு, நீ உள்ளே போய்ச் சித்தியிடம் நான் வந்திருப்பதைச் சொல். நான் உள்ளே வரக் கூடாது. அதனால் திண்ணையில் அமர்ந்து கொள்கிறேன்," எனக் கூறி, அங்கேயே அமர்ந்து கொண்டாள். அவளிடம் சரியெனத் தலையாட்டிய தேன்மொழி மெல்ல உள்ளே அடி எடுத்து வைத்து வீட்டைச் சுற்றி நோட்டம் விட்டாள்.

சாப்பாட்டை முடித்துக் கொண்டு தட்டுடன் எழுந்த குமரன் இவளைக் கண்டு 32 பற்களையும் காட்டி இளித்து, "ஹேய் இடுப்பழகி... என்னைப் பார்க்கத்தான் வந்தாயா? சாரிடி, மாமா வேலையில் கொஞ்சம் பிஸியாக இருப்பதால் முன்னைப் போல் உன்னைப் பார்க்க வர முடிவதில்லை. அதனால்தான் நீயே என்னைத் தேடி வந்து விட்டாயா? மாமா மேல உனக்கு எவ்வளவு பாசம்...!" என்றபடி ஒரு கையால் அவள் இடையைப் பற்றித் தூக்கிச் சுற்றினான்.

ஒரு கையில் சாப்பாட்டுத் தட்டுடனும், மறுகையில் அவளையும் ஏந்திக் கொண்டு நடு வீட்டில் சுற்றியவனைக் கண்டு பதறியவள், "டேய்... இறக்கி விடுடா. அத்தை பார்த்தால் வம்பாகி விடும். வெளியே அம்பரி வேறு உட்கார்ந்திருக்கிறாள். ரௌடி. இறக்கி விடுடா!" எனப் போராடித் துள்ளி விலகி நின்றவளின் கன்னத்தைக் கிள்ளி, "இருடா கண்ணழகி. நான் கையைக் கழுவி விட்டு வந்து உன்னை இரண்டு கையால் தூக்குகிறேன்..." எனச் சொல்லி விட்டுச் செல்ல... "ச்சே.." என்று அவன் கையைத் தட்டி விட்டுக் கோபமும், எரிச்சலுமாய் அத்தையை நோக்கிச் சென்றாள்.

அவன் மீதிருந்த கோபம் அனைத்தையும் குரலில் தேக்கி, "அத்தை..." என்று கூச்சலிட்டவளைக் கண்டு பதறித் திரும்பிய குமரனின் தாய் வைஜெயந்தி, "அடிப் போக்கத்தவளே! நீதானா? இங்கேதானேடி நிற்கிறேன். ஏன் இப்படிக் கத்துகிறாய்?" என்று கடிந்து கொள்ள... "ம்... உன் மகனிடம் கத்த முடியாமல்தான் உன்னிடம் கத்துகிறேன். இந்தா அத்தை, உன் மகனுக்கு என்ன காதல் மன்னன் அஜீத்குமாரென்று நினைப்பா? எப்போது பார்த்தாலும் என்னிடம் ஜொள்ளு விட்டு ஆத்திரத்தைக் கிளப்பிக் கொண்டே இருக்கிறான்? இங்கே பார் அத்தை, எனக்கு இதெல்லாம் சுத்தமாகப் பிடிக்கவில்லை. உன் மகனிடம் பேசி அவன் காலை ஒடித்து அடுப்பில் வைக்கப் பார். பொறுக்கிப் பயல்!" என்று முணுமுணுத்துக் கொண்டிருந்தவளின் அருகே வந்து,

"யார் காலை ஒடிக்க வேண்டும் காதழகி?" என்று அவள் தோளில் கை போட, "அய்யோ... அத்தை முன்பு இப்படி நடந்து கொள்கிறானே..." என்று படபடத்து வேகமாக அவனைத் தாண்டிச் சென்றாள்.

"அத்தை! உன் மகன் பண்ணுகிற சேட்டையெல்லாம் கவனிக்காமல் அப்படி என்ன சமையலைச் செய்கிறாய் நீ?" என்று இருபொருள் பட வினவியவளிடம், "நீங்கள் இருவரும் அடித்துக் கொள்வது எனக்கென்ன புதிதாடி? எப்படியும் அவனைக் கட்டிக் கொண்ட பின்பு என்னிடம்தான் பஞ்சாயத்திற்கு வரப் போகிறாய். அதுவரையேனும் என்னை நிம்மதியாக இருக்க விடேன்." என்று வைஜெயந்தி கூற, வாயைப் பிளந்து நின்ற



தேன்மொழியைக் கண்டு வெற்றிச் சிரிப்புச் சிரித்தான் குமரன்.

இவன் கண்ணுல கொள்ளிக்கட்டையை வைக்க என்று மனதுக்குள் சபித்துக் கொண்ட தேன்மொழி, "உன் மகனை நம் தெருவிற்குக் குப்பை அள்ள வரும் பொன்னம்மா கூடக் கட்டிக் கொள்ளாது அத்தை. இவனை நான் கட்டிக்கணுமா? அதெல்லாம் நடக்காத காரியம்...!" எனத் தாவணியைச் சுற்றியபடி கூறியவளைக் கண்டு, புசுபுசுவெனக் கோபம் வந்தது குமரனுக்கு.

உள்ளே நுழைந்து தண்ணீர் எடுக்கும் சாக்கில் அன்னை அறியாத வண்ணம் அவள் இடுப்பில் நறுக்கெனக் கிள்ளி வைத்து, "இனியொரு முறை கட்டிக்க மாட்டேன் என்றாயானால் இத்தனை நாளாக மிரட்டிக் கொண்டிருந்தது மாறி நிஜமாகவே தாவணியைக் கழட்டி விடுவேன்டி!" என்று பயமுறுத்தி விட்டுச் சென்றான்.

"ரெளடி, ரெளடி!" என்று முனகியவளிடம், "அம்பரி உன்னோடு வருகிறேன் என்றாளே கண்ணு... வரவில்லையா?" என்று வைஜெயந்தி வினவ, "அய்யோ, அத்தை! உங்கள் மகன் செய்த குளறுபடியில் நான் அம்பரியை மறந்தே போனேன். அவள் வீட்டிற்குத் தூரம். அதனால் வாசல் திண்ணையில் உட்கார்ந்திருக்கிறாள். வா அத்தை... அவள் என்னைத் திட்டப் போகிறாள்!" என்று புலம்பியபடி அவரை இழுத்துக் கொண்டு வெளியே வந்தாள்.

அம்பரியும், வைஜெயந்தியும் பேசுவதைக் கவனிக்காத குமரன் தேன்மொழியை முறைத்த வண்ணமிருக்க...

அவள் இரண்டு, மூன்று முறை அவன் முகத்தைப் பார்த்து விட்டு, 'நியாயமாகப் பார்த்தால் நாம்தானே முறைக்க வேண்டும். இவனுக்கென்ன வந்தது?' என்றெண்ணிக் கொண்டவள்... இந்தப் பரதேசி சீக்கிரம் இடத்தைக் காலி செய்தால் போதும் என்று மனதுக்குள் அவனைத் திட்டிக் கொண்டாள்.

அவள் மனதைப் படம் பிடித்தாற் போல் அவனும், 'நீ நினைப்பது நடக்காதுடி!' என்றெண்ணிக் கொண்டு, "ம்க்கும்... ம்க்கும்..." என்று இருமல் வந்தது போல் நடித்து, "தேனு! கொஞ்சம் தண்ணீர் கொண்டு வாடி!" என்று கெஞ்ச, அவளும் அய்யோ பாவம் என எண்ணி வேகமாக உள்ளே ஓடிச் சென்றாள்.

அவள் சென்றதும் அம்பரியுடன் படு தீவிரமாகப் பேசிக் கொண்டிருந்த அன்னையைக் கண்டுவிட்டு நைசாகத் தானும் உள்ளே சென்றான்.

சொம்பில் தண்ணீரை மொண்டு கொண்டிருந் தவளின் பின்னே சத்தமில்லாமல் சென்று நின்றவன், அவள் வாயைப் பொத்தித் தன் முன்னே திருப்பினான். பயந்து போன தேன்மொழி, "ம்...ம்...ம்..." எனக் கண்களி லேயே கோபத்தையும், கெஞ்சலையும் வெளிப்படுத்த... "என்ன? என்ன... ம்...? நீ பேசுவது சரியாகக் கேட்க வில்லையேடி!" என்றபடி,

அவன் மேலும் அருகே வர... கையிலிருந்த சொம்பினால் அவன் மண்டையைப் பிளக்கக் கையை ஓங்கி விட்டாள் தேன்மொழி.



அவள் ஓங்கிய கையை வளைத்துப் பிடித்துக் கொண்டவன், "என்னையே அடிக்கப் பார்க்கிறாயா? உனக்கு மிகவும் திமிராகிப் போனதுடி. மூன்று வருடமாக உன் பின்னே அலைந்து பித்தனாகி நான் திரிந்து கொண்டிருக்க... நீ என்னைத் திருமணம் செய்ய மாட்டே னென்று ஊர் முழுக்கத் தம்பட்டம் அடிக்கிறாயா? இப்போது இங்கே நடக்கவிருக்கும் நிகழ்விற்குப் பின்னர் நீ என்னுடனான திருமணத்தை மறுக்கவே முடியாது." என்று கூறியபடி, அவள் முகத்திற்கு வெகு அருகே வந்தவனைக் கண்டு நடுங்கிப் போன தேன்மொழி கண்களை இறுக மூடிக் கொண்டாள்.

நெற்றியிலும், நாசியிலும் முத்து முத்தாக வியர்த் திருக்க புருவத்தைச் சுருக்கிக் கண்களை இறுக மூடி, அவள் நின்றிருந்த கோலம் அவனுக்குச் சிரிப்பாக வந்தது. அருகில் வந்தும் அவன் ஒன்றுமே செய்யாமலிருப்பதை எண்ணி வியந்து, அவள் தன் கண்களைத் திறக்க...

மேலும் சிரித்து, முன்னே சரிந்து அவள் கன்னத்தில் அழுந்த முத்தமிட்டான் அவன். ஒரு நொடி ஸ்தம்பித்துப் போனவள், திகைத்து, திறந்த வாயுடன் அவன் முகம் பார்க்க... அவனோ மேலும் சிரித்து மறுகன்னத்திலும் தன் இதழ்களைப் புதைத்தான்.

இம்முறை தானும், அவனும் நின்றிருந்த நிலையும், அவன் செய்த காரியமும் மூளையில் பதிவாகி விட சுய நினைவிற்கு வந்து, "போ... போடா..." என்று அவனை விலக்கித் தள்ளி விட்டுப் பொங்கி வந்த அழுகையுடன்,

"அத்தை..." என ஓடிச் சென்றாள். "போடி, போடி, போடி... உன்னை வழிக்குக் கொண்டு வர வேண்டுமானால் இதைப் போன்ற ரிஸ்க்கான காரியங்களைச் செய்துதான் ஆக வேண்டும்," என்று தனக்குத் தானே அவன் கூறிக் கொண்டாலும், அவளது வழு வழு கன்னங்களில் தன் இதழ்கள் அழுந்திய வேளையை எண்ணிச் சிலிர்த்துக் கொண்டான்.

ஒன்றுமறியாதவன் போன்று தண்ணீர் சொம்பைக் கையில் ஏந்திக் கொண்டு. "என்ன? என்னவாயிற்று அம்மா... தேனு ஏன் அழுகிறாள்?" என்று விசாரிக்க, "அடப்பாவி!" என்று பல்லைக் கடித்த தேன்மொழி, வேகமாக அத்தையின் புறம் திரும்பி,

"அத்தை... இவன்... இவன்..." என்று ஆரம்பித்து முடிக்க முடியாமல் திணற... குமரன், "ஹா ஹா ஹா..." எனப் பேய்ச் சிரிப்பு சிரித்து. "சமையலறையில் ஒரு கரப்பான் பூச்சியைப் பிடித்து அவள் மீது போட்டு விட்டேனம்மா. அதனால்தான் பயந்து போய் அழுது ஓடி வந்து விட்டாள்!" என்று சமாளித்து வைத்தான்.

"அவளை வம்பிழுப்பதை நிறுத்தவே மாட்டியாடா?" என்று கத்திய அம்பரியிடம், "ஏய், நீ சும்மா இருடி. இப்படி ஏதும் செய்து வைத்தால்தான் உன் தோழி வளர்வாள்!" என்று அவளைப் பார்த்துக் கொண்டே கூற,

"அப்படி என்னடா செய்து வைத்தாய்? கரப்பான் பூச்சி... அது இது என்றதெல்லாம் அத்தைக்காகத்தானே? என்னிடம் உண்மையைச் சொல்லடா!" என்று அம்பரி



அவனை நச்சரிக்க... "ஆமாம், அவளுக்குக் கொஞ்சம் அறிவுரை கூறினேன், வளர்வதற்கு. கூறினேன் என்பதை விடச் செய்தேன் என்றுதான் சொல்ல வேண்டும். என்ன தேனு?" என்று வினவ... அவளோ கோபத்திலும், வெட்கத்திலும் சிவந்த முகத்துடன் மறுபுறம் திரும்பி நின்று கொண்டாள்.

"அப்படி என்ன அறிவுரை? எனக்கும் சொல்லடா. சரி. செய்யடா..." என்ற அம்பரியிடம், "ச்சீ, ச்சீ... ஏய்... முட்டாள் மாதிரி பேசாதேடி. இது அவளுக்கு மட்டும்தான்!" என்று படபடவெனப் பொரிந்தவனைக் கண்டு விழி விரித்து, "அது என்னடா அவளுக்கு மட்டும்...?" என்று வினவியவளிடம், "ஏனென்றால் நீ என் தங்கை. அவள் என் அத்தை மகள்!" என்று அவன் டன் டன்னாக வழிந்தபடி பதில் கூற, "ஓ!..." எனத் தலையை ஆட்டி ராகம் பாடிய அம்பரிக்கு ஏதோ புரிவது போலிருக்க... நமுட்டுச் சிரிப்புடன் தேன்மொழியின் தோளை இடித்தாள்.

## 13

பனிக் காலத்தில் நான் வாடினால்...
உன் பார்வைதான் என் போர்வையோ...!
அணைக்காமல் நான் குளிர் காய்கிறேன்...
அதற்காகத்தான் மடி சாய்கிறேன்...
மடி என்ன உன் மணி ஊஞ்சலோ...
நீதான்... இனி நான்தான்...!

"இத்தனை வருசத்திற்குப் பிறகு என்னத்திற்கு அந்த ஆள் இந்த அநாதைப் பயலைத் தேடி வந்தாராம்?" எனத் தன் மாமியாரிடம் கேள்வி கேட்டபடி பாத்திரம் கழுவிக் கொண்டிருந்தாள் லட்சுமி. அவள் அநாதைப் பயல் என்றதுமே கோபத்தில் பொங்கி விட்ட வள்ளியம்மை, "யாருடி அநாதை? அப்பன் ஆத்தா இல்லாதவன் அநாதைனா... நீயும்தான்டி அநாதை. இன்னொரு தடவ என் முன்னாடி என் பேரனைத் தப்பாச் சொன்ன, சங்கை அறுத்துருவேன்..." என்று கூறி விட்டு விறுவிறுவென உள்ளே சென்று விட்டார்.

'பேரனைப் பற்றிப் பேசியதும் கிழவிக்குக் கோபத்தைப் பார்! இன்னும் எத்தனை நாட்களுக்கு இந்த ஆட்டம்... என்று நானும் பார்க்கிறேன்!' என்று கறுவிக் கொண்டவள்... எப்படியோ இந்த தரித்திரம் இந்த வீட்டை விட்டு ஒழிந்தால் போதுமென்று எண்ணிக் கொண்டு நகர்ந்தாள்.

அடுத்த ஒரு வாரத்தில் பக்கத்துத் தெரு முத்து மாரியம்மன் கோவில் திருவிழாவென ஊர் மக்கள் அனைவரும் காப்புக் கட்டிக் கொண்டு விரதம் இருக்கத் தொடங்கினர். அம்பரியும், தேன்மொழியும் வள்ளி யம்மையின் அறிவுரையின் பேரில் முளைப்பாரி எடுக்கத் தீர்மானித்தனர். "சீக்கிரம் கல்யாணம் ஆகணும்னு வேண்டிக்கிட்டு முளப்பாரியைத் தூக்குங்கடி குமரிகளா! நல்லது நடக்கட்டும்..." என்று அவர் கூறிச் செல்ல... "எனக்கெல்லாம் கல்யாணம் வேண்டாம். அந்த ரெளடிப்



பயலோட என்னால் குடும்பம் நடத்த முடியாது." என்று பொரிந்த தேன்மொழியைச் சமாதானப் படுத்தி முளைப் பாரி எடுக்க ஒப்புக் கொள்ள வைத்தாள் அம்பரி.

மொச்சை, தட்டாம்பயறு, பாசிப்பயறு போன்ற பயறு வகைகளை ஒரு மண் சட்டியில் விதைத்து ஏழு நாட்களுக்குத் தண்ணீர் ஊற்றி வீட்டில் வளர்ப்பர். அந்த ஏழு நாட்களில் அது நன்றாகச் செழித்து வளர்ந்து விட்டால் அந்த வருடம் நாம் நினைப்பது நடக்கும் என்பது மக்களின் நம்பிக்கை. அம்பரியும், தேன்மொழியும் அவரவர் வீட்டில் பூஜை செய்து மண் சட்டியில் பயறு வகைகளைத் தூவித் தண்ணீர் தெளித்து வேண்டிக் கொண்டனர்.

"தெய்வமே, என் மாமாவிற்கு நல்ல வேலை கிடைத்து அவர் நல்ல நிலைக்கு வர வேண்டும். அவனை ஏசிச் சிரித்த இந்த உலகம் அவனைத் திரும்பிப் பார்க்கும் நிலைக்கு வர வேண்டும். என் ஆயுள் முழுதிற்கும் அவருக்குச் சேவை செய்யும் பாக்கியமும் எனக்குக் கிடைக்க வேண்டும்..." என்று தனது இரண்டு கோரிக்கை களையும் அம்மனிடம் சமர்ப்பித்து விட்டு எழுந்தாள்.

"அம்பரி, என்ன செடி வளர்க்கிறாயா? அதை ஏன் பூஜை அறையில் வைத்திருக்கிறாய்? வெளியே வை!" என்று கூறிக் கொண்டே வீட்டினுள் நுழைந்தான் குமரன். "டேய் குமரா, அது செடி இல்லைடா. முளைப்பாரி. உன் ஆள் கூட வேண்டியிருக்கிறாளே! நீ பார்க்கவில்லையா?" என்றவளிடம், "ஓ! அவள் இந்த மாதிரி வேலையெல்லாம்

கூடச் செய்கிறாளா! அம்பரி! அம்மனிடம் வேண்டுவ தற்குப் பதில் என்னிடம் வேண்டினால் கல்யாணம் செய்து கொள்ள மாட்டேனா? இதை அவளுக்கு நீ என் தங்கை யாக எடுத்துச் சொல்..." என்று கூறினான்.

"போடா லூசு!" என்று அவள் திட்டிக் கொண்டிருந்த நேரம் திவாகரனும் வந்து சேர, அவனிடமும் விசயத்தைக் கூறினாள். "மாமா. நான் முளைப்பாரி போட்டிருக்கிறேன்," எனக் கூறி அவனை இழுத்துக் கொண்டு போய்க் காண் பிக்க... அவன் முறுவலித்து, "நீ என்ன வேண்டியிருந் தாலும் நிச்சயம் நடக்கும் கண்ணே!" எனக் கூறி விட்டுச் சென்றான்.

மறுநாளே முளை விட்டுச் சற்று வளர்ந்து விட்ட பயிர்களைக் கண்டு குஷியாகிப் போனாள் அம்பரி. அதன் பின் தினமும் அம்பரிக்கும், திவாகரனுக்கும் முளைப்பாரி வளர்ப்பதுதான் முதல் வேலையாகிப் போனது. ஒருவர் மாற்றி மற்றொருவர் அதற்குத் தினமும் தண்ணீர் தெளித்துக் கொண்டிருந்தனர்.

அன்று காலையும் அப்படித்தான் குளித்து முடித்துச் சாமியறைக்குள் நுழைந்த திவாகரன் முளைப்பாரிக்குத் தண்ணீர் ஊற்றப்படாமல் இருப்பதைக் கண்டு, "குள்ளச்சி இன்னமும் எழுந்திருக்கவில்லையா என்ன?" என்று தனக்குத் தானே கேட்டபடி ஒரு சொம்பில் தண்ணீர் கொண்டு வந்து தெளித்தான். அதற்குள் அறைக்குள் வேகமாக நுழைந்த அம்பரி, "மாமா! நீயே ஊற்றி விட்டாயா? அவசர அவசரமாக ஓடி வந்தேன்..." எனக் கூறிக் கொண்டே வளர்ந்திருந்த பயிர்களை வருடினாள்.



குளித்தவுடன் அவசரமாக ஓடி வந்திருப்பாள் போலும்! சரியாகத் துடைக்கப்படாத முகம் முழுதிலும் ஈரம் சொட்டிக் கொண்டிருக்க, எப்போதும் போலல்லாது அன்று ஜிமிக்குக்கு மாறாக அவள் அணிந்திருந்த பச்சைக் கல் தொங்கட்டான் அவளது வழுவழு சருமத்தில் பட்டு டாலடித்துக் கொண்டிருந்தது.

கை நீட்டி அவளது இடது புருவத்தின் மீதிருந்த நீர்த்துளிகளைத் தன் பெரு விரலால் துடைத்தான்.

"அவசரமாக ஓடி வந்தேனா அதனால்தான் சரியாக முகம் துடைக்கக் கூட இல்லை..." என்றவள் அவனிட மிருந்து பதிலின்றிப் போக... நிமிர்ந்து அவன் முகம் நோக்கினாள்.

அரைகுறையாகப் பாவாடையும், தாவணியையும் கட்டிக் கொண்டு வந்தவளின்... விலகியிருந்த தாவணியில் ஒளிந்து கிடந்த அழகில் அவன் பார்வை பதியவும், மூளையில் புது ரத்தம் பாய்வது போல் தலைக்குள் ஜிவ்வென்று ஒரு உணர்வு தோன்ற...

சட்டென எழுந்தவளைத் தொடர்ந்து தானும் எழுந்தவன், "சாமி என்ன தண்டனை கொடுத்தாலும் பரவாயில்லை பரி. என்னால் உன்னை இப்படிப் பார்த்த பின் கையைக் கட்டிக் கொண்டு சும்மா நிற்க முடியாது," எனக் கூறிக் கொண்டே அவளருகே வந்தவன்...

அவன் சொல்வது புரியாமல் விழித்துக் கொண்டு பின்னடைந்த அம்பரியின் முகம் பற்றி, அவளது ஈர இதழ்களில் அழுந்த முத்தமிட்டான்.

வெகு நாளைக்குப் பின் நீண்ட நேரமாகத் தொடர்ந்த அந்த முத்தத்தில் திவாகரன் முற்றிலுமாக லயித்து விட்டான் என்பது அம்பரியின் இடையில் அழுந்திய அவனது கரங்களே செய்தி சொன்னது. ஊக்கிடாமல் அவள் சுற்றிக் கொண்டு வந்த தாவணி அவனது அழுத்தத்தில் சரிந்து போக... அவளை இறுக அணைத்து அவளுள்ளே புதைந்தான் அவன். சுற்றுப்புறம் மறந்து அவள் தோள்களில் முகம் புதைத்து முத்தத்தால் முத்தெடுத்துக் கொண்டிருந்தவனைக் கஷ்டப்பட்டு விலக்கியவள்... அவனைக் கடந்து ஓடிச் சென்று விட... மயக்கத்திலிருந்து வெளி வந்தவனாக, "அய்யோ! சாமியறையில் வைத்து என்ன காரியம் செய்து விட்டோம்! சாமி, மன்னித்து விடு ப்ளீஸ்!" என்று மன்னிப்புக் கேட்டு விபூதியைப் பூசிக் கொண்டு வெளியே வந்தான்.

'அழகி! காலையிலேயே இப்படிச், சூடேற்றி விட்டுச் சென்று விட்டாளே! பாவி!' என்று அவளைச் சபித்துக் கொண்டிருந்தவன், உடை மாற்றி வெளியே வந்த அம்பரியைக் கண்டு மீண்டும் முகத்தில் பல்பு எரிய, அவளை ஆர்வத்துடன் நோக்கினான். அவனைக் கண்டு அம்பரி விதிர்விதிர்த்துப் போய் உள்ளே ஓடப் பார்க்க, "பரி!" எனச் சத்தமாக அழைத்தவன், "எனக்குப் பசிக்கிறது. சாப்பாடு வை!" எனக் கூறினான்.

அவன் முகம் பார்க்காமலேயே சரியெனத் தலையாட்டியவள்... சமையலறையை நோக்கி நடக்க... அவள் பின்னேயே சென்றவன், தானும் சமையலறைக்குள்



நுழைந்தான். உள்ளே அவளைக் காணாமல் ஒரு நிமிடம் விழித்தவன்... 'என்ன இது. இப்போதுதானே உள்ளே நுழைந்தாள். அதற்குள் எங்கே மாயமாகிப் போனாள்?' என்று சிந்தித்தபடி சட்டென பின்னே திரும்பிப் பார்க்க... அவள் அமைதியாகக் கதவின் பின்னே மறைந்து நின்றிருந்தாள்.

"எதுக்குடி ஒளிந்திருக்கிறாய்?" என வினவியபடி அவள் முன்னே சரிந்து, தானும் கதவின் பின்னே மறைந்தவன், அவள் கன்னம் வருடி, "ஏன்டி இவ்வளவு அழகாகப் பிறந்து தொலைத்திருக்கிறாய்? ம்...? என்னைக் கிறுக்கனாக்கி அலைய விடத்தானே?" என்று வினவி, அவள் நெற்றியில் முத்தமிட்டான். "தள்ளிப் போ மாமா. யாரேனும் பார்க்கப் போகிறார்கள்..." என்று உள்ளே போன குரலில் சிணுங்கியவளின் மீது மேலும் சரிந்து, "பார்த்தால் பார்க்கட்டும்..." எனக் கூறிக் கண் மூடித் தன் கன்னங்களை உரசினான்.

மீண்டும் அவள் அதரங்களைச் சுவைத்து, அவள் தோளில் தன் கன்னத்தைச் சாய்த்தவன், "சீக்கிரம் கல்யாணம் செய்து கொள்ள வேண்டும்டி. இனியும் என்னால் கட்டுப்படுத்திக் கொள்ள முடியுமென்று தோன்றவில்லை...." எனக் கூற, சிவந்து அவன் மார்பில் அவள் முகம் புதைத்த நொடி, "அம்பரி... எங்கடி தொலஞ்ச?" என்கிற லட்சுமியின் குரல் கேட்டு... சட்டென விலகினர் இருவரும். "இதோ வரேன்மா!" எனக் கூறி ஓடிச் சென்றவளைக் கண்டு சிரித்தபடி நகர்ந்து சென்றான் திவாகரன்.

அதன் பின் அந்த வார இறுதியில் திருவிழாவின் கடைசி நாளன்று முளைப்பாரி ஊர்வலம் நடைபெற்றது. பச்சைப் பசேலென நன்றாகச் செழித்து வளர்ந்திருந்த முளைப்பாரியைத் தூக்கிக் கொண்டு பெண்களுடன் ஊர்வலம் சென்றனர் தேனும், அம்பரியும். சாமி முன்பு அனைவரது முளைப்பாரிகளையும் வைத்துப் பூஜை செய்து கும்மிப்பாட்டுப் பாடி வேண்டிக் கொண்டு வளர்த்த முளைப்பாரிகளை ஆற்றில் விட்டுத் தங்களது வேண்டுதலை நிறைவு செய்தனர் பெண்கள்.

குமரன்தான் தேன்மொழியைக் கடைசிவரை கேலி செய்து கொண்டிருந்தான். "உனக்கு ஏன் இந்தச் சிரமம் இடுப்பழகி? கல்யாண மாப்பிள்ளையான நானே உன்னைக் கட்டிக் கொள்ளச் சம்மதம் கூறி விட்டேன். நீ எதற்காகச் சாமியிடம் கெஞ்சிக் கொண்டிருக்கிறாய்?" எனக் கேட்டவனிடம், "வெவ்வவெவ்வே..." என்று முகம் திருப்பிக் கொண்டிருந்தாள் தேன்மொழி.

## 14

வாழ்வான வாழ்வெனக்கு...
வந்ததென்று நானிருந்தேன்...!
பாழான நாளிதென்று...
பார்த்தவர்கள் கூறவில்லை...!
தேனாகப் பேசியதும்...
சிரித்து விளையாடியதும்...
வீணாகப் போகுமென்று
யாரேனும் நினைக்கவில்லை...!



"இந்தாங்க..." என்றபடி கணவனின் அருகே வந்தமர்ந்தாள் லட்சுமி. தோளிலிருந்த துண்டை வைத்து விசிறியபடி கண் மூடி அமர்ந்திருந்த மாணிக்கம் மனைவியின் குரலில் எரிச்சலுற்று, "என்னடி?" என்றார்.

"நேற்று என் பெரியப்பா மகன் ராகவன் அண்ணனின் வீட்டு விசேசத்திற்குச் சென்றிருந்தேன், இல்லையா? அங்கே என் அண்ணியின் தங்கை மகனைப் பார்த்தேன். பார்க்க வாட்ட சாட்டமாக லட்சணமாக இருக்கிறான். இங்கே உசிலம்பட்டியில்தான் கவர்மெண்ட் உத்தியோகத்தில் இருக்கிறானாம். அவனுக்குப் பெண் பார்த்துக் கொண்டிருப்பதாக அவன் அம்மா கூறினாள். நம் அம்பரியைப் பற்றிச் சொல்லியிருக்கிறேன். நீங்கள் என்ன சொல்கிறீர்கள்...? பையனுக்குச் சொத்து பத்தெல்லாம் அதிகமாகவே இருக்கிறது. ஒரே பையன் வேறு. இதை விட நல்ல சம்பந்தம் கிடைக்காது. எவ்வளவு சீக்கிரம் முடியுமோ அவ்வளவு சீக்கிரம் பேசி முடிப்பதுதான் நல்லது!" எனக் கூற, மாணிக்கத்திற்கு என்ன சொல்வதென்றே புரியவில்லை.

சுற்றியிருக்கும் சொந்த பந்தங்களும், ஏன் அவரும் கூட அம்பரிக்குத் திவாகரன்தான் ஏற்ற ஜோடி என்று எண்ணிக் கொண்டிருக்கிறார்கள். அவனுக்கு ஒரு வேலை கிடைத்ததும் இருவருக்கும் திருமணம் முடித்து வைத்து விட்டுத் தேன் - குமரன் திருமணத்தைப் பற்றிப் பேச வேண்டுமென நேற்றுக் கூடச் செல்வம் கூறினானே...! இந்த ராட்சசியிடம் இதைச் சொன்னால் சும்மா விடுவாளா?

அவர் யோசனையில் ஆழ்ந்து விட்டதைக் கண்ட லட்சுமி முகத்தை ஒரு மாதிரி வைத்துக் கொண்டு, "என்ன ரொம்ப யோசிக்கிற மாதிரி தெரிகிறது? உங்கள் யோசனையை உலையில் போட்டு விடுங்கள். அது என்றும் நடக்காத ஒன்று. ஆத்தா-அப்பனில்லாத, சொத்து பத்தில்லாத ஒரு அநாதைப் பரதேசிப் பயலுக்கு நான் என் பெண்ணைக் கொடுக்க வேண்டுமா?

"அவன் இந்த வீட்டிற்குள் அடி எடுத்து வைத்த நாளிலிருந்து இன்று வரை எப்போது அவன் ஒழிவான் என்று நான் காத்துக் கொண்டிருக்க... நீங்கள் அவனையே மாப்பிள்ளையாக்க வேண்டுமென்று கனவு கண்டு கொண்டிருக்கிறீர்களா? உங்கள் உடன் பிறந்தவளுக்காக இத்தனை நாட்கள் இவனைச் சகித்துக் கொண்டிருந்தேன். வேண்டுமானால் உங்கள் மனத் திருப்திக்காக அவனுக்கேற்ற ஒரு அநாதைப் பெண்ணைப் பார்த்துத் திருமணம் முடித்து வைத்து விடுவோம்.

"அதை விடுத்து என் பெண்ணை அவன் தலையில் கட்டத் திட்டம் ஏதும் வைத்திருந்தால், அதை இன்றோடு மறந்து விடுங்கள். நான் என் அண்ணனிடம் பேசி அந்த உசிலம்பட்டிப் பையனை மாப்பிள்ளை பார்க்க வரச் சொல்கிறேன்," என்று தன் முடிவைக் கூறிவிட்டு நகர்ந்து விடடாள்.

மாணிக்கத்திற்குப் பேச வாய்ப்பளிக்காமல் அவளே முடிவையும் கூறிச் செல்ல, கவலை கொண்டவர், பின் மனைவி கூறியதும் சரிதான். நல்ல வசதியான இடத்தில் வாக்கப்பட்டால் மகளின் மகிழ்ச்சிதானே கூடும்? அதோடு



திவாகரனுக்கும் ஒரு நல்ல பெண்ணாகப் பார்த்துக் கட்டி வைத்து விட்டால் நிம்மதியுடன் இருக்கலாம் என்று தன் மனதைத் தேற்றிக் கொண்டு எழுந்து வேலையைப் பார்க்கச் சென்றார்.

இது எதையுமறியாத அம்பரியும், திவாகரனும் தங்கள் போக்கில் மகிழ்ச்சியாக வாழ்வைத் தொடர்ந்து கொண்டிருந்தனர்.

அன்று பூச்சிக் கொல்லி மருந்து மூட்டைகளைச் செல்வத்தின் தோப்பிலிருந்து எடுத்துக் கொண்டு வர அவரது தோப்பிற்கு வருகை தந்திருந்தான் குமரன். அவன் நுழைந்த நேரம் செல்வம் கீழே விழுந்து கை, கால்களில் சிராய்ப்புடன் எழுந்து நிற்கச் சிரமப்பட்டுக் கொண்டிருந்தார்.

"மாமா... என்னவாயிற்று?" எனப் பதறி அருகே ஓடியவன், உடனே அவரை வண்டியில் ஏற்றிக் கொண்டு வீட்டிற்கு விரைந்தான்.

வண்டிச் சத்தம் கேட்டு வெளியே எட்டிப் பார்த்த தேன்மொழி, செல்வத்தைக் கையில் தூக்கிக் கொண்டு அவசரமாக வீட்டிற்குள் நுழைந்த குமரனைக் கண்டு பதறி, "அய்யோ! அப்பாவிற்கு என்னவாயிற்று? ஏன் தூக்கிக் கொண்டு வருகிறாய்? அப்பா...!" எனக் கத்தியவளிடம், "எனக்கு ஒண்ணுமில்லை கண்ணு..." என மகளிடம் ஆரம்பித்தவர், "டேய் குமரா... என்னால் நடக்க முடியும். இறக்கி விடுடா. உன் பாசத்திற்கு அளவில்லையாடா?" என்று புலம்பலில் முடித்தார்.

"ஏய், வழியை விடுடி. அவர் அப்படித்தான் சொல்வார். கால் சுளுக்கி விட்டது. அவரால் நடக்க முடியவில்லை. நகர்ந்து செல்டி. கிறுக்கி...!" என்று அவன் அதட்டியதும் அவள் வேகமாக விலக, அவரைக் கட்டிலில் கிடத்தியவன், "ஏய், என்னடி மசமசவென நின்று கொண்டிருக்கிறாய்? அத்தை இல்லையா? சரி, பஞ்சையும், டெட்டாலையும் எடுத்துட்டு வா. அப்படியே விளக்கெண்ணெய் கொண்டு வா!" என்று அவளை ஏவி விட்டு, "நடக்க முடியும், நடக்க முடியும் என்று கத்துகிறீரே...! சுளுக்கிக் கிடக்கும் காலை வைத்துக் கொண்டு நொண்டியா வருவீர்? அப்பனுக்கும், மகளுக்கும் வாய் பேசுவதில் குறைச்சலே இல்லை..." என்று கடிந்தபடி சிராய்ப்பைச் சுத்தம் செய்து விட்டு விளக்கெண்ணெயை வைத்துச் சுளுக்கெடுக்கத் துவங்கினான்.

"டேய், அப்பாவை ஆஸ்பத்திரிக்குக் கூப்பிட்டுச் செல்லாமல் நீ என்னடா பெரிய மருத்துவன் போல் ஆராய்ச்சி செய்து கொண்டிருக்கிறாய்?" என்று கோபத்துடன் வினவியவளை, அதை விடக் கோபத்துடன் நிமிர்ந்து பார்த்தவன், "யோவ்! உன் மகளை மரியாதையாக வெளியே சென்று நிற்கச் சொல். இங்கே நின்று கொண்டு என்னை எரிச்சல் படுத்தினால் கோபத்தில் இரண்டு அப்பு, அப்பி விடுவேன்..." என்று அவன் மாமனிடம் மிரட்ட... "என்ன கண்ணு, குமரனுக்குச் சுளுக்கு எடுக்க வரும் என்கிற விவரம் உனக்கு மறந்து போனதா? அவன் பார்த்துக் கொள்வான். நீ போய் அம்மாவை அழைத்து வா. போ!" என்று அனுப்பி வைத்தார்.



"கொஞ்சம் வலி பொறுத்துக் கொள்ளுங்கள், மாமா!" என்றபடி விளக்கெண்ணெயைத் தடவி அவன் சுளுக்கெடுக்கத் துவங்கிய வேளை அன்னையுடன் தேன்மொழி உள்ளே நுழைந்தாள். "என்னாச்சுடா குமரா?" என்று விசாரித்தவரிடம், விவரத்தைக் கூறியபடி, அவன் காரியத்தில் கண்ணாக இருக்க. "இன்னும் என்ன சின்னப் புள்ளைன்னு நினைப்பா? பார்த்துச் சூதானமா இருக்கத் தெரியாதா கண்ணு... உன் மாமனுக்கு?" என்று வைஜெயந்தி அவர் பங்குக்குப் பொரிய, அன்னையின் பின்னே மறைந்து கொண்டு, வலியில் முகம் சுழித்துக் கொண்டிருந்த தந்தையைப் பார்த்துக் கொண்டிருந்தாள் தேன்மொழி.

சிறிது நேரத்தில் சுளுக்கு எடுத்து முடித்ததும், "காலை அசைத்துப் பார் மாமா!" என்றவன், எழுந்து தன் கையையும், உடையையும் சுத்தம் செய்யக் கொல்லையை நோக்கி நடந்தான். அவன் சென்றதும் காலை அசைத்துப் பார்த்து நடந்தவர், "இந்தப் பய சுளுக்கெடுக்கிற வித்தையை எங்கிருந்துதான் கற்றுக் கொண்டானோ?" என்று சிரித்தபடி கட்டிலில் அமர்ந்தார்.

"இந்தா தேனு, இந்தப் பஞ்சையெல்லாம் கொண்டு போய்க் குப்பையில் போடு!" என்று அன்னை ஏவியதும், கீழே கிடந்த பஞ்சை அள்ளிக் கொண்டு கொல்லைக்குச் சென்றாள். அங்கே சட்டையில் பட்ட இரத்தக் காயத்தைத் துடைக்க முயன்றபடி நின்று கொண்டிருந்த குமரனைக் கண்டு இரக்கம் தோன்ற ( அடேங்கப்பா! ) அவனருகே

சென்றவள்... "அதைக் கழட்டிக் கொடு. நான் துவைத்துத் தருகிறேன். நீ அப்பா சட்டையை அணிந்து கொண்டு போ இப்போதைக்கு..." என்று கூற, திகைத்து நிமிர்ந்தவன் ஏழாவது அதிசயத்தைக் கண்டவன் போல் அவளை விழி விரித்து நோக்கினான்.

பின் முகத்தைத் திருப்பிக் கொண்டு, "ஒன்றும் தேவையில்லை. நான் பார்த்துக் கொள்கிறேன்," என்றவனிடம்... "ரொம்பப் பண்ணிக் கொள்ளாதேடா!" என்றபடி அவன் சட்டையின் மீது கை வைத்தாள்.

"ஏய்... இருடி. நானே கழட்டித் தாரேன்..." என்றவனுக்கு ஒரே யோசனையாகிப் போனது. இவள் என்ன திடீரென்று இன்று பக்கத்தில் வந்து பேசுகிறாள். சட்டையில் கை வைக்கிறாள் என்றெண்ணிக் கொண்டு, அவளை ஒரு மார்க்கமாகப் பார்த்தபடி சட்டையைக் கழட்டி நீட்டினான்.

"மொத்தமாக நனைத்து விடாதேடி. இரத்தக் கறை பட்ட இடத்தை மட்டும் அலசிக் கொடு. நான் வீட்டிற்குப் போய் வேறு மாற்றிக் கொள்கிறேன்," என்றவனிடம், சரியெனத் தலையாட்டி அந்த இடத்தில் மட்டும் சோப்பைப் போட்டு அலசினாள். துணியிலேயே கண்ணாக இருந்த வளைப் பார்வையால் பருகிக் கொண்டிருந்தவன், அவள் சட்டென நிமிர்ந்து நோக்கவும்... வேறு புறம் திரும்பிக் கொண்டான்.

அலசியதும் துணியை உதறி அவனிடம் நீட்டிய வளிடம் வாங்கி அணிந்தபடி, "ஆமாம், என்ன



இன்றைக்குப் புதிதாக என் பக்கத்தில் நின்று பேசுகிறாய். என் மீது அக்கறையாக வேறு இருக்கிறாய். என்னவாம்?" என்று கேள்வி கேட்க, அவனை முறைத்தவள், "ஏன்? நான் உன்னிடம் இதற்கு முன்பு அக்கறையாகப் பேசியதே இல்லையாக்கும்?" என்று பதில் கேள்வி கேட்க... "ஓ! அப்படியானால் என் மீது உனக்குப் பாசமிருக்கிறது என்கிறாய். நம்பி விட்டேன்..." என்றான் அவன்.

அவள் பதில் சொல்லாமல் மேலே நடக்க... "ஏய்... நில்லுடி. உன் தந்தைக்கு மருத்துவம் பார்த்து என் நேரத்தை வீணாக்கியிருக்கிறேன். எனக்குப் பதிலுக்கு ஒன்றுமே கிடையாதா?" என்றவனிடம் நின்று, "என்ன வேண்டும்?" என்று வினவினாள்.

சிரித்தபடி வேகமாக அவளருகே வந்தவன், "நான் என்ன கேட்பேனென்று தெரியாதா இடுப்பழகி? ஒரே ஒரு இச் இச்...தான்!" என்று கண்ணடிக்க, "ச்சீ போடா!" எனக் கூறி விட்டுக் குடுகுடுவென ஓடி விட்டாள். முறைக்காமல், கோபப்படாமல், அழாமல் அவள் வெட்கத்துடன் ஓடிச் சென்றதைக் கண்ட குமரன் வியந்து, 'உன் லவ் ஓ.கே. ஆகியிருச்சு போல மச்சி!' என்று நினைத்துச் சிரித்துக் கொண்டான்.

அன்று அதிகாலையிலேயே கோயம்புத்தூரில் இருக்கும் கலைக் கல்லூரி ஒன்றிற்கு நேர்முகத் தேர்வுக்குச் சென்றிருந்த திவாகரன் நான்கு மணி வாக்கில் வீடு திரும்பியிருந்தான். அவனை எதிர்பார்த்து வாசலில் காத்திருந்த அம்பரி அவனைக் கண்டதும் ஓடிச் சென்று,

"என்னவாயிற்று மாமா? இந்த வேலை கிடைத்து விட்டதா?" என்று ஆர்வத்துடன் வினவினாள்.

அவள் கேள்வியில் சிரித்துப் பின் அவள் தலையைப் பிடித்து ஆட்டி, "தேர்வு முடிவுகளை உடனே தெரிவிக்க மாட்டார்கள் பரி! ஒரு வாரம் கழித்துத்தான் வரும். நீ சாப்பிட்டாயா?" என்று விசாரித்தபடி உள்ளே நுழைந்தான். "நான் சாப்பிட்டேன் மாமா. நீ கை, கால் கழுவி வா. உனக்குச் சாப்பாடு எடுத்து வைத்திருக்கிறேன். நீ வெளியில் எங்கேயும் சாப்பிட்டிருக்க மாட்டாயென்று எனக்குத் தெரியும்," என்றவளிடம் திரும்பி, "நீயும் என்னை விட்டு மதியச் சாப்பாட்டைச் சாப்பிட்டிருக்க மாட்டாயென்று எனக்குத் தெரியும். அதனால் உனக்கும் சேர்த்துச் சாப்பாடு எடுத்து வை..." எனக் கூறி விட்டுச் சென்றான். மாமன் தன்னைக் கண்டு கொண்டதை எண்ணி நாக்கைக் கடித்துக் கொண்ட அம்பரி, அவனுக்கும், தனக்குமான சாப்பாட்டை எடுத்து வைத்தாள்.

அவன் உடை மாற்றி, உடம்பு கழுவி வந்தமர்ந்ததும், ஒரு தட்டில் சாதத்தைப் பரிமாறினாள். அதைப் பிசைந்து அவளுக்கு ஊட்டியவனிடம், "நீ முதலில் சாப்பிடு மாமா. நான் பிறகு சாப்பிட்டுக் கொள்கிறேன்..." என்றாள் அவள். அவள் சொல்வதைப் பொருட்படுத்தாமல் அவள் வாயில் சாதத்தைத் திணித்தவன், இரண்டு, மூன்று வாய் அவளுக்கு ஊட்டி விட்டுப் பின் தன் தட்டில் ஒரு பகுதி சாதத்தை அவளுக்கு ஒதுக்கி, "நீயும் சாப்பிடு!" எனக் கூறி விட்டு அவன் தொடர்ந்தான்.



"செல்வம் மாமா தோப்பில் கீழே விழுந்து கை, கால்களில் சிராய்ப்பாம். காலில் சுளுக்கு வேறாம். குமரன் தான் அவரைத் தூக்கிக் கொண்டு வீட்டிற்குப் போனானாம். அவனே சுளுக்கெடுத்து விட்டதாகவும் மாரியண்ணன் சொல்லிக் கொண்டிருந்தார், மாமா. நீ வந்த பின்பு போய்ப் பார்த்துக் கொள்ளலாமென்றுதான் நான் போகவில்லை. சாப்பிட்டதும் ஒரு எட்டு நாம் போய்ப் பார்த்துவிட்டு வரலாமா?" என்று வினவியவளிடம்,

"அய்யோ! அப்படியா? என்னவாயிற்றோ தெரிய வில்லையே. பெரிய அடி ஒன்றுமில்லைதானே பரி? நீ நன்றாக விசாரித்தாயா?" என்றான் அவன்.

"பெரிய அடி இல்லை மாமா. சுளுக்கு மட்டும் தானாம். இப்போது அவர் நன்றாக நடப்பதாகத்தான் அந்த அண்ணன் சொன்னார்," எனக் கூற, சரி யென்றவன்... "வீட்டில் எங்கே யாரையும் காணோம்? செல்வம் சித்தப்பாவைப் பார்க்கத்தான் சென்றிருக் கிறார்களா?" என்று விசாரிக்க, "இல்லை மாமா! அப்பத்தா மட்டும்தான் போயிருக்கிறது. அம்மாவும், அப்பாவும் உசிலம்பட்டிக்குச் சென்றிருக்கிறார்கள்!" என்றாள்.

சாப்பிட்டு முடித்த பின் கையைக் கழுவிக் கொண்டு எழுந்து கொல்லைக்குச் சென்றவன், அங்கே போடப் பட்டிருக்கும் திண்ணையில் அமர்ந்து, "பரி..." எனக் குரல் கொடுத்தான். "இதோ வருகிறேன் மாமா!" என்றபடியே, கைகளை முந்தானையில் துடைத்துக் கொண்டு, அவன் அருகே சென்றமர்ந்தாள்.

"சொல் மாமா!" என்று வினவியவளைக் கண்டபடி, தூணில் நன்றாகச் சாய்ந்து அமர்ந்தவன் அவளை அருகே யிழுத்து அமரச் செய்து அவள் முன்னுச்சிக் கூந்தலை ஒதுக்கி, "இதே திண்ணையில் ஐந்து வருடங் களுக்கு முன்பு ஒரு அழகி, மஞ்சள் தாவணியில் தலை நிறைய மல்லிகைப் பூவுடனும் புதிதாக முளைத்த வெட்கத் துடனும் அமர்ந்திருந்தாள். அவளை அந்தக் கோலத்தில் கண்ட பின்புதான் எனக்குள் பல ரசாயன மாற்றங்கள் ஏற்பட்டன தெரியுமா?" என்று அவள் விரல்களைப் பற்றி விளையாடியபடி கூற... அவன் தன்னைத்தான் குறிப்பிடு கிறான் என்பதை உணர்ந்து கொண்ட அம்பரியும், "அந்த அழகிக்கும் அன்றே ரசாயன மாற்றங்கள் ஏற்பட்டு விட்டன!" என்று மெல்லிய குரலில் கூற, "நிஜமாகவா?" என்று வினவினான் அவன்.

"ஏன், உனக்குத் தெரியாதா மாமா?" என்று சிணுங்கியபடி அவன் தோளில் சாய்ந்தவள், "சின்ன வயதிலிருந்தே உன் மீது எனக்குப் பாசம் அதிகம் என்று நினைக்கிறேன் மாமா. கண்டித்தாலும் அடித்தாலும் நீ என்னைப் பாசமாக அக்கறையாகக் கவனித்துக் கொள் வாய். அதனால் உன்னை எனக்கு மிகவும் பிடிக்கும். பின் அத்தை போன பின்பு நீ வருத்தமுற்றதையும், கவலைப் பட்டதையும் காண்கையில் எனக்கு நிம்மதியாக இருக்கவே முடியாது மாமா. உன் அழுத முகத்தைப் பார்த்து விட்டு என்னால் விளையாடச் செல்லவும் முடியாது. நீ இங்கே வந்த பின்பும் அம்மா உன்னைத் திட்டுவதையும் என்னால் பொறுத்துக் கொள்ள முடியாது போனது. அப்போ



தெல்லாம் ஏன் என்றே தெரியவில்லை. ஆனால் நீ, நீ... இப்போது சொன்னது போல் வயது வந்த பின் உன்னைப் பார்த்த போது அதற்கான அர்த்தம் விளங்கியது மாமா. இந்த அன்பும், பாசமும் உன் ஒருவனுக்காக மட்டுமே என் மனதில் தோன்றிய பிரத்யேக உணர்வுகளென்று...! வெட்கத்தையும், காதலையும் உன் ஒருவனைத் தவிர வேறு யாராலும் என்னுள் தூண்டி விட முடியாதென்றும்..." எனக் கூற, அவள் பேசுவதை விரிந்த விழிகளுடன் கேட்டுக் கொண்டிருந்தான் திவாகரன்.

பின் அவளைத் தன் மீது சாய்த்துக் கொண்டு, "மனிதனுக்கு அடிப்படைத் தேவைகளென உணவு, உடை, உறைவிடம் இவை மூன்றையும் கூறுவார்கள் பரி. ஆனால் எனக்கு மட்டும் நான்காவது தேவையாக நீ அத்தியாவசியமாகிப் போனாய். நீ இல்லாது போயிருந் தால் நான் என்னவாகி யிருப்பேன் என்பதைப் பல சமயங்கள் சிந்தித்துப் பார்த்திருக்கிறேன். எங்கோ ஒரு மூலையில் கூலி வேலை செய்து கொண்டு என் வயிற்றுப் பாட்டிற்கே கஷ்டப்பட்டுக் கொண்டு தெருவில் திரிந்திருப் பேன். என்னை வீட்டிற்கு வரவழைத்து எனக்கு ஆதரவு கொடுத்ததோடு மட்டுமல்லாது, எனக்காகச் சாப்பாட்டு விசயத்திலிருந்து ஆரம்பித்துப் படிப்புவரை ஒவ்வொன் றிற்கும் போராடினாய். ஒவ்வொரு வேளை உண்ணும் போதும், இது உன்னால்தான் கிடைக்கிறது என்பதை எண்ணிக் கொண்டேதான் உண்பேன்.

"விவரம் தெரிந்த சில வருடங்களிலேயே தந்தையை இழந்தேன். இனியெல்லாம் அன்னை மட்டுமே என்று

எண்ணி என் வாழ்வைத் தொடர்ந்திருந்த நேரம் அவளும் என்னை விட்டுப் பிரிந்தாள். இனி வாழ்ந்து என்ன பிரயோஜனம் என்று விருப்பமற்று இந்த அற்ப உடலைச் சுமந்து திரிந்த சமயம், என் வயிற்றை நிரப்ப... நீ பட்டினி கிடந்தாய். நான் படிப்பைத் தொடர, நீ போராட்டம் நடத்தினாய். எதற்காக என் மேல் உனக்கு இத்தனை பாசம் என்பதை இன்றுவரை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை, பரி. என் அன்பிலேனும் ஒரு சுயநலம் இருக்கிறது. நீ இத்தனை வருடமாக என்னைக் காத்துக் கொண்டிருந்ததற்குக் கைம்மாறாக நான் என் அன்பையும், காதலையும் கொட்டுகிறேன். ஆனால்... ஆனால் அறியாத வயதில் கூட நீ எதற்காக எனக்காகப் போராடினாய்? அப்படியானால் எனக்காகத்தான் ஆண்டவன் உன்னைப் படைத்திருக்கிறான், இல்லையா பரி?

"யாருமற்ற எனக்கு எல்லாமாகவுமாக மாறி இத்தனை அன்பையும் கொடுத்துக் கொண்டிருக்கும் நீ எனக்காகவே பிறந்தவள் கண்ணே!" எனக் கூறி, அவன் அவளை இறுக அணைத்துக் கொள்ள...

"ஆமாம் மாமா. நான் உனக்காகத்தான் பிறந்திருக்கிறேன். உன் நலமும், மகிழ்ச்சியும் மட்டுமே எனக்கு முக்கியம். அதற்காக நான் எதை வேண்டுமானாலும் தரத் தயார்!" என்றவளை அழுந்த முத்தமிட்டு, இறுக அணைத்துக் கொண்டான் அவன்.

இருவரது மனநிலைக்கும் ஏற்றாற் போல் வானமும் கருமை நிறத்திற்கு மாறி மழையைப் பொழிவதற்குத்



தயாராகிக் கொண்டிருக்க, இங்கே திண்ணையில் அம்பரியை அணைத்துக் கண் மூடிச் சாய்ந்திருந்தான் திவாகரன். அவன் மார்பிலிருந்து நிமிர்ந்து அவன் விழிகளை நோக்கியவள், "எப்போது நமக்குத் திருமணம் நடக்கும் மாமா?" என்று வினவ, இரண்டு நொடி அவளை இமைக்காமல் நோக்கியவன்... பின் குறும்புடன், "நீ +2 பாஸ் ஆகும் போது." என்று கூற, "ச்சு போ மாமா...!" என்று சிணுங்கியபடி அவன் தோளை அடித்தவளைக் கலகலவெனச் சிரித்து அவன் முத்தமிட்ட நொடி...

"அநாதை நாயே, என்னடா செய்கிறாய் என் மகளை...?" என்று உச்சஸ்தாயியில் முழுக் கோபத்துடன் கூச்சலிட்ட லட்சுமியின் குரல் கேட்டுத் திடுக்கிட்டுப் பதறியடித்து எழுந்தனர் இருவரும்.

எது நடக்கவே கூடாதென்று மகளுக்கு விரைவாகவே மாப்பிள்ளை பார்க்கத் திட்டமிட்டாளோ, அந்த நிகழ்வை நிஜமாகவே கண்டு விட்டதில் கொதித்துப் போன லட்சுமி, கோபத்திலும், ஆத்திரத்திலும் ரௌத்திரமாகிப் பக்கத்தில் கிடந்த விளக்குமாற்றைக் கையில் எடுத்துக் கொண்டு வேகமாகத் திவாகரனை நோக்கி வந்து, "பரதேசிப் பயலே... உண்ட வீட்டுக்கே துரோகம் செய்து விட்டாயே. இதற்காகவா உனக்கு இத்தனை வருடமாகச் சோறு போட்டு வளர்த்தேன்? உன் பொறுக்கிப் புத்தியை என் பெண்ணிடமே காட்டி விட்டாயே! வீட்டுக்குள்ளேயே அசிங்கம் செய்யுமளவிற்கு இப்படி வளர்ந்து நிற்கிறதே. நீ நாசமாகிப் போவாய். விளங்கவே மாட்டாய்!" என

அழுகையுடனும், கோபத்துடனும் கத்தியபடி அவனை அடிக்கத் துவங்க...

வேகத்துடன் குறுக்கே பாய்ந்த அம்பரி, "அம்மா, அம்மா... அவரை விட்டு விடும்மா. மாமா மீது எந்தத் தவறும் இல்லை. அடிப்பதாய் இருந்தால் என்னை அடி. அவரை அடிப்பதற்கு உனக்கு எந்த உரிமையும் கிடையாது," என்று கெஞ்சலும், மிரட்டலுமாய்க் கூற... அவளிடம் பாய்ந்த லட்சுமி அவள் தலையைக் கொத்தாகப் பிடித்திழுத்து, "பாவி, பாவி. இந்த வார்த்தையைக் கேட்பதற்கா ஒற்றைப் பிள்ளையாய் உன்னைப் பெற்று வளர்த்தேன்? இந்தத் தரித்திரம் பிடித்தவனுக்காக ஒவ்வொரு முறையும் நீ என்னுடன் சண்டை போடும் போதெல்லாம் அநாதை என்றதால்... அவன் மீது உனக்குத் தோன்றிய இரக்கம் என்று எண்ணிக் கண்டு கொள்ளாமல் இருந்தேனே... இன்று என்னையே எதிர்த்துப் பேசும் நிலைக்கு வந்து விட்டாயே! இதற்காகவாடி உன் விருப்பப்படி உன்னை வளர்த்தேன்? நீ சொன்னதற்கெல்லாம் ஆடினேனே! இந்தப் பயலுக்குச் சோறு போட்டு அவனைப் படிக்கவும் வைத்து, இன்றுவரை ஆதரவு கொடுத்து வரும் என்னை நீ. உதாசீனப்படுத்துகிறாயா? உன் காலை ஒடித்து முடமாக்கினால்தான் என் ஆத்திரம அடங்கும்..." என்று கண்ணீரும், கம்பலையுமாய் வெறி கொண்டவள் போன்று அம்பரியை அடித்து நொறுக்க...

அவள் அழுது கொண்டே அடி வாங்குவதைப் பொறுக்காத திவாகரன் அவள் கையைப் பிடித்திழுத்துத்



தன் பின்னே மறைத்துக் கொண்டு, "அத்தை, இவ்வளவு தான் உங்களுக்கு மரியாதை. இது நாள்வரை நீங்கள் என்னை ஏசிக் கூறு போட்ட போதெல்லாம் வாய் மூடிக் கொண்டு அவமானத்திலும், இயலாமையிலும் ஊமையாக நின்றிருக்கிறேன். ஆனால் இப்போது என் அம்பரியை நீங்கள் துன்புறுத்துவதைப் பார்த்துக் கொண்டு என்னால் சும்மா நிற்க முடியாது!" என்று கோபத்தில் கண்கள் சிவக்க, கை முஷ்டி இறுகப் பேசியவனைக் கண்டு ஆத்திரம் பெருகியது லட்சுமிக்கு.

அதற்குள் இவர்களது கூச்சல் கேட்டு வேகமாகக் கொல்லையை நோக்கி மாணிக்கமும், வள்ளியம்மையும் வந்து விட, திவாகரன் தன்னை எதிர்த்துப் பேசியதில் மேலும் ஆத்திரம் கொண்ட லட்சுமி வேகமாகக் கணவனிடம் சென்று, "பாருங்கள். உங்கள் தங்கை மகன் என்னையே எதிர்த்துப் பேசுமளவிற்குத் தைரியமாகி விட்டான். எல்லாம் இவள் கொடுக்கும் இடம். நான் சொன்னது போலவே நடந்து விட்டதே கடைசியில். இந்த தெருப் பொறுக்கி நாய் என் மகளை அடைவதன் மூலம் நம் சொத்தையெல்லாம் அடைந்து விடலாமென்று திட்டம் போட்டிருக்கிறானே! இவனை இப்போதே வீட்டை விட்டு அடித்து விரட்டுங்கள். சண்டாளி மரகதம்! என் மகளின் வாழ்க்கையைக் கெடுப்பதற்காக இந்தப் பயலைப் பெற்றுப் போட்டு விட்டுப் போய்ச் சேர்ந்து விட்டாய். இவன் இப்படி என் மகள் வாழ்வில் வினையாகிப் போவான் என்று தெரிந்திருந்தால் உன்னோடு சேர்த்து இவனையும் புதைத்திருப்பேனே. தரித்திரத்திற்குப் பிறந்த தரித்திரமே.

உன்னை இந்த வீட்டை விட்டு இப்போதே துரத்தினால் தான் என் மனசு ஆறும்..." என்று அந்த நொடியிலும் தன் அன்னையைக் கிழித்துக் கூறு போட்ட அத்தையைக் கண்டு கோபம் தலைக்கேறியது திவாகரனுக்கு.

அத்தனை நாட்களாக அடக்கி வைத்திருந்த ஆத்திரம் முற்றிப் போக, தன்னிலை மறந்து, "இன்னொரு முறை என் அன்னையைப் பற்றி வாயைத் திறந்தீர்களானால் அத்தை என்று கூடப் பார்க்க மாட்டேன். இந்த இடத்திலேயே வெட்டிச் சாய்த்து விடுவேன்!" என்று சத்தமிட, மறுநொடி அவன் கன்னத்தில் பளாரென அறைந்தார் மாணிக்கம்.

"என்ன வார்த்தை பேசுகிறாயடா? உன்னை இத்தனை வருடமாகக் கட்டிக் காத்ததற்கு நல்ல பேறு செய்து விட்டாயடா. என் மனைவியிடம் கை நீட்டுவாயா நீ? பெற்ற அன்னை போல் உனக்கு இன்றுவரை சோறு போட்டவளை நீ வெட்டிப் போடுவாயா? ச்சீ... நாயைக் குளிப்பாட்டி நடு வீட்டில் வைத்தாலும் அதன் குணம் மாறுமா என்ன? நன்றி மறந்த ஜென்மமடா நீ!" எனக் கோபக் குரலில் பொரிந்த மாமனிடம் தலை குனிந்து நின்றவன் பின் நிமிர்ந்து, "மாமா! நான் பேசுவதற்கு வாய்ப்பளியுங்கள். உங்கள் மனைவியை உங்கள் முன்னிலையில் நான் எதிர்த்துப் பேசியதும் உங்களுக்கு வந்த அதே கோபம்தான் என் அன்னையைப் பற்றி அவர்கள் ஏசியதில் என்னை மீறி வந்து விட்டது. இத்தனை வருடமாக அவர் என் அன்னையை அவமானப் படுத்துவதைப் பொறுத்துக் கொண்டிருந்தேன்தானே?



என் மீது தவறிருந்தால் என்னை மட்டும் தண்டிக்கச் சொல்லுங்கள் மாமா! ஒரு பாவமும் அறியாத அந்த மகராசியைக் கூறு போட வேண்டாம்..." என்று வருத்த முற்ற குரலில் கண்களில் நீர் கசியக் கூறினான் அவன்.

"இந்த வாய் ஜாலக்காரனின் பேச்சை வாயைப் பிளந்து கொண்டு கேட்டபடி நிற்கிறீர்களே! அவனை வீட்டை விட்டுத் துரத்துங்கள். இனியும் இந்தத் தரித்திரம் பிடித்தவனை வீட்டில் வைத்து என் மகளின் வாழ்வைப் பாழாக்க என்னால் முடியாது," எனத் தலையிலடித்துக் கொண்டு அழுத லட்சுமியைக் கண்டு விட்டு, வேகமாகத் திவாகரனின் புறம் திரும்பினார் மாணிக்கம். "என்னடா இது?" எனக் குற்றம் சாட்டும் பார்வையுடன் அவனை நோக்கியவரிடம், "மாமா நான்... நானும், அம்பரியும் ஒருவரையொருவர் உயிராக விரும்புகிறோம் மாமா. எங்களை..." என்று அவன் முடிப்பதற்குள், மீண்டும் அவன் கன்னத்தில் அறைந்தவர், "என் மகளை நேசிப்பதற்கும், திருமணம் செய்து கொள்வதற்கும் உனக்கு என்னடா தகுதியிருக்கிறது? என் காசில் தின்று, என் காசில் படித்து என் மகளையே சொந்தமாக்கிக் கொள்ள ஆசைப்படுகிறாயா? உன் அத்தை என்னை எச்சரித்த போதெல்லாம் நான் நம்பவேயில்லை. இப்போதுதானே தெரிகிறது உன் வண்டவாளம்? உண்ட வீட்டிற்குத் துரோகம் செய்து உன் சின்னப் புத்தியைக் காட்டி விட்டாயே.

"என் மகளுடன் என் வீட்டிலேயே உல்லாசமாகத் திரிகிறாயா? உன்னைக் கொன்றால்தான்டா என் மனசு

ஆறும்..." என்று கூறியபடி, அரிவாளைத் தூக்கிக் கொண்டு ஓங்கியவரை அழுகையுடன் ஓடி வந்து தடுத்தாள் அம்பரி.

அதுவரை அங்கே நடந்து கொண்டிருக்கும் வாக்கு வாதங்களையும் சண்டைகளையும் அப்பத்தாவின் கையைப் பிடித்துக் கொண்டு கண்ணீர் விட்டபடி பார்த்துக் கொண்டிருந்த அம்பரிக்கு, தந்தையின் கோபம் பெரும் வலியை ஏற்படுத்தியது.

இத்தனை வருடத்தில் அவள் எது கூறினாலும் சண்டை போட்டுப் பிரச்னை செய்பவள் லட்சுமி மட்டுமே! மாணிக்கம் இதுவரை அவளது விருப்பங்களுக்கு மறு பேச்சுப் பேசியதேயில்லை. அப்படிப்பட்டவரும் தன் காதலைப் புரிந்து கொள்ளவில்லை என்பதை எண்ணித் துக்கம் பொங்கியது அவளுக்கு.

கையைத் தூக்கிக் கும்பிட்டு அவரை வழி மறித்தவள், "தயவு செய்து மாமாவை விட்டு விடுங்களப்பா. அவர் மீது எந்தத் தவறுமில்லை. நாங்கள் நேசித்ததைத் தவிர எந்தத் தவறும் செய்யவில்லை. அம்மா கூறுவது போல் சொத்தை அபகரிக்கும் திட்டமெல்லாம் மாமா விற்குக் கிடையாதுப்பா. அபாண்டமாகப் பழி போட வேண்டாமென்று சொல்லுங்களப்பா. நீங்களேனும் எங்களைப் புரிந்து கொள்ளுங்களப்பா! உங்கள் காலில் விழுந்து கேட்கிறேன்," என்று தந்தையின் கால்களில் பணிந்து மன்றாடியவளை ஏறெடுத்தும் பார்க்காதவரைக் கோபத்துடன் முறைத்தபடி வந்து அம்பரியைத் தூக்கி நிறுத்தினார் வள்ளியம்மை.



"இப்போ என்ன நடந்து போச்சுன்னு புருசனும், பொண்டாட்டியும் என் பேரனை ஏசுறீங்க? அவ அத்தை மகனுக்கு அவ மேல இல்லாத உரிமை எந்தப் பயலுக்குடா இருக்கு? உன் தங்கச்சி உயிரோடு இருந்திருந்தா இந் நேரம் அவனுக்குப் பொண்ணு கேட்டு வந்து இரண்டு பேருக்கும் கல்யாணத்த முடிச்சிருப்பா. என்னடா பெரிய சொத்து வச்சுப் பிழைக்கிறவன் நீ? என் பேரன் படிச் சிருக்கான்டா. ஆயுசுக்கும் உழைச்சு உன் மகளைக் கண் கலங்காம வச்சுப் பார்க்கிறதுக்கும் அவன் உடம்புல தெம்பு இருக்குடா. வைராக்கியத்துக்கு வாழ்றவன் அவன். அவனைப் போய்ச் சொத்துக்கு ஆசைப்படறான்னு சல்லித் தனமா பேசுறீங்க இரண்டு பேரும்? என் வயித்துல பொறந்ததுகள்ல, நான் பெருமைப் படற அளவுக்கு வாழ்ந்து செத்துப் போனவ என் மவ மட்டும்தான்டா. உயிரோடு இருந்தப்ப ஒரு வேளை சோத்துக்காச்சும் உன் வீட்டுப் படியேறியிருக்காளா? அவளைத் தூத்துறதுக்கு எப்படிடா மனசு வருது உங்களுக்கு?

"என் பேத்தி விரும்பினபடி நான் அவளை என் பேரனுக்கே கட்டி வைப்பேன்டா... நீயும், உன் பொஞ் சாதியும் வந்து வாழ்த்துனா வாழ்த்துங்க. இல்லாட்டிப் போங்க..." என்றவர், "நீ வா கண்ணு. எழுந்திரு!" என்று அம்பரியைத் தூக்க,

அவளோ, "அப்பத்தா! அப்பாகிட்ட சொல்லு அப்பத்தா. மாமாவைப் பற்றித் தவறாகப் பேச வேண்டாம் என்று சொல் அப்பத்தா. அவர் ரொம்ப நல்லவர் அப்பத்தா. இந்த ஊரறிய அவரோடு சந்தோசமாக வாழ

வேண்டுமென்று ஆசைப்படுகிறேன் என்று சொல் அப்பத்தா. இந்த அசிங்கமும், கெட்ட பெயரும் அவருக்கு வேண்டாம். அவரை வெளியே விரட்ட வேண்டாம் என்று சொல் அப்பத்தா!" என்று கதறியவளைக் காணச் சகிக்காமல் வேகமாக அருகே வந்த திவாகரன், "இதோ பாரடி. உன் அப்பனும், ஆத்தாளும் பேசியதைக் கேட்டா யல்லவா? நான் உன் சொத்தை அபகரிக்கத்தான் உன்னைக் காதலிக்கிறேனாம். இதைக் கேட்ட பின்பு இனியும் இந்த வீட்டிலிருந்து என்னைச் சோறு தின்னச் சொல்கிறாயா? உன் அன்னை பேசியதைக் கூடப் பொறுத்துக் கொள்வேன். வருசமெல்லாம் என்னைப் பற்றித் தரக் குறைவாகப் பேசுபவள்தானே என்று.

"ஆனால் இவர், என் ஒவ்வொரு துடிப்பையும் சரியாகப் புரிந்து வைத்திருக்கும் இவர், என் அன்னை யைப் பற்றியும், அவள் வளர்ப்பைப் பற்றியும் நன்றாகப் புரிந்து வைத்திருக்கும் என் தாய் மாமன் என்னையும், என் அன்னையின் வளர்ப்பையும் சரியில்லை என்று திருட்டுப் பட்டம் கட்டுகிறார். இனி இங்கேயிருக்கும் ஒருவர் முகத்திலும் விழிக்க எனக்கு விருப்பமில்லை. உன் தந்தை அளவு இல்லாவிடினும் என்னால் உனக்கு மூன்று வேளைக் கஞ்சி ஊற்றி மானத்துடன் வாழ வைக்க முடியும். இப்போதே, என்னுடன் வந்து விடு!" என்று அவள் கைப்பற்றி இழுக்க,

"மாமா, மாமா! அவசரப்படாதே. நாம் எடுத்துச் சொன்னால் அப்பா புரிந்து கொள்வார். மாமா, நான் சொல்வதைக் கேள். அவர்களைப் பகைத்துக் கொண்டு



நிம்மதியாக என்னால் வாழ முடியாது!" என்று கெஞ்சிய வளிடம், "பகைத்துக் கொண்டு வாழ முடியாதென்றால் இங்கேயே அவர்கள் எண்ணப்படி என்னை விரட்டியடித்து விட்டு நீ நிம்மதியாக இருப்பாயாடி? உன் அன்னையும், தந்தையும் என் மேல் போட்ட திருட்டுப் பட்டத்தை மெய் யாக்கப் பார்க்கிறாயா? உன் ஒருத்தியை நம்பித்தான்டி இந்த உடல் உயிரைச் சுமந்து கொண்டிருக்கிறது. நினை வில் வைத்துக் கொள்!" என்று அவன் கர்ஜித்த சமயம், பேரிடி ஒன்று வானத்தில் எழுந்து பலத்த ஓசையை உண்டாக்கியது.

கரு வானத்தில் உருண்டோடிப் போகும் இந்த இடி என் தலையில் விழுந்து என் உயிரை எடுத்துச் செல்லக் கூடாதா என்ற நிலையில் அன்னை, தந்தையையும் தன் உயிர்க் காதலனையும் மாறி மாறிப் பார்த்துக் கெஞ்சும் பார்வையொன்றை இரு புறமும் செலுத்திக் கொண் டிருந்தாள் அம்பரி.

"நான் சொல்வதைக் கேளடி. என்னோடு வா. எனக்கு ஆதரவளித்த நன்றிக்காக இந்த வீட்டில் நாய் படாத பாடு பட்டு இன்று சொத்தை அபகரிக்கத் திட்டம் போட்டவன் என்கிற பழிச் சொல்லுக்கும் ஆளாகி விட்டேன். போதுமடி... இனியும் அவமானப்பட்டு, அசிங்கப் பட்டு ஈனத்தனமான வாழ்க்கையை என்னால் வாழ முடியாது. இப்போது என்னுடன் வரப் போகிறாயா இல்லையா?" எனக் குரலை உயர்த்தி அவன் சத்தமிட்ட சமயம்... சலசலவென நீர்ச் சத்தம் கேட்டு வேகமாகத் திரும்பிப் பார்த்தாள் அம்பரி.

திவாகரன் பேசிய ஒவ்வொரு வார்த்தைக்கும் அம்பரியின் முகம் மாறுவதையும், வள்ளியம்மை வேறு இருவரையும் ஆதரித்துப் பேசுவதையும் கண்ட லட்சுமிக்கு நெஞ்சில் நஞ்சேறியது. தங்கை மகனை எப்போதும் விட்டுக் கொடுக்காமல் பேசும் இந்த மனுசன் கூட இன்று அவனை அடித்து விரட்டப் பார்த்ததில் அவளுக்குக் கொஞ்சம் மகிழ்ச்சிதான்.

ஆனால் எங்கே இந்தக் கிழவி செய்யும் களேபரத் தாலும், அம்பரியின் இடைவிடாத கண்ணீராலும் அவர் மாறி, அவனுக்கே மணம் முடித்து வைத்து விடுவாரோ என்று பயந்து போன லட்சுமி வேகமாக உள்ளே ஓடிச் சென்று மண்ணெண்ணெய் கேனைத் தூக்கிக் கொண்டு வந்து தன் மீதும், கணவன் மீதும் சடசடவென ஊற்றி னாள்.

அன்னையின் கையில் மண்ணெண்ணெயைக் கண்டதும், பதறித் திவாகரனின் கையை உதறி விட்டு ஓடப் பார்த்த அம்பரியின் கைகளை அவன் அழுத்தமாகப் பற்ற, "மாமா, அம்மா, அப்பா... கையை விடு மாமா!" என்றவளைக் கண்டு கொள்ளாது அவன் அழுத்தமாக... அத்தையின் செய்கையைக் கண்டு நிற்க... அவள் அவனிடம் கெஞ்சுவதை விடுத்து அன்னையிடம் கெஞ்சத் துவங்கினாள்.

"அம்மா, வேண்டாம்மா, ஏடாகூடமாக ஏதும் செய்து வைத்து விடாதே. நீங்கள் உயிரோடு இல்லையென்றால் நானும் என் உயிரை மாய்த்துக் கொள்வேன். அம்மா,



நான் சொல்வதைக் கேள். வேண்டாம்மா!" என்று கதறி அழுது கண்ணீர் விட்டவளிடம், "அவன் கையை விட்டு விட்டு எங்களிடம் வந்து விடு அம்பரி. உன்னைப் பெற்று வளர்த்து ஆளாக்கியதற்குக் கொஞ்சமேனும் எங்கள் மீது உனக்குப் பாசமிருக்குமானால் நீ என்னிடம் வந்து விடு. இல்லாவிடில் உன் வாழ்வு, உன் சந்தோசம் என்பதை மட்டும் நீ பெரிதாக நினைத்தால், நாங்கள் எரிந்து சாம்பலாவதையும் பார்த்து விட்டே செல்!" என்று தீப் பெட்டியை உரசத் துவங்க.

"அய்யோ அம்மா, என்ன காரியம் செய்யப் பார்க்கிறாய்? வேண்டாம் அம்மா, உரசாதே. தீப்பெட்டியை உரசாதே. மாமா, கையை விடு. கையை விடு மாமா! அம்மா சாகப் பார்க்கிறாள். மனச்சாட்சியில்லாமல் பார்த்துக் கொண்டு நிற்கிறாயே!" என்று அவன் மீது கோபத்தைக் காட்ட, அவன் அவள் கைகளை அழுந்தப் பற்றி, "மாட்டேன் அம்பரி. எனக்கிருக்கும் ஒரே சொந்தம், பந்தம் அனைத்துமே நீ மட்டும்தான். என் பாசமும், நேசமும், கனவும், காதலும் உன்னைச் சுற்றி மட்டும் தான். நீ இல்லாவிடில் உயிரோடு இருந்தாலும் நடை பிணமாகிப் போவேன் நான். என்னை விட்டுப் போகாதே பரி. நீ இன்றி என்னால் உயிர் வாழ முடியாது. உன் அன்னையின் நாடகத்தை நம்பாதே பரி. நான் சொல் வதைக் கேள். உன் அன்னை நிச்சயம் தன்னை எரித்துக் கொள்ள மாட்டாள். அவள் உன்னையும், என்னையும், பிரிக்கப் பார்க்கிறாள். நம்பாதே பரி. போகாதே. போகாதே பரி..." எனச் சிறு பிள்ளையாக மாறி அவள் கையைப்

பற்றிக் கெஞ்சியவனைப் பொங்கி வந்த அழுகையுடன் செயலிழந்து அவள் நோக்கிக் கொண்டிருக்க, "அம்பரி, உனக்கு அன்னையும், தந்தையும் முக்கியமில்லை என்பதைத் தெரிந்து கொண்டேன்!" என்றபடி தீக்குச்சியைப் பற்ற வைத்தாள் லட்சுமி.

கல் சிலை போல் நின்றிருந்த மாணிக்கத்திடம், "அப்பா, அப்பா நீங்களேனும் சொல்லுங்களப்பா, வேண்டாம்ப்பா... அப்பா வேண்டாம்ப்பா!" என்று அவள் கெஞ்சிய சமயம் தீக்குச்சியில் நெருப்புப் பற்றிக் கொள்ள, "அம்மா..." எனக் கத்தியபடி திவாகரனின் கைகளிலிருந்து தன் கையை உருவிக் கொண்டு அன்னை அருகில் ஓடினாள் அம்பரி.

அதுவரை அவன் கைகளிலிருந்து தன் கைகளைப் பிரிக்காமல் இருபுறமும் மாறி மாறிப் பார்த்துக் கதறிக் கொண்டிருந்தவள்... சடாரெனத் தன் கைகளைப் பிரித்துக் கொண்டு ஓடுவதைக் கண்ட திவாகரனுக்குத் தன் உயிரே தன்னிடமிருந்து பிரிந்து செல்வது போல் ஒரு நிமிடம் கரு வானமும், குளிர் காற்றும், சுற்றியிருப்போரின் கூச்சலும், ஏன் தன் இதயமுமே ஒரு நொடி நின்று போனதாகவே உணர்ந்தான்.

சென்று விட்டாள்...! அவனது அம்பரி சென்று விட்டாள்...! அவனை உதறிச் சென்று விட்டாள்...! அவனது உயிரும், உணர்வுமாய் மாறி அவன் வாழ்வதற்கான பாதையைக் காட்டிய அவனது தெய்வம் அவனை விட்டுச் சென்று விட்டாள்... விவரம் புரியாத வயதிலிருந்து அவன் மீது காதலையும், பாசத்தையும் திகட்டத் திகட்டச் செலுத்திக் கொண்டிருந்தவள், அவன் அதைத் திருப்பியளிக்க முயல்கையில் அவனை விடுத்துச் சென்று விட்டாள்...!



"வேண்டாம்மா..." என்று அவள் ஓடுகையிலேயே லட்சுமி தீக்குச்சியை உரசி விட, வேகமாக அதை அணைத்தவள், அவள் காலடியிலேயே விழுந்து, "அம்மா, வேண்டாம்மா! நீ சொல்வதை யெல்லாம் கேட்கிறேன். உன் விருப்பப்படி நடந்து கொள்கிறேன். இப்படிச் செய்யாதேம்மா..." என்று கதறினாள்.

"சண்டாளி... செத்துப் போவேன்னு மிரட்டி... என் பேரன் வாழ்க்கையை நாசமாக்கிட்டியே..." என்று வள்ளியம்மை ஒரு புறம் ஒப்பாரி பாட, உயிருடன்தான் இருக்கிறானா... என்று சந்தேகப்படுமளவிற்கு வெகு நேரமாக இமைக்க மறந்து, மூச்சு விடவும் மறந்து, நின்ற இடத்தில் அசையாமல் மரமாகிப் போனவன், மெல்ல நடந்து அந்த வீட்டை விட்டு வெளியேறினான்.

"அய்யோ ராசா... எங்க போற...?" என்று கதறிய வள்ளியம்மையின் குரல் கேட்டு, வெடுக்கென நிமிர்ந்து பார்த்த அம்பரி, கண்களை மறைத்த கண்ணீர் வழியே நிழலாகக் கண்டது, தொய்ந்த நடையுடன் கூனிக் குறுகி நடந்து சென்ற தன் ஜீவனைத்தான்!

சிறு பிள்ளையாய் விளையாடித் திரிந்த காலத்திலேயே அவனது வாட்டத்தைப் பொறுக்காதவள், இன்று தானே அவனது தலையில் இடியை இறக்கி,

அவனை உயிரோடு பிணமாக்கியிருக்கிறோம் என்பது தெரிந்து எப்படி உயிருடன் இருப்பாள்?

"மாமா... மாமா..." எனக் கூக்குரலிட்டுக் கதறித் துடித்த நெஞ்சத்தைக் கைகளால் அழுத்தி, 'மாமா செல்கிறான்... உன்னை விட்டுச் செல்கிறான்... உன் வாழ்வை விட்டுச் செல்கிறான்...' என்று விடாது தலைக்குள் ஓலமிட்டுக் கொண்டிருந்த மூளையை அடக்க முடியாமல், தள்ளாடி எழுந்து, பலமிழந்து போன கால்களை நகர்த்தி, "மாமா..." எனக் கண்ணீர்க் குரலில் கூறிவிட்டு, மறுநொடி சுயநினைவு இழந்து, படிக்கட்டில் விழுந்தாள்.

அவள் விழுந்த இடத்தில் சிவப்பாக ரத்தம் தரையைத் தழுவ, "அம்பரி..." எனக் கூச்சலிட்டுக் கொண்டு மூவரும் அவளருகே சென்றனர். "யாரேனும் வாருங்களேன்...அய்யோ அம்பரி... என் கண்ணே...!" என வள்ளியம்மையின் கதறலுக்குப் பக்கத்து வீட்டில் வசிப்பவர்கள் ஓடி வர, அனைவரும் அவளை அள்ளிக் கொண்டு ஆஸ்பத்திரிக்கு விரைந்தனர்.

"போய் விட்டாளே பாதகி! அநாதையான என்னை இன்றுவரை அநாதை என்கிற ஏக்கம் தாக்காமல் காத்து வந்தாளே! அவளே இன்று பிரிந்து சென்று, ஒரே நிமிடத்தில் உலகைச் சூன்யமாக்கி விட்டுச் சென்று விட்டாளே! அம்பரி... ரத்தமும் சதையுமாய் இந்த உடல் சுமந்து கொண்டிருப்பது உன்னை மட்டும் தானடி. அது புரியாது சென்று விட்டாயே! என் இதயம் துடிக்கும் ஒவ்வொரு நொடியும் உனக்காகத்தான் என்பதை உணராது சென்று விட்டாயே!



"பதினைந்து வயதில், செத்துப் போன அன்னையை எண்ணி, அம்மா... அம்மாவெனக் கதறிய போதெல்லாம் மடி மீது சாய்த்து ஆறுதல் அளித்தாயே! இத்தனை வருடமாகப் பாசமாக எனக்குச் சோறு போட்டதெல்லாம் இப்படி ஓர் துரோகத்தைச் செய்து என்னை உயிரோடு எரிப்பதற்குத்தானா? உன்னைத் தவிர உலகில் யாரையடி பெரிதாக மதித்திருக்கிறேன்? உன் ஒருத்திக்காகத்தானே அத்தனை அவமானங்களுக்கிடையிலும், அசிங்கங்களுக் கிடையிலும் படித்து வந்தேன்.

"உன்னோடு வாழ... உன்னை உள்ளங்கையில் வைத்துத் தாங்கத்தானே ஒவ்வொரு நாளும் கனவு கண்டேன். அனைத்தும் நிறைவேறி என் கனவு பலிக்கும் சமயம் இப்படித் தீயை வாரி என் முகத்தில் எறிந்து விட்டாயே! அம்பரி... என் காதலின் தீவிரத்தை நீ உணர வில்லை. அன்னை, தந்தை, அக்கா, தம்பி என அனை வருமாக உன் ஒருத்தியை எண்ணினேன். உடல் சுகத் திற்காகவும், உன் அன்னை கூறியது போல் சொத்து, பணத்திற்காகவும் நான் உன்னை நேசிக்கவில்லையடி.

"என் நேசம் வானத்தின் எல்லையைக் கடந்தது. கடலின் ஆழத்தைக் கடந்தது. எனக்குள் நீயிருப்பதாக எண்ணி உனக்குள் நான் வாழ்ந்து கொண்டிருக்கிறேன். என் நேசத்தைத் தூக்கி எறிந்து போனாயேடி... இனி என் உடல் இந்த உயிரைச் சுமந்து கொண்டிருக்குமென்று நினைத்தாயா...? நீயே இல்லையென்று ஆன பின், நீ வளர்த்த இந்த உயிர் எதற்கடி? இப்போதே பிரித்து

விடுகிறேன்... இந்த உடலிலிருந்து உன்னை எண்ணித் துடித்துக் கொண்டிருக்கும் என் இதயத்தை!"

தன் போக்கில், நேர் வெறித்த பார்வையுடன், எங்கே செல்கிறோம் என்பதையே மறந்து, சீரான அந்தப் பாதையில் ஜீவனற்று நடந்து சென்று கொண்டிருந்த திவாகரன், இடையில் வள்ளியம்மை வந்ததோ, "ராசா... உடனடியாப் போய்த் திருமலை பெரியப்பாவை இந்த விலாசத்துல பாரு கண்ணு... நான் சொல்றது கேக்குதாய்யா? அம்பரி தலையில அடிபட்டு ஆஸ்பத்திரியில கிடக்குறா கண்ணு..." என்று கூறி, அவன் கையில் ஒரு சீட்டைத் திணித்ததையோ அறியாமல், தொய்ந்த நடையுடன், அந்த அமாவாசை இருளில், மழைக் காற்றில், வயல் வெளிகளிடையே போக்கற்று நடந்து கொண்டிருந்தான்.

## 15

ஆற்றங்கரை ஓரத்திலே...
யாருமற்ற நேரத்திலே...
வீற்றிருந்த மணற் பரப்பு...
வேதனையைத் தூண்டுதடி!
பூத்திருந்த மலரெடுத்து...
பூங்குழலில் சூடி வைத்து...
பார்த்திருந்த கோலமெல்லாம்...
பழங்கதை ஆனதடி!



**கொ**ப்பும் கிளையுமாய்ச் செழித்து வளர்ந்திருந்த மாமர நிழலில் திவாகரனின் தோள்களில் சாய்ந்தபடி தன்னை உரசிச் சென்ற குளிர் காற்றை அனுபவித்துக் கொண்டு, மரம் தந்த நிழலைக் காட்டிலும் தன் மாமனின் அருகாமை தந்த நிழலை எண்ணி நிம்மதியில் ஆழ்ந்திருந்தாள் அம்பரி.

அவனுக்கே உரிய, அம்பரி மட்டுமே அறிந்த அவனது பிரத்யேக வாசனை, அவள் நாசியைத் தீண்டிச் செல்ல, அவனது திடகாத்திரமான, வலிமையான தோள்களில் முகம் புதைத்திருக்கும் தன் நிலையை எண்ணி, எப்போதும் போல் அன்றும் கர்வம் கொண்டாள் அவள். தன கன்னத்தில் மென்மையாகப் பதிந்து தன் பயணத்தைத் தொடர்ந்து கொண்டிருக்கும் அவன் கரங்களைப் பற்றி, மெல்ல நிமிர்ந்து அவன் முகம் நோக்கிய அம்பரி, திகைத்துப் போனாள்.

சொல்லொணா வேதனையைத் தாங்கியிருந்த அவனது முகம் துன்பத்திலும், துயரத்திலும் மூழ்கிப் போய், 'ஏன் என்னை விட்டுப் போனாயடி...?' என்கிற கேள்வியோடு அவளை வலி நிறைந்த விழிகளுடன் நோக்கிக் கொண்டிருந்தது.

சட்டென எழுந்து அமர்ந்த அம்பரிக்குக் கனவில் கண்ட மாமன் முகத்தை எண்ணி நெஞ்ச விதிர் விதிர்த்துப் போனது. முத்து முத்தாகப் பூத்திருந்த வியர்வைத் துளிகளைத் துடைக்க எண்ணிக் கையை உயர்த்தியவள், நெற்றியில் போடப்பட்டிருந்த கட்டுகளை உணர்ந்து, எதிரில் அமர்ந்திருப்பவர்களை நிமிர்ந்து நோக்கினாள்.

மகள் கண் விழித்ததைக் கண்டு ஓடி அவளருகே வந்த மாணிக்கம், "கண்ணு... விழித்து விட்டாயா? என்னவோ ஏதோ என்று நான் பயந்து போனேன்! ரொம்ப வலிக்கிறதாம்மா?" என்று பரிவுடன் அவள் தலையை வருட, தந்தையை அண்ணாந்து நோக்கிய அம்பரி, "நான்... எ... எப்படி இங்கே?" என்று கேட்டபடி, என்ன நடந்ததென்பதை நினைவு கூர முயன்றாள்.

அழுது அழுது சிவந்திருந்த விழிகள் எரிச்சலைக் கொடுக்கக் கண்களை மூடிக்கொண்டு சிந்தித்தவளுக்கு, சில மணி நேரங்களுக்கு முன்பு நடந்த நிகழ்வுகள், மூடிய கண்களுக்குள் படமாக விரிந்தன. நேச விதையை விவரம் அறியாத வயதிலேயே அவளுக்குள் விதைத்த அவளது மாமன், அவளைப் பிரிந்து சென்று விட்டான் என்கிற உண்மை அவளது இதயத்தைச் செயலிழக்கச் செய்து, அவளை மீண்டும் மயக்க நிலைக்கு அழைத்துச் சென்றது.

இல்லை... இல்லை... மயங்கி விழுந்து இனியும் நேரத்தை வீணாக்க அவளால் முடியாது. அவனைக் கண்டாக வேண்டும்! வேதனையில் உயிர் போகும் முன் ஒரு முறையேனும் பார்த்தாக வேண்டும்! இப்போதே... இப்போதே சென்றாக வேண்டும்.

விடாமல் கண்ணீர் சொரிந்ததில் முகமும், கண்களும் வீங்கிப் போயிருக்க, காயம் பட்டிருந்த இடம் வேறு விண் விண்ணென்று தெறித்து அவள் வேதனையைப் பெரிதாக்கியது. ஆனால் உடல் காயங்களைப் பற்றிய



உணர்வே இல்லாது மனக் காயத்திற்கு மருந்து வேண்டி, அவள் எழுந்து ஓடினாள்.

நாற்காலியில் அமர்ந்து அவளது நிலையை எண்ணி அழுது கொண்டிருந்த அப்பத்தாவையும், தன்னருகே நின்றிருந்த அன்னை, தந்தையையும் தாண்டி, வெறி கொண்டவள் போல், "மாமா... மாமா..." எனக் கத்திக் கொண்டு ஓடியவளைக் கண்டு திகைத்துப் போன அனைவரும், "அம்பரி... நில்...!" என்று பின்னேயே ஓடினர்.

அசுர வேகத்தில் தன்னிலையையும், தானிருக்கும் இடத்தையும் மறந்து ஓடுபவளை எதிரே வந்த செல்வமும், குமரனும் தடுத்துப் பிடித்தனர். "என்னை விடுங்கள். நான் மாமாவைப் பார்க்கச் செல்ல வேண்டும். நான் இல்லை என்றால் மாமா ஒரு நிமிடம் கூட இருக்க மாட்டார். நான் பார்த்தாக வேண்டும். அய்யோ! வலியில் துடித்த அந்த முகத்தை என்னால் காணச் சகிக்க முடியவில்லையே! அவர் கஷ்டப்படக் கூடாதென ஒவ்வொரு நிமிடமும் கடவுளிடம் பிரார்த்திக்கும் நானே அவரைக் கொன்று விட்டேனே... என் கையை விடுங்கள், நான் போக வேண்டும்..." என்று கதறித் தீர்த்தவளைக் கண்டு குமரனுக்கும், செல்வத்திற்கும் அழுகை ஊற்றாகக் கிளம்பியது.

இருவரது கோபமும் முற்றிலுமாக மாணிக்கம் - லட்சுமியிடம் திரும்பியது. ஜோடிப் புறாக்கள் போல் சுயநலமற்ற தூய்மையான அன்பை ஒருவர் மீது ஒருவர்

செலுத்திக் கொண்டு இன்பமாகப் பறந்து திரிந்தார்களே! ஒரே நாளில் அவர்களது சிறகை ஒடித்து வலியில் துடிதுடிக்க வைத்து விட்டார்களே... பாவிகள்! இவளது கதறலும், அழுகை ஓலமும் இவர்களை எந்த விதத்திலும் பாதிக்கவில்லையா? கல் நெஞ்சக்காரர்கள்!

மனதிலிருக்கும் கோபம் அனைத்தையும் விழிகளில் தேக்கி, அவர்களிருவரையும் உறுத்து விழித்த குமரன், தங்களது பிடியைத் தாண்டி ஓடத் திமிறிக் கொண்டிருக்கும் அம்பரியிடம், "அம்பரி... மாமா சுகமாக இருக்கிறார். அவருக்கு ஒன்றுமாகவில்லை. நம் தோப்பில்தான் படுத்திருக்கிறார். இவ்வளவு நடந்த பின்பும் உன் அம்மா, அப்பாவின் முகத்தில் முழிக்க அவர் விரும்பவில்லை. அதனால்தான் அவர் இங்கே வரவில்லை. நீ அமைதியாகச் சென்று படுத்துக் கொண்டாயானால், நானே நாளை மாமனை இங்கே அழைத்து வருகிறேன். வா அம்பரி... சொன்னால் கேளம்மா..." என்று கெஞ்சியவனிடம், மறுத்துத் தலையசைத்தவள்,

"பொய்... பொய் சொல்கிறாய் குமரா. என் காலில் முள் குத்தினாலே எட்டு ஊருக்குக் கத்தி ஆர்ப்பாட்டம் செய்து என்னை மருத்துவ மனைக்கு அழைத்துச் செல்லும் மாமன், இன்று நான் அடிபட்டு இந்த நிலையில் இருக்கிறேன் என்கிற சேதி தெரிந்தால், என்னைக் காண ஓடோடி வந்திருப்பார். அவர் எங்கோ சென்று விட்டார். அவருக்கு என்னவோ ஆகிவிட்டது, குமரா. மாமன் இல்லாத ஒரு நொடி கூட என் உயிர் என் உடலில்



இருக்காதடா. அவரிடம் என்னைச் சேர்ப்பித்து விடு. இல்லை... என்னையேனும் செல்ல விடு..." என்று கண்ணீருடன் கெஞ்சியவளைக் கண்ட அனைவரும் அழுகையில் மூழ்கி விட்டனர்.

அதன் பின் டாக்டரும், சில நர்ஸ்களும் சேர்ந்து அவளைப் பெரும் பாடு பட்டு இழுத்து வந்து, மயக்க ஊசியுடன் தூங்க வைத்தனர்.

அவள் உறங்கியதும் குமரனிடமும், செல்வத்திடமும் வந்த வள்ளியம்மை, "உடனே போய் திவாகரன் எங்கே இருக்கான்னு தேடுங்கடா. ஜீவனில்லாம அவன் போனது இன்னும் என் கண்ணுக்குள்ள நிக்குது. என்ன ஆனானோ தெரியலையே! அவனா எதுவும் செஞ்சுக் கிறதுக்கு முன்னாடி அவனைக் காப்பாத்தியாகணும்டா..." என்று அழுகையுடன் கெஞ்ச, அதன்பின் நொடிகூடத் தாமதிக்காமல் வண்டியை எடுத்துக் கொண்டு திவாகரனைத் தேடத் துவங்கினர்.

கண்ணீர் வற்றிப் போயிருந்த திவாகரனின் விழிகள் இமைக்கவும் மறந்து, நேர் வெறித்த பார்வையுடன் நிலைத்துப் போயிருக்க, ஊர் எல்லையில், நடுச் சாலையில் தன்னைக் கடந்தும், உரசியும் செல்லும் பேருந்துகளைப் பொருட்படுத்தாது தன் போக்கில் சென்று கொண்டிருந்தான். "பார்த்துப் போகத் தெரியாதா தம்பி! நடு ரோட்டுல இருட்டுல நடந்து போயிட்டிருக்க...!" எனப் பேருந்து நடத்துனர் ஒருவர் திட்டி விட்டுச் சென்றது அவன் காதில் ஏறவேயில்லை.

ஊர் முழுக்கச் சுற்றியும் அவனைக் கண்டறிய முடியாமல் பதற்றத்துடனும், கவலையுடனும் வண்டியைச் செலுத்திக் கொண்டிருந்த குமரன், சாலை நடுவே தொய்ந்த நடையுடன் சென்று கொண்டிருந்த திவாகரனைக் கண்டு, நிம்மதியுடன் விரைவாக அவனருகே வண்டியைச் செலுத்தினான்.

அதற்குள்ளாக அவனைக் கடந்து சென்ற பேருந்து ஒன்று, அவனை இடித்துச் சாலையோரத்தில் வீசிவிட்டுக் குலுங்கி மறுபுறம் திரும்பி நின்றது.

ஓட்டுநர் சுதாரித்துத் திருப்பி விட்டதால், லேசான சிராய்ப்புகளுடன் அவன் தப்பி விட்டான். வண்டியிலிருந்த பலர் இறங்கி அவனது நிலையை ஆராய, வேகமாக அருகே ஓடி வந்தான் குமரன்.

பெரிதாக ஏதும் காயம் படவில்லை என்பதை உறுதி செய்து கொண்டவன், "மாமா... எழுந்திருங்கள்..." என்று அவனைத் தூக்கி நிறுத்த, சின்னமனூர் செல்வதற்காகப் பேருந்தில் அமர்ந்திருந்த திருமலை, திவாகரனைக் கண்டு பதறியடித்துக் கொண்டு ஓடி வந்தார்.

"திவாகரா...! நீதானா? பார்த்து நடந்து வரக் கூடாதா? என்ன இது...?" என்று கடிந்து கொள்ள, இருவரது கேள்விகளுக்கும் பதிலளிக்காமல், எங்கோ வெறித்த பார்வையுடன் நின்றிருந்தான் அவன்.

திருமலை குழம்பிக் குமரனைப் பார்க்க, "அய்யா... நீங்கள்...?" என்றான் அவன்.



"நான் திவாகரனின் பெரியப்பா திருமலை..." என்று அவர் கூறியதும், "மாமா... நான் ராஜனின் மகன் குமரன். இ... இவரை உடனடியாக வீட்டிற்கு அழைத்துச் செல்ல வேண்டும். இவருக்கு என்னதானதோ, ஏதானதோ எனப் பதறிக் கொண்டிருக்கிறார்கள் அனைவரும்," என்றான் குமரன்.

"பதறுமளவுக்கு என்ன நடந்து விட்டது? குமரா, என்ன பிரச்னை?" என்று விசாரித்தவரிடம், அவன் சுருக்கமாக நடந்ததைக் கூறினான்.

"மாமா... அங்கே அம்பரி தலையில் அடிபட்டு ஆஸ்பத்திரியில் கிடக்கிறாள். இங்கே இவர் சுயநினைவுடன் இருப்பது போல் தெரியவில்லை. பயமாக இருக்கிறது மாமா..." என்றவனைச் சமாதானப்படுத்தி, "குமரா... உன் மாமன் இருக்கும் மனநிலைக்கு, அவனை மீண்டும் அதே வீட்டிற்கு அழைத்துச் செல்வது சரி வராது. நான் இவனை என்னுடன் அழைத்துச் செல்கிறேன். நீ அப்பத்தாவிடம் விவரத்தைக் கூறு," என்றார் அவர்.

"அதுவும் சரிதான். ஆனால், அம்பரி...?" என்று இழுத்தவனிடம், "முதலில் அவன் தெளிவு பெறட்டும். அதன் பின்பு நடப்பவற்றைப் பார்ப்போம்," என்றவர், அவனை அழைத்துக் கொண்டு தன் ஊருக்குச் சென்று விட்டார்.

மயக்கத்தின் பிடியில் அம்பரி ஒருபுறம் உணர்வற்றுக் கிடக்க, இங்கே திவாகரனோ திருமலையின்

வீட்டில் விட்டத்தை வெறித்தபடி சுய நினைவற்று அமர்ந்திருந்தான்.

அமர்ந்த இடத்திலிருந்து அசையாமல் பிரமை பிடித்தவன் போலிருந்தவனைக் கண்டு பயந்து போனார் திருமலை. "திவாகரா... திவாகரா...!" என்று அவன் கன்னம் தட்டிப் பார்த்தும், அவனிடமிருந்து எந்தப் பதிலும் இல்லாமற் போனதால், அருகிலிருந்த ஜாடியிலிருந்த தண்ணீரை அவன் முகத்தில் தெளித்தார்.

தன் முகத்தில் தண்ணீர் தெறித்ததும், இமைகள் மூடித் திறந்த திவாகரன், எதிரில் இருந்தவரைக் கண்டு மலங்க மலங்க விழித்தான். "திவாகரா... என்னடா இது? ஏன் இப்படிப் பித்துப் பிடித்தவன் போலிருக்கிறாய்? வாயைத் திறந்து பேசுடா!" என்று அவன் முன்பு நின்று சத்தமிட்டுக் கொண்டிருந்தவரின் வார்த்தைகள் ஏதும் அவன் காதில் எட்டவில்லை என்பது, அவன் விழித்துக் கொண்டு அமர்ந்ததிலேயே தெரிந்தது.

அவனை நடத்திச் சென்று அங்கிருந்த அறையில் படுக்க வைத்தவர், "கண் மூடித் தூங்குடா... காலை பேசிக் கொள்ளலாம்..." எனக் கூறிச் சென்றார். படுக்கையில் சாய்ந்து கிடந்த திவாகரனின் கண்கள் இமை மூட மறுத்தன. மனம் முழுதும் அம்பரி... அம்பரி... என அடித்துக் கொள்ள, ஜன்னல் வழி தெரிந்த ஆகாயத்தை வெறித்துக் கொண்டிருந்தான்.

மறுநாள் காலை, மயக்கம் தெளிந்து கண் விழித்த அம்பரியை அழைத்துக் கொண்டு வீடு வந்து சேர்ந்தனர்



மாணிக்கம் குடும்பத்தினர். மாமனின் நிலை என்னவென்பதை அறிந்து கொள்ளத் துடித்த மனதை அம்பரியால் கட்டுப்படுத்திக் கொள்ளவே முடியவில்லை. தன்னைக் காண வந்த மாணிக்கத்திடமும், உணவளிக்க முயற்சித்த லட்சுமியிடமும் அவள் ஒரு வார்த்தை கூடப் பேசவில்லை.

தன்னிடம் முகம் கொடுத்துக் கூடப் பேச மறுக்கும் மகளைக் கண்டு கவலை கொண்டார் மாணிக்கம். மனைவியின் பேச்சைக் கேட்டுக்கொண்டு இருவரையும் பிரித்தது தவறோ என்று கூடச் சிந்திக்கத் துவங்கினார். தான் அளிக்கும் உணவை அவள் உண்ண மறுப்பதால், வள்ளியம்மையிடம் சாப்பாடு கொடுத்தனுப்பினார் லட்சுமி.

மாமனைப் பற்றிய தகவல் அறிந்த ஒரே ஜீவன் அப்பத்தாவாகத்தானிருக்க முடியும் என்று முடிவு செய்த அம்பரி, அவர் உணவளிக்க வருகையில், அவர் தோளைப் பிடித்துக் கொண்டு, "அப்பத்தா... அப்பத்தா... மாமா எங்கே? சௌக்கியமாய் இருக்கிறார்தானே! அவர் எங்கே இருக்கிறார் இப்போது? தேனு வீட்டிலா? குமரன் வீட்டிலா? அப்பத்தா... நா... நான் அவரைப் பார்க்க வேண்டும். எங்கே இருக்கிறார் என்று சொல்! சொல் அப்பத்தா...!" என்று அவரை உலுக்கியவளிடம், பதில் பேசாமல் அவள் கையை உதறி விட்டுத் தட்டிலிருந்த சாதத்தைப் பிசையத் துவங்கினார் வள்ளியம்மை.

அப்பத்தாவின் செய்கையில் வித்தியாசத்தை உணர்ந்த அம்பரி, புருவம் நெரித்துப் பின் பதறி,

"அப்பத்தா... மா... மாமாவிற்கு ஏதும் ஆகவில்லை தானே? பதில் பேசு. என்னால் பொறுக்க முடியவில்லை. சொல் அப்பத்தா..." என்றவளிடம்,

"செத்துட்டான்டி... உன் மாமன் செத்துட்டான். போதுமா?" என்று ஆங்காரத்துடன் கூறியவர், தொடர்ந்து, "உன் ஒருத்தியைத் தானேடி அவன் நம்புவான்! அவனைக் கைவிட எப்படிடி மனசு வந்தது உனக்கு? கடைசியில உன் ஆத்தா புத்தியைக் காட்டிட்டியேடி! இதைப் பார்க்கத்தான் நான் உயிரோடு இருக்கிறேனா? எப்ப நீ அவன் கையை விட்டியோ, அப்பவே அவன் செத்துப் போயிட்டான்டி. நடை பிணமா அவன் போனதைப் பார்க்கிறப்போ நெஞ்சு பதறிச்சேடி! உன் ஆத்தாக்காரி போட்ட நாடகத்தை நம்பி உன்னை உசிரா நினைச்சவனைக் கலங்க வெச்சிட்டியேடி. நீ நல்லா இருப்பியா?" என்று அப்பத்தா, தன் பேரனை நினைத்துக் கலங்க, தான் செய்த தவறை நினைத்துப் பெருங் குரலெடுத்து அழத் துவங்கினாள் அம்பரி.

அப்போது உள்ளே நுழைந்த குமரனும், தேன்மொழியும் அப்பத்தாவின் பேச்சையும், அம்பரியின் அழுகையையும் கண்டு அருகே வந்தனர். "அப்பத்தா... அவள் ஏற்கெனவே நொந்து போயிருக்கிறாள். நீ வேறு ஏதோ பேசி அவளை வருத்தப்படுத்தாதே!" என்று கடிந்து கொண்ட குமரன், தேன்மொழியின் பிடியில் இருந்த அம்பரியிடம், "அம்பரி... மாமா இப்போது அவரது பெரியப்பா திருமலையின் வீட்டிலிருக்கிறார். நீ கவலைப்படுமளவிற்கு அவருக்கு எதுவுமாகவில்லை. அழுவதை நிறுத்து..." எனக் கூறிச் சமாதானப்படுத்தினான்.



"அழாதே அம்பரி! உள்ளே வா... இங்கே உட்கார்!" என்று அவளை அமர வைத்த தேன்மொழி, "சொல்கிறேன் என்று தவறாக எடுத்துக் கொள்ளாதே அம்பரி! அப்பத்தா சொன்னது முழுக்க முழுக்கச் சரி. உன் அம்மா உசிலம்பட்டியிலிருக்கும் உன் அத்தையின் தங்கை மகனுக்கு உன்னை மணமுடிக்கத் தீர்மானித்திருந்தாராம். மாணிக்கம் மாமாவும் இதற்குச் சம்மதித்து விட்டதாகத்தான் தெரிகிறது. சொந்த பந்தங்கள் யாரிடமும் இந்த விசயத்தைப் பற்றிக் கூறாமல், நேராக உசிலம்பட்டிக்குச் சென்று சம்பந்தம் பேசத் தொடங்கி விட்டார்கள் உன் அம்மாவும், அப்பாவும்.

"அம்பரி... திவாகரன் மாமாவிற்கு உன்னைத் திருமணம் முடித்து வைக்க வேண்டுமென்கிற எண்ணம் உன் பெற்றோருக்கு இருந்தது போல் தெரியவில்லை. அநியாயமாகப் பழிச் சொல்லைப் போட்டு அவரை வருத்தப்படுத்தி வெளியே துரத்தி விட்டார்களே! நீயும் அதைப் பார்த்துக் கொண்டிருந்தாய் என்பதைத்தான் என்னால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை அம்பரி...!" என்று அழுகையும் கோபமுமாய்த் தன் ஆதங்கத்தைக் கொட்டித் தீர்த்தாள் தேன்மொழி.

"ஏய்... என்னடி! அவளைச் சமாதானப்படுத்தி அவளுக்கு உதவியாய் இருப்பாய் நீ என்று உன்னைக் கூட்டி வந்தால், நீயும் அவள் மீதே வசை பாடுகிறாய்?" என்று தேனிடம் பாய்ந்த குமரன், "அம்பரி... அவள் சொல்வது எதையும் மனதில் எடுத்துக் கொண்டு இதற்கும்

அழுது தீர்க்காதே!" என்று தங்கையிடம் கெஞ்சிக் கேட்டுக் கொண்டவன், மீண்டும் திரும்பித் தேன்மொழியை முறைத்தான்.

அண்ணனின் நினைவில் அழுதபடியே ஓடி அறையை விட்டு வெளியே வந்த தேன்மொழி, தூணில் சாய்ந்து அழுகையைத் தொடர, வேகமாக அவளிடம் வந்தவன், "என்னடி...! நீயும் இப்படி அழுது கொண்டிருக் கிறாய்?" என்று கோபமாக வினவினான்.

"அழாமல்...? அழாமல் என்ன செய்யச் சொல் கிறாய்? திருமலை சித்தப்பா இல்லாது போயிருந்தால், அண்ணனின் நிலையை எண்ணிப் பார்த்தாயா? யாருக்கும் சுமையாய் இருக்கக் கூடாதென்று நினைப் பவன் அவன். உன் வீட்டையோ, என் வீட்டையோ நிச்சயம் தேடி வந்திருக்க மாட்டான். அவளுக்காகத்தானே அத்தையின் பேச்சுக்களைப் பொறுத்துக் கொண்டு வாழ்ந் தான்! இவளே இப்படிச் செய்து விட்டாளே! அத்தை மண்ணெண்ணெயை ஊற்றிக் கொண்டு போய்ச் சேர்ந்து விட்டால்தான் என்ன இப்போது? வாழ வேண்டியவர் களைப் பிரித்து வைத்து விட்டு, இவர்கள் உயிரோடு இருந்து என்ன பிரயோஜனம்?" என்று திட்டித் தீர்க்க, அவளைச் சமாதானப்படுத்தி வீட்டுக்கு அழைத்துச் சென்றான் குமரன்.

தேன்மொழி பேசிய அனைத்தையும் கேட்ட அம்பரிக்குத்தான் துக்கம் பொங்கியது. திவாகரனை அன்னைக்குப் பிடிக்காது என்கிற உண்மை அவளறிந்தது



தானே! அவளது எத்தனை சொல்லம்புகளிலிருந்து திவாகரனைக் காப்பாற்றியிருக்கிறாள்? அப்பேர்ப்பட்டவள் திவாகரனுடனான திருமணத்திற்கும் நிச்சயம் எதிர்ப்புத் தெரிவிப்பாள் என்பதும் அவளறிந்த விசயம்தான். அப்படியிருக்கையில் நினைத்ததைச் சாதிக்க எண்ணி, லட்சுமி போட்ட நாடகத்தை நம்பித் திவாகரனைக் காயப் படுத்தி விட்டாளே!

அப்பத்தாவும், தேன்மொழியும் கூறிச் சென்ற வார்த்தைகள் வேறு ரணமாய்த் தாக்க, தன் மீதே தவறு முழுதும் இருப்பதாயும், தானே அவனைக் காயப்படுத்தி விட்டதாகவும் எண்ணி எண்ணித் துயரத்தில் ஆழ்ந்தாள்.

அங்கே திருமலையின் இல்லத்தில் காலை, திவாகரன் படுத்திருந்த அறைக் கதவைத் திறந்து கொண்டு உள்ளே நுழைந்த திருமலை, திகைத்து நின்றார். இரவு முழுதும் விழித்துத்தான் இருந்திருக்கிறான்! ஜன்னலை வெறித்துக் கொண்டு அமர்ந்திருந்தவனை என்ன செய்வ தென்றே புரியவில்லை அவருக்கு! காதல் ஒருவனை இப்படி உணர்வற்று மாற்றி விடுமா என்ன? எப்பேர்ப்பட்ட அன்பை அவள் மீது வைத்திருக்கிறான் இந்தப் பையன்! வியப்பாக இருந்தது அவருக்கு.

இவன் தூங்கினாலொழியத் தன்னிலைக்கு வர மாட்டான் என்று புரிந்து கொண்டவர், பாலில் தூக்க மாத்திரையைக் கலந்து எடுத்துக் கொண்டு அவனிடம் சென்றார். "திவாகரா... திவாகரா..." என்று அவன் கன்னத்தைத் தட்டி, அவன் வாயருகே டம்ளரை நீட்டிப்

புகட்டினார். பாலைப் பருகிய பின் செருகிய விழிகளுடன் அவன் சொக்கி விழுவதைக் கண்டு, அவனைப் படுக்க வைத்து விட்டுப் பெருமூச்சுடன் வெளியேறினார்.

இருபத்து நான்கு மணி நேரத்திற்கும் மேலாக அயர்ந்து உறங்கிக் கொண்டிருந்தவனை எழுப்ப மனமில்லாமல், அவ்வப்போது அறையை எட்டிப் பார்த்துக் கொண்டிருந்தார் திருமலை. ஏகப்பட்ட உணர்ச்சிக் கொந்தளிப்புகளுக்கு ஆளாகித் தன்னை மறந்து ஆழ்ந்த நித்திரைக்குச் சென்று விட்டிருந்த திவாகரன், மாலை நான்கு மணி வாக்கில் கண் விழித்த வேளை, அங்கே அம்பரி சில பல அரளி விதைகளை அரைத்துத் தன் வயிற்றுக்குள் அனுப்பியிருந்தாள்.

## 16

உன்னைக் காணாமல் கண்கள் பொங்கும்!
அதுவே நெஞ்சின் ஆதங்கம்!
உனக்காக என் பாடல் அரங்கேறும் வேளை!
நீ கேட்க வழி இல்லை, இது என்ன லீலை?
பூ மேகம் இங்கே! ஆகாயம் எங்கே?
நீ சென்ற வழி பார்த்து,
வாடும் உன் பூ இங்கே!

**வே**ரோடு சரிந்த ஆலமரம் போல் அவளது மாமனைப் பற்றிய நினைவுகளைக் கிளைகளாக விரித்துப் படர்ந்து கிடந்தாள் அம்பரி. மாமனின் சந்தோசத்தை



மட்டுமே மனதிற்கொண்டு, எண்ணற்ற கிளைகளுடன் செழித்து வளர்ந்திருந்த மரம் அது. அதன் நிழலில் இளைப்பாற, அதனோடு உறவாட உரிமையுள்ளவன், தகுதியுள்ளவன் திவாகரன் மட்டுமே. அவனைக் காணாது, அவனோடு உறவு கொள்ளாது வாடிப் போன அந்த மரம், அவன் நினைவிலேயே மொத்தமாகச் சாய்ந்து விட்டது. உயிரும், உணர்வுமாய் இங்குமங்கும் அசைந்தாடிக் காண்போரை மகிழ்ச்சியுறச் செய்து கொண்டிருந்த மரம், இன்று ஜீவனற்றுக் கிடக்கிறது.

அரளி விதைகளை அரைத்துக் குடித்துத் தொண்டை அடைக்க மூச்சுக்குத் தவித்துக் கொண்டு வாயில் நுரை தள்ளக் கொல்லைப்புறத் திண்ணையில் கிடந்தவளை வீட்டினர் பதறியடித்துக் கொண்டு போய் ஆஸ்பத்திரியில் சேர்த்தனர். பிழைப்பாளோ மாட்டாளோ என்கிற நிலை வந்தபோது, மாணிக்கம் மொத்தமாக உடைந்து விட்டார். 'அநியாயமாக என் பெண்ணை நானே கொன்று விட்டேனே...!' என்று அவர் வாய் மூடிக் கதறியபோது, குமரனுக்கும், தேன்மொழிக்கும் பாவமாகிப் போனது.

சில மணி நேரப் போராட்டத்திற்குப் பிறகு, அம்பரி பிழைத்து விட்டதாக டாக்டர் கூறிய பின்புதான் அனைவருக்கும் மூச்சு வந்தது. அவள் கண் விழித்ததும் அழுகையுடன் அவளருகே ஓடிய லட்சுமி, "ஏன்டி இப்படிச் செய்து விட்டாய்? இதற்காகவா நான் உன்னைப் பெற்று வளர்த்தேன்? எங்களை விட்டுப் போக எப்படியடி உனக்கு

மனசு வந்தது? பெற்றவர்களைவிட அந்த அநாதைப் பயல்தான் உனக்குப் பெரிதாகப் போய் விட்டானா?" என்று கோபத்துடன் கூற,

அன்னையின் முகத்தை நிமிர்ந்து கூடப் பார்க்காத அம்பரி, அப்பத்தாவிடம், "அ... அவரை வெளியே போகச் சொல் அப்பத்தா. நா... நான் உயிருடன் இருப்பதே என் மாமாவை ஒரு முறையேனும் சந்தித்து மன்னிப்புக் கேட்கத்தான். வேறு யாருக்காகவும் நான் இந்த ஜீவனைச் சுமக்கவில்லை. வெளியே போகச் சொல் அப்பத்தா. பெற்ற பெண் என்று கூடப் பாராமல் நாடகம் ஆடி என் வாழ்வை அழிக்கப் பார்த்தார்களே... இவர்களை என் அன்னை, தந்தை எனச் சொல்லவே அசிங்கமாக இருக்கிறது எனக்கு. என்னை மட்டுமே உலகமாக எண்ணி வாழ்ந்து கொண்டிருந்த மாமனை அநியாயமாகத் தண்டித்து விட்டார்களே! போகச் சொல் அப்பத்தா... அவர்கள் முகத்தில் கூட நான் விழிக்க விரும்பவில்லை..." என்று கண்ணீர் சொரிந்தவளைக் கண்டு திகைத்து நின்றனர் மாணிக்கமும், லட்சுமியும்.

'தேவைதான் இவர்களுக்கு...!' என்றெண்ணிக் கொண்ட தேன்மொழி, "அத்தை, மாமா... அவள்தான் அழுகிறாளே... நீங்கள் வெளியே செல்லுங்கள். பிறகு பேசிக் கொள்ளலாம். இல்லையென்றால் மேலும் அழுது அழுது அவள் உடம்பைக் கெடுத்துக் கொள்வாள்!" என்று கூற, வேறு வழியின்றி வெளியேறினர் இருவரும்.

தலைகுனிந்தபடி வெளியேறியவர்களைக் கண்டு, அங்கிருந்த குமரன், தேன்மொழி, வள்ளியம்மை மூவரும்



வருந்தினர். "ஏன் அம்பரி இப்படிப் பேசிவிட்டாய்? இருவரும் உனக்கு என்னாகுமோ ஏதாகுமோ என்று எப்படிப் பயந்தார்கள் தெரியுமா?" என்று ஆதங்கத்துடன் கேட்ட குமரனை, உறுத்து விழித்தாள் அம்பரி.

"நீ சும்மா இருடா..." என்று அவனை அடக்கிய வள்ளியம்மை, அவளருகே சென்றமர்ந்து, "என்ன கண்ணு இப்படிப் பண்ணிட்ட? நீ பிழைப்பியோ மாட்டியோன்னு எல்லாரும் பயந்து போனோம். உன் மாமனுக்கு நான் என்ன பதில் சொல்லுவேன்? இனி இப்படிச் செய்யாத அம்பரி. இந்தக் கிழவிக்காகவேனும்..." என்று அழுத அப்பத்தாவின் கையைப் பற்றிக் கொண்டவள்,

"மாமாவை வருத்தப்படுத்தி விட்ட இந்த வாழ்க்கை தேவைதானா என்றுதான் நான் விஷம் குடித்தேன் அப்பத்தா. ஆனால் அவரைக் காணாமல், அவரிடம் மன்னிப்புக் கேட்காமல் செத்துப் போக என்னால் முடியாது போல அப்பத்தா... ஒரு முறை, ஒரு முறையேனும் அவரைக் கண்டாக வேண்டும். என்னைக் கூட்டிச் செல் அப்பத்தா. ப்ளீஸ்..." என்று கண்ணீருடன் கெஞ்சிய வளுக்கு அவர் பதில் சொல்ல எத்தனித்த வேளை நர்ஸ் உள்ளே நுழைந்து, அனைவரையும் வெளியே செல்லும் படி கூறினாள்.

போராடி உயிர் பிழைத்த சோர்விலும், அன்னையைக் கண்டு கோபத்தில் கத்தியதில் உண்டான மன அழுத்தத் திலும் துவண்டு கிடந்தவளை நர்ஸ் மருந்து கொடுத்து

உறங்க வைத்து விட்டுச் சென்றாள். 'மாமா... மாமாவைப் பார்க்க வேண்டும்...' என்று அரற்றிக் கொண்டே அம்பரி உறங்கிய வேளை. அங்கே திருமலை, திவாகரனை அமர வைத்து அறிவுரை கூறிக் கொண்டிருந்தார்.

மாலை விழித்ததும் எழுந்தமர்ந்த திவாகரனுக்குத் தலை சுற்றியது. இரண்டு நாட்களாக உண்ணாததும், உளைச்சலும் சேர்ந்து அவனை உலுக்கி எடுத்ததால், அதிகமாகவே சோர்வுற்றிருந்தான். தலையை இறுகப் பற்றி, கண்களை மூடி, நிலைக்கு வந்தவனுக்குத் தான் அமர்ந்திருந்த கட்டிலும், மெத்தையின் மென்மையும் புதிதாக இருந்தது.

எங்கிருக்கிறோம் என்று உணர்ந்தவனுக்கு, நடந்தவை அனைத்தும் கோவையாக நினைவிற்கு வர, கண்கள் கோவைப் பழமாகச் சிவந்தன. முகம் சுருங்கி அழுகையில் ஆழ்ந்தது. 'பரி...! எங்கிருக்கிறாயடி? என்னை நினைக்கிறாயா? இங்கொருவன் உன் நினைவிலேயே உயிர் விடத் துணிந்து விட்ட காரியம் உனக்குத் தெரியுமா? சுயநல மிக்க அன்னை, தந்தையின் நாடகத்தை நம்பி என்னை ஒதுக்கி விட்டாயேடி! இனி நான் எப்படி உயிர் வாழ்வேன்?' கசக்கிப் பிழிந்த நெஞ்சைப் பற்றியபடி தள்ளாடி எழுந்து நின்றவனை ஓடி வந்து பற்றினார் திருமலை.

"என்னை ஏன் காப்பாற்றினீர்கள்? ஏன் இங்கு வரவழைத்தீர்கள்? எனக்கு உயிர் வாழ்வதில் விருப்பமில்லை. என்னை என் வழியில் விட்டு விடுங்கள்.



யாருமற்ற அநாதை நான். வாழ்வதற்கு அச்சாரமாய்த் திகழ்ந்தவளையே இழந்து விட்டேன். இனி ஏன் உயிருடன் இருக்க வேண்டும்? அவள் அளித்த உணவை உண்டு தான் இந்த உடலை வளர்த்தேன். அவளே நான் வேண்டாமென்று விட்டுப் போன பின்பு, இனி என்ன இருக்கிறது வாழ?" என்று கோபமும், ஆதங்கமுமாய் வினவியவனைச் சமாதானப்படுத்திக் குளிக்க வைத்து உண்ணவும் வைத்தார்.

'வேண்டாம்... வேண்டாம்...' என்று முகத்தைத் திருப்பியவனின் கன்னத்தில் அறைந்து, "உயிரை விடுவேன்... உயிரை விடுவேன் என்று சாதாரணமாகச் சொல்கிறாய்! உயிரின் மதிப்பைப் பற்றி உனக்கென்னடா தெரியும்? வாழ வேண்டிய வயதில் வறுமையின் பிடியில் சிக்கி உயிர் விட்ட உன் தந்தையைத்தான் என்னால் காப்பாற்ற முடியவில்லை. உன்னையும் சாகவிட்டு என்னால் வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்க முடியாது. மரியாதையாகச் சாப்பிடு. பிறகு நடப்பதைப் பார்த்துக் கொள்ளலாம்..." என்று அவர் கூறியதும், மறுபேச்சின்றி உணவை உள்ளே தள்ளினான்... உள்ளுக்குள், 'அவள் சாப்பிட்டாளோ இல்லையோ...' என்றெண்ணிக் கொண்டே!

உண்டு முடித்துச் சற்றுத் தெளிவுடன் வந்தவனை அமர வைத்து, வள்ளியம்மையிடம் அன்று கூறிய அனைத்தையும் அவனிடமும் கூறினார். அவர் கூறக் கூற முகம் இறுகக் கேட்டுக் கொண்டிருந்தவன், அவர் முடித்ததும், எழுந்து நின்று, "என்னைக் காப்பாற்றிச்

சாப்பாடு போட்டதற்கு மிகவும் நன்றி பெரியப்பா. ஆனால் நீங்கள் கூறியதைப் போல ஓசி நிலத்தைச் சொந்த மாக்கிக் கொள்ளும் விருப்பமெல்லாம் எனக்கு இல்லை. வயதிருக்கிறது, உடம்பில் தெம்பிருக்கிறது. என் உழைப்பில் முன்னேற என்னால் முடியும். நான் வருகிறேன்!" எனக் கூறி விட்டு வெளியேறப் பார்த்தவனின் கையைப் பற்றி, மீண்டும் அமர வைத்தார் திருமலை.

"உன் அப்பன் புத்தி அப்படியே உனக்கும் இருக்கிறதடா! அன்று அவனும் எந்தச் சொத்தையும் எதிர் பார்க்காமல் குடும்பத்துடன் வீட்டை விட்டு வெளியேறி னான். இன்று நீயும் இவை யெதையும் வேண்டா மென்று கூறுகிறாய் திவாகரா. இது உன் அப்பாவிற்குச் சேரவேண்டிய நியாயமான சொத்துக்கள்தான். இதை அன்றே உன் தந்தையிடம் ஒப்படைத்திருந்தால், இன்று இந்த நிலைமையில் உன்னைக் காணும் நிலை வந்திருக்காது. தயவுசெய்து இதை ஏற்றுக்கொள். இது வரை உன்னைப் போக்கிடமற்றவன் எனத் தூற்றியவர்கள் அனைவரும் உன்னைத் திரும்பிப் பார்க்கும் நிலைக்கு வர வேண்டாமா?

"இதை ஏற்றுக்கொண்டு உன் முயற்சியில் நீ முன்னேறு! கிடைத்திருக்கும் வாய்ப்பை இழந்து விடாதே. திவாகரா! உன்னை அவமானப்படுத்தி வெளியே துரத்திய உன் அத்தை, மாமாவின் முன்பு நீ முன்னேறிக் காட்ட வேண்டும். நீ மேலே வருவதற்கான ஒரு சின்னப் பாதையைத்தான் கடவுள் ஏற்படுத்தித் தந்திருக்கிறார். இதைப் பற்றுக்கோலாக ஏற்றுக்கொண்டு, நீ மேலும்



மேலும் முன்னேற வேண்டும். தயவுசெய்து மறுக்காதே. என் பாவத்தைப் போக்கிக் கொள்ள எனக்கொரு வாய்ப்பளி. நான் நிம்மதியாகக் கண் மூட வேண்டுமானால், நீ இதைக் கட்டாயம் ஏற்றுக் கொண்டாக வேண்டுமப்பா...!" என்று அவர் உணர்ச்சி வசத்துடன் பேசி முடிக்க, யோசனையுடன் அமர்ந்து விட்டான் திவாகரன்.

'இதை நிச்சயம் ஒப்புக் கொண்டாக வேண்டும். வாய்ப்புக் கிடைக்காமல் இருப்பதால்தானே இவனைப் போன்ற படித்த இளைஞர்கள் பலர் வேலையில்லாப் பட்டதாரிகளாகத் திரிந்து கொண்டிருக்கிறார்கள். விவசாயக் குடும்பத்தில் பிறந்து, இன்று வரை நில, புலன்களில் இராப் பகலாக வேலை செய்து வருபவன். நிச்சயம் விவசாயத்தைத் தொழிலாகச் செய்வதுதான் நியாயம். இந்த வாய்ப்பை ஏற்றுக் கொண்டு முன்னேறினால்தான் என்ன? என்றோ தந்தையின் கைகளைச் சேர வேண்டிய சொத்து, இன்று அவனிடம் வந்து சேர்ந்திருக்கிறது. இது இல்லை யென்கிற காரணத்தினால்தானே லட்சுமி அத்தையிடம் இத்தனை வருடங்களாகப் பேச்சு வாங்க நேர்ந்தது? நிச்சயம் முன்னேறிக் காட்ட வேண்டும்.' இவ்வாறாக முடிவு செய்து கொண்டு, நிலங்களை ஏற்றுக் கொள்வதாக ஒப்புக்கொண்டு, சம்மதம் தெரிவித்தான் திவாகரன்.

அவனின் பதிலில் மகிழ்ந்து போன திருமலை, உடனே அவன் பெயரில் நிலங்களைப் பத்திரப் பதிவு செய்யத் தேவையானவற்றைச் செய்யத் துவங்கி விட்டார்.

இந்தப் பேச்சு முடிந்ததும், சற்றுத் தயங்கியவர், "உன் மாமன் மகள் அம்பரியைப் பற்றி..." என்று பேசத் துவங்க, முகம் இறுக எழுந்து நின்றவன்,

"அவளைப் பற்றிப் பேச என்னிடம் எதுவும் இல்லை பெரியப்பா. நான் தேவையில்லை என்று முடிவு செய்ததால்தானே என்னை விட்டு விலகிப் போனாள். அவள் அன்னை, தந்தைக்கு நல்ல பெண்ணாக நடந்து கொண்டு, அவள் மகிழ்ச்சியாக இருக்கட்டும். இந்த அநாதையைப் பற்றி அவளுக்கென்ன கவலை?" எனக் கூறிவிட்டு, விறுவிறுவென அறைக்குச் சென்று விட்டான்.

அறையைச் சாற்றி விட்டுக் கட்டிலில் வந்தமர்ந்தவனின் கண்கள், கண்ணீரினால் குளம் கட்டத் துவங்கி விட, அம்பரியின் நினைவு அவனை வாட்டத் தொடங்கியது. 'நான் வேண்டாமென்று நினைத்து விட்டாளா? இல்லையில்லை... அம்பரியினால் அப்படி நினைக்க முடியாது. ஏன் என்னைப் பிரிந்தாயடி? இப்படி ஒரு வலியைத் தர எப்படி முடிந்தது உன்னால்?'

வேதனையும், துயரமும் அவனைச் சூழ்ந்து விட, தாள முடியாமல் கண்ணீர் சிந்தினான் அவன். ஒரு மனம் அவளிடம் கோபமாக இருந்த போதும், மறுமனம் அவளை எண்ணி எண்ணிக் கதறத் துவங்குவதைத் தடுக்க முடியவில்லை அவனால்.

அடுத்த இரண்டு நாட்களும் கடுமையான ஜுரத்தால் பாதிக்கப்பட்டுச் செயலிழந்து கிடந்தாள் அம்பரி. அழுது தீர்த்துக் கொண்டிருந்த திவாகரனை அழைத்துக் கொண்டு



போய்த் தொழிலில் முழுமையாக ஈடுபடுத்தினார் திருமலை. எல்லாவற்றிலும் தன்னை இணைத்துக் கொண்டாலும், அடி மனம் அம்பரி... அம்பரி என வாடுவதை அவனால் தவிர்க்க முடியவில்லை. அவளை அறிந்து கொள்ளும் ஆர்வம் கொள்ளை, கொள்ளையாக உள்ளே எழுந்தாலும், தன் கையை உதறிவிட்டுச் சென்ற அம்பரியின் முகம் கண் முன் தோன்றி அவனை இறுக வைத்தது.

இப்படியாக ஒரு வாரம் கழிய, அம்பரியை ஆஸ்பத்திரியிலிருந்து வீட்டிற்கு அழைத்து வந்தனர். குமரனும், தேன்மொழியும் அவளுடனே இருந்து கவனித்துக் கொண்டதால், மாணிக்கத்தையும், லட்சுமியையும் அவள் அருகே வர அம்பரி அனுமதிக்கவேயில்லை. மாணிக்கம் மகளின் நினைவில் வாடி வதங்கிப் போனார். தினமும் அவள் அறை வாசல் முன்பு தவம் கிடப்பவரை, முகம் கொடுத்துக் கூடப் பார்க்கவில்லை அவள். லட்சுமியோ, 'அவனை நினைத்துக் கொண்டு என்னைத் தவிர்க்கிறாயேடி...' எனக் கோபத்தில் அவளருகே வருவதைத் தவிர்த்தார்.

அன்று அவள் அறையில் கூடியிருந்த வள்ளியம்மை, தேன்மொழி, குமரனைத் தன் உலர்ந்து போன உதடுகளால் அருகே அழைத்தவள், "நா... நான் மாமாவைப் பா... பார்க்க வேண்டும் குமரா. எ... என்னை அழைத்துச் செல்வாயா?" என்று கண்ணீருடன் வினவினாள். குமரன் தயக்கத்துடன் நிமிர்ந்து வள்ளியம்மையின் முகத்தை நோக்கினான்.

அன்று திருமலையிடம், திவாகரனை விட்டு விட்டுத் திரும்பி வந்தவன், இங்கே நடந்த களேபரத்தால் அவனைத் திரும்பச் சென்று பார்க்கவே இல்லை. திருமலையிடம் அவ்வப்போது போன் செய்து மட்டும் விசாரித்துக் கொண்டிருந்தான். அம்பரியின் மீது திவாகரன் கோபமாக இருப்பதையும் அவன் அறிந்தே இருந்ததால் தான் தயக்கத்துடன் அப்பத்தாவை நோக்கினான்.

"ஏ... ஏன் தயங்குகிறாய் குமரா? நான் செய்த தவறுக்காக அவரிடம் நிச்சயம் நான் மன்னிப்புக் கோர வேண்டும். தயவு செய்து என்னை அழைத்துச் செல்லடா! இனியும் மாமா இல்லாத இந்த வீட்டிலிருக்க என்னால் முடியாது. எனக்குத் தெரியும், மாமா என் மீது கோபமாக இருப்பார். அவர் என்னை அடித்து விரட்டினாலும் பரவாயில்லை. ஒரு முறையேனும் அவரிடம் நான் மன்னிப்புக் கேட்க வேண்டும்," என்று கெஞ்ச,

தேன்மொழி, குமரனின் தோளை உலுக்கி, "அவளைக் கூட்டிச் செல்லடா... அவரில்லாமல் அவள் வாழ மாட்டாள். இப்படி அழுது புலம்பியே செத்து விடுவாள். கூட்டிச் செல்லடா... அவள் வேதனையைக் காணச் சகிக்கவில்லை!" என்று அழுகையுடன் கூறினாள்.

அப்பத்தாவும் எதுவும் கூறாமல் தலையசைத்து, அழுகையுடன் தன் சம்மதத்தைத் தெரிவித்தார். குமரன், அம்பரியிடம் திரும்பி, "நிச்சயம் அழைத்துப் போகிறேன், அம்பரி. நீ கொஞ்சம் உடம்பைத் தேற்று!" என்று கூற, சட்டெனப் படுக்கையை விட்டு எழுந்தவள், தலையை



முடிந்து கொண்டை போட்டுக் கொண்டு, கண்ணீரை அழுந்தத் துடைத்து, "நா... நான் நன்றாகத்தானிருக் கிறேன் குமரா. என் உடம்புக்கு ஒன்றுமில்லை. தெம்பாக இருக்கிறேன்," என்று கூறிச் சிரிக்க, களையிழந்த அந்த முகத்திலிருந்த ஜீவனற்ற புன்னகையைக் கண்ட குமரனுக்குக் கண்ணீர் வந்தது.

"இ... இப்போதே போகலாம் குமரா. பா... பார்... நான் என் துணியெல்லாம் கூட எடுத்து வைத்து விட்டேன்," என்று கூற, குமரனுக்கு, திவாகரனின் மீதான அவள் அன்பை நினைத்து இதயம் விம்மியது.

"வா... இப்போதே அழைத்துச் செல்கிறேன்..." என்றவன், அவள் கைப்பிடித்துக் கொண்டு வள்ளியம்மை யிடம், "நான் இவளை மாமாவிடம் விட்டு வருகிறேன் அப்பத்தா..." எனக் கூறிவிட்டு, வீட்டை விட்டு வெளியேறி னான்.

சின்னமனூர் செல்லும் வழியில் இடையிலிருந்த தென்னந்தோப்பின் அருகேதான் இப்போது திவாகரன் தங்கியிருந்தான்.

திருமலையின் சொந்த வீடு சின்னமனூரில் இருந் தாலும் அவர் தோப்பைக் கவனித்துக் கொள்ள இந்த வீட்டில் தானிருப்பார். வீட்டின் அருகே அரசமரத்தின் அடியில் காமாட்சி அம்மன் வீற்றிருந்தாள். குமரனுடன் வண்டியில் வந்திறங்கிய அம்பரி, அந்த வீட்டைப் பார்த்தபடி கையில் பையுடன் நிற்க, குமரன் அவளிடம், 'வா...' எனத் தலையசைத்து விட்டு முன்னே நடந்தான்.

கதவைத் தட்டி விட்டு இருவரும் காத்திருந்த வேளை, அம்பரியின் கண்கள் இமைக்கவும் மறந்து, மூடிய கதவிலேயே நிலைத்திருந்தது. அவள் எதிர்பார்ப்பைப் பொய்க்காமல் கதவைத் திறந்து கொண்டு வெளியே வந்தான் திவாகரன். குமரனைக் கண்டதும் அவன் முகம் மலர்ந்து, "குமரா...!" எனக் கூவ, குமரன் சற்றுத் தயங்கி மெல்ல விலகித் தன் பின்னே நின்றிருந்த அம்பரியின் மீது பார்வையைச் செலுத்தினான்.

குமரனைக் கண்டு விரிந்த புன்னகை, அம்பரியைக் கண்டதும் உறைந்து போக, இறுகிய முகத்துடன் அவளை உறுத்து நோக்கியவனுக்கு அனுமதியில்லாமலே கண்கள் சிவந்து, கண்ணீரை உற்பத்தி செய்தன. ஒரு வாரம்...! முழுதாக ஏழு நாட்கள் அவளைப் பிரிந்து இருந்திருக் கிறான். இந்த முகம்... இந்த முகம்தானே கனவிலும், நன விலும் மறுபடி மறுபடி தோன்றி அவனைத் துக்கத்தில் ஆழ்த்தியது.

கட்டியிருந்த கொண்டையிலிருந்த முடிகள் அடங் காமல் வெளிவந்திருக்க, அவளது கண்களிரண்டும் உள்ளே போய் ஒளியிழந்து காணப்பட்டன. ஒரு வாரமாக அவள் ஆகாரம் ஏதும் எடுத்துக் கொள்ளவில்லை என்பதை ஒட்டிப் போயிருந்த அவள் கன்னங்கள் காட்டிக் கொடுக்க, வரண்ட இதழ்கள் அவளது வேதனையின் அளவை அவனுக்கு எடுத்துக் கூறின. அந்த நிலை யிலும் மனதில் தோன்றிய கோபத்தை மீறிய மனம் 'அய்யோ... அய்யோ!'வென அடித்துக் கொள்ள, அவளது



வேதனை தாங்காமல் மேலும் கண்ணீர் சிந்தினான் அவன்.

இவளுக்காகத்தானே... இவளுக்காகத்தானே உயிர் வாழ்கிறான்! வாழ்வில் ஒரு முறை கூட அவள் கண்ணில் கண்ணீர் வராமல் பார்த்துக் கொள்ள வேண்டும் என்று ஆசைப்பட்டானே! உடல் மெலிந்து ஜீவனற்று நிற்கிறாளே! ஏன்டி...? ஏன் என்னை உயிருடன் எரிக்கிறாய்? உன்னை இந்த நிலையில் காணத்தான் உயிர் வாழ்கிறேனா? ஏன் வேதனைப்படுகிறாய்? நீ துன்பப்படுவதைப் பார்த்துக் கொண்டு என்னால் இருக்க முடியாதென்றுதானே எனக்குச் சோதனை கொடுக்கிறாய்?

அவன் கண்கள் கேட்ட அத்தனை கேள்விக்கும் பதிலளிக்க முடியாமல் கேவத்தான் முடிந்தது அம்பரி யினால். முந்தானையை வாயிலடைத்துக் கண்ணீர் சொரிந்தவளைக் கண்டவன், சட்டெனக் குமரனிடம் திரும்பி, "ஏன் வந்தாள்? எதற்காக வந்திருக்கிறாளடா? மிச்சமிருக்கும் என் ஜீவனையும் வாங்கிச் செல்வதற்கா? அவளைப் போகச் சொல். அவளை உயிராக நேசித்த பாவத்திற்காகத்தான் மிகப் பெரிய தண்டனையைக் கொடுத்து விட்டாளே! இன்னும் என்ன இருக்கிறது? அவளைப் போகச் சொல் குமரா!" என்று அழுத்தமாகக் கூறியவனைக் கண்டு அம்பரி அழுது தீர்த்தாள்.

"மா... மாமா... வேண்டாம் மாமா. அவளைப் போகச் சொல்லாதீர்கள். சாகத் துணிந்தாள் மாமா. உங்களைத் தண்டித்ததற்காகத் தன் உயிரையே மாய்த்துக்

கொள்ளப் பார்த்தாள். செத்து விடுவாள் மாமா. நீங்கள் மன்னிக்காவிடில் செத்து விடுவாள்!" என்று கலங்கிய கண்களுடன் கூறிய குமரனின் வார்த்தைகளைக் கேட்டவன், விரக்தியான புன்னகையைச் செலுத்தி,

"நான் ஏற்கெனவே செத்து விட்டேனடா... எ... என்று என் கையை விலக்கி நான் தேவையில்லை என்று காட்டிவிட்டுப் போனாளோ, அன்றே, அன்றே செத்து விட்டேனடா... இ... இந்த உடலும் சீ... சீக்கிரமே பிரேதமாகிவிடும். உன் தங்கையை இருந்து அதையும் பார்த்து விட்டுப் போகச் சொல்!" என்று கோபத்துடன் கூறியவனைக் கண்டு பொறுக்க மாட்டாமல்,

"அப்படிச் சொல்லாதே மாமா..." என்று அவன் காலடியில் விழுந்தாள் அம்பரி.

அவள் கண்ணீர் காலை உரசியதும் துடித்துப் போனவன், சட்டென அவளைத் தூக்கி நிறுத்தி, அழுகையில் சிதைந்து போயிருக்கும் அவள் முகத்தைத் தன் கைகளில் தாங்கி, தன்னோடு சேர்த்து இறுக அணைத்து, "ஏன்டி...? ஏன் இப்படி என்னைக் கொல்கிறாய்?" எனக் கூறித் தானும் கண்ணீர் வடித்தான் திவாகரன்.

ஒருவரை யொருவர் கட்டிக் கொண்டுக் கதறித் தீர்ப்பவர்களைக் கண்ட குமரனுக்கும் கண்ணீர் பெருக, நிம்மதியுடன் அவர்களிருவரையும் விட்டு விலகி நடந்தான்.



# 17

இடது விழியில் தூசு விழுந்தால்,
வலது விழியும் கலங்கி விடுமே!
இருட்டில் கூட இருக்கும் நிழல் நான்,
இறுதி வரைக்கும் தொடர்ந்து வருவேன்!
சொர்க்கம் எதற்கு? என் பொன்னுலகம்,
பெண்ணுருவில் பக்கமிருக்கு, கண்ணே வா!
இந்த மனம்தான் என் மன்னவனும்
வந்துலவும் நந்தவனம்தான், அன்பே வா!
சுமையானது... ஒரு சுகமானது! சுமை நீதான்!

அவன் உடனிருந்திருக்கிறான்... அவளுடன்... எப்போதும்! நடை பயிலத் துவங்கிய போது தானும் உடன் நடந்தான். எழுதத் தொடங்கிய போது கைப்பற்றிக் கற்றுக் கொடுத்தான்! வளர்ந்த பின் அவனது அருகாமையினால் அவளைப் பாதுகாப்பாக உணர வைத்தான்! காதலிக்கக் கற்றுக் கொடுத்தான். வெட்கப்பட வைத்தான். அவன் தீண்டலில் உள்ளம் கொள்ளை போக வைத்தான்! இதோ... இப்போது பிரிவுத் துயரையும் அறிய வைத்து, அவளை எமன் வீட்டு வாசல் வரை சென்று வர வைத்திருக்கிறான்!

இத்தனை நாள் போராட்டத்தின் பிரதிபலனாய்க் கிடைத்த மாமனின் அணைப்பில் நெகிழ்ந்து அவனை இறுகப் பற்றி, அவன் மார்பில் மேலும் மேலும் அழுந்தப் புதைந்தாள் அம்பரி. அவளது அணைப்பை உணர்ந்த

அவனும் தன் கோப தாபங்கள் அனைத்தையும் மறந்து, தன் ஆசைக் காதலியைக் கண்ணால் கண்டுவிட்ட மகிழ்ச்சியில் அவளைத் தன்னோடு அழுத்திக் கொண்டு, கண் மூடி அவள் தலை மீது தன் கன்னங்களைப் பதித்தான்.

இந்த அன்பும், காதலும் இனிக் கிட்டாது போய் விடுமோ என்றெண்ணி மறுகிக் கொண்டிருந்த இரு உள்ளங்களும் தங்களது இணைகளைச் சந்தித்து விட்டதில் மகிழ்ந்து ஒருவருக்குள் ஒருவர் புதைந்து தங்களை மறந்த நிலையில் ஆழ்ந்திருந்தனர். அவர்களது கந்தர்வ நிலையைக் கலைக்கும் பொருட்டு, லட்சுமியின் குரல் உச்சஸ்தாயியில் கோரமாக ஒலித்தது.

"திமிர் பிடித்த கழுதை. மறுபடியும் இந்த அநாதை நாயைத் தேடி வந்து விட்டாயா? இவனுக்காக உயிரைக் கொடுக்குமளவிற்கு உனக்கு அவன் என்னடி செய்து விட்டான்? பெற்ற தாய் - தந்தையரைப் பிரிந்து வருமளவிற்கு அவன் உனக்கு முக்கியமாகிப் போனானா? உன்னை நல்ல இடத்தில் கட்டிக் கொடுத்து, நீ சுகமாக வாழ்வதைக் காணத்தானேடி ஆசைப்பட்டேன். அது தவறா? எதற்காக மீண்டும் மீண்டும் இவனைத் தேடி வந்து உன் வாழ்வைத் தரித்திரமாக்கிக் கொள்ளப் பார்க்கிறாய்?" என்று லட்சுமி ஆங்காரத்திலும் அழுகையிலும் சத்தமிட, அன்னையின் குரல் கேட்டதும் சட்டென விலகிய அம்பரி, இம்முறை மாமனின் கரத்தை இறுகப் பற்றி, அவன் முதுகின் பின்னே மறைந்து போயிருந்தாள்.



குமரன், அம்பரியை அழைத்துச் சென்ற சிறிது நேரத்திலேயே மகளை வீட்டில் காணாது பதறிப் போன லட்சுமி, மாமியாரிடமும், தேன்மொழியிடமும் அவள் எங்கே என விசாரித்தாள். உண்மை தெரிந்தால் அத்தை எப்படியும் களேபரத்தை உண்டாக்கக் கூடும் என்று அஞ்சிய தேன்மொழி வாயைத் திறக்கவேயில்லை. வள்ளியம்மையும் பேத்தியைப் பின்பற்றி மருமகளின் கேள்விக்குப் பதில் சொல்லாமல் விட்டு விட, ஆத்திரத்தில் கொதித்துப் போன லட்சுமி, அவள் சென்றிருக்கும் இடத்தை யூகித்து, மாணிக்கத்தையும், ஊரில் சில சொந்தங்களையும் அழைத்துக் கொண்டு, திருமலையின் தோப்பு வீட்டைத் தேடி வந்துவிட்டாள்.

அவளை அழைத்துச் சென்ற குற்றத்திற்காகக் குமரனையும், அவன் வீட்டாரையும் ஏசிவிட்டு, ரௌத்திரத்தில் வருபவளின் செயலில் மாணிக்கத்திற்குக் கொஞ்சம் கூட இஷ்டமில்லை. திவாகரன் இல்லாத வாழ்வை வாழத் தேவையில்லை என்று முடிவு செய்து உயிரை விடத் துணிந்து விட்ட மகள், இத்தனை நாட்களாக அன்னையின் நாடகத்தை நம்பி வீட்டிலிருந்ததே பெரிய விஷயம். இனியும் அவளை அவள் மாமனுடன் சேர விடாமல் பிரித்து வைப்பது பெரிய குற்றமாகவே பட்டது அவருக்கு.

பணக்காரனோ, ஏழையோ... அவளது உணர்வுகளை மதித்து, அவளது விருப்பங்களை நிறைவேற்றி, அவளை அன்புடன் நடத்தும் ஒருவனுடன்தான் அவளது

வாழ்க்கை அமைந்தாக வேண்டும்! அவள் மகிழ்ச்சி ஒன்றுதான் முக்கியம் என்று அவர் இந்தச் சில நாட்களில் முடிவு செய்திருந்தார். தானே சென்று திவாகரனைச் சந்தித்து, அவனிடம் மன்னிப்புக் கோரி, மகளை அவனுடன் சேர்த்து வைத்துவிட வேண்டுமென்றும் எண்ணி வைத்திருந்தார்.

ஆனால் அதைச் செயல்படுத்தும்போது மனைவியிட மிருந்து கிளம்பப் போகும் எதிர்ப்புதான் அவரைச் சற்றுத் தாமதிக்க வைத்துக் கொண்டிருந்தது. இத்தனை நாட்களாக வீட்டினுள்ளே நடந்து கொண்டிருக்கும் சம்பவங்கள் அனைத்தும் இனி வீதியில் நடக்கத் துவங்கும். நிச்சயம் மனைவி கத்தி ஆர்ப்பாட்டம் நடத்தி, அன்று போல் இன்னுமொரு நாடகத்தையும் நடத்தி விடுவாள் என்பதில் எவ்விதச் சந்தேகமுமில்லை அவருக்கு.

அவர் எண்ணியதைப் போலவே இன்று ஊரிலுள்ள சொந்த பந்தங்களை யெல்லாம் திரட்டிக் கொண்டு மகளைச் சிறை மீட்கக் கிளம்பி விட்டாள். மகளின் வாழ்க்கை ஒரு புறம்! மனைவியின் ஆர்ப்பாட்டம் ஒருபுற மெனத் திண்டாடிப் போனார் மாணிக்கம். ஒரு முடிவிற்கு வர இயலாமல் மனைவி இழுத்த இழுப்பிற்கெல்லாம் வளைந்து கொடுத்தவருக்கு, இங்கே திவாகரனின் முதுகின் பின்னே மறைந்து அவர்களது முகத்தைக் கூடப் பார்க்கப் பிடிக்காமல் கண் மூடிக் கொண்ட மகளைக் கண்டு, அவளது நல்வாழ்க்கை பற்றிய எண்ணம் வலுப்பெற்றது.



லட்சுமியின் வார்த்தைகளில் மீண்டும் இறுகிப் போன திவாகரன், கோபத்தில் விரைத்துப் போன உடலுடன் தரையை வெறித்தபடி நின்று விட, அவள் மீண்டும் தன் வார்த்தைகளை அக்னியில் தோய்த்து அவன் மீது வீசியெறிந்தாள்.

"பதில் பேசடி... அவன் பின்னே ஒளிந்து கொண்டால் என்ன அர்த்தம்? விஷம் குடித்து உயிரை விடத் துணிந்தாளே என்று பாவம் பார்த்து விட்டு வைத்தது என் தவறுதான். உன் காலை ஒடித்து அறைக்குள் அடைத்துப் போட்டிருக்க வேண்டும். எவ்வளவு துணிச்சல் இருந்தால் வீட்டில் உள்ளவர்களிடம் சொல்லிக் கொள் ளாமல் இவனைத் தேடி வந்திருப்பாய்?

"அம்பரி... நான் சொல்லும் மாப்பிள்ளையைக் கட்டிக் கொண்டு ராஜபோகமாக வாழ்வதை விட்டு விட்டு, இவனைக் கட்டிக்கொண்டு வருடம் முழுதும் சோற்றுக்கு வழியில்லாமல் நீயும் தெருவில் நிற்கப் போகிறாயா? நீ இப்போதே என்னுடன் வராவிட்டால் அன்று போல இன்றும் நான் என்னை எரித்துக் கொண்டு செத்து விடுவேன்..." என்று மிரட்ட, அம்பரியின் பதிலும் இல்லை, சலனமும் இல்லை. அவன் சட்டையை மேலும் இறுகப் பற்றி அவன் முதுகில் முகத்தைப் புதைத்திருந்தாள்.

கண்ணீர் விட்டுக் கதறி, வசனம் பேசித் தன் நாடகத்தை ஊரார் முன்னாடி போட்டுக் காட்டி மகளைத் தன்னுடன் அழைத்துக் கொண்டு செல்ல வேண்டுமென்று லட்சுமி எண்ணியிருந்தாள். அவளது அழுகையைக்

கண்டவர்கள் திவாகரனிடம், "தம்பி... புள்ளைய பெத்தவங்களுக்குத்தான் அவள உனக்குக் கட்டிக் கொடுக்கிறதுல விருப்பம் இல்லங்கிறாங்கல்ல...! நீ ஏன்பா அந்தப் புள்ளையக் கூட்டியாந்து வம்பு பண்ணிக்கிட்டு இருக்கிற? இத்தனை காலமா உனக்குச் சோறு போட்டு வளர்த்த குடும்பம்தானய்யா! அவங்ககிட்ட நன்றியோட இருக்க வேணாமா நீ...? ஊர்ல கௌரவமா வாழற குடும்பம்... இன்னைக்கு நடுத்தெருவுல நின்னு மகளுக் காகக் கதறிக்கிட்டு இருக்கு... அந்தம்மா சொல்றபடி கேட்டு அந்தப் புள்ளைய அனுப்பி வை. எல்லாம் பெரியவுக பார்த்துச் செஞ்சி வைப்பாங்க..." என்று கூட்டத்திலிருந்த பெரியவர் ஒருவர் குரலை உயர்த்திக் கூறினார்.

அந்தப் பெரியவருக்கு ஒத்து ஊதிப் பல பெருந் தலைகளும், "ஆமா ராசா... குடும்பத்துக்குள்ள சச்சரவு எதுக்கு? நீ புள்ளைய அனுப்பி வை!" என்று கூற, அவர்களை ஏறிட்டுப் பார்த்தவன், சட்டென, "அவளுக்கு விருப்பமிருந்தால் தாராளமாக நீங்கள் கூட்டிச் செல் லுங்கள்!" என்று கூறி விட்டுக் கையைக் கட்டிக் கொண்டு நின்று விட்டான்.

மாமன் இப்படிச் சொன்னதும் திகைத்து அவன் முகத்தை நிமிர்ந்து நோக்கிய அம்பரி, கலங்கிய விழி களுடன், "ஏன் மாமா...? என் விருப்பம் என்னவென்று உனக்குத் தெரியாதா? இன்னொரு முறை உன்னைப் பிரிந்து சென்று என்னால் உயிர் வாழ முடியுமா?" என்பது போல் பார்க்க, அவனோ இமைக்காமல் அழுத்தமாக நோக்கி, "இதே போன்று ஒரு சூழலில் என்னை விட்டுப் போகாதே என்று நான் கெஞ்சிய போது, உன் அன்னையும், தந்தையும்தான் முக்கியம் என்று என்னை விலக்கிச் சென்றாயே அம்பரி. நீ அன்று தந்த வேதனை இன்னும் என் நெஞ்சில் ரணமாய்க் குத்துகிறதடி. இனி ஒரு முறை உன் அன்னையின் நாடகத்தை நம்பி நீ என்னைப் பிரிந்து செல்வதைப் பார்த்துக் கொண்டு என்னால் உயிருடன் இருக்க முடியாது. உனக்கொரு வாய்ப்பளிக்கிறேன். என் உயிரைத் தவணை முறையில் கொல்வதை நிறுத்தி, ஒரேயடியாகச் சாகடித்து விட்டுச் சென்று விடு!" என்பது போல் அவன் அவளை நோக்கிக் கொண்டிருந்தான்.



அவன் விழிகள் சொன்ன சொற்களுக்கு மறுமொழி அளிப்பது போல் நிமிர்ந்து கூட்டத்தை நோக்கியவள், "எனக்கு என் மாமனைத் தவிர வேறு யாருடன் வாழ்வதிலும் விருப்பமில்லை. நான் என் மாமனை விட்டு எங்கும் வர மாட்டேன்..." என்று தெளிவாகக் கூட்டத்தில் நிற்கும் ஒவ்வொரு கிழக் கட்டைகளின் காதுகளைச் சென்றடையுமளவிற்குச் சத்தமாகக் கூறிவிட்டாள்.

சட்டெனத் திரும்பி நிம்மதியும், சந்தோஷமுமாய் அவளை நோக்கியவனின் கைகளை அழுந்தப் பற்றிக் கொண்டு, "நா... நான் போக மாட்டேன் மாமா... உன்னை... உன்னை விட்டு எங்கும் போக மாட்டேன்..." என்று கண்ணீருடனும், உறுதியுடனும் கூறினாள்.

"அம்பரி... உனக்கு அன்னையின் பாசம் பெரிதாகத் தெரியவில்லையா? நீ அவனைக் கட்டிக் கொண்டா

யானால் நான் உயிருடனே இருக்க மாட்டேன்..." என்று அவள் மேலே பேசும் முன், "செத்துப் போ... செத்துப் போய் விடு!" என்ற அம்பரியின் குரல் ரௌத்திரமாக ஒலித்தது.

கூடியிருந்தோர் அனைவரும் அரண்டு அவளை நோக்க,

"நீ உயிருடன் வாழ்ந்து என்ன ஆகப் போகிறது? ஒருவரிடமேனும் அன்பாய்ப் பழகியிருக்கிறாயா? பாசம் என்ற வார்த்தைக்கு அர்த்தம் தெரியுமா உனக்கு? அனைத்திலும் சுயநலம். உன் வாழ்க்கை, உன் கௌரவம், உன் மகிழ்ச்சி - இதுதான் உனக்கு முக்கியம் இல்லையா? பெற்ற மகளிடமேனும் உண்மையான அன்புடன் இருக்கலாமில்லையா?

"அம்மா! இந்த வார்த்தைக்குத் தகுதியானவள் தானா என்று எனக்குத் தெரியவில்லை. பெண்மைக்குரிய தாய்மையும், தாய்மைக்குரிய இரக்கமும் சிறிதுமில்லாத பாறை ஜென்மம் நீ! உயிரை விடத் துணிந்து ஆஸ்பத்திரியில் கிடந்தேனே! அப்போது கூடவா உனக்கு இரக்கம் தோன்றவில்லை?

"பணம், பணம் என்கிறாயே? பணத்தை மட்டும் வைத்துக் கொண்டு பந்த பாசமில்லாமல் உன்னைப் போல் என்னால் வாழ முடியாது. போதும்! என்னை விட்டு விடு. நான் என் மாமனுடன் நிம்மதியாக வாழ வேண்டும். இனியும் உன் நடிப்பை நம்பி நான் ஏமாறமாட்டேன். மாமாவை விட்டு என்னால் வர முடியாது!" என்றாள்.



அவள் பதிலைக் கேட்டு அனைவரும் லட்சுமியிடம், "புள்ள அவன் கூடத் தான் வாழணும்னு ஆசப்படுதில்ல தாயி? பெத்த புள்ளைக விருப்பத்த நிறைவேத்தி வைக்கிறதுதானே நம்ம கடமை? சொந்த அத்த மகனுக்குக் கட்டிக் கொடுக்குறதுல என்ன தாயி கஷ்டம் உனக்கு? பிரச்னையைப் பெருசு பண்ணாம இரண்டு பேருக்கும் கல்யாணத்த முடிக்க வழியப் பாரு..." என்று கூறிவிட, லட்சுமிக்கு ஆத்திரம் பொத்துக்கொண்டு வந்தது.

"நீ யெல்லாம் என்னய்யா பெரிய மனுஷன்? பிறந்ததிலிருந்து கஷ்டமென்றால் என்னவென்று அறியாமல் வளர்த்த ஒருத்தியை ஒரு தரித்திரம் பிடித்தவனுக்குக் கட்டி வைப்பதா? இதே உன் மகளாக இருந்தால் நீ சம்மதிப்பாயா? என் மகளை அவனுக்கு மணமுடிப்பதில் எனக்கு விருப்பமில்லை. உங்களால் முடியவில்லையென்றால் விட்டு விடுங்கள். நான் போலீஸிற்குச் சென்றேனும் என் மகளை இந்தக் கயவனிடமிருந்து பிரித்து விடுவேன்!" என்று கத்தினாள்.

கூடியிருந்த அத்தனை ஆண்களையும் மீறிக் கொண்டு ஒற்றையாளாகச் சண்டைக்கு நின்ற மனைவி மீது மாணிக்கத்திற்குக் கோபம் பெருகியது. மகளின் வார்த்தைகளில் கரைந்து போயிருந்தவர், மனைவியின் புறம் திரும்பும் சமயம்...

அம்பரியின் வார்த்தைகள் ஒவ்வொன்றிலும் புத்துணர்வு பெற்றுப் புதிதாய்ப் பிறந்து கொண்டிருந்த திவாகரன் பற்றியிருந்த கையோடு அவளை இழுத்துக்

கொண்டு வீட்டினருகே இருந்த மரத்தின் கீழ் வீற்றிருந்த அம்மனின் அருகே சென்று நின்றான்.

கூட்டத்திலுள்ளோரின் பார்வை அனைத்தும் அவன் மீது திரும்ப, அம்பரியை ஒரு முறை நோக்கி விட்டு, அம்மனின் சூலாயுதத்தில் கட்டப்பட்டிருந்த மஞ்சள் கயிற்றை எடுத்து அம்பரியின் கழுத்தில் கட்டி மூன்று முடிச்சுகளைப் போட்டான். விரிந்த விழிகளில் நிறைந்த திகைப்புடன் அம்பரி அவனையே நோக்கிய வண்ண மிருக்க, நிதானமாகக் கூட்டத்தின் புறம் திரும்பியவன் தன் அத்தையிடம் நடந்து சென்றான்.

இதைச் சற்றும் எதிர்பார்த்திராத லட்சுமி பிளந்த வாயுடன் இருவரையும் பார்க்க, "இப்போது நீங்கள் எந்தப் போலீஸிடம் வேண்டுமானாலும் சென்று கொள்ளுங்கள். என்னிடமிருந்து என் மனைவியைப் பிரிக்கும் தைரியம் யாருக்கு இருக்கிறதென்று நானும் பார்க்கிறேன்," என்று கம்பீரமான குரலில் கூறிவிட்டு, அவளைத் தோளோடு அணைத்தபடி வீட்டை நோக்கி நடந்தான்.

"பொசுக்குனு பய தாலியக் கட்டிப் போட்டானே! ஆனாலும் இந்தம்மா தான் இம்புட்டுப் பிரச்னைக்கும் காரணம். மாமன் மவ தானன்னு அந்தப் பய புள்ள மேல ஆசப்பட்டுட்டான். அந்தப் புள்ளைக்கும் விருப்பம் தாங்கிறப்ப, அவனுக்கே கட்டி வைக்காம, இந்தம்மா தான்ய்யா ஆட்டம் ஆடிட்டு இருக்கு.

"பணக்காரங்களுக்கு இது ஒரு பிரச்னைதான் போல. கடைசில இவக மானம் காத்துல பறந்ததுதான்



மிச்சம். இனியேனும் அந்தம்மா அந்தப் பிள்ளைகள நல்லா வாழ விடணும்!" என்று முனகியபடி கூட்டம் பிரிந்து செல்ல, நின்ற இடத்தில் அசையாது சிலை போல் நின்றிருந்த மனைவியை உலுக்கினார் மாணிக்கம்.

"பணம், பணமென்று ஆடி உன் மகள் வாழ்வைக் கெடுக்கப் பார்த்தாயே! நீயெல்லாம் பெண்ணா? அவனுக்கே அவளைக் கட்டி வைத்து அவர்கள் இருவரையும் சுகமாய் வாழ வைப்பதை விட்டு விட்டு ஊரைக் கூட்டி அசிங்கப்படுத்திச் சந்தி சிரிக்க வைத்து விட்டாயே! அவளை வாழ விடு. உன்னால் அவர்கள் துன்பப்பட்டதெல்லாம் போதும்!" என்ற மாணிக்கம் மகளிடம் சென்றார்.

தன் தோளை இறுகப் பற்றியிருந்த திவாகரனை வியந்து நோக்கித் தன் கழுத்தில் கிடந்த மஞ்சள் கயிறைக் கையிலேந்தினாள் அம்பரி. மாமனின் கைத் தாலி! பதினைந்து வயதிலிருந்து இதை வரமாகக் கருதி நாள் தோறும் அவள் வேண்டி வந்த புனிதம்! எப்பேர்ப்பட்ட இன்னல்களையும், சிக்கல்களையும் தாண்டிக் கிடைத்திருக்கிறது!

பட்ட கஷ்டங்கள் அனைத்தும் நொடியில் மறைந்து விட, தானிருக்கும் சூழ்நிலையை மறந்து மனது குதூகலத்தில் திளைத்தது. கண்களில் புது மின்னலுடன் அவனோடு நடந்தவளை மாணிக்கத்தின் குரல் தடுத்தது.

"திவாகரா..." என்று அவர் அழைத்ததும், பதில் கூறாமல் அவர் புறம் திரும்பாமல் தன் வழியிலேயே நின்றான் அவன்.

"நா... நான் மன்னிப்புக் கேட்க வேண்டும். உன்னிடமும், என் பெண்ணிடமும்!" என்று அவர் வினவியதற்கு அவனிடம் எந்தப் பதிலும் இல்லாமற் போனது.

"அம்பரி! கண்ணே! என்னை மன்னித்து விடம்மா. உன் அன்னையின் பேச்சைக் கேட்டுக்கொண்டு உன் வாழ்வைப் பாழாக்க நினைத்தது தவறு தானம்மா. உன் சந்தோசத்தைப் பற்றி எண்ணாமல், நீ வசதியாக வாழ வேண்டும் என்று மட்டும் நினைத்து விட்டேனம்மா. என்னை மன்னித்து விடம்மா!" என்று கைகூப்பி அவர் கெஞ்ச, வேகமாக அவர் கையைப் பற்றிக் கீழே இறக்கினாள் அம்பரி.

"வேண்டாம்ப்பா. யாரும் யாரிடமும் மன்னிப்புக் கேட்க வேண்டாம். பட்ட துயரங்களை யாராலும் மாற்றி எழுத முடியாது. அவகாசம் கொடுங்களப்பா. நாங்களாகவே உங்களைத் தேடி வருவோம்!" எனக் கூறி விட, அதுவே போதும் என்பதைப் போல் கண்களைத் துடைத்துக் கொண்டார் மாணிக்கம்.

பின் மெல்லத் தயங்கி, திவாகரனின் முகம் நோக்கி, "நா... நான் என் மகளைப் பார்க்க அடிக்கடி வந்து செல்லலாமில்லையா, மாப்பிள்ளை?" என்று வினவ,

அவனோ இறுகிய முகத்துடன், "இப்போதும் அவள் உங்கள் மகள்தான்..." என்றான், மாமா என்ற வார்த்தையைத் தவிர்த்தபடி.

கோபம் சாதாரண மனித குணம்! காலத்திற்கு அதை மாற்றும் சக்தி உண்டு! எப்பேர்ப்பட்ட வலியையும்,



வேதனையையும் மாற்றி விடும் தன்மை கொண்டது! தன் தாய்மாமனின் மீது நம்பிக்கையை இழந்த திவாகரன், அவர் மீது கோபம் கொண்டிருப்பது நியாயம்தான். ஆனால் நிச்சயம் அந்தக் கோபம் அதிக நாட்களுக்கு நிலைக்காது. காலம் மாற்றி விடும்! இந்த நம்பிக்கையுடன் அந்த இடத்தை விட்டு நகர்ந்தார் மாணிக்கம், மனைவியையும் அழைத்துக்கொண்டு.

அங்கு நடந்த நிகழ்வின் கடைசிப் பகுதியில் வந்து சேர்ந்த வள்ளியம்மை, தேனு, குமரன் மூவருக்கும் அம்பரி – திவாகரனின் திடீர்க் கல்யாணத்தைக் கண்டதில் பெரு மகிழ்ச்சி. இது நடக்க வேண்டுமென்றுதானே அவர்கள் ஆசைப்பட்டார்கள்?

வள்ளியம்மை பேத்தியை முத்தமிட்டு உச்சி முகர்ந்து ஆசிர்வாதம் வழங்கினார். பேரனின் கையைப் பற்றி அழுத்தி, "உன் உசுரு உங்கிட்டயே வந்து சேர்ந் துருச்சு கண்ணு. ரெண்டு பேரும் நீண்ட ஆயுளோட நல்லா இருக்கணும்!" எனக் கூறிக் கண்ணீர் விட்டார்.

லட்சுமியை வசை பாடிக்கொண்டு மேலும் சிறிது நேரம் அம்பரியுடன் பேசிக் கொண்டிருந்த அப்பத்தாவும், "நாளைக்கு வரேன் கண்ணு. நீ போயி உன் மாமனைப் பாரு." எனக் கூறிவிட்டு குமரன், தேனுடன் வீட்டிற்குப் புறப்பட்டார்.

அவர்கள் சென்றதும், வீட்டினுள் நுழைந்த அம்பரி, அங்கே மாமனைக் காணாது திகைத்துச் சற்றுத் தயக்கத் துடன் அருகே யிருந்த அறைக்குள் எட்டிப் பார்த்தாள்.

அங்கே போடப்பட்டிருந்த கட்டிலில் சாய்ந்து கிடந்தான் திவாகரன். அறைக்குள் செல்லலாமா வேண்டாமா என்று தனக்குள்ளே விவாதித்துக் கொண்டிருந்த அம்பரி, வேண்டாமென முடிவு செய்து வாசலிலேயே நின்று கொண்டாள். அவனாக அழைப்பான் என்று அவள் எதிர்பார்த்திருக்க, அவனோ கண்களை மூடிச் சலனமற்ற உறக்கத்தில் ஆழ்ந்திருந்தான்.

சீராக ஏறி இறங்கும் மூச்சு அதை அவளுக்கு உணர்த்த, சிறிது நேரம் அவனைப் பார்த்தபடியே நின்றிருந்தவள் மெல்ல நடந்து வந்து அங்கே போடப்பட்டிருந்த சாப்பாட்டு மேஜையின் மீது கவிழ்ந்து தானும் உறங்கிப் போனாள்.

ஒரு வாரமாகச் சரியாகச் சாப்பிடாமல், உறங்காமல் கழித்த இருவரும், பற்பல குழப்படிகளுக்குப் பிறகு ஒன்று சேர்ந்துவிட்ட மகிழ்ச்சியில் இனித் தெளிவாக யோசிக்க வேண்டிய அவசியத்தை எண்ணித் தூக்கத்தை நாடி விட்டனர்.

மாமனின் கைத் தாலி கிடைத்து விட்ட நிம்மதியில் அவளும், தன் உயிர்க் காதலி தன்னிடமே வந்து சேர்ந்து விட்ட திருப்தியிலும் கூட அவர்கள் கவலை மறந்து உறக்கத்தைத் தழுவியிருக்கலாம்.

வெகு நேரம் கழித்துக் கண் விழித்த திவாகரன் அறைக்கு வந்து சேர்ந்திராத அம்பரியை எண்ணிப் பதறி விரைவாக எழுந்து வெளியே வந்தான். சாப்பாட்டு மேஜையில் கவிழ்ந்து அசௌகரியமாகப் படுத்திருந்த



வளைக் கண்டு மனம் நெகிழ்ந்து அவளருகே வந்தமர்ந்தான்.

கலைந்து போயிருந்த தலையைத் தன் கைகளால் கோதி அவள் கன்னம் வருடினான். உயிருக்கு உயிரானவள்! அவன் உயிருக்கு நிகரானவள்! அவன் வாழ்வின் தேவதை! முன்னைப் போலல்லாது இந்த ஒரு வாரப் போராட்டத்தில் மெலிந்து போயிருந்தவளைப் பார்வையாலே வருடினான். புன்னகை நிறைந்த முகத்தோடு உயிர்ப்புடன் வலம் வருவாளே! வாடிய பூவாய்க் களையிழந்து தெரிகிறாளே!

கண்ணீர் தேங்கிய விழிகளுடன் நடுங்கிய கைகளால் அவள் விரல்களை வருடி அழுந்த முத்தமிட்டான்! 'புரிந்து கொண்டேனடி! உனக்கு உயிர்ப்பளிப்பதே என் காதல் தானென்று!

'என் கண்ணே! இந்த ஜென்மம் மட்டுமல்ல. இன்னும் ஏழேழு ஜென்மத்திற்கும் உனக்காகவே, உன்னைக் காக்கவே பிறவி யெடுப்பேன். இத்தனை தடைகளை மீறி நாம் ஒன்று சேர்ந்திருக்கிறோமென்றால் அது முழுக்க முழுக்க உன் காதலின் வலிமையால் மட்டுமே! என்ன புண்ணியம் செய்தேன்! இத்தனை அன்பும் கிடைப்பதற்கு!' என்று மனதுக்குள் அவளுடன் பேசியபடியே அமர்ந்திருந்தவன், அவளிடம் அசைவை உணர்ந்து சட்டென எழுந்து சென்றான்.

பின் குளித்துச் சமையல் செய்து வைத்தான். பாத்திரங்களை மேஜையில் வைக்கையில் சத்தம் கேட்டுக்

கண் விழித்த அம்பரி அவனைக் கண்டு பேந்தப் பேந்த முழிக்க,

"குளித்து விட்டுச் சாப்பிடு!" என்ற ஒற்றை வாக்கியத்தோடு அவன் நகர்ந்து விட்டான்.

சரியெனத் தலையாட்டி விட்டு நிமிர்ந்து பார்த்த அம்பரி அவன் சென்று விட்டதைக் கண்டு எழுந்து குளியலறைக்குச் சென்றாள்.

குளித்து வெளி வருகையில் வெகுவாகப் பசியெடுத்தது அவளுக்கு. மெல்ல அவன் அறை வாசல் அருகே சென்றவள், "சா... சாப்பிடலாமா மாமா?" என்று சின்னக் குரலில் வினவ,

சட்டைப் பட்டனை மாட்டியபடி நின்றிருந்தவன் அவள் புறம் திரும்பி, "ஏன்? ஒரு வாரம் தனியாகத்தானே உண்டிருப்பாய்? இப்போதும் கூட அப்படியே சாப்பிடு!" என்று சுள்ளெனக் கூறிவிட்டு நகர்ந்து விட, அம்பரிக்கு இயலாமையில் கண்ணீர் தேங்கிவிட்டது. மூக்கு விடைக்க அழுகையை அடக்கி அவனை நிமிர்ந்து நோக்கியவள் விறுவிறுவென நடந்து வெளியே சென்றுவிட்டாள்.

பசியிலும், தன்னிரக்கத்திலும் கண்ணீர் பெருக, கண்களைத் துடைக்கக் கூடத் தோன்றாமல் தூணைப் பற்றியபடி நின்றிருந்தாள். சிறிது நேரம் கழித்து வெளியே செல்வதற்காக வந்த திவாகரன், மேஜையிலிருந்த பாத்திரங்களைத் திறந்து பார்த்தான். இன்னும் அவள் சாப்பிடவில்லையா என்றெண்ணியபடி வாசலுக்கு வந்தான்.



அவன் வரும் அரவம் கேட்டு மறுபுறம் திரும்பி நின்று கண்களைத் துடைத்துக் கொண்ட அம்பரியிடம், "சாப்பிடவில்லையா?" என்று வினவினான்.

பதில் சொல்லாமல் நின்றிருந்தவளிடம், "உன்னைத் தான்!" என்று அவன் மீண்டும் வினவ.

தொண்டையில் அடைத்ததை விழுங்கிக் கொண்டு, "ப... பசியில்லை..." என்று கூறினாள்.

'அழுகிறாளா என்ன? ஆனால் எதற்காக?' என்று குழம்பியவனுக்குச் சற்று முன்பு தான் எரிந்து விழுந்தது நினைவிற்கு வந்தது.

அந்த நாளையும் அதன் விளைவால் உண்டான ஏழு நாள் துன்பத்தையும் அவ்வளவு சீக்கிரம் மறந்து விட முடியுமா என்ன? அதற்குக் காரணமானவளின் மீது அவனுக்குக் கொள்ளை, கொள்ளையாகக் காதல் இருந்தாலும், அவ்வப்போது எழும் கோபத்தை அவனால் அடக்க முடியாது போயிற்று. தன் சொற்களுக்காக வருந்தி அவளை நோக்கியவன், அவள் கைப்பற்றி உள்ளே இழுத்துச் சென்றான்.

மேஜை நாற்காலியில் அவளை அமர வைத்துத் தானும் அமர்ந்தவன் தட்டில் இட்லிகளை வைத்து சட்னி தோய்த்து அவள் வாயருகே கொண்டு சென்றான். தலை குனிந்தபடி அமர்ந்திருந்தவளின் முகத்தை நிமிர்த்தி அவள் வாயில் திணித்தான். கண்ணீருக்கு அணை போட அவள் எடுத்த முயற்சி தோற்றுக் கன்னங்களில்

வழிந்துவிட, இடது கையால் அவளது கண்ணீரைத் துடைத்தபடி தொடர்ந்து ஊட்டினான் அவன்.

அவள் உண்டு முடித்ததும், கை கழுவியவனிடம், "உ... உனக்கு... நீ... சாப்பிடவில்லை?" என்று வினவ.

"பசியில்லை. நீ சாப்பிட்டதிலேயே எனக்கு வயிறு நிரம்பி விட்டது!" என்றபடி ஈரக் கையால் அவள் வாய் துடைத்து விட்டுத் தட்டை எடுத்துக்கொண்டு உள்ளே சென்றுவிட்டான். அவன் செல்வதை விழி விரியப் பார்த்த படி அமர்ந்திருந்தாள் அம்பரி.

அதன் பின் அவன் வெளியே சென்றுவிட, வீட்டைச் சுற்றிப் பார்த்தபடியும், ஒதுங்க வைத்தபடியும் நேரத்தைக் கழித்தவள், இரவு உணவைத் தயாரித்து விட்டு அவனுக் காகக் காத்திருந்தாள். அவன் வீடு வந்து சேர்ந்ததும் அவனுக்கு அன்னமிட்டவள் அவன் உண்பதைக் கண்ட படியே அமர்ந்திருந்தாள்.

"என்ன பார்த்துக் கொண்டிருக்கிறாய்? நீயும் சாப்பிடு..." என்றான்.

உண்டு முடித்து வேலைகளையும் முடித்துக் கொண்டு சமையலறையை விட்டு வெளியே வந்த வளுக்குத், தான் எங்கே படுத்துக்கொள்ள வேண்டும் என்கிற பெரிய சந்தேகம் வந்தது.

காலையில் அசந்து உறங்கிவிட்டதால் மேஜையில் படுத்திருந்த அசௌகரியம் தெரியவில்லை. ஆனால் இரவு முழுக்க எப்படி மேஜையில் படுத்துக் கொள்ள முடியும்



என்றெண்ணியவள், தயங்கி மீண்டும் அவன் அறை வாசலில் சென்று நின்றாள்.

திரைச் சீலையின் பின்னே பாதி மறைந்து கொண்டவள், விழிகளைத் தாழ்த்தி, 'ம்க்கும்...' என்று கனைத்தாள். அவள் குரல் அவனை எட்டாமற் போய் விட்டபடியால் அவன் புத்தகத்தில் ஆழ்ந்திருந்தான்.

"வ... வந்து மா... மாமா..." என்று அவள் தட்டுத் தடுமாறித் தொடங்குகையில் அவன் அவள் புறம் நிமிர்ந்தான். அவன் தன் முகம் கண்டதும் மீண்டும் நாக்கு ஒட்டிக் கொள்ள,

"வ... வந்து நா... நான் அ... அங்கே ஒரு ஓரமாகப் படுத்துக் கொள்ளட்டுமா?" என்று வினவியபடி அறை யின் கட்டிலைத் தாண்டித் தரையை நோக்கிக் கை காட்டினாள்.

புருவம் நெரித்துக் குழப்பமான பார்வையுடன் ஏன் என்பதைப் போல் அவளை நோக்கியவனிடம், "உ... உனக்குத் தொந்தரவாக இருக்குமென்றால் நா... நான் இங்கேயே படுத்துக் கொள்கிறேன்," என்று கூற...

அப்போதுதான் அவளை நன்றாகக் கவனித் தான். காலையிலிருந்து ஒரு முறை கூட அவள் இந்த அறைக்குள் வரவேயில்லை. சாப்பிட அழைக்கும் போதும் வாசலிலேயே தான் நின்றிருந்தாள். தான் செய்த காரியத்தால் தன் மீது எரிந்து விழும் மாமன் எங்கே மேலும் மேலும் கோபப்பட்டுத் தன்னை மொத்தமாக

வெறுத்து விடுவானோ என்று பயந்து உரிமை பாராட்டாமல் விலகியே நின்றவளைக் கண்டு மனம் பதைத்தது அவனுக்கு.

உள்ளே பிசைவது போல் தோன்றிய உணர்வை ஒதுக்கி, அவளை நோக்கி, "இங்கே வா..." என்பது போல் கை நீட்டினான்.

தயங்கியபடி நடந்து வந்து அவன் கை மீது தன் கையை வைத்தவளை இழுத்துத் தன்னருகே படுக்க வைத்தான். திகைத்து அவனை நோக்குபவளைப் பொருட்படுத்தாது, "கண் மூடித் தூங்கு!" எனக் கூறி அவள் தலையை வருடினான்.

மாமனின் தீண்டலில், அவன் அருகாமையில் அடுத்த சில நிமிடங்களில் நிம்மதியாக உறங்கிப் போனாள் அம்பரி. அவள் முகத்தைப் பார்த்தவண்ணம் அமர்ந்திருந்த திவாகரனும் அவளை அணைத்தபடி உறங்கிப் போனான்.

## 18

அமுத கானம் நீ தரும் நேரம்
நதிகள் ஜதிகள் பாடுமே!
விலகிப் போனால் எனது சலங்கை
விதவையாகிப் போகுமே!
கண்களில் மௌனமோ, கோவில் தீபமே!
ராகங்கள் பாடி வா பன்னீர் மேகமே!
மார் மீது பூவாகி விழவா? விழியாகி விடவா?



மறு நாள் காலை கண் விழித்த அம்பரி, தன் உள்ளங்கையின் மீது கன்னம் பதித்திருந்த திவாகரனைக் கண்டு பரிவுடன் அவன் தலை கோதினாள். அவள் ஸ்பரிசம் உணர்ந்தவன், அவளுக்குத் தோதாகப் புரண்டு படுத்து அவள் தோளில் தலை சாய்க்க அசைவற்றுப் போனாள் அவள்.

அது பொறுக்காதவன் தூக்கத்துடனே அவள் கையைப் பற்றித் தன் தலை மீது வைத்தான் கோதச் சொல்லி. சிரிப்பும், வெட்கமுமாய் அவன் தலைக்குள் விரல் நுழைத்துக் கோதியபடி கிடந்தாள் அம்பரி.

சிறிது நேரத்தில் அவன் மீண்டும் ஆழ்ந்த உறக்கத்திற்குச் சென்றுவிட்டதை உறுதிப்படுத்திக் கொண்டு மெல்லக் கட்டிலை விட்டிறங்கிக் காலை வேலைகளைக் கவனிக்கச் சென்றாள்.

குளித்து முடித்து வெளி வந்தவள் சமையலறையில் சத்தம் கேட்டு மாமன் எழுந்து விட்டானோ என்றபடி வேகமாக ஓடிச் சென்றாள். அங்கே காய்களை நறுக்கியபடி நின்று கொண்டிருந்த அப்பத்தாவைக் கண்டு,

"அப்பத்தா... எப்போது வந்தாய்? வந்தவுடன் வேலை செய்ய வேண்டுமா? நான் பார்த்துக் கொள்கிறேன். நீ வை அப்பத்தா..." என்று அவர் கையிலிருந்த அருவா மனையைப் பிடுங்கினாள்.

"விடு கண்ணு. எல்லா வேலையும் நீ ஒத்த ஆளா எப்பிடிச் செய்வ? நான் நறுக்கித் தரேன். நீ சமையல முடி. மாமன் எந்திரிச்சுட்டானா?" என்று வினவியபடி

கொதித்துக் கொண்டிருந்த டீயை டம்ளரில் ஊற்றி அவளிடம் நீட்டினார்.

அப்பத்தா போதுமே - அன்னை, தந்தை பாசத்தை அள்ளித் தர. பிறந்ததிலிருந்து இன்றுவரை அப்பத்தாவிடம் தான் தாய்ப் பாசத்தைக் கண்டிருக்கிறாள் அவள். இனியும் அப்படித்தான் போலும். அவள் சிந்தித்துக் கொண்டிருக்கையிலேயே தானும் உள்ளே நுழைந்தான் திவாகரன்.

"இதை யெல்லாம் அவள் செய்ய மாட்டாளா அம்மத்தா? நீ ஏன் கஷ்டப்படுகிறாய்?" என்று கடிந்து கொண்டவனிடம்,

"உங்களுக்குச் செய்யுறதுல எனக்கு என்ன ராசா கஷ்டம்? நீ குளிச்சுட்டு வா, சாப்பிடலாம்," என்றார்.

குளித்துச் சாப்பாட்டு மேஜையில் அமர்ந்தவன் அறை ஓரமாக வைக்கப்பட்டிருந்த பையில் பழங்களும், இனிப்புகளும், பூவும் இருப்பதைக் கண்டு,

"என்ன அம்மத்தா இதெல்லாம்? தெரிந்தவர்கள் யாரையும் பார்க்கச் செல்கிறாயா?" என்று வினவினான்.

அவன் அப்படிக் கேட்டதும் சங்கடமாக முறுவலித்த அம்மத்தா, "உ... உங்களுக்குத்தான் ராசா வாங்கி யாந்தேன். கல்யாணம் தான் எதிர்பாராம திடீர்னு நடந்து போச்சு. அடுத்து நடக்குற சம்பிரதாயமாச்சும் முறைப்படி நடக்கோணும்ல? இன்னைக்கு ராத்திரி ஒன்பது மணிக்கு மேல ஜோசியர் நேரம் குறிச்சித் தந்துருக்காரு. எல்லாம்



நம்ம வம்ச விருத்திக்குத்தான்ய்யா..." என்று அவர் கூற. முந்தானையைச் சுருட்டியபடி தலை குனிந்துகொண்டாள் அம்பரி.

சிறிது நேரம் அமைதியாக இருந்த திவாகரன், "அதற்கெல்லாம் இப்போது என்ன அவசரம் அம்மத்தா? உன் பேத்தி என்னுடன் இருந்தால் எனக்கு வருடமெல்லாம் நல்ல நேரம் தான். அதையெல்லாம் பிறகு பார்த்துக் கொள்ளலாம்," என்று கூறிவிட்டு எழுந்து சென்றுவிட்டான் அவன்.

அவன் பதிலைக் கேட்ட அம்பரிக்குச் சற்று வருத்தமாகிப் போனது. "மாமாவிற்கு என் மேல் உள்ள கோபம் இன்னும் தீரவில்லையோ அப்பத்தா? அதனால் தான் இப்படிச் சொல்லிவிட்டுச் செல்கிறதா?" என்று கலக்கத்துடன் வினவியவளிடம்,

"அப்படி யெல்லாம் ஒண்ணுமில்ல கண்ணு. அப்படியே கோபம் இருந்தாலும்தான் என்ன இப்ப? நீ அவன அனுசரிச்சு நடந்துக்க. உன் ஆத்தா, அப்பன் பேசுன பேச்சை அவன் ஆயுளுக்கும் மறப்பானா? அவன அவன் வழில விடு தாயி. எல்லாம் நல்லபடியா நடக்கும்!" என்று சமாதானம் கூறிவிட்டுச் சென்றார் அப்பத்தா.

இப்படியாக அப்பத்தா, தேனு, குமரன், அவர்களது பெற்றோர் என அந்த வாரம் முழுதும் ஒவ்வொருவராக மாறி மாறி வந்து அவர்களுக்கு வாழ்த்துக் கூறி விட்டுச் சென்றனர்.

செல்வம் மாமா அம்பரியின் கழுத்தில் இட வந்த பதினைந்து பவுன் சங்கிலியை வேண்டாம் என்று மறுத்து விட்டான் திவாகரன்.

"சித்தப்பா, என் மனைவிக்கு என் சம்பாத்தியத்தில் நகை போட வேண்டுமென்பது என் ஆசை. அதனால், இது வேண்டாம் சித்தப்பா. ப்ளீஸ்..." என்று மறுத்து விட, அம்பரிக்குத் தன் கணவனை நினைத்துக் கர்வம் பொங்கியது.

வெளியூர் சென்றிருந்த திருமலையும் அந்த வாரம் ஊர் திரும்பியிருந்தார். விசயம் கேள்விப்பட்டு நேராக இவர்களது இல்லத்தைத் தேடி வந்துவிட்டார்.

"வாங்க மாமா. உள்ளே வாங்க!" என்று வாய் நிறைய வரவேற்று அழைத்துச் சென்றவளைத் திருமலைக்கு மிகவும் பிடித்துப் போனது.

"எதற்காக திவாகரன் அரைப் பைத்தியமானான் என்று இப்போது தானம்மா எனக்குப் புரிகிறது. பாசம் நிறைந்த உன் முகத்தைப் பார்க்கப் பார்க்கத் தெவிட்ட வில்லையம்மா...!" என்று கூறியவரிடம் வெட்கத்துடன் முறுவலித்தாள்.

"இது உன் மாமனுக்குச் சொந்தமான வீடு தானம்மா. அவன் பாட்டன் சொத்து. இனி காடு, கழனியையெல்லாம் பார்த்துக் கொள்ளப் போவது அவன் தான். அவரவர் சொத்தை அவரவரிடம் ஒப்படைத்து விடுவது தானம்மா நியாயம்? அதனால்தான் உன் மாமனையே பார்த்துக் கொள்ளச் சொல்லிவிட்டேன். அவன் அவ்வளவு சீக்கிரத்தில் சம்மதிக்கவில்லையம்மா. எப்படியோ பேசிச் சரிக் கட்டி வைத்திருக்கிறேன்," என்று சிரித்தவர், தொடர்ந்து கம்மிய குரலில் அவள் புறம் குனிந்து -



"என்னம்மா? பய இன்னும் கோபமாகத் தானிருக் கிறானா? இருக்காதா பின்னே? சுய நலமில்லாமல் திரியுமளவிற்கு உன் மீது அளவு கடந்த காதலம்மா அவனுக்கு. உனக்கும் அப்படித்தான் என்று எனக்கு நன்றாகத் தெரியும். ஏதோ போதாத காலம் உங்களை ஆட்டிப் படைத்து விட்டது. இனி நடப்பவையெல்லாம் நன்மை மட்டுமே! உன் அன்னை, தந்தை மீதிருக்கும் அவனது கோபமும் விரைவில் தீர்ந்து விடும். நீ கவலை கொள்ளாதே!" என்றார் அவர்.

"அவளிடம் என்ன பெரியப்பா ரகசியம்?" என்ற படியே வந்தவனிடம்,

"என் மருமகளிடம் நான் பேசுகிறேன். போடா. ஆனால் அம்பரிம்மா! உன் மாமன் விவசாயத்தில் புதுமையைப் புகுத்துகிறான். என்னென்னவோ பெயர் சொல்கிறான். ஒவ்வொரு தாவரத்தையும் அறிவியல் பெயர் சொல்லித்தான் அழைக்கிறான். எனக்கு ஒன்றும் புரியவில்லை," என்றவர், மேலும் சிறிது நேரம் பேசி விட்டுச் சென்றார்.

அவர் சென்றதும், "நான் வாழைத் தோப்பிற்குக் கிளம்புகிறேன்," எனக் கூறிப் புறப்பட்டவனிடம்,

"இந்தப் பாலைக் குடித்து விடுங்களேன்," என்றபடி அவனருகே வந்து நின்றாள். பாலைப் பருகிய படியே அவளைக் கவனித்துக் கொண்டிருந்தவனுக்கு, அன்று அலசிய துணியை எடுத்துக்கொண்டு அவள் கொல்லைக்குச் செல்வது கண்ணில் பட்டது.

அப்போது தான் அவள் உடையைக் கவனித்தான். இங்கே வந்ததிலிருந்து இந்த மூன்று பாவாடை, தாவணி யைத்தான் மாற்றி மாற்றிக் கட்டுகிறாள். வேறு உடை வேண்டுமென்று ஒரு வார்த்தைகூட இவனிடம் கேட்க வில்லை.

இதற்காக, இதற்காகத்தானே அவளது அன்னை, தந்தை அவளை அவனுக்கு மணமுடிப்பதில் தயக்கம் காட்டினர்? பிறந்த வீட்டில் வாழ்ந்த அளவிற்கு மகளால் சுகமாக வாழ முடியாது என்றார்களே! அது உண்மை யென்று நிரூபிக்குமளவிற்கு இன்று சாயம் போன தாவணியில், வீட்டு வேலைகள் அனைத்தையும் தானே செய்து கொண்டு கஷ்டப்படுகிறாளே!

இல்லையில்லை! அவள் என்னால், எனக்காகக் கஷ்டப்படக் கூடாது என்று தீர்மானித்தவன், வேகமாக பீரோவிலிருந்த சேமிப்புப் பணத்தை எடுத்துக்கொண்டு புறப்பட்டான்.

துணியை உலர்த்தி விட்டு வீட்டினுள் வந்த அம்பரி அவன் சொல்லாமல் சென்று விட்டதைக் கண்டு வருத்தம் கொண்டாள். இங்கே வந்த ஏழு நாட்களில் ஒரு நாள் கூட அவன் அவளிடம் சொல்லி விட்டுச் சென்றதில்லை.



"வெளியே செல்கிறேன்," என்று அறிவித்து விட்டுப் புறப்பட்டு விடுவான். பாசமாகச் சோறு ஊட்டுகிறான்! அவளைத் தினம் தினம் தன்னருகே படுக்க வைத்துக் கொண்டு தலை கோதி உறங்க வைக்கிறான். ஆனால் மனம் விட்டுப் பேசிக் கொள்வதில்லை. அவனது கோபம் தீர்ந்து வாழ்வு என்று சீராகும்? பெருமூச்சை வெளிவிட்டுத் தன் வேலைகளைக் காணச் சென்றாள்.

இரண்டு மணி நேரம் கழித்து வீடு வந்து சேர்ந்த வனின் கையில் பெரிய பை ஒன்றிருந்தது. பையை மேஜையில் வைத்து விட்டு அவளைத் தேடிச் சமைய லறைக்குச் சென்றான்.

"வண்ண விழியின் வாசலில் என் தேவன் தோன்றி னான்..." என வானொலியில் ஒலித்த பாடலை ரசித்தபடி சமையல் செய்து கொண்டிருந்தவளை ஓரிரு நிமிடங்கள் இமைக்காமல் நோக்கியவன், பின், "பரி!" என்றழைத்தான்.

அப்படி அவன் அவளை அழைத்துப் பல நாட்கள் ஆகி விட்டதால் வியப்புடன் சட்டென நிமிர்ந்து அவனை நோக்கினாள்.

விரிந்த விழிகள் மேலும் மேலும் விரிந்து அவனை நோக்குவதைப் பொருட்படுத்தாது அவள் கையில் இருந்ததைக் கீழே வைத்துவிட்டு அவளை இழுத்துக் கொண்டு வந்து நாற்காலியில் அமர வைத்தான். தன் முன்னேயிருந்த பையைக் கண்டு என்ன இது என்பது போல் அவனை நோக்கியவளிடம்,

"பிரித்துப் பார்!" என்றான். அந்தப் பெரிய பை முழுதுமிருந்த சேலைகளைக் கண்டு அவள் மேலும் வியந்து போனாள்.

ஒவ்வொரு சேலையாகக் கையிலெடுத்துப் பார்த்துக் கொண்டிருந்தவளின் அருகே அமர்ந்து, "பிடித்திருக் கிறதா?" என்றான்.

"ம்..." என்றபடி தலையாட்டியவளிடம், "ஏன்டி என்னிடம் கேட்கவில்லை?" என்று வினவினான்.

என்ன கேட்கவில்லை என்பது போல் பார்த்தவளை,

"வேறு உடை வேண்டுமென்று ஏன் கேட்கவில்லை? அணிந்ததையே அணிந்து கொண்டு இத்தனை நாட் களைக் கடத்தியிருக்கிறாய்? உன் மாமன் வக்கற்றவ னென்று உன் அன்னை - தந்தையைப் போல் நீயும் நினைத்துக் கொண்டாயா?" என்று அமைதியான குரலில் வினவியவனைக் கண்டு பதறிப்போனாள் அம்பரி.

வேகமாக மறுத்துத் தலையசைத்து, "இ... இல்லை மாமா... நா... நான்... என்னால் எப்படி அவ்வாறு உன்னை நினைக்க முடியும்? நான் நேசித்தது பணத்தையும், சுகபோக வாழ்க்கையையும் இல்லை. உன்னையும், உன் அருகாமையையும்தான். எனக்கு அது ஒன்றே போதும். நீ யில்லாத ஏழு நாட்களும் நரகமாகக் கழிந்தது மாமா. இப்போது நான் மிக மிகச் சந்தோசமாக, நிம்மதியாக இருக்கிறேன். தயவு செய்து என்னைத் தவறாக எண்ணாதே!" என்று கெஞ்சியவளிடம் பதில் கூறாமல் அமைதியாக இருந்தான்.



"உன் அன்னை ஏசியதற்காக அல்லடி, உன்னை நோக விடாமல் கையில் வைத்துத் தாங்க வேண்டுமென்று தான் நான் ஆசைப்படுகிறேன். சின்னக் கஷ்டத்தைக் கூட நீ அனுபவிக்கக் கூடாது. நான் அதற்கு அனுமதிக்க மாட்டேன். உன் தேவை என்னவானாலும் என்னிடம் சொல்லடி. அது எவ்வளவு விலை மதிப்புள்ளதாக இருந் தாலும் நான் கொண்டு வருகிறேன்," என்றவனிடம்,

"விலை மதிப்பே யில்லாததொன்று இவ்வுலகில் உள்ளது மாமா. அது உன் அன்பு. அதைத் தவிர வேறு எதையும் நான் உன்னிடம் எதிர்பார்க்கவில்லை. அது உனக்கும் தெரியும்," என்று அழுத்தமாகக் கூறியவளைக் கண்ணோடு கண் நோக்கியவன் சட்டென இழுத்துத் தன்னோடு அவளை இறுக அணைத்தான்.

"கண்ணே! என்னையும், என் அன்பையும் தவிர எதையும் எதிர்பாராதவள் நீ என்று எனக்குச் சொல்லித் தான் தெரிய வேண்டுமா? என் கண்மணியைப் பற்றி நான் அறியாததா? நிஜமாகவே... நிஜமாகவே நீ என்னுடனான வாழ்வைச் சுமையாக நினைக்கவில்லை தானே?" என்று உணர்ச்சி பொங்கக் கேட்டவனிடம்,

"உன் கையால் நீ கட்டிய தாலி என் வாழ்வின் வரம் மாமா. அந்த வரத்தை முற்றிலுமாக அனுபவித்து நான் வாழ்ந்து கொண்டிருக்கும் உன்னுடனான வாழ்வு எப்படிச் சுமையாகும்?" என்று பதில் கேள்வி கேட்டவளைத் தன்னோடு இறுக்கி அவள் நெற்றியில் தன் கண்களைப் பதித்தான்.

அதன் பின் அந்த வீட்டில் அனைத்தும் மாறிப் போனது. ஒரு நாள் அம்மியில் அரைத்துக் கொண்டிருந் தவளைக் கண்டு விட்டு அரவை எந்திரம் வாங்கி வந்தான். துணி துவைக்க, வீடு துடைக்க, பொழுது போக்கவெனத் தென்னந்தோப்பிலிருந்து வரும் பணம் அனைத்தையும் அவளது வசதிக்காகச் செலவழித்தான்.

"நீ என்னைச் சோம்பேறியாக்கப் பார்க்கிறாய் மாமா...! இப்படி ஒரு வேலையும் பார்க்காமல் அனைத் திற்கும் மெசினை வாங்கிப் போட்டால் உடம்பு எப்படி உறுதியாக இருக்கும்? போ மாமா..." என்று அவள் சத்தமிட்டும் அவன் அடங்கவேயில்லை.

"நீ கஷ்டப்படக்கூடாது கண்ணே! எனக்கு அதுதான் வேண்டும். அம்மியில் அரைத்தும், துடைப்பம் பிடித்தும் உன் கைகள் மிகவும் வரண்டு போய்க் கிடக்கிறது. நீ இனி அதையெல்லாம் செய்ய வேண்டாம்," என்று கூறி விட்டான்.

ஒருமுறை இப்படித்தான் வெங்காயம் வெட்டுகை யில் அவள் கண்ணீரைக் கண்டுவிட்டவன், "நானே உன் கண்ணில் கண்ணீர் வந்துவிடக் கூடாதென்று பார்த்துப் பார்த்து நடந்து கொள்கிறேன். கேவலம் இந்த வெங்காயம் உன்னைத் தினம் தினம் அழ வைக்கிறதே! ம்..." என்று யோசித்தவன்,

"பரி... இந்த வெங்காயத்தை வெட்டுவதற்குக் கூடக் கருவிகள் பல இருக்கின்றனவாம். அதை விசாரித்து வாங்கி வைக்கட்டுமா?" என்றவனை நன்றாக முறைத்து,



"மா...மாஆஆஆ..." என்று கோபமாகக் கத்தியவள், "இது உனக்கே அதிகமாகத் தெரியவில்லையா? பேசாமல் போ மாமா. இல்லையென்றால் இந்த வெங்காயத்தை உன் கண்ணில் தேய்த்து விடுவேன்!" என்று மிரட்டினாள்.

சிரிப்பும், கேலியுமாய் இருந்தாலும் மாமனின் அதீத அன்பில் அவள் திண்டாடிப் போனதென்னவோ உண்மை தான். இந்த அளவிற்கு ஒருவனால் நேசிக்க முடியுமா என்ன? அத்தனை அவமானங்களையும், அசிங்கங்களை யும் தாங்கி, அதனால் உண்டான கோபதாபங்களை மறந்து இன்று அவளை உள்ளங்கையில் வைத்துத் தாங்குகிறான். அவனோடு வாழும் ஒவ்வொரு நிமிடத்தை யும் அனுபவித்து வாழ்ந்து கொண்டிருந்தாள்.

இப்படியாகச் சில மாதங்கள் கழிய, தொழிலில் வெகுவாக முன்னேறிக் கொண்டிருந்தான் திவாகரன். பருவமும், படித்த படிப்பும் அதற்கு உபயோகமாக இருந்த தனால், அவனால் உயர முடிந்தது.

கிடைத்த வாய்ப்பைச் சரியாகப் பயன் படுத்திக் கொண்டு தன் உழைப்பால் மேன்மை அடைந்தான் அவன்.

மகளை மருமகன் கையில் வைத்துத் தாங்குவதை அன்னையும், வருவோர் போவோரும் சொல்வதைக் கேட்கையில் மகிழ்ச்சி நிறைந்தது மாணிக்கத்திற்கு. மகளின் பிரிவிலும், அவளது வார்த்தைகளிலும் தன் தவறை உணர்ந்துவிட்ட லட்சுமியும் மகளது வாழ்வைக் கண்டு மகிழ்ச்சியுற்றாள்.

அந்த மாதக் கடைசியில் வாழைத் தோட்டம் கொடுத்த லாபம் இரண்டு லட்சத்தில் மனைவிக்குத் தங்கத் தாலி வாங்க முடிவு செய்தான் அவன். அவன் அன்று கட்டிய மஞ்சள் கயிறைத்தான் இன்றுவரை சுமந்து வருகிறாள். விரலி மஞ்சள் வைத்துக் கட்டிய கயிற்றை மனைவி பாதுகாக்கும் அழகை எண்ணிச் சிரிப்பு வந்தது அவனுக்கு.

தினம், தினம் அதில் மஞ்சளிட்டுக் குளித்து, சாமி முன்பு நின்று அதற்குக் குங்குமமிட்டு... செவ்வாய், வெள்ளிக்கிழமைகளில் அவனைக் குங்குமமிடச் சொல்லி அவன் காலில் விழுந்து பணிந்து, ஒரு மனைவியாக அவள் செய்யும் கடமைகள் அவள் மீதான அவனது பாசத்தை மேலும் அதிகரித்தன.

ஏதேதோ நினைவில் வீடு வந்து சேர்ந்தவன் பையிலிருந்த பணத்தை எடுத்து, பீரோவில் வைத்துக் கொண்டிருந்தான். அப்போது குளித்து முடித்து அறைக்குள் நுழைந்த அம்பரி ஏதோ பாட்டை முணுமுணுத்தபடி, அறைக் கதவை அடைத்தாள். தாழிட்டுத் திரும்பியவள் திவாகரனைக் கண்டு விதிர்விதிர்த்துப் போனாள்.

சத்தம் கேட்டுத் திரும்பிய திவாகரனுக்கு அவளிருந்த நிலையைக் கண்டு உள்ளங்கையிலிருந்து தொடங்கி உடல் முழுதும் சூடாகிப் போனது. தான் மட்டும் தானே வீட்டிலிருக்கிறோம் என்ற உணர்வில் குளித்துவிட்டுப் பாவாடையை மாருக்குக் குறுக்காகக் கட்டிக்கொண்டு இடது தோளில் புடவையுடன் அறைக்குள் நுழைந்து விட்டாள்.



அவனைச் சற்றும் எதிர்பாராததால் திணறி, "வ... வந்து நீங்கள் வந்தது எ... எனக்குத் தெ... தெரியாது." என உளறிக் கொட்டியவள் கதவைத் திறக்கத் தாழ்ப்பாளின் மீது கை வைத்தாள். அவள் முயற்சியைத் தடுத்து அவள் கை மீது தன் கையை வைத்து மீண்டும் தாழிட்டவன் அவளை நெருங்கி வந்தான்.

அவன் கைக்கு அகப்படாமல் சேலையை இறுகப் பற்றியபடி பின்னே நடந்தவள் சுவரின் மீது மோதி நின்றாள். வெகு நாளைக்குப் பின் அவன் கண்ணில் தோன்றியிருக்கும் மோகப் பார்வையை எதிர்கொள்ள முடியாது அவள் அங்குமிங்கும் தன் விழிகளை அலைய விட... அவள் இடையைப் பற்றி யிழுத்துத் தன்னருகே வரச் செய்தவன், ஈரக் கூந்தலில் கை நுழைத்துத் தன் முகத்தைப் புதைத்தான்.

மெல்ல முகம் விலக்கி, அவள் பிறை நெற்றியை ஒற்றை விரலால் அளந்தான். அடர்ந்து படர்ந்திருந்த புருவங்களை நீவினான். கூரான நாசியைத் தடவினான். நடுங்கும் இதழ்களை வருடினான். வெள்ளைக் கழுத்தைத் தாண்டி அவன் விரல்கள் முன்னேறுகையில் இறுகப் பற்றியவள் நடுங்கிய இதழ்களையும், தடதடக்கும் மனதையும் சமன்படுத்த முயற்சிக்க, அவனோடு அவள் கூந்தலை இறுகப் பற்றி அருகே யிழுத்து அவள் கன்னத்தில் தன் கன்னத்தை அழுத்தி, "ஏன்? எனக்கு உரிமையில்லையா? நீ என் பொண்டாட்டிடி!" என்றான்.

அவனது கேள்வியிலும், பதிலிலும் சிவந்து போனவள், அவன் கைகளை விலக்கப் பார்க்க, அவள் கரத்தைப் பற்றித் தன்னோடு சாய்த்து, "பரி..." என ஆழ்ந்த குரலில் அழைத்தபடி அவளை இறுகக் கட்டிக் கொண்டான்.

மாமனின் அணைப்பில் தன்னை மறந்து அம்பரியும் நின்று விட, அவன் கைகள் தொடர்ந்து அவளது வெற்றுத் தோள்களை வருடி அவள் கைகளில் வழிந்து விரல்களை அழுந்தப் பற்றின.

"பரி... நீ... நீ எனக்கு வேண்டும். இந்த ஜென்மம் முழுதும்... இத்தனை வருடங்களாகத் தனியாக உறக்கம் கொண்டு இரவைக் கழித்தது போதும். இனி ஒரு இரவைக் கூட நீ இன்றி என்னால் கடத்த முடியாது. நீ வேண்டும். எப்போதும். உன்னை எனக்குத் தருவாயா?" என்று அனுமதி கேட்டவனைக் கண்டு சிரிப்பெழுந்தது அவளுக்கு.

அவள் இடையைச் சுற்றிப் படர்ந்திருந்த அவன் கரங்கள் கொடுத்த அழுத்தமே அவனது தாபத்தை எடுத்துக்காட்ட, மெல்ல எக்கி அவன் கன்னத்தில் இதழ் பதித்துத் தன் சம்மதத்தைத் தெரிவித்தாள். அவள் முத்த மிட்டதும் சொக்கிப் போனவன், வேக வேகமாக அவள் இதழ்களைத் தனக்குள் எடுத்துக் கொள்ள, அவனது ஆசையையும், ஆர்வத்தையும் கண்டு அவளுக்குள்ளும் உணர்ச்சிகள் எரிமலைக் குழம்பாகத் தெறித்தன.

காமமில்லாத காதலா? அதைப் புனிதமாக மதித்துக் கொண்டாடுபவர்களின் வரிசையில் அவர்களும் இருப்ப தால், இப்படியொரு சூழ்நிலையை... தாங்கள் சங்கமிக்கப்



போகும் நிகழ்வைக் கற்பனை செய்து கொண்டுதான் இருந்தனர்.

கட்டுக்கடங்காத காதல் வேட்கையுடனும் அவளை முழுதாக ஆக்ரமிக்கப் போகும் கர்வத்துடனும் அவளைத் தன்னோடு அணைத்துத் தூக்கி முத்தமிட்டுக் கொண் டிருந்தவனைத் தானும் இறுகப் பற்றி ஒன்றிப் போயிருந் தாள் அம்பரி. அவர்களது நீண்ட நாள் தேவையைப் பூர்த்தி செய்ய விடாமல் வள்ளியம்மையின் குரல் "அம்பரி..." என ஒலித்தது.

சற்று நேரம் பதிலற்றுப் போக, மீண்டும் அழைத்தார் வள்ளியம்மை. மனமில்லாமல் அவளை விலக்கிக் கீழே நிறுத்தி அறைக் கதவை நோக்கி நடந்தவன் என்ன நினைத்தானோ, திரும்பி அவளிடம் வந்து இறுக அணைத்து முத்தமிட்டு விட்டு வெளியே சென்றான். சேலையை இறுகப் பற்றியபடி அமர்ந்துவிட்ட அம்பரிக்கு உணர்ச்சிகள் அடங்க வெகு நேரமாகிப் போனது.

அந்த வாரக் கடைசியில் நினைத்தபடி மனைவிக்குப் பத்துப் பவுனில் தங்கத் தாலி வாங்கினான் திவாகரன். வெகு நாள் ஆசை இன்று நிறைவேறிவிட்ட மகிழ்ச்சியில் புன்னகையுடனே வீட்டிற்குச் சென்றான்.

உள்ளே நுழைகையிலேயே "பரி..." என உரக்க அழைத்தான்.

"இதோ வந்துவிட்டேன்," என்று புன்னகை முகத் துடன் தன் முன்னே நின்ற மனைவியின் அழகில் அவன்

பிரமித்துப் போனான். வெந்தய மஞ்சளில் சாதாரணக் காட்டன் புடவை தான் அணிந்திருந்தாள். ஒப்பனைகளற்ற முகத்தில், நீண்டு வளைந்த கரும் புருவத்தின் மத்தியில் அவளிட்டிருந்த பொட்டும், வகிட்டில் இட்டிருந்த குங்குமமும் அவளது திவ்யத்தை அதிகப் படுத்தியது. கட்டுப்படுத்திக் கொள்ள முடியாமல் அவள் முகம் பற்றி அருகே இழுத்தவன் அவள் பட்டுக் கன்னங்களில் அழுந்த முத்தமிட்டான்.

பின் அவளைத் தன் கை வளைவில் நிறுத்திக் கொண்டு, அவள் காதோரக் கூந்தலை ஒதுக்கி, "கண்ணே, இன்று நான்..." என்று தொடங்குகையில் குறுக்கிட்டவள்,

"இன்று நான் உனக்கு வெங்காயம் நறுக்கும் எந்திரம் வாங்கி வந்திருக்கிறேன். இனி நீ வெங்காயம் நறுக்கும் பெருங்கஷ்டத்தை அனுபவிக்கத் தேவையே இல்லை!" என்று அவனைப் போலவே கூறிச் சிரிக்க,

"ராட்சசி..." என்று அவள் காதைத் திருகினான் அவன்.

"ஆ... விடு மாமா, வலிக்கிறது. பின்னே? நீ தினமும் எதையேனும் எனக்கென்று வாங்கிக் கொண்டு வந்து குவிக்கிறாய். வேலை பார்ப்பது எனக்குக் கஷ்டமாகத் தெரியவில்லை என்று சொன்னால் விட்டால்தானே?" என்று நொடித்துக் கொள்ள,

சிரிப்புடன் அவள் கன்னம் கிள்ளியவன், "அழகி, உன் பொற்பாதங்கள் நோகாமல் நீ இளவரசி போல் என் வீட்டில் வாழ வேண்டும் என்பதுதான் என் ஆசை.



நான் எந்த விதத்திலும் பாதிக்கப்பட்டு விடக் கூடாதென்று நீ எனக்காகச் செய்த விசயங்கள் அதிகம் பரி. அதற்கு நன்றிக் கடன் செலுத்த வேண்டாமா? ஒரு முறை உன்னைப் பிரிந்து துன்பப்பட்டதே போதும். இனி நீ சந்தோசமாக இருக்க வேண்டும்!" என்றவனை அவள் ஆசையுடன் அணைத்துக் கொண்டாள்.

"இப்போது நான் வாங்கி வந்திருப்பதைக் கண்டு நீ மிகவும் மகிழ்ச்சியுறுவாய்," என்றவன், அவள் கைப்பற்றி அழைத்துக்கொண்டு சாமியறைக்குச் சென்றான். பின் பையிலிருந்த நகைப்பெட்டியைத் திறந்து சக்தி - சிவ லிங்கம் கோத்த தங்கத் தாலியைக் காட்டினான்.

"வெறும் விரலி மஞ்சள் வைத்த தாலியை எத்தனை நாட்களுக்குத்தான் கட்டியிருப்பாய்? தங்கத்தில் தாலி செய்ய வேண்டுமென்று நீண்ட நாட்களாக நினைத்துக் கொண்டிருந்தேன். இன்று அது நடந்துவிட்டது," என்று சிரித்தவனிடம், "ஏன் மாமா? உனக்கு வண்டி வாங்கிக் கொள் என்றேனே. இப்போது இத்தனை பவுனுக்கு வாங்கியாக வேண்டுமா?" என்று கடிந்து கொண்டாள்.

"வண்டி எப்போது வேண்டுமானாலும் வாங்கிக் கொள்ளலாம். வெறும் கயிற்றைப் போட்டுக் கொண்டு எத்தனை நாட்கள் இருப்பாய்? போட்டிருந்த நகைகளையெல்லாம் அப்பத்தாவிடம் கொடுத்து விட்டாயே. அதனால் தான் வாங்கிவிட்டேன்," என்றவன், சாமி முன்பு வைத்துக் கும்பிட்டுக் கொண்டு அவள் கழுத்தில் அணிவித்தான்.

அதைக் கையில் தொட்டுப் பார்த்த அம்பரிக்கு முகமெல்லாம் பூரிப்பு. அன்று பூப்படைந்து குடிசைக்குள் அமர்ந்திருந்த போது வளையல் அணிவித்தானே! அன்றை விடப் பல மடங்கு இன்று அகமகிழ்ந்து போனாள்.

கண்ணீரும், புன்னகையுமாய் அவன் முகம் பற்றி அழுந்த முத்தமிட்டவளிடம் அழகாக முறுவலித்தவன், அவள் கையைப் பிடித்துக் கொண்டு, "குள்ளச்சி, அவ்வளவுதானா?" என்று ஏக்கமாக வினவினான்.

"என் மாமாவிற்கு இல்லாததா? உனக்கு என்ன வேண்டுமென்று என்னிடம் கேள் மாமா," என்று கன்னம் வருடியவளிடம்,

"எனக்கு என்ன வேண்டுமென்று உனக்குத் தெரியாதாக்கும்?" என்றவன், அவளை ஒரு கையால் பற்றித் தூக்கிக் கொண்டு வெளியே நடந்தான்.

அவன் தோளைப் பற்றிக் கொண்டு, வேண்டு மென்றே யோசிப்பது போல் பாவனை செய்தவள், "ம்... மீன் குழம்பா இல்லை கடலை மிட்டாயா?" என்றாள்.

அவன் முறைப்பதைக் கண்டு, "இல்லையா?...ம், கண்டு பிடித்து விட்டேன். நண்டு வறுவல்தானே?" என்ற வளை நறுக்கெனக் கடித்து வைத்தான்.

"ஆ...ஆ..." என்றபடியே கலகலவெனச் சிரித்த வளிடம், "கல்யாணமாகி இத்தனை மாதங்களாகப் பிரம்ம சாரியாகவே வாழ்ந்து கொண்டிருக்கிறேனே. உனக்கு என் மீது இரக்கமே இல்லையா? எனக்கு மீனும், நண்டும்



வேண்டாம். இதுதான் வேண்டும்," என்றவன் அவளை இழுத்து அவள் இதழ்களில் தன் இதழ்களை அழுந்தப் புதைத்தான்.

வெகு நேரம் கழித்து விலகியவனிடம், "உங்களை யார் பிரம்மசாரியாகவே இருக்கச் சொன்னார்களாம்?" என்று சிணுங்கலுடன் வினவியவள் விழி விரித்து அவன், "ஏய்..." என்பதற்குள் அவன் கைக்குச் சிக்காமல் ஓடிச் சென்றாள்.

## 19

கண்ணிரண்டில்
நூறு வெண்ணிலாக்கள் தோன்றும்!
ஆனாலும் அனல் பாயும்!
நாடி எங்கும் ஏதோ நாத வெள்ளம் ஓடும்!
ஆனாலும் என்ன தாகம்!
மெய் சிலிர்க்கும் வண்ணம்
தீ வளர்த்ததென்ன?
தூபம் போடும் நேரம் தூண்டிலிட்டதென்ன?
என்னையே கேட்டு ஏங்கினேன் நான்...!

"உன்னிடம் கடைசியாகக் கேட்கிறேன். என்னைக் கல்யாணம் செய்து கொள்ள முடியுமா? முடியாதா?" என்று தன் அன்னை, தந்தையின் முன்பு நின்று கொண்டு கோபமாகக் கேட்ட குமரனைக் கண்டு பயந்துபோனாள் தேன்மொழி.

'இவனுக்கென்ன பைத்தியமா பிடித்திருக்கிறது? இத்தனை நாட்களாகப் பின்னாலேயே திரிந்து மிரட்டியது போதாதென்று இன்று அப்பா-அம்மா முன்பும் அவனது ரௌடித்தனத்தைக் காட்டுகிறானே!' என்று நடுங்கியவள்...

"நான் என் அப்பா சொல்பவரைத் தான் கலியாணம் செய்து கொள்வேன்." என்று முந்தானையைக் கையில் சுருட்டியபடி பதில் கூற, கொதித்துப் போனான் குமரன்.

"ஏய். உங்கய்யனைக் கேட்டுக்கொண்டா என்னோடு தோப்பிலும், வயலிலும் திரிந்தாய்? நான் உன் சம்ம தத்தைத்தான் கேட்கிறேன். அங்கே என்னடி பார்வை? எனக்குப் பதில் சொல்லு," என்று மிரட்டியவனை மெல்ல விழி உயர்த்திப் பார்த்துவிட்டு, அவள் தலையைக் குனிந்து கொள்ள... அவள் தந்தையின் புறம் திரும்பியவன்,

"யோவ் மாமா... அம்பரிக்கும், திவாகரன் மாமா விற்கும் கல்யாணம் முடிந்ததும் எங்களிருவருக்கும் செய்து வைக்கிறேன் என்றாயே! இப்போது ஏன் எந்தப் பேச்சும் எடுக்காமல் அமைதியாகி விட்டாய்?" என்று செல்வத்திடம் பாய்ந்தான்.

"டேய்... உனக்குத்தான் வயதிருக்கிறதே! மெதுவாகக் கல்யாணம் செய்து கொண்டால்தான் என்ன? உனக்கு என்னடா அவசரம் இப்போது?" என்று தலையில் அடித்துக் கொண்டவரிடம்,

"ம்.. நீ மட்டும் 20 வயதிலேயே அத்தையைக் கட்டிக்கொண்டு தேக்கடியில் டூயட் பாடவில்லை? நான்



இந்த வயதில் செய்து கொள்வது தவறா? போய்யா...!" என்று எதிர்த்துப் பேசியவனைக் கண்டு சுவரில் முட்டிக் கொண்டார் செல்வம்.

"கொஞ்ச நாள் பொறுமையாக இரு, ராசா. அம்பரி - திவாகரன் கல்யாணம் நாம் எதிர்பார்த்தபடியா நடந்தது? அதைப் பற்றிய பேச்சுக்களும், புறணிகளுமே ஊரில் இன்னும் அடங்கவில்லை?" என்று வருத்தப்பட்ட அத்தையின் அருகே சென்று அமர்ந்து கொண்டவன்,

"அத்தை! நானும் அதையே தான் சொல்கிறேன். என் கல்யாணத்தைச் சாக்காக வைத்து அவர்கள் இருவரையும் நம் சொந்தங்களிடம் பழகவிடலாம். மாமா தான் அம்பரியைக் கையில் வைத்துத் தாங்குகிறாரே! இந்த உண்மை அனைவருக்கும் தெரிய வந்தால் புறணி பேசுபவர்கள் அடங்கி விடுவார்கள். என்ன சொல்கிறீர்கள்?" என்று கண்ணில் ஆர்வத்துடன் வினவியவனைக் கண்டு, "க்குக்கும்..." என்று நொடித்துக் கொண்டார் செல்வம்.

"எப்படியோ நீ நினைத்தது நடந்தாக வேண்டும். என்னடா?" என்றபடியே குமரனின் தந்தை ராஜன் உள்ளே நுழைய, பவ்யமாக எழுந்து நின்றான் அவன்.

"வாங்க மாமா. வாங்க அண்ணா. வாங்க மச்சான்..." என்று குரல்கள் எழும்ப, ராஜன் உள்ளே வந்தமர்ந்தார்.

"அவன்தான் ஆசைப்படுகிறானே. அவன் விருப்பப் படி செய்ய வேண்டியதுதான். இல்லை யென்றால்

அவளைக் கடத்திக் கொண்டு போய்த் தாலி கட்டினாலும் கட்டி விடுவான்!" என்று அவர் கூற, அனைவரும் சிரித்தனர்.

அந்தப் பயம் இருக்கட்டும் என்பதுபோல் நின்றிருந்த குமரனைக் கண்டு விட்டுத் தேனிடம் திரும்பியவர், "என்ன தாயி. இவனைக் கட்டிக்க உனக்குச் சம்மதம்தானா?" என்று வினவினார்.

சிவந்த முகத்தைக் குனிந்து கொண்டு மெல்லத் தலையாட்டியவளைக் கண்டு, "நான் கேட்டால் மட்டும் வாயைத் திறக்கவே மாட்டாள்!" என்று முறைத்துக் கொண்டவனுக்கு உள்ளூரப் பெருமகிழ்ச்சியாகிப் போனது.

பெரியவர்கள் பேச ஆரம்பித்ததும் மெல்ல அவள் அருகே சென்று நின்றவன், அவள் கையைப் பற்றி யிழுத்துக் கொண்டு வெளியே நழுவிவிட்டான்.

"எ... என்ன? என்னடா?" என்று கையை உதறிய வளிடம்,

"ஏய்... அதான் வீட்டில் பேசிச் சம்மதம் வாங்கியாகி விட்டதல்லவா? இன்னும் என்னடி விரட்டுகிறாய்? அம்பரி வீட்டிற்குச் செல்லலாம், வா..." என்றவன் வண்டியில் அவளை ஏற்றிக் கொண்டு சென்றான்.

"சரியான ரௌடி... ரௌடி..." என்று மனதுக்குள் திட்டிக் கொண்டாலும் சிரிப்புடன் அமர்ந்திருந்த தேன்மொழி சற்று நகர்ந்து அவன் தோளைக் கட்டிக் கொண்டாள்.



அவள் தொட்டதும் புன்னகை கொண்டவன் கண்ணாடியைச் சரி செய்வது போல் அவள் முகத்தைக் கவனித்தான். அவன் கண்டு கொண்டதை எண்ணி வெட்கம் கொண்டவள், "போடா..." என்று முகத்தை அவன் தோளில் புதைத்து மறைத்துக் கொள்ள... நன்றாக முறுவலித்தபடி வண்டியின் வேகத்தை அதிகரித்தான்.

அம்பரியின் வீட்டின் முன்பு இறங்கியதும், "அம்பரி..." என்றழைத்துக்கொண்டு உள்ளே நுழைந்தவள், அங்கே நடந்த காட்சியைக் கண்டு சிரித்தபடி நின்றாள்.

மீனைச் செதில் நீக்கியபடி அம்பரியும், அவளருகே மீன் கழுவியபடி திவாகரனும் அமர்ந்திருந்தனர். எதையோ பேசிக் கொண்டும், சிரித்துக் கொண்டும் அவர்கள் அமர்ந் திருந்த காட்சி ரம்யமாக இருந்தது.

"என்ன மாமா, நாங்கள் வருவோமெனத் தெரிந்தே சமைப்பது போலிருக்கிறது?" என்று உள்ளே நுழைந்த குமரனைக் கண்டு புன்னகையுடன் எழுந்தனர்.

இருவரும் விசயத்தைக் கூறியதும், அங்கே கேலி, கிண்டலுக்குப் பஞ்சமில்லாமல் போனது. அதன் பின் குமரன்-தேனு திருமணத் தேதி அந்த மாதக் கடைசி யிலேயே குறிக்கப்பட்டது. 'இன்னும் இருபது நாட்களா?' என்று குமரன் தான் பெரிதாகச் சலித்துக் கொண்டான்.

இடையில் ஒரு முறை மாரியம்மன் கோயில் திருவிழா வந்தது. இந்த முறை பொங்கல் வைத்து அம்மனுக்குப் படையல் போடுமாறு இருவரிடமும்

கூறினார் வள்ளியம்மை. திவாகரன் சரியென்று விட்டதால் அம்பரியும் ஒப்புக் கொண்டாள்.

மாமன் வாங்கித் தந்த விலையுயர்ந்த பட்டுச் சேலையில் ஒன்றைக் கட்டிக்கொண்டு அவன் வாங்கித் தந்த நகைகளையும் அணிந்து கொண்டு பொங்கல் பானையுடனும், இதர சாமான்களுடனும் வண்டியில் புறப்பட்டு விட்டாள் அம்பரி.

கோயில் முன்பு சொந்தங்களும், ஊர்க்காரர்களும் பொங்கல் வைக்கத் துவங்கி விட, அங்கே தன் மாமனுடன் நடந்து வந்தவளைக் கண்டு அனைவரின் பார்வையும் இருவர் மீதும் திரும்பியது.

பொங்கல் சாமானை எடுத்துக் கீழே அடுக்கிக் கொண்டிருந்த லட்சுமியும் திரும்பி மகள் வருவதைக் கண்டாள்.

அவர்கள் திருமணம் முடிந்த இந்த ஒன்பது மாதத்தில் ஒருமுறை கூட அவள் மகளைக் கண்டதில்லை.

திவாகரன் அனுமதிக்காத காரணத்தினால் கணவனும், மனைவியும் மகள் வீட்டுப் பக்கம் காலடி எடுத்து வைக்கவில்லை.

போவோர், வருவோரெல்லாம் மகள், மருமகனின் செல்வ நிலையையும், திவாகரன் அம்பரியைக் கையில் வைத்துத் தாங்குவதையும் கூறிச் சென்றாலும், இன்று அனைத்தையும் நேரில் பார்த்தபோது தான் செய்ய எண்ணியிருந்த தவறு அவளை நெருப்பாகச் சுட்டது.



நன்றாகவே சதை போட்டிருந்த அம்பரியின் வட்ட முகமும் புதுச் சோபையுடன் மினுமினுத்துக் கொண்டிருந்தது. அவள் அணிந்திருந்த பொன்னகைகளை மீறி அவள் முகத்தில் குடி கொண்டிருந்த புன்னகை அவளை மேலும் அழகாக்கிக் காட்டியது.

மகளின் நல்வாழ்வை எண்ணிக் கண் கரித்தது அவளுக்கு. மாணிக்கமும் மனைவியின் பார்வையைத் தொடர்ந்து தானும் மகளைக் கண்ட வண்ணம் நின்றிருந்தார்.

அவர்களிருவரும் இறங்கியதுதான் தாமதம், குமரன், தேனு வீட்டார் அவளைச் சூழ்ந்துகொண்டு பாச மழையைப் பொழிந்துவிட்டனர். ஊராரும் அவர்களைத் திறந்த வாய் மூடாமல் பார்த்துக் கொண்டிருந்தனர்.

அதன் பின் அவள் பொங்கல் வைப்பதற்கு உதவியபடி அவளருகிலேயே அனைவரும் நின்றுவிட, மாணிக்கமும், லட்சுமியும் தனித்து விடப்பட்டனர்.

"தேனு, அடுத்த வருஷம் நீதான்டி பொங்கல் வைக்கணும், திருமதியாகி விடுவாயல்லவா?" என்று சிரிக்க, "போடி..." என்று சிணுங்கிக் கொண்டாள் தேன் மொழி.

சிரித்தபடியே திரும்பியவளின் பார்வையில் பந்தலின் கீழ்த் தனியாக நின்று கொண்டிருந்த அன்னையும், தந்தையும் பட்டனர். மகளின் கண்களைச் சந்தித்ததும் மாணிக்கத்திற்குத் தன்னாலேயே கண்ணீர் பெருக, அதைக் கண்ட அம்பரியும் கலங்கினாள்.

"என்னவாயிற்று பரி?" என்று எங்கிருந்தோ இவளைக் கண்டுவிட்ட திவாகரன் அருகே வர,

"ஓ... ஒன்றுமில்லை மாமா. புகைக்குக் கண்ணீர் வருகிறது!" என்று சமாளித்து விட்டாள்.

ஆனால் அவள் பார்வையையும், அதைத் தொடர்ந்த கண்ணீரையும் கண்டவன், தன் மாமனை நோக்கிச் சென்றான்.

"அவள் தான் அங்கே பொங்கல் வைக்கிறாளே! நீங்கள் வேறு ஏன் தனியாக வைக்கிறீர்கள்? அங்கே வாருங்கள்..." எனக் கூறினான். லட்சுமி அவனைத் திகைத்து நோக்க, மாணிக்கம் கலங்கிய விழிகளுடன்,

"திவாகரா..." என்று கண்ணீர் விட, அவர் கையைப் பற்றிக்கொண்டு, "வாங்க மாமா..." என்றழைத்துக்கொண்டு சென்றான். அவரை அம்பரியிடம் விட்டு விட்டுத் திரும்பி வந்தவன், பொங்கல் சாமான்களை பைக்குள் போட்டுக் கொண்டிருந்த அத்தைக்கு உதவிவிட்டு அவரையும் அழைத்துக் கொண்டு வந்தான்.

அம்பரி உட்பட அனைவரும் அவனது செயலை வியப்புடன் பார்த்துக்கொண்டு நின்றனர். தன்னருகே வந்து நின்று கைப்பற்றிக் கொண்டு அழுத அன்னை யையும், தந்தையையும் கண்டு தானும் கண்ணீர் வடித் தாள்.

"இத்தனை மாதத்தில் ஒருமுறை கூட என்னைப் பார்க்க வர வேண்டுமென்று உங்களுக்குத் தோன்ற வில்லையாப்பா?" என்று தேம்பியபடி கேட்டவளிடம்,



"இ... இல்லை கண்ணு. எங்களைக் கண்டால் திவாகரன் கோபப்படுவானோ என்று பயந்துதான் நான் வரவில்லை. என்னை மன்னித்துவிடம்மா. மற்றப்படி நீ அவனுடன் கடை வீதிக்குப் போகும் போதெல்லாம் நான் உன்னைப் பார்த்துக் கொண்டுதான் இருப்பேன். பெற்ற ஒரே மகளை எப்படிம்மா தூக்கியெறிய முடியும்? நீ என் உயிரல்லவா?" என்று கண்ணீர் விட்டவரிடம்,

"என்னை நீங்களும் மன்னித்து விடுங்களப்பா. ஏதோ கோபத்தில் நானும் உங்களைத் தேடி வராமல் இருந்துவிட்டேன்..." என்று தானும் தன் மன்னிப்பைக் கோரினாள் அம்பரி.

மகளை விட்டு ஓரடி தள்ளியே நின்று கண்ணீர் சொரிந்து கொண்டிருந்த லட்சுமியின் கையைப் பற்றி அருகே நிறுத்திக் கொண்டவள், "அழாதேம்மா..." என்று கண்களைத் துடைக்க...

அவள் கையை இறுகப் பற்றிக் கொண்டவர், "நான் செய்த பாவத்திற்கு உன் காலில் விழுந்து மன்னிப்புக் கேட்டாலும் தவறில்லையம்மா. உன்னைப் பிரிந்திருந்த நாட்களே என் தவறை எனக்கு உணர்த்திவிட்டன. என்னை மன்னிப்பாயா அம்பரி?" என்று அழுதவரிடம்,

"அம்மா. பெரிய வார்த்தை யெல்லாம் பேசாதே. நடந்து முடிந்தது முடிந்ததாகவே இருக்கட்டும். இப்போது நானும், மாமாவும் சந்தோஷமாக இருக்கிறோமே! பின்னே என்ன? முடிவு நலமானால் முழுவதும் நலமே. கவலையை விடும்மா." என்று சமாதானப்படுத்தினாள்.

சற்று தூரத்தில் திவாகரனும், மாணிக்கத்தின் கையைப் பற்றியபடி சமாதானம் செய்வது கண்ணில் பட்டது. "அம்பரியின் மகிழ்ச்சிக்காக என்னிடமிருந்து எதைக் கேட்டாலும் தருவேன் மாமா. அவளுக்காக என் கோப தாபங்களை விட்டுக் கொடுப்பதில் தவறொன்றுமில்லை. நீங்கள் உங்கள் மகளைக் கவனியுங்கள்!" என்று அனுப்பி வைத்தான்.

அனைவரும் ஒன்றாகக் கூடி மகிழ்ச்சியுடன் பொங்கல் வைக்கத் துவங்கினர். சிரிப்பும், கேலியுமாக ஒருவரையொருவர் விரட்டிக்கொண்டு. அன்றைய நாள் அவள் வாழ்வில் மறக்க முடியாத நாளாகிப் போனது. இந்த நாளை மிக மிக அழகாக மாற்றிய மாமனைத் தேடி அவள் கண்கள் அலைபாய,

"அண்ணன் விறகு எடுக்கக் கோயில் பின்னே போயிருக்கிறது." என்று அவள் காதில் முணுமுணுத்தாள் தேன்மொழி. அவள் தலையில் குட்டு வைத்து விட்டுக் கோயில் பின்புறத்திற்குச் சென்றாள்.

நடந்து செல்கையிலேயே அன்னை திவாகரனிடம் பேசுவதைக் கண்டு தயங்கி நின்றாள். "இதோ... இங்கே வெட்டி வைத்திருக்கிறேன் அத்தை. இதை எடுத்துச் செல்லுங்கள்," என்றவனின் முகத்தைப் பார்த்துத் தயங்கியவர், பின் அவன் "என்னத்தை?" என்றதும், பொங்கி வந்த கண்ணீரைத் துடைத்து,

"பதினைந்து வயதுச் சிறுவனாக நீ என் வீட்டில் நுழைந்த நாளிலிருந்து நீ குமரனாகும்வரை உன்னை



நான் ஏசாத நாளில்லை. ஏன், உன்னை நான் ஒரு மனிதனாக மதித்து ஒரு நாள்... ஒரு பொழுது அன்ன மிட்டதில்லை.

"கடைசியாக நீ உயிராக நினைத்த அம்பரியையும் பிரிக்கப் பார்த்துப் பாவம் செய்யத் துணிந்தேனே. நான் செய்த அனைத்திற்கும் மன்னிப்பு என்கிற ஒரே வார்த் தையைக் கேட்க முடியாது தம்பி. நீ எனக்கு என்ன தண்டனை கொடுத்தாலும் ஏற்றுக் கொள்கிறேன்!" என்று கதறியவரிடம்,

"ஏன் அத்தை இப்படிப் பேசுகிறீர்கள்? உங்களுக்குத் தண்டனை கொடுக்க நான் யார்? மகள் நன்றாக வாழ வேண்டுமென்றுதானே நீங்கள் ஆசைப்பட்டீர்கள்? அதில் தவறொன்றுமில்லை. அத்தோடு நீங்கள் என்னைத் தினம் தினம் ஏசியது தான் நான் என் வாழ்வில் முன்னேற வேண்டுமென்கிற ஊக்கத்தை எனக்குக் கொடுத்தது. அதையெல்லாம் மறந்துவிடுங்கள் அத்தை!" என்றான்.

கண்களைத் துடைத்து முறுவலித்தவர், "உன் நல்ல குணத்திற்கு நீ நூறு வருடங்களுக்கு நன்றாக வாழ்வாய்!" என்று கூறிவிட்டுச் சென்றார்.

அன்னை சென்றதும், அருகே வந்த அம்பரி, விறகை வெட்டிப் போட்டுக் கொண்டிருந்த மாமனைச் சில நிமிடங்கள் பார்த்துக் கொண்டிருந்து விட்டுப் பின்னால் நின்றபடியே அவனை அணைத்து முதுகில் கன்னத்தைப் பதித்துக் கொண்டாள்.

"ஏய்..." என்றபடி திரும்பியவன், அவள் கையைப் பற்றி முன்னே இழுத்து, "பொது இடத்தில் என்னடி இதெல்லாம்?" என்று கடிந்து கொள்ள,

"பரவாயில்லை," என்றபடி அவன் மார்பில் தலை சாய்த்தாள்.

சிரித்துக் கொண்டே, "என்னடி குள்ளச்சி?" என்ற வனிடம்,

"நீ ஏன் மாமா எனக்காக இதை யெல்லாம் செய் கிறாய்?" என்று கேட்டாள்.

மேலும் சிரித்தபடி அவள் முகத்தை நிமிர்த்தியவன், அவள் மூக்கோடு மூக்குரசி, "ஏனென்றால் நீ என் தண்ணாச்சேடி!" என்றான்.

அவன் முகத்தை இமைக்காமல் பார்த்துக்கொண்டு அவன் கன்னம் வருடியவளை, "என்ன இங்கே நின்று கொஞ்சலா?" என்ற குமரனின் குரல் தடுத்தது.

"போடா..." என்றபடி ஓடிச் சென்றவளைக் கண்டு குமரனும், திவாகரனும் சிரித்தனர்.

இந்தச் சம்பவத்தின் பின்பு அம்பரியின் பெற்றோர் திவாகரனின் வீட்டிற்கு வருகை தர ஆரம்பித்தனர். சொந்த பந்தங்களின் வேண்டுகோளுக்கிணங்கி ஊருக்குள் ளேயே வீடு பார்த்துக் குடி பெயர்ந்தனர் இருவரும். தேன்-குமரனின் திருமணமும் நெருங்குவதால் இருவரும் கல்யாண வேலைகளில் மூழ்கிப் போயினர்.



அனைவரும் ஆவலுடன் எதிர்பார்த்த அடாவடி மன்னன் குமரனின் திருமண நாளும் அழகாக விடிந்து விட்டது.

மண்டபத்திலிருந்த மணமகள் அறையில் குளித்து முடித்து வெளிவந்த தேனு எதிரே நாற்காலியில் அமர்ந் திருந்த குமரனைக் கண்டு ஆடிப் போனாள்.

"இடுப்பழகி! மாமனால் உன்னைக் காணாமல் இருக்க முடியவில்லையடி. அதனால்தான் ஏணி வைத்து உன் அறைக்கு வந்துவிட்டேன்!" என்று சிரிக்க, வாயில் அடித்துக் கொண்டவள்,

"பாவி... பாவி... என் அம்மாவிற்குத் தெரிந்தால் சாமியாடி விடுவார்கள். ஏற்கெனவே திருமணம் நிச்சய மானதிலிருந்து உன்னுடன் தோப்பில் திரிவதற்குக் கிழி வாங்கிவிட்டேன். இது வேறா? வெளியே போடா..." என்று துரத்தியவளிடம், "விரட்டாதேடி!" என்று எரிந்து விழுந்தவன்,

"கன்னத்தில் ஒரே ஒரு இச்... இச் கொடு, போய் விடுகிறேன்," என்று பேரம் பேசினான்.

முடியாது என்று அவள் மறுத்துக் கொண்டிருந்த நேரம், "தேனு..." என்று அன்னை கதவைத் தட்ட,

"அய்யோ அம்மா... சீக்கிரம்... சீக்கிரம் போடா," என்று தணிந்த குரலில் கெஞ்சியவளிடம்,

அவன் முடியாது எனக் கூறிச் சட்டமாக அமர்ந்து விட்டான்.

"ப்ளீஸ்... ப்ளீஸ்டா..." என்று கதறியவளைக் கண்டு மனம் இளகி, "நீ தராவிட்டால் என்ன? நான் தருகிறேன்," என்றவன்,

அவள் திகைப்பதைப் பொருட்படுத்தாது அவள் இடையைப் பற்றிக் கன்னத்தில் முத்தமிட்டு விட்டு ஓடி விட்டான்.

அவன் சென்றதும் கதவைத் திறந்த தேனுக்கு அவள் அன்னை திட்டிய வார்த்தைகள் ஒன்றும் காதில் விழவேயில்லை.

மண்டபத்தில் வருவோர், போவோரையெல்லாம் கவனித்துக் கொண்டு நின்றிருந்த அம்பரியிடம், லட்சுமி, "சீக்கிரம் வீட்டுக்குப் போய்ப் புடவை மாற்றி விட்டு வா கண்ணு. நேரமாவது தெரியவில்லையா?" என்று கடிந்து கொள்ள.

சாதாரணச் சேலையில் சுற்றிக் கொண்டிருந்த பரி, "இதோ போகிறேன் மா. இரண்டு நிமிசம்," என்று கேட்டு விட்டு, பத்து நிமிடம் சொந்தக்காரப் பெண்ணிடம் அரட்டை அடித்துவிட்டுப் புறப்பட்டாள்.

மண்டபத்தின் அருகிலேயே வீடு இருந்ததால் வசதியாகிப் போனது அவளுக்கு.

கதவைத் திறந்து கொண்டு உள்ளே நுழைந்தவள், படுக்கையறையில் இன்னமும் உறங்கிக் கொண்டிருந்த கணவனைக் கண்டு, வேகமாக அருகே சென்றாள்.



"மாமா! மாமா! எழுந்திரு. இன்னும் என்ன தூக்கம்? ஒரு மணி நேரத்தில் முகூர்த்தம் மாமா..." என்று தட்டி எழுப்பினாள். பாவம் இரவு நீண்ட நேரம் வேலை பார்த்து விட்டுத் தூங்கியிருப்பான் போலும்.

தன் புடவையை அலமாரியிலிருந்து எடுத்துக் கொண்டு, மீண்டும் அவனைத் தட்டியவள், "எழுந்திரு மாமா. நேரமாயிட்டது," என்று எழுப்ப,

"ப்ச்... என்னடி!" என்றபடியே திரும்பியவன், அவளை இழுத்துப் படுக்கையில் தள்ளி அணைத்துக் கொண்டான்.

"அய்யோ! என்ன மாமா இது? நான் சீக்கிரம் புடவையை மாற்றி விட்டுப் போக வேண்டும். என்னை விடுங்கள்!" என்று சிணுங்கத் துவங்க...

அவள் கழுத்தில் முகம் புதைத்து வாசம் பிடித்துக் கொண்டிருந்தவன் நிமிர்ந்து,

"குள்ளச்சி! இன்று இரவேனும் என்னை அனுமதிப்பாயா? ஒரு வாரமாக என்னை ஏமாற்றி வருகிறாய். ப்ளீஸ்டி!" என்று அவள் மேல் புரண்டவனைப் பற்றித் தள்ளிவிட்டு எழுந்தவள் வேகமாக ஓடி அறை வாசலில் நின்று கொண்டு,

"இன்றா? யோசிக்கிறேன்," என்று கூறிவிட்டுக் கலகலவெனச் சிரித்தபடி ஓடிச் செல்ல, "ராட்சசி!" என்று முணுமுணுத்தான் அவன்.

வாழ்க்கையில் முன்னேற வேண்டும், பணம் சம்பாதிக்க வேண்டும், பெற்றோருடன் இணைய வேண்டும்,

ஊரில் நல்ல பெயர் வாங்க வேண்டும் என்று பல காரணங்களை முன்னிருத்தித் தாங்கள் இணைவதைத் தள்ளிப் போட்டுக் கொண்டே வந்தவர்கள், அனைத்தும் கை கூடி இணைய வேண்டுமென முடிவெடுத்த சமயம் இயற்கை உபாதைகளால் பாதிக்கப்பட்ட அம்பரி,

"ஐந்து நாள் மாமா. ப்ளீஸ் ப்ளீஸ்..." என்று கொஞ்சிச் சமாதானப்படுத்தி வைத்திருந்தாள்.

அதன் பின்பும் குமரன் கல்யாணத்தில் பிஸியாகி விட்டதால், அவன் தினம் தினம் அவளிடம் இதே கேள்வியைக் கேட்டு நச்சரித்துக் கொண்டிருந்தான்.

குளித்து விட்டுத் தலை துவட்டியபடி வந்த திவாகரன் அடர் பச்சை நிறப் புடவையில் தங்க விக்கிரமாக ஜொலித்த மனைவியைக் கண்டு மதி மயங்கிப் போனான்.

சேலைக்குத் தோதாக நகைகள் அணிந்து தலை நிறைய மல்லிப்பூ சூடி, குங்குமமிட்டுக் கொள்ளையழகுடன் நின்றிருந்தாள்.

கண்ணாடி முன்னே நின்று சரி பார்த்துக் கொண்டிருந்தவளைப் பின்னாலிருந்து அணைத்துக் கொண்டவன், "இப்படியெல்லாம் அணிந்து கொண்டு என் முன்னே உலா வந்தால் எப்படியடி நான் அமைதியாக இருக்க முடியும்?" என்று முத்தமிட்டான்.

ஒரு வழியாக அவனையும் கிளப்பிக் கொண்டு மண்டபத்திற்கு வந்து சேர்ந்தவள், அதன் பின்பு தேனின் அறைக்குச் சென்று விட்டாள். நாதஸ்வரமும், மேளச்



சத்தமும் தொடர்ந்து ஒலிக்க அந்தக் கிராமத்துக் கல்யாணம் சிறப்பாகத் தொடங்கியது.

மணமேடையில் குமரன் வந்தமர்ந்து அய்யர் கூறிய மந்திரங்களை முறைத்தபடி சொல்லிக் கொண்டிருக்க, சிறிது நேரத்தில் அவர், "பொண்ணை வரச் சொல்லுங்கோ..." என்று குரல் கொடுத்த பின்புதான் முறுவலித்தான். "யோவ் அய்யரு. நீ நல்லவன்ய்யா!" என்றபடி.

தன்னருகே பொன் மஞ்சள் நிறச் சேலையில் வந்தமர்ந்தவளை விழியால் பருகியபடி, "காலையில் தப்பித்து விட்டாய். இரவு எப்படியும் என்னிடம் மாட்டித் தானே ஆக வேண்டும்!" என்று அவன் முணுமுணுக்கச் சிவந்து தலை குனிந்தாள் மணப்பெண்.

"கெட்டி மேளம், கெட்டி மேளம்!" என்ற சத்தத்துடன் குமரன், தேனின் கழுத்தில் மங்கல நாண் சூட, அனைவரும் அர்ச்சதை தூவித் தங்கள் வாழ்த்தைத் தெரிவித்தனர். ஒருவரையொருவர் பார்த்துச் சிரித்துக் கொண்ட திவாகரனுக்கும், அம்பரிக்கும் பெரு மகிழ்ச்சி.

அதன் பின் சாப்பிடச் சென்ற சொந்தபந்தங்களைக் கவனித்துக் கொண்டவளைப் பற்றி நிறுத்திய அத்தை ஒருவர், "இதோ பாரடி அம்பரி, கல்யாணமாகி இத்தனை மாசத்தைக் கடத்தி எங்களை யெல்லாம் ஏமாற்றியது போதும். சீக்கிரமே எங்களுக்குக் குட்டி அம்பரியோ, குட்டி திவாகரனோ வேண்டும். அதற்கு வழியைப் பார். என்ன?" என்று கேலி செய்ய,

"போங்கத்தை!" என்று சிணுங்கிக் கொண்டவள், ஓடிச்சென்று திவாகரனின் மீது மோதி நின்றாள்.

அவனைக் கண்டு மேலும் சிவந்தவளைக் கை கட்டிப் பார்த்துக் கொண்டிருந்தவன், புருவத்தை உயர்த்த, "போ மாமா..." என்று அவன் தோளில் முட்டி விட்டு ஓடி விட்டாள்.

அடுத்து நடக்கும் விளையாட்டுகளும், சம்பிரதாயங் களும் இனிதே நடந்து முடிய, இரவுவரை உடனிருந்து கவனித்து விட்டு, தேன்மொழியைக் குமரனின் அறைக்குள் தள்ளி விட்டு விட்டு இருவரும் வீடு வந்து சேர்ந்தனர்.

அடாவடித்தனமாய் அவனது காதலைத் தேனிடம் நிலை நாட்டிய குமரன், அவளை வாழ்நாள் முழுமைக்கும் கண்ணுக்குள் வைத்துக் காப்பான் என்கிற நம்பிக்கை யுடன்.

வீட்டிற்குள் நுழைந்ததும் உடை மாற்றச் சென்ற வளின் கைப்பற்றி, "யோசிப்பதாகச் சொன்னாயே! யோசித்தாயிற்றா?" என்றான்.

சிவந்த முகத்தை வேறு புறம் திருப்பிக் கொண்ட வளைப் பற்றித் தூக்கி,

"குமரனுக்கு சாந்தி முகூர்த்தம் குறித்துக் கொடுத்த அய்யர் சொன்னதை யெல்லாம் கேட்டேன். அப்பத்தா நல்ல நேரம் பார்த்துத் தான் இந்த மாதிரி விசயங்களை யெல்லாம் தொடங்க வேண்டும் என்றதே, அதற்குத்தான்." என்றவன்,



அவன் தோளில் முகத்தை அழுந்தப் புதைத்த வளிடம், "குட்டி அம்பரி வேண்டாமா கண்ணே?" என்று அவள் காதுக்குள் முணுமுணுத்தவன், மெல்ல நடந்து சென்று அறைக்குள் நுழைந்தான்.

அவனை மையலுடன் நோக்கிக் கொண்டிருந்த வளின் இதழில் முத்தமிட்டு அவளுடன் கட்டிலில் சரிந் தான்.

தாபத்தோடு அவன் கரங்கள் இடையில் அழுந்திய போது, அவன் கரங்களுடன் போட்டி போட்டுக் கொண்டு அவன் இதழ்கள் அவள் மேனியில் ஊர்வலம் வந்த போது, அவளது வெட்கப் போர்வையோடு சேர்ந்து அவளைத் தழுவியிருந்த சேலையையும், அவன் விலக்கிய போது, அவனுடன் முற்றிலுமாகக் கலந்து கரைந்து போனாள் அம்பரி.

அவனது ஒற்றை விரல் தீண்டலைக் கூட ஆழ்ந்து அனுபவிக்கும் அம்பரி, காதல் வேட்கையுடன் தன் மீது படர்ந்தவனிடம் முழுதாகத் தன்னைத் தொலைத்து விட்டாள்.

பற்பல போராட்டங்களுக்குப் பிறகு ஒன்று சேர்ந்த அந்தத் தம்பதி, அந்த அழகான இரவில் இணைந்த தங்களது காதல் வாழ்க்கையின் அடுத்த அத்தியாயத் திற்குப் பிள்ளையார் சுழியிட்டனர்.

இரவு முழுதும் தீர்ந்தாலும் கூட என் தாகம் தீராது என்பது போல அவளோடு லயித்திருந்தவன், சோர்வுற்

றிருந்தவளைத் தன் மீது சாய்த்து அவள் கூந்தல் வருடினான். அவள் முகத்தை நிமிர்த்திச் சிரித்தவன், அவள் கூந்தலை ஒதுக்கி, "தேங்க்ஸ் குள்ளச்சி!" என்றான்.

"எதற்கு?" என்றவளிடம், "எல்லாத்துக்கும். என்னை உன் வீட்டிற்கு வரவழைத்ததற்கு. என்னைப் படிக்க வைத்த தற்கு. உன் அன்னையுடன் சண்டை போட வைத்ததற்கு. என்னை நம்பித் திருமணம் செய்து கொண்டதற்கு. கடைசியாக என் வாரிசிற்கும் வழி செய்ததற்கு!" என்று சிரிக்க,

"ச்சி..." என்று அழகாய்ச் சிணுங்கி முறுவலித்தாள், அம்பரி.

அவள் கன்னம் கிள்ளித் தானும் சிரித்தவன், "மகிழ்ச்சியாக இருக்கிறாய்தானே கண்ணே? உன் சந்தோசத்தை மனதில் கொண்டு தான் நான் ஒவ்வொரு காரியத்தையும் செய்கிறேன். என்னை ஏசும் உன் அன்னையை எனக்காக நீ எதிர்த்துப் பேசிச் சண்டை யிட்ட தருணங்களெல்லாம் இன்னும் என் கண் முன் நிற்கிறது.

"நீ எனக்கானவள். என் உயிருக்கு நிகரானவள். அன்று நடந்த சண்டையின் போது நீ என்னை விட்டு விலகிச் சென்ற போது செத்து விடலாம் என்று தான் எண்ணினேன். ஆனால் அதிர்ஷ்டவசமாகத் திருமலைச் சித்தப்பா என்னைக் காப்பாற்றி எனக்கு வாழ்வளித்தார். அதன் பின்பும் கூட நான் உன் மீது கோபம் கொண் டிருந்தேன். ஆனால் வாடிய கொடியாக நீ என் கண்



முன்னே நின்ற போது நான் கொண்ட வேதனையை எடுத்துச் சொல்ல முடியாது.

"உன் மகிழ்ச்சி, உன் சந்தோசம் அனைத்தும் என்னைச் சுற்றி மட்டும் தான் என்பதைப் புரிந்து கொண்டேன். அப்போதிருந்து உன்னை என் இமைக்குள் வைத்துப் பார்த்துக் கொள்ள வேண்டுமென்று முடிவு செய்துவிட்டேன்.

"உன் அன்னை போட்ட நாடகத்தை நம்பி நீ என்னைப் பிரிந்து சென்ற போது எனக்கு உன் மீது கோபம் இருந்தது பரி. ஆனால் அதே அன்னையை நீ எதிர்த்து எனக்காக நீ என்னைத் தேடி வந்த போது என் கோபம் இருந்த இடம் காணாமற் போய்விட்டது. உன் மீது கோபம் கொண்டதற்காக என்னை மன்னித்து விடு கண்ணே!" என்றவனிடம்,

"உன் கோபம் நியாயமானதுதான் மாமா. ஆனால் அம்மா அன்று மண்ணெண்ணெயைக் கையில் வைத்துக் கொண்டு மிரட்டியபோது எனக்கு என்ன செய்வதென்று புரியவில்லை. அப்போது கூட உன்னைப் பிரிந்து செல்ல வேண்டுமென்றோ, உன்னை விலக்கி விட வேண்டு மென்றோ நான் எண்ணவில்லை.

"அந்த நேரத்தில் அம்மாவின் முயற்சியைத் தடுக்க வேண்டுமென்று மட்டும் தான் நினைத்தேன். ஆனால் அம்மா உன்னிடமிருந்து என்னைப் பிரிக்க இப்படி நாடகமாடுவாள் என்று கனவிலும் எண்ணவில்லை மாமா.

"நீ... நீ தொய்ந்து நடந்து சென்றது இன்னும் என் கண் முன் நிற்கிறது. என் உயிரே என்னை விட்டுச் சென்று விட்டதாக நினைத்தேன் மாமா. நீயில்லாத வாழ்க்கையை ஏன் வாழ வேண்டுமென்று தோன்றியது. அதனால்தான் விஷம் குடித்தேன்!" என்று கண் கலங்கியவளை இறுகப் பற்றி -

"அதைச் சொல்லாதே பரி. சாவு எந்தப் பிரச்னைக்கும் தீர்வாகாது. உன்னைக் காப்பாற்ற முடியாது போயிருந்தால் என் கதி என்னவாயிருக்கும் என்று நினைத்துப் பார்த்தாயா?" என்று கோபமாக வினவியவனிடம்,

"நீயும்தான் என்னை விட்டுச் சாகப் பார்த்தாய்! திருமலை மாமா அன்று வாராது போயிருந்தால் என் கதி மட்டும் என்னவாகி யிருக்குமாம்?" என்றவளிடம் பெருமூச்சை வெளியிட்டு,

"நீயில்லாவிட்டால் என் வாழ்வு சூனியமாகிப் போகும் அம்பரி!" என்று அமைதியான குரலில் சொன்னவன்,

தொடர்ந்து, "உனக்கும் அப்படித்தான் என்று தெரியும்..." என்றான்.

"உனக்காக நான் என் உயிரைக் கொடுக்கப் பார்த்து, நீ எனக்காக உன் உயிரை மாய்த்துக் கொள்ளப் பார்த்து... அப்பப்பா! அந்தப் பொல்லாத காலம் கடந்து சென்றதில் எனக்கு மிகவும் சந்தோசம் மாமா. அதை நான் நினைத்துப் பார்க்கக் கூட விரும்பவில்லை.



"எப்படியோ கடைசியில் நான் என் மாமாவிடமே வந்து சேர்ந்துவிட்டேன். அந்தக் கௌமாரியம்மனுக்குத் தான் நன்றி சொல்ல வேண்டும்!" என்று சிரித்தபடி அவன் மார்பில் சாய்ந்தவளை அழுந்த முத்தமிட்டவன் தொடர்ந்து,

"என் கண்ணே...! உன்னுடைய அளவில்லாக் காதலை நான் பெற்றது எந்த ஜென்மத் தவமோ தெரியவில்லை. உன் களங்கமில்லாக் காதலைப் பெற்று விட்டதில், உன் பூவுடலோடு கலந்துவிட்டதில் இந்த நொடி உலகத்திலேயே அதிர்ஷ்டம் வாய்ந்தவனாக உணர்கிறேன்.

"நீ என் வாழ்வில் வந்த தேவதை அம்பரி. என் உள்ளத்தில் இடம் பிடித்து என் ரத்தத்திலும், உயிரிலும் கலந்து விட்டவள். என் வாழ்நாள் முழுமைக்கும் என்னோடு துணையிருந்து என்னை வழி நடத்தும் பேற்றை நீ எனக்குத் தர வேண்டும். தருவாயா கண்மணி?" என்று கை நீட்டியவனை, எட்டி அணைத்துக் கொண்டாள் அம்பரி.

தன் மார்பில் சாய்ந்திருந்தவளின் முதுகை வருடிக் காதருகே குனிந்தவன்,

"இப்போது சோர்வெல்லாம் போய் விட்டதுதானே? விடிவதற்கு இன்னும் நேரமிருக்கிறது போலவே பரி. நான் இந்த இரவை வீணாக்க விரும்பவில்லை. நீ என்ன சொல்கிறாய்?" என்று சரசமாக வினவியபடி புருவம் உயர்த்தியவனிடம்...

வெட்கத்துடன் முறுவலித்து அவள் கண் மூடிக் கொள்ள...

அள்ள அள்ளக் குறையாத அமுதம் போல் கொள்ளை கொள்ளையாகக் காதலைக் கொட்டித் தரும் தன் மனையாளின் மனதை முழுதாக ஆக்ரமித்துவிட்ட மகிழ்ச்சியில்...

அவளுள் புதைந்து போக விரும்பி அவள் நிலா முகம் நோக்கிக் குனிந்தான், திவாகரன்.